# அல்லாஹ்

## அவனது மகத்துவம் கம்பீரமானது
## அவனது பண்பு கண்ணியமிக்கது

''உயிரைக் கொடுப்பதால் கிடைக்குமென்றாலும்
இந்தச் செல்வம் பெறத்தக்கது.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

தமிழாக்கம்:
மவ்லவி O.M.முஸ்ஸம்மில் அஹ்மது H.A.

**வெளியிடுவோர்:**
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான், பஞ்சாப்

**அல்லாஹ்**

**அவனது மகத்துவம் கம்பீரமானது**

**அவனது பண்பு கண்ணியமிக்கது**

Tamil Translation of the Urdu Book

**‘Allah Jalla Shanuhu wa Azza Ismuhu’**

Written by : Hadhrat Mirza Ghulam Ahmad
Promised Messiah [as]

Translated by : Moulavi O.M. Muzzammil Ahmad H.A

Year : 2019

Copies : 1000

Published by : Nazarat Nashr-o-Isha‘at
Qadian-143 516. Gurdaspur.
Punjab, India

Printed at : Fazl-e-Umar Printing Press
Gurdaspur, Qadian-143 516
Punjab

Noorul Islam Toll Free No: 1800 103 2131
Tamil Toll Free No : 1800 425 40000

## முன்னுரை

எழுதுகோலின் அரசராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது 80-க்கும் மேற்பட்ட நூல் மற்றும் மல்ஃபூஸாத் (சொல் அளவிலான அறிவுரைகள்) ஆகியவற்றின் மூலம் அறிவு, ஞானம் மற்றும் தத்துவத்தால் நிரம்பிய எத்தகைய அறிவுக் கருவூலத்தை உலகிற்கு முன்னால் எடுத்து வைத்தார்கள் என்றால் அதிலிருந்து பயன்பெறாமல் இப்போது எவரும் சரியான பொருளில் இறை இருப்பைப் பற்றிய ஞானத்தையும், ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்தையும், திருக்குர்ஆனின் உண்மைகளையும், ஞானங்களையும், நுட்பங்களையும் பற்றி அறிய முடியாது.

அல்லாஹ், அவனது தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றிய அன்பும், அல்லாஹ்வின் தூய வேதமாகிய திருக்குர்ஆனைப் பற்றிய அன்பும் உண்மையான பொருளில் உள்ளத்தில் இடம் பெற முடியாது. எனவே அந்த நோக்கங்களைப் பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை விபரமாகப் படிப்பது இயன்றவரை அவசியமானதாகும்.

**'அல்லாஹ் ஜல்ல ஷானுஹூ வ அஸ்ஸ இஸ்முஹூ'** (அல்லாஹ்-அவனது மகத்துவம் கம்பீரமானது; அவனது பண்பு கண்ணியமிக்கது) என்ற இந்த சிறு நூல் மர்ஹூம் சய்யிது தாவூது அஹ்மது சாஹிப் அவர்களின் நூலாகிய **'ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி தமது எழுத்துக்களின் ஒளியில்'** என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தலைப்புகளில் ஒரு தலைப்பைக் கொண்டதாகும்.

அதை அவர்கள் மிகவும் உழைப்புடனும், முயற்சியுடனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

அதில் அல்லாஹ்வைப் பற்றிய ஞானம், அவனுடைய பண்புகள், அவனுடைய முழுமையான ஆற்றல்கள், அவனது இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை, இஸ்லாம் எடுத்து வைக்கும் உயிருள்ள இறைவன் ஆகிய முக்கியமான தலைப்புகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அகப்பார்வையைக் கொண்ட மேற்கோள்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

அவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வுடன் இருந்த எல்லையற்ற அன்பையும் சொந்த தொடர்பையும் பிரதிபலித்துக் காட்டுவது மட்டுமின்றி அதைப் படித்து அகப்பார்வை கொண்ட ஒவ்வொருவருக்கும் அல்லாஹ்வின் ஞானத்தைப் பெறுவதற்கான, அவனுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான தூண்டுதல் கிடைக்கின்றது.

இறைவனிடமிருந்து தூர விலகியிருப்பதும் இறை இருப்பை மறுப்பதும் பொதுவாகி விட்ட இக்காலத்தில், பௌதீகத்தை வணங்குதல் மற்றும் நாத்திகத்தின் இந்த அபாயமான காலத்தில் அல்லாஹ், தனது முழுமையான இருப்பு பற்றி படைப்பினத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காக சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் பகல் வெளிச்சம் போன்று உலகத்தை ஏகனும் நிகரற்றவனுமாகிய உயிருள்ள இறைவனின் பக்கம் அழைத்து அவனுடைய ஞானத்தைப் பற்றிய இரகசியத்தை எடுத்துக் கூறியவாறு அவனுடைய இருப்பின் மீது முழுமையான நம்பிக்கையை உருவாக்குவதற்காக உயிருள்ள அடையாளங்களைக் காட்டினார்கள்.

அதற்கு மற்றவர்களும் சாட்சியாளர்களாக இருக்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்காக

அதிகமான எண்ணிக்கையில் உறுதியான கருத்துக்களைக் கொண்ட நூல்களை இயற்றினார்கள்.

இந்த அடிப்படையில் அல்லாஹ்வின் இருப்பு பற்றிய கருத்தை அறிவதற்கும், புரிவதற்கும், அல்லாஹ்வின் இருப்பின் மீது முழுமையான உறுதி கொள்வதற்கும், நம்பிக்கை கொள்வதற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பது கட்டாயமாகும்.

நஸாரத் நஷ்ரோ இஷாஅத் இந்த நோக்கத்தைக் கவனத்திற்கொண்டவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஒப்புதலுடன் இந்நூலை வெளியிடுகின்றது.

இந்த நூலை உருதுவிலிருந்து மவ்லவி O.M.முஸ்ஸம்மில் அஹ்மது H.A. அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்கள். இதனை இன்சார்ஜ் தமிழ் டெஸ்க் மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும் சரிபார்ப்புக் குழு உறுப்பினர் மவ்லவி M. ரஃபீக் அஹ்மது H.A. அவர்களும் சரிபார்த்துள்ளனர். அல்லாஹ் இந்த மூவருக்கும் மேலான நற்கூலியை வழங்குவானக.மேலும் அல்லாஹ் இதனை எல்லா வாசகர்களுக்கும் எல்லா வகையிலும் பயனுள்ளதாகவும் அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்

ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்

நாஸிர் நஷ்ரோ இஷாஅத், காதியான்

# அல்லாஹ்

## அவனது மகத்துவம் கம்பீரமானது
## அவனது பண்பு கண்ணியமிக்கது

**‘‘எல்லா நபிமார்களுக்கும் வெளிப்பட்டு வந்த அந்த இறைவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு தூர் என்ற இடத்தில் வெளிப்பட்ட, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஷயீர் மலையில் தோன்றிய, ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு ஃபாரான் மலையில் வெளிப்பட்ட அந்த ஆற்றல் மிக்க தூய்மையான இறைவனே எனக்கும் தோற்றமளித்தான். அவன் என்னிடம் உரையாடினான்.**

மேலும் என்னிடம், எந்த உயர்ந்தவனை வணங்குவதற்காக எல்லா நபிமார்களும் அனுப்பப்பட்டார்களோ அவன் நானேயாவேன் என்றும், நான் படைப்பவனாக இருப்பதில் தனித்தவனும் எஜமானனும் ஆவேன். எனக்கு நிகர் யாருமில்லை. மேலும் நான் பிறப்பதிலிருந்தும் இறப்பதிலிருந்தும் தூயவனாவேன் என்றும் கூறினான்.’’

*(ஜிஹாது பத்திரிகையின் இணைப்பு. ரூஹானீகஸாயின் தொகுதி 17 பக்கம் 29)*

**''பாவத்திலிருந்து தப்பித்து கிடைக்கும் அந்தத் தூய வாழ்க்கை ஒளிமிக்க மாணிக்கம் ஆகும். அது எவரிடமும் இல்லை. ஆயினும் இறைவன் அந்த ஒளிமிக்க மாணிக்கத்தை எனக்குத் தந்துள்ளான்.**

மேலும் அந்த ஒளிமிக்க மாணிக்கத்தைப் பெறுவதற்கான வழியை உலகிற்கு நான் கூறுவதற்காக இறைவன் என்னை நியமித்துள்ளான். இந்த வழியில் சென்று ஒவ்வொருவரும் நிச்சயமாக-ஆம்-நிச்சயமாக அதைப் பெற்றுக் கொள்வார் என நான் வாதிட்டுக் கூறுகிறேன். எதன் மூலமாக, எந்த வழியின் மூலமாக இது கிடைக்குமோ அது ஒன்றேயாகும். அதை இறைவனைப் பற்றிய உண்மையான ஞானம் என்று கூறுகிறோம். உண்மையில் இந்த விஷயம் மிகவும் கடினமான, நுட்பமான விஷயமாகும். ஏனெனில் ஒரு கடினமான விஷயத்தை அது தன்னகத்தே கொண்டுள்ளது.

**நான் முன்னர் கூறியது போன்று தத்துவவாதி வானம், பூமியைப் பார்த்து மற்றும் பிற படைப்பினங்களின் ஆழமானதும் உறுதியானதுமான சீரமைப்பைக் கண்டு படைப்பவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று மட்டுமே கூறுகின்றார். ஆனால் நான் இதை விட மிக உயர்ந்த அந்தஸ்து வரை (உங்களை) கொண்டு செல்கின்றேன். மேலும் எனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இறைவன் இருக்கின்றான் எனக் கூறுகிறேன்.''**

*(அல்ஹகம் தேதி 17, டிசம்பர் 1901 பக்கம் 3,4. மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 12 பதிப்பு 2003)*

**''நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனைப் பார்த்தோம். எல்லா**

**அழகையும் அவனிடம் கண்டோம். உயிரைக் கொடுப்பதால் கிடைக்குமென்றாலும் இந்த செல்வம் பெறத்தகுந்தது. அனைத்தையும் இழப்பதன் மூலமாக பெற முடியுமென்றாலும் இந்த மாணிக்கம் பெறத்தக்கது. இழப்பிற்குரியவர்களே! இந்த நீரூற்றின் பக்கம் ஓடுங்கள். அது உங்களுக்கு நீர் வழங்கும்.**

இது வாழ்வின் நீரூற்றாகும். அது உங்களைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியை உள்ளங்களில் அமர வைப்பேன்? உங்களுடைய இந்த இறைவன் இருக்கின்றான் என மக்கள் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசின் மூலமாக கடைவீதிகளில் அறிவிப்பு செய்வேன்.? கேட்பதற்காக மக்களின் காதுகள் திறப்பதற்கு நான் எந்த மருந்தைக் கொண்டு மருத்துவம் செய்வேன்?''

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 21,22)*

''இறைவன் வானம் பூமியின் ஒளியாவான். அதாவது உயரத்திலும் தாழ்விலும் காணப்படுகின்ற ஒவ்வோர் ஒளியும்- அது ஆன்மாக்களில் இருந்தாலும் உடல்களில் இருந்தாலும், சொந்தமானதாக இருந்தாலும் இன்னொன்றைச் சார்ந்ததாக இருந்தாலும், வெளிப்படையானதாக இருந்தாலும் மறைமுகமாக இருந்தாலும், சிந்தனையில் இருந்தாலும் வெளிப்புறத்தில் இருந்தாலும் - அது அவனுடைய அருளினால் உள்ள அன்பளிப்பாகும்.

இது சுட்டிக்காட்டுவது என்னவென்றால், அனைத்துலகங்களின் இறைவனுடைய பொதுவான அருள் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. மேலும் அவனது அருளிலிருந்து எவரும் வெறுமையாக இல்லை. அவனே எல்லா அருள்களுக்கும் அடிப்படையாக இருக்கின்றான்; எல்லா

ஒளிகளின் காரணகர்த்தாவாகவும், எல்லா கருணைகளின் நீரூற்றும் ஆவான். அவனது உண்மையான இருப்பே அனைத்து உலகத்தையும் நிலைநாட்டக் கூடியதாகவும் அனைத்து சீர்குலைவிலிருந்து அபயமளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அவனே இல்லாமை எனும் இருளிலிருந்து ஒவ்வொன்றையும் வெளியே கொணர்ந்தான்; மேலும் இருப்பு எனும் ஆடையை வழங்கினான்.

**அவனைத் தவிர எதுவும் தன்னளவில் சுயமாகக் கட்டாய இருப்பைக் கொண்டதும் தொன்மையானதுமாக இல்லை. அல்லது அவனிடமிருந்து அருளைப் பெறாமல் இல்லை. மாறாக, பூமியும், வானங்களும், மனிதனும், விலங்கும், கல்லும், மரமும், ஆன்மாவும், உடலும் அனைத்தும் அவனுடைய அருளினாலேயே உருவாகியுள்ளன.''**

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் நான்கு பகுதிகள். ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 191,192 அடிக்குறிப்பு எண்:11)*

''**இயற்கைச் சட்டத்தின் கண்ணாடியின் மூலமாகவும் இயல்பான மறையின் மூலமாகவும் தென்படுகின்ற இஸ்லாத்தின் இறைவன்தான் உண்மையான இறைவன் ஆவான்.** இஸ்லாம் எந்தவொரு புதிய இறைவனையும் எடுத்து வைக்கவில்லை. மாறாக, மனிதனின் உள்ளத்தின் ஒளியும் மனிதனின் மனசாட்சியும் வானமும் பூமியும் எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் அந்த இறைவனையே அது எடுத்து வைத்திருக்கிறது.''

*(தப்லீகே ரிஸாலத் தொகுதி 6 பக்கம் 14. மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 2 பக்கம் 12 இரண்டாம் வெளியீடு)*

''எவனுடைய கையின் மூலமாக ஒவ்வோர் ஆன்மாவும்,

படைப்பினங்களின் ஒவ்வோர் அணுவும் தனது எல்லா ஆற்றல்களுடனும் வெளிப்பட்டதோ, எவனது இருப்பினால் ஒவ்வொன்றும் நிலைபெற்றிருக்கின்றதோ அந்த ஆற்றல் மிக்க உண்மையான, முழுமையான இறைவனுக்கு நமது ஆன்மாவும் நமது இருப்பின் ஒவ்வோர் அணுவும் சிரம்பணிகின்றது. அவனுடைய ஞானத்தை விட்டும் அவனுடைய அதிகாரத்தை விட்டும் அவனது படைப்பை விட்டும் எந்தவொரு பொருளும் வெளியில் இல்லை.

**மேலும் எந்தத் தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக உயிருள்ள இறைவனை நாம் பெற்றோமோ அவர்கள் மீது ஆயிரக்கணக்கான சலவாத்துகளும், சலாம்களும், ரஹ்மத்துகளும், அருள்களும் உண்டாவதாக. (உயிருள்ள இறைவனாகிய) அவன், தானே உரையாடி தனது இருப்பிற்கு தானே நமக்கு அடையாளத்தை வழங்குகின்றான்.**

மேலும் அவன் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அடையாளத்தைக் காட்டி தனது பழமையானதும், முழுமையானதுமான ஆற்றல்களையும் வல்லமைகளையும் கொண்ட பிரகாசிக்கும் முகத்தை நமக்குக் காட்டுகிறான். எனவே **நாம் அத்தகைய இறைதூதரைப் பெற்றோம்; அவர் நமக்கு இறைவனைக் காட்டினார்.** மேலும் தனது முழுமையான ஆற்றலினால் எல்லாவற்றையும் படைத்த அத்தகைய இறைவனைப் பெற்றோம். அவனது ஆற்றல் எத்தகைய மகத்துவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது! அவனையன்றி எந்தவொரு பொருளும் உருவானதில்லை. அவனது ஆதரவின்றி எந்தவொரு பொருளும் நிலைபெற முடியாது.

நமது உண்மையான அந்த இறைவன் எண்ணற்ற

அருள்களைக் கொண்ட இறைவன் ஆவான். எண்ணற்ற ஆற்றல்களைக் கொண்டவனும், எண்ணற்ற அழகைக் கொண்டவனும், எண்ணற்ற அருட்கொடைகளைக் கொண்டவனும் ஆவான்; அவனையன்றி வேறு எந்த இறைவனும் இல்லை.''

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 363)*

''இறைவனின் இருப்பு மறைவிலும் மறைவாகவும், அப்பாற்பட்டதிலும் அப்பாற்பட்டதாவும், மிகவும் மறைமுகமாகவும் அமைந்துள்ளது. அதை மனித அறிவு தனது ஆற்றலால் மட்டும் கண்டறிந்து விட முடியாது. அவனது இருப்புக்கு எந்தவோர் அறிவுப்பூர்வமான சான்றும் உறுதியான ஆதாரமாக முடியாது. ஏனெனில் அறிவின் ஓட்டமும், முயற்சியும் இந்த உலகத்தின் படைப்புகளைப் பார்த்து படைப்பாளனின் தேவையை உணரும் அளவுக்கு மட்டுமே இருக்கிறது. ஆனால் தேவையை உணர்வது என்பது வேறு; எந்த இறைவனின் தேவை ஒப்புக்கொள்ளப்பட்டதோ அவன் உண்மையில் இருக்கவும் செய்கிறான் என்ற அய்னுல் யகீன் (கண்டுணர்வது) எனும் அந்தஸ்து வரை சென்றடைதல் என்பது வேறு விஷயமாகும்.

அறிவின் வழிமுறை குறைபாடுள்ளதும், முழுமையற்றதும், சந்தேகத்திற்குரியதுமாகும். எனவே ஒவ்வொரு தத்துவவாதியும் வெறும் அறிவின் மூலமாக மட்டும் இறைவனை அடையாளம் கண்டு விட முடியாது. மாறாக, அறிவின் மூலமாக மட்டும் இறைவனைப் பற்றி அறிய விரும்புகிறவர்களில் பெரும்பாலார் இறுதியில் நாத்திகராகி விடுகின்றனர். மேலும் வானம், பூமி ஆகியவற்றின் படைப்புகளைப் பற்றிச் சிந்திப்பது அவர்களுக்கு கொஞ்சமும்

பயனளிக்க முடியாது.

மேலும் இறைவனின் முழுமையான நல்லடியார்களை அவர்கள் எள்ளிநகையாடுகின்றனர்; கேலி கிண்டல் செய்கின்றனர். அவர்களின் ஆதாரம் என்னவெனில், உலகில் ஆயிரக்கணக்கான பொருள்கள் இருக்கின்றன. அவற்றின் எந்தவொரு பயனையும் நாம் காண முடிவதில்லை; அவற்றில் எங்களின் அறிவுப்பூர்வமான ஆய்வினால் படைத்தவனைச் சான்று காட்டும் எந்தவொரு படைப்பும் நிரூபணமாவதில்லை; இன்னும் கூறுவதென்றால், அந்தப் பொருள்கள் வீணானவையாகவும் அபத்தமானவையாகவும் காணப்படுகின்றன.

**ஆனால் ஒரு பொருளைப் பற்றிய அறிவு இல்லாததன் காரணத்தால் அது இல்லை என்றாகி விடாது என்பதை இந்த அறிவிலிகள் அறிவதில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.**

இந்தக் காலத்தில் இந்த மாதிரியான மக்கள் பல இலட்சம் பேர் இருக்கின்றனர். அவர்கள் தம்மை முதல் தரமான அறிவு படைத்தவர்களாகவும், தத்துவ வாதிகளாகவும் கருதுகின்றனர். மேலும் இறைவனின் இருப்பைக் கடுமையாக மறுக்கின்றனர். அவர்களுக்கு அறிவுப்பூர்வமான வலுவான சான்று கிடைத்திருந்தால் அவர்கள் இறை இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள் என்பது வெளிப்படையானதாகும். படைப்பாளனின் இருப்புக்கு உறுதியான, அறிவுப்பூர்வமான சான்று அவர்களை குற்றவாளியாக்கி இருந்தால் அவர்கள் மிகவும் வெட்கமற்ற முறையிலும், கேலி கிண்டல் செய்தும் இறை இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள்.

**எனவே தத்துவவாதிகளின் கப்பலில் அமர்ந்து கொண்டு எவரும் சந்தேகங்கள் என்னும் புயல் காற்றிலிருந்து தப்பிக்க முடியாது. மாறாக, அவர் கண்டிப்பாக மூழ்கி விடுவார். மேலும் அவருக்குக் கலப்பற்ற தூய ஏகத்துவத்தின் பானம் ஒருபோதும் - ஆம் - ஒருபோதும் கிடைக்காது.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊடகமின்றி ஏகத்துவம் கிடைத்து விட முடியும் என்பதும் அதிலிருந்து மனிதன் ஈடேற்றம் பெற முடியும் என்ற சிந்தனையும் எந்த அளவுக்கு அபத்தமானதும் துர்நாற்றமுள்ளதுமாகும்!**

அறிவிலிகளே! இறைவனின் இருப்பு பற்றி முழுமையான உறுதி இல்லாத வரை அவனுடைய ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? எனவே உறுதியுடன் கூடிய ஏகத்துவம் என்பது நபியின் மூலமாக மட்டுமே கிடைக்க முடியும் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்.

**உதாரணமாக நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் நாத்திகர்களுக்கு, மார்க்கமற்றவர்களுக்கு ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காட்டி இறை இருப்பை ஏற்றுக் கொள்ள வைத்து விட்டார்கள். மேலும் இன்று வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகவும், முழுமையாகவும் பின்பற்றுபவர்கள் அந்த அடையாளங்களை நாத்திகர்களின் முன் எடுத்து வைக்கின்றனர்.**

உண்மை என்னவென்றால், உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் கண்டுணராதவரை ஷய்த்தான் அவருடைய உள்ளத்திலிருந்து

வெளியேறுவதுமில்லை; உண்மையான ஏகத்துவம் அவருடைய உள்ளத்தில் நுழைவதுமில்லை. மேலும் அவர் உறுதியான முறையில் இறை இருப்பை ஏற்றுக்கொள்பவராக முடியாது. மேலும் இந்த தூய, முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகக் கிடைக்கின்றது.''

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 120,121)*

''இறைவனின் நுட்பத்திலும் நுட்பமான அந்த எல்லா வேலைகளையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் மனிதனுக்கு ஒருபோதும் இல்லை. மாறாக, இறைவனின் வேலைகள் அறிவு, புரியும் திறன், கணிப்பு ஆகியவற்றை விட்டும் உயர்வானவையாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மனிதனுக்கு காரண காரணிகளைப் பற்றி ஓரளவுக்கு தெரிந்து விட்டது என்ற அறிவின் மீது அவன் கர்வம் கொண்டு விடக் கூடாது. ஏனெனில் மனிதனுடைய அந்த அறிவு கடலின் கோடிக்கணக்கான துளிகளிலிருந்து ஒரு துளியைப் போன்று மிகவும் எல்லைக்குட்பட்டதாகும். உண்மை என்னவென்றால், **இறைவன் எல்லையற்றவனாக இருப்பதைப் போன்று அவனுடைய பணிகளும் எல்லையற்றவையாக இருக்கின்றன. மேலும் அவனுடைய ஒவ்வொரு பணியின் உண்மை நிலை வரை சென்றடைவது மனிதனுடைய ஆற்றலை விட மேலானதும் உயர்வானதுமாகும்.**

ஆயினும் நாம் அவனுடைய தொன்மையான பண்புகளைப் பார்த்து இறைவனின் பண்புகள் ஒருபோதும் செயலற்று இருக்கவில்லை; எனவே இறைவனின் படைக்கும் பண்பில் நிரந்தத்தன்மை காணப்படுகிறது எனக் கூறலாம். அதாவது படைப்பினங்களின் வகைகளில் ஏதாவதொரு வகை தொன்மையிலிருந்தே காணப்பட்டு வந்திருக்கிறது. ஆனால்

தனிப்பட்ட நிரந்தரத்தன்மை என்பது பொய்யானதாகும். அப்படி இருந்தாலும் இறைவனின் மாய்க்கின்ற, அழிக்கின்ற பண்பும் எப்போதும் தனது வேலையைச் செய்து வந்திருக்கின்றது. அதுவும் ஒருபோதும் செயலற்று இருக்கவில்லை.

**அறிவற்ற தத்துவவாதிகள் வானம், பூமியின் கோள்கள், கோளங்கள் ஆகியவற்றின் படைப்பை தமது அறிவியல் அதாவது இயற்கை விதிமுறைகளுக்கு உட்படுத்தி விடலாம் என்றும் ஒவ்வொரு படைப்பிற்கான வழிவகைகளை நிலைநாட்டி விடலாம் என்றும் விரும்பினர். ஆனால் அவர்கள் இதில் தோல்வி கண்டனர். வெற்றி பெற முயவில்லை என்பதே உண்மையாகும்.**

அவர்கள் தமது இயற்கை கண்டுபிடிப்புகளின் என்னென்ன கருவூலங்களைத் தொகுத்தனரோ அவை முற்றிலும் நிறைவற்றவையும், முழுமையற்றவையும் ஆகும். இதன் காரணமாகத்தான் அவர்கள் தமது சிந்தனையில் நிலைபெற முடியவில்லை. அவர்கள் தாமே உருவாக்கிய சிந்தனைகளில் எப்போதும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே சென்றன. இன்னும் எந்த அளவுக்கு (மாற்றங்கள்) ஏற்படும் என்பதும் தெரியாது.

**அவர்களின் எல்லா அடிப்படையும் அவர்களின் வெறும் அறிவு மற்றும் கணிப்பில் இருக்கின்றது என்பதே அவர்களுடைய ஆய்வுகளின் நிலையாகும்.**

மேலும் அவர்களுக்கு இறைவனிடமிருந்து எந்த உதவியும் கிடைப்பதில்லை. எனவே அவர்கள் இருளை விட்டு வெளியே வர முடியாது. இறைவனின் எண்ணற்ற பணிகள் எத்தகையவையாக இருக்கின்றனவென்றால் அவை மனிதனுடைய ஆற்றல், அறிவு, புரியும் திறன் ஆகியவற்றிற்கு

அப்பாற்பட்டவையாகவும் உயர்வானவையாகவும் இருக்கின்றன என்ற விஷயத்தைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு மனிதனுடைய ஞானம் சென்றடையாதவரை உண்மையில் எந்த நபரும் இறைவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாது.

இந்த இறைஞானத்தின் அந்தஸ்தை மனிதன் அடைவதற்கு முன்னர் ஒன்று அவன் நாத்திகனாகி விடுகிறான்; இறைவனின் இருப்பு பற்றி நம்பிக்கையே கொள்வதில்லை. அல்லது இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றான் என்றால், தன்னால் உருவாக்கப்பட்ட சான்றுகளின் ஒரு விளைவாக இருக்கும் அந்த இறைவன் மீது நம்பிகை கொள்கின்றான். தனது தோற்றத்தால் தன்னைத்தானே வெளிப்படுத்தக் கூடிய அந்த இறைவனை ஏற்றுக் கொள்வதில்லை. அவனுடைய ஆற்றல்களின் இரகசியங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றனவென்றால், மனிதனுடைய அறிவு அவற்றை சூழ்ந்து கொள்ள முடியாது.

**இறைவனின் ஆற்றல்கள் அற்புதத்திலும் அற்புதமான, நுட்பத்திலும் நுட்பமான, மறைவிலும் மறைவான, (கண்களால்) அடைய முடியாதவை என்ற அறிவை இறைவன் எனக்கு வழங்கியதிலிருந்து தம்மைத் தத்துவவாதிகள் என்று கூறுபவர்களை நான் உறுதியான காஃபிர் (இறைமறுப்பாளர்கள்) என்று கருதுகிறேன். மறைவான நாத்திகர்கள் எனக் கருதுகிறேன்.**

நான் கண்டுணர்ந்த எனது சொந்த அனுபவம் என்னவென்றால், இறைவனின் பல ஆற்றல்களின் அற்புதங்கள் எனக்கு காணக் கிடைத்திருக்கின்றன. அவற்றிற்கு இல்லாமையிலிருந்து இருப்பை உருவாக்கினான் என்று கூறுவதைத் தவிர வேறு எந்த பெயரையும் நாம் வைக்க முடியாது.

அந்த அடையாளங்களின் சில உதாரணங்களை சில சந்தர்ப்பங்களில் நான் எழுதியிருக்கிறேன். எவர் இந்த இயற்கையின் அற்புதத்தைக் காணவில்லையோ அவர் எதைக் கண்டார்?

**எவனுடைய ஆற்றல்கள் வெறும் நமது அறிவு, கணிப்பு வரை எல்லைக்குட்பட்டவையாக இருக்கின்றனவோ அடுத்து எதுவுமில்லையோ அப்படிப்பட்ட இறைவனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, எவனுடைய ஆற்றல்கள் அவனுடைய இருப்பைப் போன்று எல்லையற்றவையாகவும், கரையற்றவையாகவும், முடிவுறாதவையாகவும் இருக்கின்றனவோ அந்த இறைவனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.''**

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 280-282)*

**''இறைவனை அன்பிற்குரியவனாக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்ற போதனைகள் திருக்குர்ஆனில் இருக்கின்றன. சில இடங்களில் அவனது அழகையும் பொலிவையும் காட்டுகின்றன. சில இடங்களில் அவனது அருள்களை நினைவூட்டுகின்றன.**

**ஏனெனில் ஒருவரைப் பற்றிய அன்பு என்பது ஒன்று, அழகின் மூலமாக உள்ளத்தில் இடம்பிடிக்கின்றது; அல்லது அருள் மூலமாக இடம்பிடிக்கின்றது. இறைவன் தனது எல்லா சிறப்புகளின் அடிப்படையில் தனித்தவனும், இணையில்லாதவனுமாவான் என எழுதப்பட்டுள்ளது.**

அவனிடத்தில் எந்தக் குறைபாடும் இல்லை. அவன் எல்லா முழுமையான பண்புகளின் தோற்றமாவான்; அவன் எல்லா தூய ஆற்றல்களின் தோற்றமாவான். மேலும் எல்லா படைப்பினங்களையும் ஆரம்பத்தில் படைத்தவனாவான். எல்லா அருள்களுக்கும் நீரூற்று ஆவான். அனைத்து நற்கூலி

தண்டனை ஆகியவற்றின் எஜமானன் ஆவான். எல்லா விஷயங்களும் அவனிடமே திரும்புகின்றன. அவன் தொலைவில் இருந்தபோதிலும் அருகில் இருக்கின்றான்; அருகில் இருந்தபோதும் தொலைவில் இருக்கின்றான். அவன் அனைத்திற்கும் உயரே இருக்கின்றான்; ஆயினும் அவனுக்குக் கீழேயும் ஒன்று இருக்கிறது என்று நாம் கூற முடியாது.

அவன் எல்லாவற்றையும் விட அதிகமாக மறைந்தவனாக இருக்கின்றான்; ஆயினும் அவனை விட எவரும் பகிரங்கமாக இருப்பதாக நாம் கூற முடியாது. அவன் சுயமாக உயிருடன் இருக்கிறான்; மேலும் ஒவ்வொன்றும் அவனால் உயிருடன் இருக்கின்றது. அவன் சுயமாக நிலைபெற்றிருக்கிறான்; ஒவ்வொன்றும் அவன் மூலமாக நிலைபெற்றிருக்கின்றது. அவன் எல்லாவற்றையும் தாங்கி நிற்கிறான்; அவனை எதுவும் தாங்கி நிற்கவில்லை. அவனையன்றி தாமாகவே எதுவும் பிறக்கவில்லை; அல்லது அவனையன்றி எதுவும் தானாகவே உயிருடன் இருக்கவும் முடியாது. அவன் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளான்; ஆனால் எவ்வாறு சூழ்ந்துள்ளான் எனக் கூற முடியாது. அவன் வானம், பூமி ஒவ்வொன்றின் ஒளியாவான்.

மேலும் ஒவ்வோர் ஒளியும் அவனது கையினாலேயே ஒளிமயமானது. மேலும் அவனது இருப்பின் பிம்பமேயாகும். அவன் எல்லா உலகங்களையும் பரிபாலிப்பவனாவான். அவன் மூலமாக பரிபாலனம் பெறாததும், தாமாக இருக்கக்கூடியதும் ஆகிய எந்த ஆன்மாவும் இல்லை. எந்தவோர் ஆன்மாவுக்கும் அவனிடமிருந்து கிடைக்கப் பெறாத, தானாகவே இருக்கின்ற எந்த ஆற்றலும் இல்லை.

**அவனது அருள்கள் இரு வகைப்படும். ஒன்று, எவருடைய சென்றகால செயலின் காரணமாக இல்லாமல்**

**தொன்மையிலிருந்தே வெளிப்பட்டுள்ளன. உதாரணமாக, பூமி, வானம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நீர், நெருப்பு, காற்று மற்றும் இந்த உலகத்திலுள்ள எல்லா அணுக்கள். இவை நமது வசதிக்காக படைக்கப்பட்டுள்ளன.**

அவ்வாறே என்னென்ன பொருள்கள் நமக்குத் தேவையோ அவை அனைத்தும் நமது படைப்பிற்கு முன்பே நமக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**இவை நாம் இல்லாத, நமது எந்த செயலும் இல்லாத அந்த காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டன. எனது செயலின் விளைவாக சூரியன் உருவாக்கப்பட்டது என்று யார் கூற முடியும்? அல்லது பூமி எனது நற்செயல்களின் விளைவாக உருவாக்கப்பட்டது என்று யார் கூற முடியும்?**

சுருக்கமாக, இவை மனிதனின் செயல்களுக்கு முன்னர் வெளிப்பட்ட அருள்களாகும். இவை எவருடைய செயலின் விளைவு அல்ல.

**இரண்டாவது அருள், செயல்களின்படி ஆயத்தம் செய்யப்படுவதாகும்.**

அதை விளக்க வேண்டிய எந்த அவசியமுமில்லை. அவ்வாறே இறைவனின் இருப்பு எல்லா குறைகளை விட்டும் தூய்மையானது; எல்லா நஷ்டத்தை விட்டும் அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று திருக்குர்ஆனில் வருகிறது. மனிதனும் அவனது போதனையைப் பின்பற்றி குறைகளிலிருந்து தூய்மையடைய வேண்டும் என இறைவன் விரும்புகிறான். அவன் இவ்வாறு கூறுகிறான்:

مَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا

அதாவது எவர் இவ்வுலகில் குருடராக இருப்பரோ- அவனுடைய நிகரற்ற இருப்பைக் காணுவதில்லையோ அவர் மரணத்திற்குப் பிறகும் குருடராகவே இருப்பார்.

*(திருக்குர்ஆன் 17:73)*

இருள் அவரை விட்டு விலகாது. ஏனெனில் இறைவனைப் பார்ப்பதற்கு இவ்வுலகிலேயே உணர்வு கிடைக்கின்றன. எவர் இந்த உணர்வை உலகிலிருந்து உடன் எடுத்துச் செல்ல மாட்டாரோ அவர் மறுமையிலும் இறைவனைப் பார்க்க முடியாது.

இறைவன், மனிதனிடம் எந்த அளவுக்கு முன்னேற்றத்தை வேண்டுகிறான் என்பதையும் அவனுடைய போதனயைப் பின்பற்றுவதால் மனிதன் எதுவரை சென்றடைய முடியும் என்பதையும் இறைவன் இந்த வசனத்தில் தெளிவாக புரிய வைத்து விட்டான். பிறகு அவன் திருக்குர்ஆனில் எதன் மூலமாக, எதன்படி செயல்படுவதன் மூலமாக இவ்வுலகிலேயே இறைவனைக் கண்டு கொள்ள முடியும் என்ற போதனையை எடுத்துரைக்கின்றான்.

உதாரணமாக அவன் இவ்வாறு கூறுகிறான்:

فَمَنْ كَانَ يَرْجُوْا لِقَآءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا
يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖٓ اَحَدًا

*(திருக்குர்ஆன் 18:111)*

அதாவது எவர் இவ்வுலகிலேயே உண்மையான இறைவனை, படைத்த இறைவனைக் காண வேண்டும் என விரும்புகிறாரோ அவர் எவ்வித குழப்பமும் இல்லாத நற்செயலைச் செய்ய வேண்டும். அதாவது அவருடைய செயல் மக்களுக்குக் காட்டுவதற்காகவும் இருக்கக் கூடாது; அவற்றின் காரணத்தினால் நான் அப்படிப்பட்டவன்; இப்படிப்பட்டவன்

என்ற அகந்தையும் உள்ளத்தில் தோன்றக் கூடாது.

மேலும் அந்த செயல் குறைபாடுள்ளதாகவோ, முழுமையற்றதாகவோ இருக்கக் கூடாது. இறையன்புக்கு மாற்றமான எந்தவொரு துர்நாற்றமும் அதில் இருக்கக் கூடாது. மாறாக, அது உண்மை, நன்றியுணர்வினால் நிரம்பி இருக்க வேண்டும். அத்துடன் எல்லாவிதமான ஷிர்க்கிலிருந்தும் தூயதாகவும் இருக்க வேண்டும். சூரியனையோ, சந்திரனையோ, வானத்தின் நட்சத்திரங்களையோ, காற்றையோ, நெருப்பையோ, நீரையோ, பூமியின் வெறெந்த பொருளையோ வணக்கத்திற்குரியதாக்கக் கூடாது.

**மேலும் உலக வழிவகைகள் இறைவனுக்கு இணையானவை என்ற அளவுக்கு அவற்றிற்குக் கண்ணியமளிப்பதும் அல்லது அவற்றின் மீது நம்பிக்கை வைப்பதும் கூடாது. மேலும் தனது தைரியத்தையும், முயற்சியையும் ஒரு பொருட்டாகக் கருதுவதும் கூடாது. இதுவும் ஷிர்க்கின் வகைகளில் ஒரு வகையாகும்.**

மாறாக, எல்லாவற்றையும் செய்து விட்ட பிறகு ஒன்றும் செய்யவில்லை என்று கருத வேண்டும். தனது அறிவின் மீது எந்த அகங்காரமும் கொள்ளக் கூடாது. தனது செயல் மீது பெருமை கொள்ளவும் கூடாது. மாறாக, தன்னை உண்மையில் ஓர் அறிவற்றவராகக் கருத வேண்டும். ஒரு செயலற்றவராகக் கருத வேண்டும். ஆன்மா எல்லா நேரமும் அல்லாஹ்வின் முன்னிலையில் வீழ்ந்து கிடக்க வேண்டும்.

மேலும் துஆக்கள் மூலமாக அவனது அருள்களை ஈர்க்க வேண்டும். கடுமையான தாகம் கொண்டவராகவும் கை, கால் இல்லாதவர் போன்றும் அவருக்கு முன்னால் மிகவும் தெளிவான இன்பமான ஒரு நீரூற்று தோன்றியதைப் போன்றும்

கருதிக் கொள்ள வேண்டும்.

எனவே அவர் அந்த மன்றாடலினால் தன்னை அந்த நீரூற்று வரை சென்றடைய வைத்து விடுவார். மேலும் அவர் தனது உதடுகளை அந்த நீரூற்றில் வைத்து விட்டார். தாகம் தீராத வரை அவர் அதிலிருந்து விலகவில்லை என்ற அளவுக்குக் கருத வேண்டும்.

பிறகு திருக்குர்ஆனில் நமது இறைவன் தனது மேன்மைகளைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ ﴿٢﴾ اَللّٰهُ الصَّمَدُ ۚ ﴿٣﴾ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ ﴿٤﴾
وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۚ ﴿٥﴾

*(திருக்குர்ஆன் 112:2-5)*

அதாவது உங்கள் இறைவன் எத்தகையவன் என்றால் அவன் தனது இருப்பிலும் பண்புகளிலும் ஏகனாவான். எந்த இருப்பும் அவனைப் போன்று ஆதி இல்லாததோ அந்தம் இல்லாததோ அல்ல. அதாவது அவன் ஆதியில்லாதவனும்; அந்தமில்லாதவனுமாவான். எந்தவொன்றின் பண்புகளும் அவனது பண்புகளைப் போன்று இல்லை. மனிதனுடைய அறிவுக்கு ஓர் ஆசிரியர் தேவைப்படுகிறார். பிறகு அது எல்லைக்குட்பட்டதாகவும் இருக்கிறது. ஆனால் (இறைவனாகிய) அவனுடைய அறிவுக்கு எந்தவோர் ஆசிரியரின் தேவையுமில்லை. அத்துடன் அது எல்லையற்றதுமாகும்.

**மனிதனுடைய கேட்கும் திறனுக்கு காற்று தேவைப்படுகிறது. மேலும் எல்லைக்குட்பட்டது. ஆனால் இறைவனுடைய கேட்கும் திறன் சொந்த ஆற்றலினால் ஆனது; மேலும் அது எல்லைக்குட்பட்டதன்று. மனிதனுடைய பார்க்கும் புலனுக்கு சூரியன் அல்லது**

**ஏதாவதோர் ஒளி தேவைப்படுகிறது. பிறகு அது எல்லைக்குட்பட்டதுமாகும். ஆனால் இறைவனின் பார்க்கும் புலன் சொந்த ஒளியினால் ஆகும்; மேலும் எல்லையற்றதாகும்.**

அவ்வாறே மனிதனின் படைக்கும் ஆற்றலுக்கு ஏதாவது மூலப்பொருள் தேவைப்படுகிறது. நேரத்தின் தேவையும் இருக்கிறது; பிறகு அது எல்லைக்குட்பட்டதுமாகும். ஆனால் இறைவனின் படைக்கும் ஆற்றலுக்கு எந்த மூலப்பொருளின் தேவையுமில்லை. எவ்வித நேரத்தின் தேவையுமில்லை. மேலும் அது எல்லையற்றதுமாகும்.

ஏனெனில் **அவனது எல்லா பண்புகளும் நிகரற்றவையும் இணையற்றவையுமாகும். அவனுக்கு எந்த இணையும் இல்லாததைப் போன்றே அவனது பண்புகளுக்கும் எந்த இணையுமில்லை**...............

அவன் ஒரு பண்பில் குறைபாடுள்ளவனாக இருந்தால் பிறகு எல்லா பண்புகளிலும் குறைபாடுள்ளவனாக இருப்பான். எனவே அவன் தனது இருப்பைப் போன்று தனது எல்லா பண்புகளிலும் நிகரற்றவனாகவும் இணையற்றவனாகவும் இல்லாதவரை அவனது ஏகத்துவம் நிலைபெற முடியாது.

பிறகு இதற்கு அடுத்தபடியாக மேற்கூறப்பட்ட வசனத்தின் பொருள், இறைவன் யாருடைய மகனுமல்லன்; அவனுக்கு எந்த மகனுமில்லை. ஏனெனில் அவன் சுயமாக தன்னிறைவு பெற்றவனாவான். அவனுக்கு தந்தையின் தேவையுமில்லை; மகனுடைய தேவையுமில்லை. இதுதான் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்த தவ்ஹீது ஆகும். இது ஈமானின் அடிப்படையாகும்.''

*(லெக்சர் லாஹூர். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 152-155)*

''எனது ஜமாஅத்துக்கு தெரிவிக்குமாறு இறைவன் என்னை நோக்கி கூறியிருக்கிறான். **எவர் உலகத்தின் எவ்வித கலப்படமும் இல்லாததும், நயவஞ்சகம், கோழைத்தனம் ஆகியவற்றால் கறைபடியாததுமான ஈமானை கொண்டிருக்கின்றாரோ அந்த ஈமான் கீழ்ப்படிதல் என்ற அந்தஸ்தை விட்டும் இழப்பிற்குரியதாக இல்லை. அப்படிப்பட்ட மக்கள் இறைவனுக்குப் பிடித்தமான மக்கள் ஆவர்.** அவர்களின் கால்கள்தான் உண்மையில் நிலைத்திருக்கும் கால்கள் ஆகும் என இறைவன் கூறுகிறான்.

கேட்பவர்களே! கேட்டுக்கொள்ளுங்கள். இறைவன் உங்களிடம் என்ன விரும்புகிறான்? நீங்கள் அவனுக்காகவே ஆகி விடுங்கள்; அவனுக்கு வானத்திலும், பூமியிலும் எவரையும் இணையாக்காதீர்கள் என்று மட்டுமே விரும்புகிறான். நமது இறைவன் எத்தகைய இறைவன் என்றால் அவன், முன்னர் உயிருடன் இருந்ததைப் போன்றே இப்போதும் உயிருடன் இருக்கிறான். முன்னர் உரையாடியதைப் போன்றே இப்போதும் உரையாடுகின்றான். முன்னர் கேட்டதைப் போன்றே இப்போதும் கேட்கிறான். இந்த காலத்தில் அவன் கேட்கின்றான்; ஆனால் உரையாடுவதில்லை என்பது காய்ந்த சிந்தனையாகும்.

மாறாக, அவன் கேட்கவும் செய்கின்றான்; உரையாடவும் செய்கின்றான். அவனுடைய அனைத்து பண்புகள் ஆதியிலிருந்து இருக்கின்றன; நிரந்தரமாக இருக்கும். எந்தவொரு பண்பும் செயலற்று இருக்கவில்லை; ஒருபோதும் செயலற்றுவிடாது.

அவன் ஒருவனே இணையில்லாதவனும் ஆவான். அவனுக்கு எந்த மகனுமில்லை; அவனுக்கு எந்த

மனைவியுமில்லை; அவன் ஒருவனே நிகரற்றவன்; அவனுக்கு இணையானவன் எவருமில்லை. அவனைப் போன்று எந்த நபரும் ஒரு குறிப்பிட்ட பண்பினால் சிறப்பிக்கப்பட்டவர் இல்லை. மேலும் அவனுக்கு சமமானவர் எவருமில்லை. அவனுக்கு சமமான பண்பு எவருக்கும் இல்லை.

அவனுடைய எந்தவோர் ஆற்றலும் குறைவானதன்று. அவன் தொலைவில் இருந்தபோதிலும் அருகில் இருக்கின்றான்; அவன் அருகில் இருந்தபோதிலும் தொலைவில் இருக்கின்றான். ஆன்மீகக் காட்சி காண்பவர்களுக்கு அவன் உருவகமாக தன்னை வெளிப்படுத்த முடியும். ஆயினும் அவனுக்கு எந்த உடலும் இல்லை; அவனுக்கு எந்த உருவமும் இல்லை. மேலும் அவன் எல்லாவற்றையும் விட உயரே இருக்கின்றான்; ஆயினும் அவனுக்கு கீழேயும் ஒருவர் இருக்கின்றார் என்று நாம் கூற முடியாது. அவன் அர்ஷில் இருக்கின்றான்; ஆயினும் அவன் பூமியில் இல்லை என்று கூற முடியாது.

அவன் எல்லா முழுமையான பண்புகளின் தொகுப்பாக இருக்கிறான். மேலும் எல்லா உண்மையான புகழ்களின் தோற்றமாக இருக்கின்றான். மேலும் எல்லா மேன்மைகளின் தலையூற்றாவான்.

மேலும் எல்லா ஆற்றல்களின் தொகுப்பு ஆவான். மேலும் எல்லா அருள்களையும் தோற்றுவிப்பவனாவான். மேலும் ஒவ்வொரு பொருளும் திரும்பி வரும் இடமாவான். மேலும் ஒவ்வொரு நாட்டின் எஜமானன் ஆவான். மேலும் எல்லா மேன்மைகளையும் கொண்டவனாவான்.

எல்லா குறைகளையும் பலவீனத்தையும் விட்டு தூயவனாவான். பூமியில் உள்ளவர்களுக்கும், வானத்தில்

உள்ளவர்களுக்கும் அவனை மட்டுமே வணங்குவதில் அவன் தனிச்சிறப்பானவனாவான். அவனுக்கு முன்னால் எந்த விஷயமும் சாத்தியமில்லாதது என்றில்லை. மேலும் எல்லா ஆன்மாக்களும் அவற்றின் ஆற்றல்களும், எல்லா அணுக்களும் அவற்றின் ஆற்றல்களும் அவனது படைப்பே ஆகும். அவனையன்றி எந்தவொரு பொருளும் வெளிப்படுவதில்லை.

அவன் தனது ஆற்றல்கள், தனது வல்லமைகள், தனது அடையாளங்கள் ஆகியவற்றால் தன்னைத்தானே வெளிப்படுத்துகிறான். மேலும் நாம் அவனை அவன் மூலமாகவே பெற முடியும். மேலும் அவன் நல்லடியார்களுக்கு எப்போதும் தனது இருப்பை வெளிப்படுத்தி வருகின்றான். மேலும் தனது ஆற்றல்களை அவர்களுக்குக் காட்டுகின்றான். அவனாலேயே அவன் கண்டறியப்படுகிறான். மேலும் அவன் மூலமாகவே அவனது விருப்பத்திற்குரிய வழி கண்டறியப்படுகிறது.

**அவன் பௌதீகமான கண்களின்றி பார்க்கின்றான். பௌதீகமான காதுகளின்றி கேட்கின்றான். பௌதீகமான நாவின்றி அவன் பேசுகின்றான். அவ்வாறே இல்லாமையிலிருந்து இருப்பை உருவாக்குகிறான். கனவுக் காட்சியில் எந்தவொரு மூலப்பொருளுமின்றி ஓர் உலகத்தை அவன் உருவாக்கி விடுவதை நீங்கள் பார்ப்பதைப் போன்று ஒவ்வொரு அழிந்து போகின்றதை, ஒன்றுமற்றதாக இருக்கின்றதை இருப்பதாக அவன் காட்டுகிறான்.**

இது அவனுடைய வேலையாகும். அவ்வாறே அவனுடைய எல்லா ஆற்றல்களும் ஆகும். அவனுடைய ஆற்றல்களை மறுக்கின்றவன் அறிவற்றவனாவான். அவனது நுட்பமான ஆற்றல்களை அறியாதவன் குருடனாவான். அவனது

கண்ணியத்திற்கு எதிரானவையாகவும் அல்லது அவனது எச்சரிக்கைகளுக்கு எதிரானவையாகவும் இருக்கின்ற விஷயங்களைத் தவிர அனைத்தையும் அவன் செய்கின்றான்; செய்ய முடியும். அவன் தனது இருப்பிலும், பண்புகளிலும், செயல்களிலும், ஆற்றல்களிலும் ஏகனாவான்.

**பிரித்தறிவிக்கக் கூடிய இந்தக் குர்ஆன் திறந்து காட்டியிருக்கும் வாசலைத் தவிர அவனை சென்றடைவதற்கான எல்லா வாசல்களும் அடைபட்டுள்ளன.''**

*(அல்வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 309-311)*

''اَلْحَمْدُ لِلّٰهِ - எல்லா புகழ்களும் அல்லாஹ் என்ற பெயரைக் கொண்ட அந்த உண்மையான வணக்கத்திற்குரியவனும், எல்லா முழுமையான அழகிய பண்புகளையும் ஒருங்கே கொண்டவனும் ஆகிய அவனுக்கு பொருந்துகின்றன. நாம் இதற்கு முன்பும் எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

**திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில், அல்லாஹ் என்பது, உண்மையான வணக்கத்திற்குரியவனும் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவனும், எல்லா குறைகளை விட்டும் தூய்மையானவனும், ஏகனும், இணையில்லாதவனும் அனைத்து அருள்களின் துவக்கமும் ஆக இருக்கின்ற முழுமையானவனின் பெயராகும்.**

ஏனெனில் இறைவன் தனது தூய சொல்லாகிய திருக்குர்ஆனில் தனது பெயராகிய அல்லாஹ் என்பதை மற்ற எல்லா பெயர்கள் மற்றும் பண்புகளுக்கு உரியதாகக் குறிப்பிட்டுள்ளான். மேலும் எந்த இடத்திலும் வேறு எந்த பண்புக்கும் இந்த அந்தஸ்தை வழங்கவில்லை. எனவே

அல்லாஹ் நிறைவான பண்பைக் கொண்டிருப்பதன் காரணமாக அவன் கொண்டிருக்கும் அனைத்து பண்புகளையும் அல்லாஹ் என்ற சொல் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் அவன் அனைத்து பெயர்களையும் பண்புகளையும் கொண்டிருகின்றான். எனவே அதன் கருத்து, அவன் எல்லா முழுமையான பண்புகளையும் கொண்டுள்ளான் என்பதாகும்.

**எனவே اَلْحَمْدُ لِلّٰهِ என்பதற்கு சுருக்கமான பொருள் என்னவென்றால், எல்லாவிதமான புகழும் - அது வெளிப்படையானதாக இருந்தாலும், உட்புறமானதாக இருந்தாலும், சொந்த மேன்மைகளைக் கொண்டதாக இருந்தாலும், இயற்கை அற்புதங்களைக் கொண்டதாக இருந்தாலும், அவை அல்லாஹ்வுக்கு உரியவையாக இருக்கின்றன. மேலும் அதில் எவரும் இணையில்லை.** மேலும் எந்தவோர் அறிவாளியின் அறிவும் எந்த அளவுக்கு சரியான புகழ்களையும் நிறைவான மேன்மைகளையும் சிந்திக்க முடியுமோ அல்லது ஒரு சிந்திப்பவரின் சிந்தனைக்கு வர முடியுமோ அந்த எல்லா சிறப்புகளும் அல்லாஹ்விடம் காணப்படுகின்றன.

அறிவு ஒரு சிறப்பைப் பற்றிய **சாத்தியக்கூற்றிற்கு சாட்சி பகர்ந்திருக்கும் நிலையில், பேறிழந்த மனிதனைப் போன்று அந்த சிறப்பை விட்டும் விலகி இருப்பவனாக இறைவன் ஒருபோதும் இல்லை.**

மாறாக, இறைவனிடம் காணப்படாத எந்தவொரு சிறப்பையும் அறிவுடையவரின் அறிவு எடுத்து வைக்கவே முடியாது. மனிதன் எந்த அளவுக்கு அதிகமதிகமாக சிறப்புகளை சிந்திக்க முடியுமோ அவை அனைத்தும் அவனிடத்தில் காணப்படுகின்றன. அவனுக்கு தனது இருப்பு, பண்புகள்,

புகழ்கள் ஆகியவற்றில் அனைத்தையும் விட முழுவதுமான சிறப்பு இருக்கின்றது. மேலும் அவன் அசுத்தங்களை விட்டும் முற்றிலும் தூயவனாக இருக்கின்றான்.

இப்போது பாருங்கள். இது எவ்வளவு உண்மையாக இருக்கிறது! இதன் மூலமாக உண்மையான மற்றும் பொய்யான மார்க்கம் தெளிவாகி விடுகிறது. ஏனெனில் எல்லா மார்க்கங்களையும் பற்றி சிந்திக்கும்போது, இஸ்லாத்தைத் தவிர உலகில் இறைவனை எல்லா கறைகளை விட்டும் தூயவனாகவும், முழுமையான எல்லா மேன்மைகளைக் கொண்டவனாகவும் கருதுகின்ற வேறு எந்த மார்க்கமும் இல்லை என்பது தெரிய வரும்.

**பொதுவான இந்துக்கள் (இறைவனின்) பரிபாலிக்கும் பண்பில் தமது தேவதைகளை இணையாகக் கருதுகின்றனர்.** மேலும் இறைவனின் வேலைகளில் அவர்களை நிரந்தரமான முறையில் ஈடுபடக் கூடியவர்களாகக் குறிப்பிடுகின்றனர். இன்னும் கூறுவதென்றால், அவர்கள் இறைவனின் எண்ணங்களை மாற்றக் கூடியவர்களாகவும் அவனுடைய நியதியை தலை கீழாக மாற்றக் கூடியவர்களாகவும் கருதுகின்றனர்.

**மேலும் இந்துக்கள் பல மனிதர்களைப் பற்றியும் மற்ற விலங்குகளைப் பற்றியும் - இன்னும் கூறுவதென்றால் சில அசுத்தமான, அசுத்தத்தைத் தின்கின்ற விலங்குகளைப் பற்றியும் அதாவது பன்றிகள் ஆகியவை பற்றி, அவற்றின் பரமேசுவரன் ஒரு காலத்தில் இன்னின்ன பிறவிகளில் பிறக்கக் கண்டு அவற்றால் ஏற்படுகின்ற அந்த எல்லா அசுத்தங்களிலும், அழுக்குகளிலும் சிக்கியிருந்தார் எனக் கருதுகின்றனர்.**

மேலும் அவற்றைப் போன்றே பசி, தாகம், வலி, துக்கம், அச்சம், கவலை, நோய், மரணம், இழிவு, அவமானம், இயலாமை, பலவீனம் ஆகிய ஆபத்துகளில் சிக்கிக் கொண்டிருந்தார். மேலும் இந்த எல்லா கொள்கைகளும் இறைவனின் சிறப்புகளுக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றன; மேலும் அவனுடைய ஆதியும் அந்தமுமில்லாத கம்பீரத்தையும், கண்ணியத்தையும் குறைக்கின்றன என்பது வெளிப்படையானதாகும்.

மேலும் அவர்களின் நாகரீக சகோதரர்களான ஆரிய சமாஜிகள் - தாம் மிகச் சரியாக வேதத்தின்படி நடக்கின்றோம் எனக் கருதுபவர்கள் - இறைவனின் படைக்கும் பண்பையே மறுத்து விட்டனர். மேலும் எல்லா ஆன்மாக்களையும் அவனுடைய முழுமையான இருப்பைப் போன்று படைக்கப்படாதவையாகவும், தாமாகவே இருக்க வேண்டிய ஒன்றாகவும், உண்மையாக இருக்க வேண்டிய ஒன்றாகவும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இறைவனைப் பற்றி அவன் உலகத்தின் எஜமானனாக அழைக்கப்படும்போது பிறகு அவன் எந்தவொரு பொருளுக்கும் பரிபாலனாகவும் படைப்பாளனாகவும் இல்லை என்பதையும், உலகின் வாழ்வு அவன் ஆதரவினால் அல்ல; மாறாக, தனது சொந்த இருப்பின் மூலமாக இருக்கிறது என்பதையும் நியாயமான அறிவு குறைபாடுள்ளதாகக் கருதுகிறது.

நியாயமான அறிவுக்கு முன்னால் இந்த இரு கேள்விகளையும் வைத்தால், அதாவது எல்லா ஆற்றல்களையும் கொண்ட இறைவனின் நிறைவான புகழ்களுக்கு அவன், தானே தனது முழுமையான

ஆற்றலினால், இருக்கின்ற எல்லாவற்றையும் வெளிப்படுத்தி அவை அனைத்தையும் படைக்கின்றனவனும் பரிபாலிக்கின்றவனும் ஆவான்;

எல்லா உலகங்களின் தொடர் அவனது ருபூபிய்யத் என்னும் படைத்து பரிபாலிக்கும் பண்பில் முடிவடைகின்றது; படைக்கும் பண்பும் ஆற்றலும் அவனது முழுமையான இருப்பில் காணப்படுவதும் பிறப்பு, இறப்பு ஆகிய நஷ்டத்திலிருந்து தூய்மையானவனும் ஆவான் என்பது மிகச் சரியானதும் மிகப் பொருத்தமானதுமாக இருக்குமா? அல்லது எந்த அளவுக்கு படைப்பினங்கள் அவனது ஆதிக்கத்தில் இருக்கின்றனவோ அவை அவனுடைய படைப்பினங்கள் அல்ல. அவனது ஆதரவினால் அவை இருக்கவில்லை. அவை இருப்பதிலும் நிலைபெற்றிருப்பதிலும் அவனுடைய தேவையைக் கொண்டிருக்கவில்லை. அவன் அவற்றின் படைப்பாளனோ அல்லது பரிபாலிப்பவனோ அல்லன். படைக்கும் பண்பும், ஆற்றலும் அவனிடம் காணப்படுவதில்லை. பிறப்பு இறப்பு ஆகியவற்றின் நஷ்டத்திலிருந்து தூயவனுமல்லன் என்பதா? என்ற இந்த இரு கேள்விகளையும் வைத்தால் உலகின் எஜமானனாக இருப்பவன் உலகைப் படைத்தவன் இல்லை; ஆன்மாக்களிலும் உடல்களிலும் காணப்படுகின்ற ஆயிரக்கணக்கான பண்புகள் சுயமாகவே இருக்கின்றன. அவற்றை உருவாக்குபவன் எவனுமில்லை. இந்த அனைத்து பொருள்களின் எஜமானன் என்று அழைக்கப்படுகின்ற அந்த

இறைவன் கற்பனையாக எஜமானனாவான் என்று அறிவு ஒருபோதும் தீர்ப்பு வழங்குவதில்லை.

படைப்பதிலிருந்து அவனை பலவீனமானவனாகக் கருதுவதும் அல்லது ஆற்றல் அற்றவனாகவும் குறைபாடுள்ளவனாகவும் குறிப்பிடுவதும் அல்லது அசுத்தமான, அசுத்தத்தை தின்கின்ற, பொருத்தமற்ற கெட்ட பழக்கத்தை அவனுடன் தொடர்புபடுத்திக் கூறுவதும் அல்லது மரணம், வேதனை, துக்கம், அறிவின்மை, முட்டாள்தனம் ஆகியவற்றை அவனுக்கு பொருத்தமானதாகக் கொள்வதும் ஆகுமானது என்று அறிவு ஒருபோதும் தீர்ப்பு கொடுப்பதில்லை.

மாறாக, இறைவன் இந்த எல்லா அசுத்தங்களிலிருந்தும் நஷ்டங்களிலிருந்தும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்றும், அதில் நிறைவான முழுமைத்தன்மை இருக்க வேண்டும் என்றும் அது சாட்சி பகர்கின்றது. **மேலும் நிறைவான முழுமைக்கு நிறைவான ஆற்றல் நிபந்தனையாகும். மேலும் இறைவனிடம் நிறைவான ஆற்றல் இல்லை என்றால், அவன் வேறு எந்தவொரு பொருளையும் படைக்க முடியவில்லை என்றால், தன்னையும் எல்லாவிதமான நஷ்டத்திலிருந்தும் குறைகளிலிருந்தும் காப்பாற்ற முடியவில்லை என்றால் அவனிடம் நிறைவான முழுமைத்தன்மையும் இல்லாமற் போய்விட்டது. மேலும் நிறைவான முழுமைத்தன்மை இல்லாதபோது முழுமையான புகழ்களை விட்டும் அவன் பேறிழந்தவனாகி விட்டான். இது இந்துக்கள் ஆரியர்களின் நிலையாகும்.**

கிறித்தவர்கள் இறைவனின் கம்பீரத்தை வெளிப்படுத்துவது எப்படிப்பட்டதாக இருக்கிறதென்றால், அதை ஒரு கேள்வியின் மூலமாகவே அறிவுள்ள மனிதன் புரிந்து கொள்ளலாம்.

அதாவது, முழுமையான, தொன்மையான, தன்னிறைவான, தேவைகளற்றவனுமாகிய அவனைப் பற்றி ஆரம்பத்திலிருந்தே அவன் செய்து வருகின்ற அவனது எல்லா வேலைகள் இருந்தும் அவனே போதுமானவனாக இருந்தும், அவனே எந்த தந்தையின், மகனின் தேவையுமின்றி எல்லா உலகத்தையும் படைத்திருக்கும்போது அவனே எல்லா ஆன்மாக்களுக்கும் உடல்களுக்கும் அவற்றிற்குத் தேவையான எல்லா ஆற்றல்களையும் வழங்கி இருக்கும்போது அவனே அனைத்து உலகங்களையும் பாதுகாப்பவனாகவும், நிலைபெறச் செய்பவனாகவும் திட்டமிடுபவனாகவும் இருக்கும்போது இன்னும் கூறுவதென்றால், அவை தோன்றுவதற்கு முன்னர் அவற்றின் வாழ்வுக்கு என்னவெல்லாம் தேவை இருந்தனவோ அவை அனைத்தையும் தனது ரஹ்மானிய்யத் என்ற பண்பின் மூலமாக வெளிப்படுத்தி இருக்கும்போது, **எவருடைய செயலையும் எதிர்பார்க்காமல் சூரியனையும், சந்திரனையும், எண்ணற்ற நட்சத்திரங்களையும் பூமியையும், அதில் காணப்படுகின்ற ஆயிரக்கணக்கான அருள்களையும் தனது அருளாலும் கருணையாலும் மனிதர்களுக்காக படைத்திருக்கும்போது இந்த எல்லா வேலைகளிலும் எந்தவொரு மகனுடைய தேவையும் அவனுக்கு இல்லாதிருக்கும்போது அதே இறைவன் இறுதி காலத்தில் தனது எல்லா கம்பீரத்தையும் ஆற்றல்களையும் இல்லாமல் ஆக்கி விட்டு மன்னிப்பையும் இரட்சிப்பையும் வழங்குவதற்காக குமாரனுடைய தேவையுடையவனாக ஆகிவிடும்போது குமாரனும் எப்படிப்பட்டவர் என்றால் அவருக்கு பிதாவுடன் எவ்வித பொருத்தமும் இல்லை.**

அவருடைய இறைதன்மை நிரூபணமாவதற்கு அவர் பிதாவைப் போன்று வானத்தின் எந்த ஒரு மூலையையும், பூமியின் எந்தவொரு பகுதியையும் படைக்கவில்லை.

மாறாக, **மாற்கு அதிகாரம் 8 வசனம் 12-ல்** அவருடைய பலவீனமான நிலையை இவ்வாறு வெளிப்படுத்தி இருக்கிறார்: அவர் தன்னுடைய உள்ளத்தில் அந்தோ எனக் கூறி மூச்சை இழுத்தவாறு, இந்த காலத்து மக்கள் ஏன் அடையாளத்தைக் கேட்கின்றனர்? இந்த காலத்தின் மக்களுக்கு எந்த அடையாளமும் காட்டப்பட மாட்டாது என நான் உங்களுக்கு உண்மையாகக் கூறுகிறேன் என்றார்.

**அவர் சிலுவையில் அறையப்படும்போதும் யூதர்கள், அவர் இப்போது நமக்கு முன்னால் அப்படியே உயிர்பெற்று விட்டால் நாங்கள் அவர் மீது விசுவாசம் கொண்டு விடுவோம் என்றனர். ஆனால் அவர் அவர்களுக்கு உயிர் பெற்றுக் காட்டவில்லை. மேலும் தனது இறைதன்மைக்கும் முழுமையான ஆற்றலுக்கும் அணுவளவும் சான்று காட்டவில்லை.**

அவர் சில அற்புதங்களைக் காட்டினார் என்றாலும் அவருக்கு முன்னர் உள்ள நபி பெரும்பாலும் காட்டியவற்றையே காட்டினார். இன்னும் கூறுவதென்றால், அவரது காலத்திலேயே ஒரு தடாகத்தின் தண்ணீரிலிருந்தும் அப்படிப்பட்ட அற்புதங்கள் வெளிப்பட்டிருந்தன.

*(யோவான் அதிகாரம் 5 காண்க).*

சுருக்கமாக, தான் இறைவனாக இருப்பதற்கு அவரால் எந்த அடையாளத்தையும் காட்ட இயலவில்லை. மேற்குறிப்பிட்ட வசனத்திலேயே அதற்கான ஒப்புதல் வாக்குமூலம் இருக்கிறது.

**இன்னும் கூறுவதென்றால், வலுவற்ற, பலவீனமான ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்து வளர்ந்து (கிறித்தவர்களின் கூற்றுப்படி) பேறிழந்தவர் என்றும் பாக்கியமற்றவர் என்றும் அழைக்கப்படுகின்ற மனிதர்கள் காண்கின்ற அந்த இழிவையும், அவமானத்தையும், சக்தியற்றதையும், கண்ணியமற்றதையும் அவர் ஆயுள் முழுக்கக் கண்டார்.**

பிறகு ஒரு குறிப்பிட்ட காலம் வரை இருள் நிறைந்த கருப்பப்பையில் சிக்குண்டு சிறுநீரின் அசுத்தமான வழியாகிய அந்த தூய்மையற்ற வழியிலிருந்து பிறந்து ஒருவிதமான அழுக்கான நிலைமைகளை தன் மீது இட்டுக் கொண்டார். மேலும் மனிதனின் அழுக்குகள், நஷ்டங்கள் ஆகியவற்றிலிருந்து குமாரன் பிதாவுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதில் ஈடுபடாதவராக இல்லாத வகையில் அவரிடம் எந்த அசுத்தமும் எஞ்சியிருக்கவில்லை. மேலும் அவர் தனது அறியாமை, அறிவீனம், ஆற்றலின்மை, தான் நல்லவனாக இல்லாதிருத்தல் ஆகியவற்றை தனது வேதத்தில் தானே ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில் அந்த பலவீனமான அடியார் தேவையின்றி இறைவன் என குறிப்பிடப்பட்டிருக்கிறார். அவர் சில சான்றோரான நபிமார்களை விட அறிவு, செயல் ஆகியவற்றின் சிறப்புகளில் குறைவானவராகவும் இருந்தார். அவருடைய போதனையும் குறைபாடுள்ளதாக இருந்தது. அது மூஸாவின் ஷரீஅத்தின் ஒரு கிளையாக இருந்தது.

அவ்வாறு இருக்கும்போது எல்லா ஆற்றலையும் கொண்ட ஆதியும் அந்தமுமாக இருக்கின்ற இறைவன் எப்போதும் தனது இருப்பில் முழுமையானவனாகவும், தன்னிறைவு பெற்றவனாகவும், முழுமையான ஆற்றல் பெற்றவனாகவும்

இருந்து இறுதியில் இப்படிப்பட்ட குறைபாடுள்ள குமாரனுக்கு தேவையுடையவனாகி விட்டான் என பழிசுமத்துவது எப்படி ஆகுமானதாகும்? மேலும் தனது எல்லா கம்பீரத்தையும் சான்றாண்மையையும் உடனடியாக இழந்து விட்டான் என்று எப்படிக் கூற முடியும்?

**முழுமையான பண்புகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டவனாகிய அந்த முழுமையான இருப்பைப் பற்றி இப்படிப்பட்ட இழிவுகளை ஓர் அறிவாளி ஆகுமானதாகக் கொள்வார் என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.''**

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் நான்கு பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 435-441 அடிக்குறிப்பு எண்:11)*

''எந்த உண்மையான, முழுமையான இறைவன் மீது ஈமான் கொள்வது ஒவ்வோர் அடியாருக்கும் கடமையாக இருக்கிறதோ அவன் ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்) ஆவான் என்பது எவ்வித வாக்குவாதமுமின்றி ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். அவனுடைய ருபூபிய்யத் (படைத்து காத்தோம்பும் பண்பு) எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தின் எல்லைக்குட்பட்டதன்று. அது எந்தவொரு காலத்திற்கும் எந்தவொரு நாட்டுடனும் எல்லைக்குட்பட்டதன்று.

மாறாக, அவன் எல்லா சமுதாயங்களுக்கும் *ரப்* (படைத்து காத்தோம்புபவன்) ஆக இருக்கிறான். மேலும் எல்லா காலங்களின் இறைவன் ஆவான். எல்லா இடங்களின் இறைவன் ஆவான். மேலும் எல்லா நாடுகளுக்கும் அவனே இறைவன் ஆவான். மேலும் எல்லா அருள்களுக்கும் அவனே தலையூற்றாவான். மேலும் எல்லா பௌதீக, ஆன்மீக ஆற்றலும்

அவன் மூலமாகவே இருக்கின்றது. மேலும் அவன் மூலமாகவே எல்லா பொருள்களும் வளர்கின்றன. மேலும் எல்லாவற்றிற்கும் அவனே ஆதரவளிப்பவனாவான்.

இறைவனின் அருள் பொதுவானதாகும். அது எல்லா சமுதாயங்களையும், எல்லா நாடுகளையும், எல்லா காலங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. எந்த சமுதாயத்திற்கும் முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் இருப்பதற்காகவே அவ்வாறு நடைபெற்றது.

இறைவன் இன்னின்ன சமுதாயத்தின் மீது அருள் புரிந்துள்ளான்; எங்கள் மீது அருள் புரியவில்லை என்றோ அல்லது இந்த சமுதாயத்திற்கு, அவர்கள் நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக அவனிடமிருந்து வேதம் கிடைத்தது; ஆனால் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்றோ அல்லது இந்த காலத்தில் அவன் தனது வஹி, இல்ஹாம் மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றுடன் வெளிப்பட்டான்; ஆனால் எங்களின் காலத்தில் மறைமுகமாக இருந்தான் என்றோ அவர்கள் கூறாதிருப்பதற்காக அவ்வாறு செய்தான். எனவே அவன் பொதுவான ஓர் அருளைக் காட்டி அந்த அனைத்து ஆட்சேபனைகளையும் நீக்கி விட்டான். மேலும் தனது எத்தகைய பரந்த பண்பைக் காட்டினான் என்றால் எந்த சமுதாயத்தையும் தனது பௌதீக, ஆன்மீக அருள்களிலிருந்து அவன் விலக்கி வைக்கவில்லை. மேலும் எந்தக் காலத்தையும் பேறிழந்ததாக வைக்கவில்லை.”

*(பைகாமே ஸுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 442)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இயற்றிய உருது கவிதையின் பொருள்:

*“இறைவனே! காப்பாளனே! செயலாற்றல் கொண்டவனே! குறைகளை மறைப்பவனே! எனது அன்பிற்குரியவனே! எனது அருளாளனே! என்னைப் பராமரிப்பவனே!*

*அருள்கொடை செய்பவனே! உனக்கு நான் எவ்வாறு நன்றி செலுத்துவேன்? இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அது பற்றி எடுத்துரைக்கின்ற நாவை நான் எங்கிருந்துக் கொண்டு வருவது?*

*நான் உனக்குப் பிடித்தமானவனாக ஆனது முழுக்க முழுக்க உனது அருளும் அருட்கொடையும் ஆகும். இல்லையென்றால் உனது சந்நிதியில் தொண்டாற்றுபவர்களுக்கு எந்தக் குறைவும் இல்லை.*

*நட்புக்கான தம்பட்டம் அடித்தவர்கள் எல்லாம் பகைவர்களாகி விட்டனர். ஆனால் எனது தேவைகளை நிறைவேற்றுபவனே! நீ என்னை விட்டு விடவில்லை.*

*என் ஏக அன்பிற்குரியவனே! எனது உயிரின் அடைக்கலமே! எனக்கு நீயே போதுமானவன்; எனக்கு உன்னைத் தவிர வேறு எந்தத் தேவையுமில்லை.*

*உனது பரிவு இல்லாவிட்டால் நான் மரணித்து மண்ணாகியிருப்பேன். பிறகு இந்த புழுதி எங்கு தூக்கி எறியப்பட்டிருக்கும் என்பதை இறைவனே அறிவான்.*

*எனது உடலும், உயிரும், உள்ளமும் உன்னிடம் அர்ப்பணமாகட்டும். உன்னைப் போன்று அன்பு செலுத்துபவர் எவரையும் நான் கண்டதில்லை.*

*ஆரம்பத்திலிருந்தே எனது நாட்கள் உனது நிழலில் கழிந்தன. நான் உனது மடியில் பால் குடிக்கும் குழந்தையைப் போன்று இருந்தேன்.*

*உன்னிடம் இருக்கின்ற நன்றியுணர்வை மனிதகுலத்திடம் நான் காணவில்லை. உன்னைத் தவிர தேற்றும் அன்பர் எவரையும் நான் கண்டதில்லை.*

*தகுதி இல்லாதவர் (இறைவனின் சந்நிதியில்) ஒப்புக் கொள்ளப்படுவதில்லை என மக்கள் கூறுகின்றனர். நான் தகுதி இல்லாதவனாக இருந்தும் உனது சந்நிதியில் தகுதியைப் பெற்று விட்டேன்.*

*உனது அருட்கொடைகளும் அருள்களும் என் மீது எந்த அளவுக்கு இறங்கியிருக்கின்றன என்றால் அவற்றை மறுமை நாள் வரை கணக்கிடுவது கடினமாகும்.''*

*(பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 127)*

''இறைவன் பலவீனமான மனிதர்களுக்கு தன்னைப் பற்றிய முழுமையான ஞானத்தை வழங்குவதற்காக தனது பண்புகளை இருவகையாக திருக்குர்ஆனில் வெளிப்படுத்தி இருக்கிறான். ஒன்று, எதன் மூலமாக அவனது பண்புகள் உவமையான முறையில் படைப்பினங்களின் பண்புகளுக்கு ஒப்புமையுள்ளவையாக இருக்கின்றனவோ அந்த வகையில் அவனது பண்புகளை வெளிப்படுத்தி இருக்கிறான்.

உதாரணமாக, அவன் அருளாளனாகவும் கருணையாளனாகவும் இருக்கின்றான். அருட்கொடையாளனாகவும் இருக்கிறான். அவன் கோபத்தையும் கொண்டிருக்கின்றான்; அவனிடம் அன்பும் இருக்கிறது; அவனுக்கு கைகளும் இருக்கின்றன; அவனுக்கு கண்களும் இருக்கின்றன; அவனுக்கு கால்களும் இருக்கின்றன; அவனுக்கு காதுகளும் இருக்கின்றன; மேலும் படைப்பின் இந்தத் தொடர் தொன்மையிலிருந்தே அவனுடன் தொடர்ந்து

வந்து கொண்டிருக்கிறது.

ஆயினும் அவனுடன் ஒப்பிடுகையில் எந்த பொருளுக்கும் தனிப்பட்ட முறையில் தொன்மை இல்லை. ஆனால் ஒருவகைப்பட்ட முறையில் தொன்மை இருக்கிறது. அதுவும் அல்லாஹ்வின் படைப்பு என்ற பண்புக்கு கட்டாயமானதன்று. ஏனெனில் படைப்பது அவனது பண்பைச் சார்ந்ததாக இருப்பது போன்றே எப்போதாவது எந்த காலத்திலாவது ஏகத்துவத்தை வெளிப்படுத்துவதும் அவன் தனித்திருப்பதைக் காண்பிப்பதும் அவனது பண்பைச் சார்ந்த ஒன்றாகும். மேலும் எந்தவொரு பண்பிலும் நிரந்தரமாக செயலற்றிருப்பது ஆகுமானதன்று. ஆயினும் தற்காலிகமாக செயலற்றிருப்பது ஆகுமானதாகும்.

சுருக்கமாக, இறைவன் மனிதனைப் படைத்து அந்த மனிதன் எந்தப் பண்புகளை வெளிப்படையில் ஒப்புமையுள்ளவனாக இருக்கின்றானோ அந்த பண்புகளை அவன் மீது வெளிப்படுத்தினான்.

உதாரணமாக படைப்பவனாக இருப்பது. ஏனெனில் மனிதனும் தனது எல்லைக்குள் சில பொருள்களைப் படைக்கின்றான். அதாவது உருவாக்குகின்றான். அவ்வாறே மனிதனை அருளாளன் என்றும் கூற முடியும். ஏனெனில் அவன் தன் எல்லைக்குட்பட்ட அளவில் அருள் செய்யும் பண்பையும் கொண்டிருக்கிறான். அவ்வாறே மனிதனை கருணையாளன் என்றும் கூற முடியும். அவன் தனது எல்லைக்குட்பட்ட அளவில் கருணை காட்டும் பண்பையும் தன்னிடத்தில் கொண்டிருக்கின்றான்; மேலும் கோபத்தின் ஆற்றலும் அவனிடத்தில் இருக்கிறது. அவ்வாறே எல்லா மனிதனிடமும் கண்கள், காதுகள் இருக்கின்றன. எனவே இந்த ஒப்புமையுள்ள பண்புகளினால் எவருடைய உள்ளத்திலாவது,

மனிதன் இந்தப் பண்புகளில் இறைவனைப் போன்றவனாக இருக்கிறான்; இறைவன் மனிதனைப் போன்றவனாகவும் இருக்கின்றான் என்ற சந்தேகம் தோன்றியிருக்க முடியும்.

எனவே இறைவன் அந்தப் பண்புகளுக்கு எதிரில் தன்ஸீஹீ பண்புகளையும் (அதாவது தனக்கு மட்டுமே உரித்தான பண்புகளையும்) திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறான். அதாவது இறைவனின் தன்மையிலும் பண்புகளிலும் அவனுக்கு மனிதனுடன் எந்த இணையும் இல்லை; மனிதனுக்கு அவனுடன் எந்த இணையும் இல்லை என்பது நிரூபணமாகின்ற அத்தகைய பண்புகளை குறிப்பிட்டிருக்கிறான். அத்தகைய பண்பை அவன் எடுத்துக் கூறியுள்ளான்.

அவனது படைத்தல் மனிதன் படைப்பது போன்று அன்று. அவனது கருணை மனிதனுடைய கருணை போன்று அன்று. அவனது கோபம் மனிதனுடைய கோபத்தைப் போன்று அன்று. அவனது அன்பு மனிதனுடைய அன்பைப் போன்று அன்று. அவனுக்கு மனிதனைப் போன்று எந்தவோர் இடத்தின் தேவையும் இல்லை.

மேலும் அல்லாஹ் தனது பண்புகளில் மனிதனை விட்டும் முற்றிலும் தனிப்பட்டவனாக இருக்கிறான் என்பது திருக்குர்ஆனின் பல வசனங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக, لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ என்று ஒரு வசனம் உள்ளது. அதாவது, தன் தன்மையிலும் பண்பிலும் இறைவனைப் போன்றது எதுவுமில்லை; அவன் நன்கு கேட்பவனும், நன்கு பார்ப்பவனுமாவான்.

*(திருக்குர்ஆன் 42:12)*

பிறகு இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَىُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ
لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ ؕ مَنْ ذَا الَّذِىْ يَشْفَعُ عِنْدَهٗۤ
اِلَّا بِاِذْنِهٖ ؕ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ
وَلَا يُحِيْطُوْنَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ
وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ
وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِىُّ الْعَظِيْمُ

*(திருக்குர்ஆன் 2:256)*

அதாவது, உண்மையான இருப்பும், உண்மையான நிலைநிற்றலும், எல்லா உண்மையான பண்புகளும் இறைவனுக்கே உரியன. அவற்றில் எவரும் அவனுக்கு இணையில்லை. அவனே சுயமாக உயிருள்ளவன். மற்ற அனைத்து உயிருள்ளவையும் அவனாலேயே உயிருள்ளவையாக இருக்கின்றன. அவனே சுயமாக நிலைபெற்றிருக்கின்றான். மற்ற எல்லா பொருள்களும் அவனுடைய ஆதரவினாலேயே நிலைத்திருக்கின்றன. மரணம் அவனுக்கு ஏற்புடையதன்று. அவ்வாறே தூக்கம், சிற்றுறக்கம் ஆகியவற்றால் ஏற்படும் குறைந்த அளவிலான உணர்வற்ற தன்மையும் அவனுக்கு ஏற்புடையதன்று.

ஆனால் மற்றவர்களுக்கு மரணம் ஏற்படுவது போன்று தூக்கமும், சிற்றுறக்கமும் ஏற்படுகிறது. நீங்கள் பூமியில் பார்ப்பவையெல்லாம் அல்லது வானத்தில் இருப்பவையெல்லாம் அவனுக்கே உரியன. மேலும்

அவனாலேயே தோன்றின; அவனாலேயே நிலைத்திருக்கின்றன. அவனது கட்டளையின்றி அவனுக்கு முன்னால் யார் பரிந்துரைக்க முடியும்?

மக்களுக்கு முன்னால் இருப்பதையும் பின்னால் இருப்பதையும் அவன் அறிகின்றான். அதாவது முன்னிருப்பதையும் மறைந்திருப்பதையும் அவனது அறிவு சூழ்ந்துள்ளது. மேலும் அவன் விரும்பும் அளவைத் தவிர எவரும் அவனுடைய ஞானத்தை கொஞ்சமும் சூழ்ந்து கொள்ள முடியாது. அவனது ஆற்றல், ஞானம் ஆகியவை முழு பூமியின் மீதும் வானத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது. அது எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. எந்தப் பொருளும் அவனைத் தாங்கிக் கொண்டிருக்கவில்லை.

மேலும் அவன் வானம், பூமி மற்றும் அவற்றிலுள்ள எல்லா பொருள்களையும் தாங்கிக் கொள்வதால் களைப்படைவதில்லை. பலவீனம், ஆற்றலின்மை, குறைந்த சக்தி ஆகியவற்றை அவனுடன் தொடர்புபடுத்திக் கூறுவதிலிருந்தும் அவன் தூயவன் ஆவான்.

பிறகு இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

إِنَّ رَبَّكُمُ اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَٰوٰتِ وَالْأَرْضَ
فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَىٰ عَلَى الْعَرْشِ

*(திருக்குர்ஆன் 7:55)*

உங்கள் இறைவன் பூமியையும் வானத்தையும் ஆறு நாட்களில் படைத்தான். பிறகு அவன் அரியணையில் நிலைகொண்டான். அதாவது அவன் வானம், பூமி மற்றும் அதில் உள்ளவற்றையெல்லாம் படைத்து உவமை வடிவிலான பண்புகளை வெளிப்படுத்தி பிறகு தனக்கு மட்டுமே உரித்தான

பண்பை நிரூபிப்பதற்காக தூய்மையாக்குகின்ற, தனிச்சிறப்புள்ள அந்தஸ்தின் பக்கம் திரும்பினான். அது மறைவிலும் மறைவான அந்தஸ்தும் படைப்பினங்களின் அருகிலிருந்து வெகு தொலைவிலுள்ளதுமாகும். அதுவே மிக உயர்ந்த அந்தஸ்து ஆகும். அது அர்ஷ் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இதில் விளக்கம் கூற வேண்டிய விஷயம் என்னவென்றால், முதலில் எல்லா படைப்பினங்களும் ஒன்றுமற்றவையாக இருந்தன. மேலும் இறைவன் மறைவிலும் மறைவான இடத்திலிருந்து தனது தோற்றங்களைக் காட்டிக் கொண்டிருந்தான். அதன் பெயர் அர்ஷ் ஆகும்.

அதாவது எல்லா உலகத்தை விட்டும் உயர்வானதும், மேலானதுமாகும். மேலும் அவனது தோற்றமும், நிழலுமே இருந்தது. அவனைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. பிறகு அவன் வானம், பூமி மற்றும் அவற்றில் உள்ளவற்றைப் படைத்தான். படைப்பினங்கள் தோன்றியபோது அவன் தன்னை மறைத்துக் கொண்டான். மேலும் அந்த படைப்பினங்களின் மூலமாக கண்டறியப்பட வேண்டும் என அவன் விரும்பினான். ஆனால் இறைபண்புகள் ஒருபோதும் நிரந்தமாக செயலற்றுப் போய்விடுவதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறைவனைத் தவிர எப்பொருளுக்கும் சுயமாக நிரந்தரத்தன்மை இல்லை; ஆயினும் ஒருவகையான நிரந்தரத்தன்மை இருப்பது அவசியமாகும்.

மேலும் இறைவனின் எந்த பண்புக்கும் நிரந்தமான செயலற்றும் போகும் நிலை இல்லை; ஆயினும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு செயலற்றிருப்பது அவசியமானதாகும். ஏனெனில் ஆக்கும் பண்பும், அழிக்கும் பண்பும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகும். எனவே அழிக்கும்

பண்பிற்கான முழுமையான ஒரு காலம் வந்துவிடும்போது உருவாக்கும் பண்பு ஒரு குறிப்பிட்ட காலம் வரை செயலற்றிருக்கிறது.

சுருக்கமாக, ஆரம்பத்தில் இறைவனுடைய தனித்திருக்கும் பண்பு இருந்தது. அந்த காலகட்டம் எத்தனைமுறை வெளிப்பட்டது என நாம் கூற முடியாது. மாறாக அது பழமையான காலகட்டமும், முடிவில்லாததுமாகும். எப்படி இருந்தாலும் தனித்திருக்கும் இப்பண்பு மற்ற பண்புகளை விட காலத்தால் முற்பட்டதாகும்.

எனவே இதன் காரணமாகவே ஆரம்பத்தில் இறைவன் தனித்திருந்தான் என்றும் அவனுடன் யாரும் இருந்ததில்லை என்றும் பிறகு அவன் பூமியையும், வானத்தையும் அவற்றில் உள்ளவற்றையும் படைத்தான் என்றும் கூறப்படுகிறது. மேலும் இந்த தொடர்பின் காரணமாகவே அவன் கருணை மிக்கவன்; மேன்மேலும் கருணை காட்டுபவன்; மன்னிப்பவன்; பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்பவன் என்ற தனது பண்புகளை வெளிப்படுத்தியிருக்கிறான். ஆனால் எவர் பாவத்தில் பிடிவாதமாக இருப்பாரோ, விலகவில்லையோ அவருக்கு தண்டனை வழங்காமல் அவன் விட்டுவிடுவதில்லை. மேலும் அவன் பாவமன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கின்றான் என்ற பண்பையும் அவன் வெளிப்படுத்தி இருக்கின்றான். அநீதி, விஷமத்தனம், பாவம் ஆகியவற்றிலிருந்து விலகாதவர்கள் மீதே அவன் சீற்றம் கொள்கிறான்.............

அவனது எல்லா பண்புகளும் அவனது தன்மைக்கு பொருத்தமானவையாக இருக்கின்றன. மனிதனுடைய பண்புகளைப் போன்றவையல்ல. அவனது கண் ஆகியவை உடல் ரீதியிலானவை அல்ல. அவனது எந்த பண்பும்

மனிதனின் பண்புக்கு ஒத்ததன்று.

**உதாரணமாக, மனிதன், தான் கோபப்படும் நேரத்தில் முதலில், கோபத்தின் துன்பத்தை தானே மேற்கொள்கின்றான். ஆவேசம், கோபம் ஆகியவற்றில் உடனே அவனது மகிழ்ச்சி விலகிச் சென்று அவனது உள்ளத்தில் ஓர் எரிச்சல் உண்டாகிறது. அவனது மூளையில் ஒரு பைத்தியத்தன்மை ஏறிவிடுகிறது. மேலும் அவனது நிலைமையில் ஒரு மாற்றம் உருவாகி விடுகிறது. ஆனால் இறைவன் இந்த மாற்றங்களிலிருந்து தூயவன். அவனது கோபம் என்பது, விஷமத்தனத்திலிருந்து விலகாதவரிடமிருந்து தனது கருணையின் நிழலை அகற்றி விடுகிறான் என்ற பொருளில் இருக்கிறது;**

மேலும் தனது பழமையான இயற்கைச் சட்டத்திற்கேற்ப ஒரு கோபமடைந்த மனிதன் நடந்து கொள்வதைப் போன்று அவருடன் நடந்து கொள்கிறான். எனவே அவ்வாறு நடந்து கொள்வது உவமையாக அவனது கோபம் என்ற பெயராக அழைக்கப்படுகிறது.

**அவ்வாறே அவனது அன்பு மனிதனுடைய அன்பைப் போன்று இல்லை. ஏனெனில் மனிதன் அன்பின் மேலோங்குதலிலும் துன்பமடைகின்றான். அன்பிற்குரியவன் பிரிந்துவிடும்போது, விலகிவிடும்போது அவனுடைய உயிருக்கு துன்பம் ஏற்படுகிறது. ஆனால் இறைவன் இந்த துன்பங்களிலிருந்து தூயவன் ஆவான்.**

அவ்வாறே அவனது நெருக்கமும் மனிதனுடைய நெருக்கத்தைப் போன்று அன்று. ஏனெனில் மனிதன் ஒருவருக்கு நெருக்கமாக இருக்கும்போது, தான் முதலில்

இருந்த இடத்தை விட்டு விடுகின்றார். ஆனால் இறைவன் அருகில் இருந்த போதிலும் தூரத்தில் இருக்கிறான்; தூரத்தில் இருந்த போதிலும் அருகில் இருக்கிறான்.

சுருக்கமாக இறைவனின் ஒவ்வொரு பண்பும் மனிதனின் பண்புகளை விட்டும் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஒன்றுபோல எனக் கூறுவது சொல்லளவில் மட்டும்தான். அதை விட அதிகமாக வேறொன்றும் இல்லை. எனவேதான் இறைவன் திருக்குர்ஆனில் لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ எனக் கூறுகிறான்.

*(திருக்குர்ஆன் 42:12)*

அதாவது எந்த பொருளும் தனது தன்மையிலும் பண்புகளிலும் இறைவனுக்கு சமமாக இல்லை.

*(சஷ்மயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 272-276)*

இறைவன் ஒருபோதும் செயலற்று இருக்க மாட்டான். எப்போதும் படைப்பவனாகவும், எப்போதும் உணவளிப்பவனாகவும், எப்போதும் பரிபாலிப்பவனாகவும், எப்போதும் அருளாளனும், எப்போதும் மேன்மேலும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்றான்; இனியும் இருப்பான். என்னைப் பொருத்தவரை அத்தகைய மகத்தான ஆற்றலைக் கொண்டவனைப் பற்றி வாக்குவாதம் செய்வது பாவமாகும். இறைவன் இங்கு முன்மாதிரியைத் தராத எந்த பொருளையும் நம்ப வைக்க விரும்பவில்லை.

*(அல் பத்ர் 16.1.1903 பக்கம் 91; மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 637 பதிப்பு 2003–ஆம் ஆண்டு)*

நட்சத்திரங்கள் படிப்படியாக எப்போதும் காட்சியளித்துக் கொண்டிருப்பதைப் போன்றே இறைவனின் பண்புகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. மனிதன் சில நேரத்தில் இறைவனின் *ஜலாலிய்யா* (கம்பீரமான) பண்பு மற்றும் சுயமான

தன்னிறைவுத் தன்மை பண்பின் நிழலின் கீழ் இருக்கின்றான். சில நேரத்தில் (மனிதனாகிய) அவன் மீது *ஜமாலிய்யா* (அழகிய) பண்பின் நிழல் விழுகிறது.

كُلَّ يَوْمٍ هُوَ فِيْ شَأْنٍ என அல்லாஹ் கூறுவது இதையே சுட்டிக் காட்டுகிறது. *(திருக்குர்ஆன் 55: 30)*

எனவே குற்றவாளிகள் நரகத்தில் போடப்பட்ட பிறகு கருணை, அருள் ஆகிய பண்புகள் நிரந்தரமாக செயலற்றுப் போய்விடும்; அது ஒருபோதும் தோன்றாது என்பது பெரும் மூடர்களின் சிந்தனையாகும். ஏனெனில் இறைபண்புகள் செயலற்றுப்போவது தடையாகும்.

மாறாக, அல்லாஹ்வின் உண்மையான பண்பு என்பது அன்பு, கருணை ஆகியவை ஆகும். அவையே பண்புகளுக்கெல்லாம் தாயாகும். மேலும் அவையே மனிதனை சீர்திருத்துவதற்காக *ஜலாலிய்யா* (கம்பீரமான) பண்பாகவும், கோபமான பண்பாகவும் பீறிட்டெழுகிறது. மேலும் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும்போது அன்பு தனது கோணத்தில் வெளிப்பட்டு விடுகிறது. பிறகு சுயமாக அருள்பாலிக்கும் பண்பினால் அது எப்போதும் இருக்கின்றது. இறைவன் தேவையில்லாமல் தண்டனை வழங்க ஆசைப்படுவதற்கு அவன் ஒரு சிடுசிடுப்பான மனிதனைப் போன்றவன் அல்லன். அவன் எவர் மீதும் அநீதி இழைப்பதில்லை. மாறாக, மக்கள் தம் மீது அநீதி இழைக்கின்றனர். அவனது அன்பில் எல்லா ஈடேற்றமும், அவனை விட்டு விடுவதில் எல்லா வேதனையும் இருக்கிறது.''

*(சஷ்மயே மஸீஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 369-370)*

திருக்குர்ஆன் நம்மை எந்த இறைவனின் பக்கம் அழைக்கிறதோ அவனுடைய பண்பாக அது இவ்வாறு குறிப்பிட்டுள்ளது:

هُوَ اللّٰهُ الَّذِىْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۚ
هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ

*(திருக்குர்ஆன் 59: 23).*

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

*(திருக்குர்ஆன் 1:4)*

اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ
الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ

*(திருக்குர்ஆன் 59:24)*

هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى ؕ
يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

*(திருக்குர்ஆன் 59: 25)*

عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

*(திருக்குர்ஆன் 2:21)*

رَبِّ الْعٰلَمِيْنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

*(திருக்குர்ஆன் 1: 2-4)*

أُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ

*(திருக்குர்ஆன் 2:187)*

اَلْحَيُّ الْقَيُّوْمُ

*(திருக்குர்ஆன் 2:256)*

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

*(திருக்குர்ஆன் 112:2-5)*

அதாவது இறைவன் தனித்தவனும் இணை இல்லாதவனுமாவான். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவனும் கட்டுப்படத் தகுந்தவனும் வேறு யாருமில்லை.

இதை ஏன் கூறினான் என்றால் அவன் இணை இல்லாதவனாக இல்லாதிருந்தால் அவனது ஆற்றலை எதிரியின் ஆற்றல் மிகைத்து விடலாம். அந்நிலையில் இறைமை வெளிப்படுவது அபாயத்திற்குள்ளாகி விடும். மேலும் அவனைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவர் இல்லை எனக் கூறியிருப்பதன் கருத்து, அவன் எத்தகைய முழுமையான இறைவன் என்றால் அவனது பண்புகள், மேன்மைகள், சிறப்புகள் மிக மேலானவையும் உயர்ந்தவையுமாகும். இருக்கின்ற பொருள்களில் முழுமையான பண்பின் காரணமாக ஓரிறைவனை தேர்ந்தெடுக்க விரும்பினால் அல்லது உள்ளத்தில் ஒரு சிறப்பிலும் சிறப்பான, உயர்விலும் உயர்வான இறைவனது பண்பை கற்பனை செய்து கொண்டால் அவனை விட வேறு யாரும் உயர்ந்தவனாக இருக்க முடியாத அளவுக்கு அனைவரை விடவும் உயர்ந்தவன்தான் இறைவன். அவனை வணங்குவதில் மிக அற்பமானதை இணையாக்குவது அநீதியாகும். பிறகு அவன்

கூறுகின்றான்: அவன் மறைவானவற்றை அறிபவன்.

அதாவது தன்னைப் பற்றி தானே அறிகின்றான். அவனைப் பற்றி யாரும் முழுமையாக தெரிந்து கொள்ள முடியாது. நாம் சூரியன், சந்திரன், எல்லா படைப்புகளையும் முழுமையாகப் பார்க்க முடியும். ஆனால் இறைவனை முழுமையாகப் பார்ப்பது முடியாததாகும். பிறகு இறைவன் கூறுகிறான். அவன் வெளிப்படையானவற்றை அறிகின்றான்.

அதாவது எந்த பொருளும் அவனுடைய பார்வையிலிருந்து மறைவாக இல்லை. அவன் இறைவன் என அழைக்கப்பட்டு பொருள்களைப் பற்றி அறியாதவனாக இருப்பது ஆகுமானதல்ல. அவன் இவ்வுலகத்தின் ஒவ்வோர் அணுவையும் கண்காணிக்கின்றான்.

ஆனால் மனிதன் கண்காணிக்க முடியாது. இந்த அமைப்பை எப்போது அழிப்பது? எப்போது மறுமையை ஏற்படுத்துவது? என்பதை அவன் அறிகின்றான். அது எப்போது நடக்கும்? என அவனைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள். ஆக, இந்த எல்லா காலங்களையும் அறிகின்ற அவனே இறைவன் ஆவான்.

பிறகு هُوَ الرَّحْمٰنُ என்று கூறுகின்றான்.

அதாவது அவன் உயிரினங்களை அவற்றின் இருப்புக்கும், அவற்றின் செயல்களுக்கும் முன்பே தனது விருப்பத்தினால் எந்த குறிக்கோளுக்காகவும் இல்லாமல் எந்த செயல்களின் விளைவாகவும் இல்லாமல் அவற்றிற்கான வழிவகைகளையும் இன்பத்தையும் உருவாக்குகின்றான்.

உதாரணமாக, சூரியன், சந்திரன், மற்ற அனைத்து பொருள்களையும் நமது தோற்றத்திற்கும் முன்பு நமது

செயல்களின் தோற்றத்திற்கும் முன்பு நமக்காகப் படைத்துள்ளான். இந்த அருட்கொடைக்கு இறை வேதத்தில் *ரஹ்மானிய்யத்* (சுயமாக அருள்பாலித்தல்) என்று பெயர். மேலும் இந்த செயலின் காரணமாக இறைவன் *ரஹ்மான்* என அழைக்கப்படுகின்றான்.

**பிறகு الرَّحِيْمِ என்று கூறுகின்றான். அதாவது நற்செயல்களுக்கு நற்கூலியை வழங்குகின்றான். அவன் எவருடைய உழைப்பையும் வீணாக்குவதில்லை. மேலும் இந்த செயலின் காரணமாக அவன் *ரஹீம்* என அழைக்கப்படுகின்றான்.**

மேலும் இந்தப் பண்பு *ரஹீமிய்யத்* என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பிறகு مٰلِكِ يَوْمِ الدِّيْنِ எனக் கூறுகிறான். அதாவது அந்த இறைவன் ஒவ்வொருவருடைய நற்கூலியையும் தன் கையில் வைத்திருக்கிறான். அவன் வானம் பூமியின் ஆட்சியை ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு அவன் தனித்து உட்கார்ந்து கொண்டு எதுவும் செய்யாதிருக்கும் அளவுக்கு அவனுக்கு எந்த ஏற்பாட்டாளரும் இல்லை. மேலும் அந்த ஏற்பாட்டாளரே எல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்; எல்லா நற்பலனையும் தண்டனையையும் வழங்குகின்றார்; அல்லது இனிமேல் வழங்குவார் என்பதில்லை.

பிறகு اَلْمَلِكُ الْقُدُّوْسُ என்று கூறுகிறான்.

*(திருக்குர்ஆன் 59:24)*

அதாவது அந்த இறைவன் அரசன் ஆவான். அவனிடம் குறை என்னும் எந்தக் கறையும் இல்லை.

**மனிதனுடைய ஆட்சி குறையை விட்டு விலகியதாக இருப்பது சாத்தியமில்லை என்பது வெளிப்படையானதாகும்.**

**உதாரணமாக, நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் நாட்டைத் துறந்து இன்னொரு நாட்டை நோக்கி ஓடிவிட்டால் அவரது ஆட்சி நிலைபெற முடியாது.**

**அல்லது உதாரணமாக, நாட்டு மக்கள் அனைவரும் பஞ்சத்திற்குட்பட்டு விட்டால் மன்னராட்சி எப்படி நடைபெற முடியும்? உங்களிடம் எங்களை விட அதிகம் என்ன இருக்கிறது? என மக்கள் அவரிடம் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்து விட்டால் அவர் தனது எந்த தகுதியை நிரூபிப்பார்? ஆனால் இறைவனின் ஆட்சி அப்படிப்பட்டதன்று.**

அவன் ஒருநொடிப்பொழுதில் எல்லா நாட்டையும் அழித்து விட்டு வேறொரு படைப்பினத்தைப் படைக்கலாம். அவன் அப்படிப்பட்ட படைப்பாளனாகவும் ஆற்றல் மிக்கவனாகவும் இல்லையென்றால் பிறகு அநீதி இன்றி அவனது ஆட்சி நடைபெற முடியாது. ஏனெனில் அவன் உலகத்திற்கு ஒருமுறை மன்னிப்பையும், ஈடேற்றத்தையும் வழங்கி விட்டு பிறகு இன்னோர் உலகத்தை எங்கிருந்து கொண்டு வருவான்? ஈடேற்றத்தைப் பெற்ற மக்களை உலகிற்கு அனுப்புவதற்காக மீண்டும் பிடிப்பானா என்ன? தான் வழங்கிய மன்னிப்பையும் ஈடேற்றத்தையும் அநீதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்வானா என்ன?

அப்படியென்றால் அவனது இறைமையில் வித்தியாசம் வந்து விடும். மேலும் உலகத்தின் மன்னர்களைப் போன்று கறையுள்ள மன்னனாகி விடுவான். அந்த உலக மன்னர்கள் உலகத்திற்காக சட்டங்களை வகுக்கின்றனர். பிறகு ஒவ்வொரு விவகாரத்திலும் சீர்கெட்டுப் போகின்றனர். தனது

தன்னலத்தின் நேரங்களில் அநீதியைத் தவிர வேறு வழியில்லை என்று பார்க்கும்போது அநீதியைத் தாய்ப்பாலாகக் கருதுகின்றனர்.

உதாரணமாக, ஒரு கப்பலைக் காப்பாற்றுவதற்காக ஒரு படகிலுள்ள பயணிகளை நாசத்திற்குள்ளாக்கலாம்; அழிக்கலாம் என்பதை மன்னரின் சட்டம் ஆகுமானதாக்கி வைத்திருக்கிறது. ஆனால் இறைவனுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலை ஏற்படக் கூடாது.

எனவே இறைவன் முழுமையான ஆற்றல் மிக்கவனாகவும் இல்லாமையிலிருந்து உருவாக்கக் கூடியவனாகவும் இல்லாதிருந்தால் அவன் பலவீனமான மன்னனைப் போன்று ஆற்றலின் இடத்தில் அநீதியை பயன்படுத்துவான் அல்லது நீதிமானாக இருந்து இறைமையை வழியனுப்பி விடுவான். மாறாக, இறைவனின் கப்பல் எல்லா வல்லமைகளுடன், உண்மையான நீதியுடன் சென்று கொண்டிருக்கிறது.

**பிறகு (அடுத்த பண்பாக) *அஸ்ஸலாம்* என்று கூறி இருக்கிறான்.** *(திருக்குர்ஆன் 59:24).*

**அதாவது அந்த இறைவன் எல்லா குறைகளையும் துன்பங்களையும் துயரங்களையும் விட்டும் பாதுகாப்பாக இருக்கிறான்.** இன்னும் கூறுவதென்றால் அவன் சாந்தியை வழங்கக் கூடியவனாக இருக்கின்றான். இதன் பொருளும் வெளிப்படையானதாகும். ஏனெனில் **அவனே துன்பங்களில் வீழ்கின்றான் என்றால் மக்களின் கைகளால் கொல்லப்படுகிறான் என்றால் தனது எண்ணங்களில் தோல்வி அடைகிறான் என்றால் பிறகு அந்த தீய முன்மாதிரியைப் பார்த்து அப்படிப்பட்ட இறைவன் நம்மை கண்டிப்பாக துன்பங்களிலிருந்து விடுவிப்பான் என்று**

அல்லாஹ் பொய்யான கடவுளர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللَّهِ لَن يَخْلُقُوا ذُبَابًا وَلَوِ اجْتَمَعُوا لَهُ ۖ وَإِن يَسْلُبْهُمُ الذُّبَابُ شَيْئًا لَّا يَسْتَنقِذُوهُ مِنْهُ ۚ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوبُ ﴿٧٤﴾
مَا قَدَرُوا اللَّهَ حَقَّ قَدْرِهِ ۗ إِنَّ اللَّهَ لَقَوِيٌّ عَزِيزٌ ﴿٧٥﴾

*(திருக்குர்ஆன் 22:74,75)*

எவர்களை நீங்கள் கடவுளர்களாக்கி வைத்திருக்கிறீர்களோ அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கொசுவைப் படைக்க விரும்பினாலும் அவர்களால் ஒருபோதும் படைக்க முடியாது. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவினாலும் சரியே. இன்னும் கூறுவதென்றால் ஒரு கொசு அவர்களின் பொருளை பிடுங்கிச் சென்று விட்டால் அந்தக் கொசுவிடமிருந்து அந்தப் பொருளை திரும்பப் பெறும் ஆற்றல் கூட அவர்களுக்கு இல்லை. அவர்கள் வணங்கக் கூடியவை அறிவில் மிகவும் பலவீனமானவையாக இருக்கின்றன. ஆற்றலில் பலவீனமானவையாக இருக்கின்றன. இறைவன் அப்படி இருப்பானா? இறைவன் என்பவன் எல்லா ஆற்றல் கொண்டவர்களை விடவும் அதிக ஆற்றல் கொண்டவனாவான். எல்லாவற்றையும் மிகைத்தவன் ஆவான். எவரும் அவனைப் பிடிக்க முடியாது; எவரும் அவனைக் கொல்ல முடியாது. இப்படிப்பட்ட தவறுகளில் வீழ்பவர்கள் இறைவனின் ஆற்றலைப் புரிந்து கொள்வதில்லை. மேலும் இறைவன் எப்படி

இருக்க வேண்டும் என்பதையும் அறிவதில்லை.

அடுத்து இறைவன், அவன் அமைதியை வழங்கக் கூடியவனாவான் எனக் கூறுகிறான். மேலும் தனது மேன்மைகள் மற்றும் ஏகத்துவத்திற்கான சான்றுகளை நிலைநாட்டக் கூடியவனாக இருக்கின்றான். உண்மையான இறைவனை ஏற்றுக் கொள்பவர் எந்த சபையிலும் வெட்கமடைய மாட்டார்; அவர் இறைவனுக்கு முன்னாலும் வெட்கித் தலைகுனிய மாட்டார் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில் அவரிடம் வலுவான சான்றுகள் இருக்கின்றன.

ஆனால் செயற்கை இறைவனை ஏற்றுக் கொள்பவர் மிகப் பெரும் துன்பத்தில் இருக்கின்றார். அவர் சான்றுகளை எடுத்துக் கூறுவதற்கு பதிலாக எள்ளிநகையாடல் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர் ஒவ்வொரு முட்டாள்தனமான விஷயத்தையும் இரகசியத்தில் நுழைக்கின்றார். மேலும் நிரூபிக்கப்பட்ட தவறுகளை மறைக்கின்றார்.

பிறகு அல்லாஹ் கூறுகிறான்:

الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ

அதாவது அவன் எல்லாரையும் பாதுகாப்பவன் ஆவான். எல்லாரையும் மிகைத்தவனும் சீர்குலைந்த வேலைகளை சீரமைப்பவனுமாவான். மேலும் அவன் மிகவும் தன்னிறைவு பெற்றவனாவான். *(திருக்குர்ஆன் 59:24).*

அடுத்து கூறுகிறான்:

هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى

அதாவது அவன் உடல்களையும், ஆன்மாக்களையும்

படைக்கக் கூடிய இறைவன் ஆவான். கருப்பைகளில் வடிவமைப்பவன் ஆவான். சிந்தனையில் தோன்ற முடியும் அனைத்து நல்ல பண்புகளும் அவனுடைய பெயர்களே ஆகும். *(திருக்குர்ஆன் 59:25).*

பிறகு அவன் கூறுகிறான்:

يُسَبِّحُ لَهُ مَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

அதாவது வானத்திலுள்ள மக்களும் அவனது பெயரைத் தூய்மையுடன் நினைவு கூருகின்றனர்; பூமியிலுள்ள மக்களும் அவனது பெயரைத் தூய்மையுடன் நினைவு கூருகின்றனர். *(திருக்குர் ஆன் 59:25).*

**இந்த வசனத்தில் வானத்தின் கோள்களிலும் மக்கள் இருக்கின்றனர். அவர்களும் இறைவனின் வழிகாட்டல்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறான்.**

பிறகு, عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ எனக் கூறியிருக்கிறான்.

அதாவது இறைவன் மிக்க வல்லமையுள்ளவன். இது வணங்குபவர்களுக்கு ஆறுதலளிக்கக் கூடியதாகும். ஏனெனில் இறைவன் இயலாதவனாக இருந்தால், ஆற்றல் இல்லாதவனாக இருந்தால் அப்படிப்பட்ட இறைவனிடம் என்ன நம்பிக்கை வைக்க முடியும்? பிறகு அவன் கூறுகிறான்:

رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ-مٰلِكِ يَوْمِ الدِّيْنِ அதாவது எல்லா உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவனே இறைவன் ஆவான். அவன் அருளாளன்; மேன்மேலும் கருணை காட்டுபவன்; நற்கூலி வழங்கும் நாளின் அதிபதி. அந்த அதிகாரத்தை அவன் யாருடைய கையிலும் கொடுக்கவில்லை.

பிறகு அவன் கூறுகிறான்: أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ஒவ்வொரு அழைப்பவரின் அழைப்பைக் கேட்பவன்; பதிலளிப்பவன். அதாவது துஆக்களை ஏற்றுக் கொள்பவன்.

பிறகு அவன் கூறுகிறான்: اَلْحَيُّ الْقَيُّوْمُ அதாவது எப்போதும் இருப்பவன்; எல்லா உயிர்களின் உயிராய் உள்ளவனும், எல்லாவற்றிற்கும் ஆதரவாக இருப்பவனும் ஆவான். இதை ஏன் கூறினான் என்றால், அவன் ஆதியும் அந்தமும் அற்றவனாக இல்லாவிட்டால் ஒருவேளை அவன் நமக்கு முன்னால் இறந்து விடக் கூடாதே என்ற கவலை அவனது வாழ்வைப் பற்றி இருக்கும். அடுத்து அந்த இறைவன் தனித்த இறைவன்; அவன் யாருடைய மகனுமல்லன்; யாரும் அவனுக்கு மகனுமில்லை. அவனுக்கு நிகரானவனோ அவனைப் போன்றவனோ யாருமில்லை.

*(இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 372-376)*

அல்லாஹ்வுக்கு நான்கு உயர்தரமான பண்புகள் இருக்கின்றன. அவை *உம்முஸ் ஸிஃபாத்* (பண்புகளுக்கெல்லாம் தாய்) ஆகும். மேலும் ஒவ்வொரு பண்பும் நமது மனிதத்தன்மையிடம் ஒரு விஷயத்தை எதிர்பார்க்கிறது. அந்த நான்கு பண்புகள் இவையாகும்: ருபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், மாலிகிய்யத்தே யவ்மித்தீன்.

1. **ருபூபிய்யத்** என்பது தனது அருளுக்கு முற்றிலும் இல்லாமையை நாடுகிறது; அல்லது இல்லாமைக்கு ஒப்பானதை நாடுகிறது. எல்லா வகையான படைப்பினங்களும்- அவை உயிரினங்களாக இருந்தாலும் உயிரற்றவையாக இருந்தாலும் இதனாலேயே உருவெடுக்கின்றன.

2. **ரஹ்மானிய்யத்** என்பது தனது அருளுக்கு இல்லாமையை மட்டுமே நாடுகின்றது. அதாவது எதன் நேரத்தில் இருப்பின் அடையாளமும், வெளிப்பாடும் இல்லாதிருக்கிறதோ அந்த இல்லாமையை நாடுகிறது. மேலும் அது உயிருள்ளவற்றுடன் மட்டும் தொடர்புடையது; மற்றவற்றுடன் அல்ல.

3.**ரஹீமிய்யத்** என்பது தனது அருளுக்கு, இருக்கின்ற அறிவுள்ளவர்களின் வாயிலிருந்து இல்லாமையை விரும்புகிறது. மேலும் இது மனித குலத்துடன் மட்டும் தொடர்புடையது.

4. **மாலிகிய்யத்தே யவ்மித்தீன்:** தனது அருளுக்கு தாழ்மையான மன்றாடலையும், வேண்டுதலையும் நாடுகிறது. யாசிப்பவர்களைப் போன்று ஏக இறைவனின் முன்னிலையில் விழுகின்றவர்களுடனும், அருளைப் பெறுவதற்காக யாசிக்கும் போர்வையை விரிக்கின்றவர்களுடனும் மட்டுமே இது தொடர்புடையது. மேலும் அவர்கள் உண்மையிலேயே தம்மை வெறுங்கையுடன் இருப்பவர்களாகக் கண்டு இறைவனின் மாலிகிய்யத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றனர்.

இந்த நான்கு இறைபண்புகள் உலகில் செயல்படுகின்றன. இதில் ரஹீமிய்யத் பண்பு துஆவைத் தூண்டுகிறது. மேலும் மாலிகிய்யத் பண்பு அச்சம், கலக்கம் என்ற நெருப்பால் உருக வைத்து உண்மையான அச்சத்தையும் மன்றாடலையும் உருவாக்குகிறது. ஏனெனில் இந்தப் பண்பினால் இறைவன் நற்கூலி வழங்கும் எஜமானனாக இருக்கின்றான் என்பது நிரூபணமாகின்றது. வாதத்துடன் எதையாவது வேண்டுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. மன்னிப்பு,

ஈடேற்றம் ஆகியவை அருளுடன் மட்டுமே தொடர்புடையவையாகும்.

*(அய்யாமுஸ் ஸுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 242-243)*

சூரா ஃபாத்திஹாவில் அல்லாஹ் தனது நான்கு பண்புகளைக் குறிப்பிட்டிருக்கிறான். அதாவது ரப்புல் ஆலமீன், ரஹ்மான், ரஹீம், மாலிக்கி யவ்மித்தீன். இந்த நான்கு பண்புகளில் ரப்புல் ஆலமீன் என்பதை எல்லாவற்றையும் விட முதன்மையாக வைத்திருக்கின்றான். அதற்குப் பிறகு ரஹ்மான் என்ற பண்பைக் குறிப்பிட்டுள்ளான். அடுத்து ரஹீம் என்ற பண்பைக் குறிப்பிட்டுள்ளான். பிறகு எல்லாவற்றிற்கும் கடைசியாக மாலிக்கி யவ்மித்தீன் என்பதைக் கொண்டு வந்திருக்கிறான்.

**எனவே இந்த வரிசையை இறைவன் ஏன் மேற்கொண்டான் எனப் புரிய வேண்டும். இதில் உள்ள நுண்ணிய கருத்து என்னவென்றால், இந்த நான்கு பண்புகளின் இயற்கையான வரிசையும் அப்படித்தான் இருக்கிறது. மேலும் தனது உண்மையான நிலையிலும் இந்த வரிசையிலேயே இந்தப் பண்புகள் வெளிப்படுகின்றன. இதன் விபரம் என்னவென்றால், உலகில் இறைவனின் அருள் நான்கு விதமாக காணப்படுகிறது.** சிந்திப்பதால் ஒவ்வோர் அறிவாளியும் அதைப் புரிந்து கொள்ளலாம்.

முதல் அருள், *ஃபைஸானே அஅம்* **(மிக மிகப் பொதுவான அருள்) ஆகும். இது எத்தகைய பொதுவான அருள் என்றால், வானங்கள் முதல் மண் வரை உயிருள்ளதும் உயிரற்றதுமான எல்லா பொருள்களிலும் வேறுபாடின்றி தொடர்ந்து இருப்பதாகும்.**

ஒவ்வொரு பொருளும் இல்லாமையிலிருந்து உருவாவதும் பிறகு இருப்பின் கடைசி முழுமை வரை அடைவதும் இந்த அருளின் மூலமாகவே நடக்கின்றது. மேலும் எந்தவொரு பொருளும் - அது உயிருள்ளதாக இருந்தாலும் உயிரற்றதாக இருந்தாலும் - இதற்கு வெளியே இல்லை. இதிலிருந்தே எல்லா ஆன்மாக்களும் உடல்களும் தோன்றின; தோன்றுகின்றன. மேலும் எல்லா பொருள்களும் வளர்ச்சி அடைந்தன; வளர்ச்சி அடைகின்றன.

இந்த அருளே எல்லா உலகங்களின் உயிராகும். ஒரு விநாடி நின்று விட்டாலும் முழு உலகமும் அழிந்து விடும். இது இல்லாதிருந்தால் படைப்பினங்களில் ஒன்றுமே எஞ்சியிருக்காது. திருக்குர்ஆனில் இதற்கு *ருபூபிய்யத்* என்று பெயர். இதன் அடிப்படையிலேயே இறைவனுடைய பெயர் رَبِّ الْعٰلَمِيْنَ உதாரணமாக, அவன் இன்னோரிடத்திலும், وَّهُوَ رَبُّ كُلِّ شَيْءٍ எனக் கூறியிருக்கின்றான். *(திருக்குர்ஆன் 6:165)*

அதாவது, இறைவன் எல்லாவற்றிற்கும் *'ரப்'* ஆக இருக்கின்றான். உலகத்தின் பொருள்களில் எந்த பொருளும் அவனது ருபூபிய்யத்திலிருந்து வெளியே இல்லை. எனவே இறைவன் சூரா ஃபாத்திஹாவில் அருள்களின் எல்லா பண்புகளிலிருந்தும் முதல் பண்பாக رَبِّ الْعٰلَمِيْنَ என்பதைக் குறிப்பிட்டிருக்கிறான். மேலும் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ எனக் கூறியிருக்கிறான். இதை ஏன் குறிப்பிட்டிருக்கிறான் என்றால் அருள்களின் எல்லா பண்புகளிலும் காலத்தால் முற்பட்ட இயற்கையான பண்பு ருபூபிய்யத் ஆகும்.

அதாவது வெளிப்படுவதைப் பொருத்தவரை இந்தப் பண்புதான் முதன்மையானதும் அருளின் எல்லா

பண்புகளிலும் *அஅம்* (மிகப் மிகப் பொதுவானதும்) ஆகும். ஏனெனில் இது ஒவ்வொரு பொருளையும் - அது உயிருள்ளதாக இருந்தாலும் உயிரற்றதாக இருந்தாலும் - அதை சூழ்ந்துள்ளது.

பிறகு இரண்டாவது தகுதியைப் பெற்ற இரண்டாவது வகையான அருள் *ஃபைஸானே ஆம்* (பொதுவான அருள்) ஆகும்.

***ஃபைஸானே ஆம்* (பொதுவான அருள்) என்பதற்கும் *ஃபைஸானே அஅம்* (மிக மிகப் பொதுவான அருள்) என்பதற்கும் உள்ள வித்தியாசம்** என்னவென்றால் *ஃபைஸானே அஅம்* (மிக மிகப் பொதுவான அருள்) என்பது ஒரு பொதுவான *ருபூபிய்யத்* ஆகும். அதன் மூலமாக அனைத்து உலகங்களும் வெளிப்பட்டன; மற்றும் இருக்கின்றன. மேலும் *ஃபைஸானே ஆம்* (பொதுவான அருள்) என்ற பெயரைக் கொண்ட இந்த அருள் ஆரம்பத்திலிருந்தே இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட அருளாகும். அது உயிருள்ளவற்றின் நிலைக்கேற்ப ஈடுபட்டிருக்கின்றது.

அதாவது உயிருள்ளவற்றின் பக்கம் இறைவனின் ஒரு குறிப்பிட்ட கவனம் இருக்கிறது. இதற்கு *ஃபைஸானே ஆம்* (பொதுவான அருள்) என்று பெயர். மேலும் இந்த அருளுக்கு இலக்கணம் என்னவென்றால், இது எந்த உரிமையுமில்லாமல், ஒருவருக்கு எந்த உரிமையும் இல்லாவிட்டாலும் எல்லா உயிருள்ளவற்றின் மீதும் அவற்றின் தேவைக்கேற்றபடி அவை வெளிப்படுகின்றன. எவருடைய செயலின் தேவையுமில்லை. மேலும் இந்த அருளின் காரணமாகவே ஒவ்வோர் உயிரினமும் உயிருடன் இருக்கிறது; விழித்திருக்கிறது; உண்கிறது; குடிக்கிறது; ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாகவும் தேவைகளைப் பெற்று பயனடைவதாகவும் காணப்படுகிறது. மேலும் ஒவ்வோர் உயிருள்ளவற்றிற்கும் அவற்றிற்காகவும்

அல்லது அவற்றின் வகைக்காகவும் வாழ்விற்குத் தேவையான காரணிகள் கிடைப்பதாகக் காண்கின்ற அனைத்து அடையாளங்களும் இதன் அருள்களே ஆகும்.

பௌதீக தர்பிய்யத்திற்காக ஆன்மாக்களுக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எந்த ஆன்மாக்களுக்கு பௌதீக தர்பிய்யத் மட்டுமின்றி ஆன்மீக தர்பிய்யத்திற்கும் தேவை இருக்கிறதோ அதாவது ஆன்மீக முன்னேற்றத்திற்கான ஆற்றலைக் கொண்டிருக்கின்றதோ அவற்றிக்கு தொன்மையிலிருந்தே உரிய தருணத்தில் இறைவனின் வார்த்தைகள் இறங்கிக் கொண்டிருக்கின்றன.

**சுருக்கமாக, இந்த ரஹ்மானிய்யத்தின் அருளினாலேயே மனிதன் தனது கோடிக்கணக்கான தேவைகளில் வெற்றி கண்டு விடுகின்றான். வாழ்வதற்கு பூமி, ஒளிக்கு சந்திரன் மற்றும் சூரியன், சுவாசிப்பதற்கு காற்று, குடிப்பதற்கு தண்ணீர், உண்பதற்கு பலவகையான, பலவிதமான உணவுகள், நோயின் கிசிக்சைக்காக இலட்சக்கணக்கான மருந்துகள், அணிவதற்கு பலவிதமான அணியும் ஆடைகள், நேர்வழி பெறுவதற்கு இறைவனின் வேதம் ஆகியவை காணப்படுகின்றன.**

**மேலும் இந்த எல்லா பொருள்களும் எனது செயல்களின் விளைவினால் உருவாயின; நான்தான் எனது முந்தைய பிறவியில் ஒரு நன்மை செய்திருந்தேன்; அதன் விளைவாக இறைவன் எண்ணற்ற இந்த அருள்களை மனித குலத்திற்கு வழங்கி இருக்கிறான் என்று எவரும் வாதிட்டுக் கூற முடியாது.**

எனவே உயிரினங்களின் வசதிக்காக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான இந்த அருள்கள் எவருடைய செயலுக்கு பிரதிபலனாகவும் இன்றி, எவரும் உரிமை கொண்டாட முடியாத அன்பளிப்பாக உள்ளது. ஒவ்வோர் உயிரினமும் தனது இயற்கையான நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காகவும் அதன் இயல்பில் என்ன தேவைகள் இடப்பட்டுள்ளனவோ அவை நிறைவேற வேண்டும் என்பதற்காகவும் வெளிப்பட்ட இறைவனுடைய கருணையின் ஓர் உந்துதலாகும்.

எனவே இந்த அருளில் வழிவழியாக இருந்துவரும் வேலை என்னவென்றால், மனிதன் மற்றும் எல்லா உயிரினங்களின் தேவைகளை நிர்ணயிக்க வேண்டும். மேலும் அவை அழிந்து விடாதிருப்பதற்காக அவை இருப்பது பற்றியும் இல்லாதிருப்பது பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அவற்றின் திறமைகள் மறைவாக இருக்கக் கூடாது என்பதாகும். மேலும் இந்த அருளின் பண்பு இறைவனிடம் காணப்படுவது இயற்கைச் சட்டத்தைப் பார்ப்பதன் மூலம் தெளிவாக நிரூபணமாகின்றது.

ஏனெனில் உலகில் சந்திரன், சூரியன், பூமி மற்றும் மூலக்கூறுகள் ஆகிய என்னென்ன பொருள்கள் காணப்படுகின்றனவோ எவை எல்லாம் உயிருள்ளவற்றின் வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கிறதோ அவை இந்த அருள்களின் விளைவினாலேயே வெளிப்படுகின்றன என்பதில் எந்த அறிவுள்ளவருக்கும் ஆட்சேபனை இல்லை. உயிருள்ள ஒவ்வொன்றும் மனிதன், விலங்கு, இறைநம்பிக்கை கொண்டவர், இறைநம்பிக்கை கொள்ளாதவர், நல்லவர், கெட்டவர் ஆகிய எந்த வித்தியாசமுமின்றி தேவைக்கேற்றபடி

மேற்கூறப்பட்டுள்ள அருள்களிலிருந்து பயன்பெற்று வருகிறார். உயிருள்ள எதுவும் அதிலிருந்து விலகி இருக்கவில்லை. மேலும் அந்த அருளுக்கு திருக்குர்ஆனில் ரஹ்மானிய்யத் என்று பெயர். இதன் அடிப்படையிலேயே திருக்குர்ஆனில் சூரா ஃபாத்திஹாவில் رَبِّ الْعٰلَمِيْنَ என்ற பண்புக்குப் பிறகு الرَّحْمٰنِ என வந்துள்ளது.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ என குறிப்பிடுகிறான். இந்த பண்பையே திருக்குர்ஆனின் இன்னும் பல இடங்களிலும் சுட்டிக் காட்டுகிறான். அவற்றுள் சில இவையாகும்:

وَ اِذَا قِيْلَ لَهُمُ اسْجُدُوْا لِلرَّحْمٰنِ قَالُوْا وَمَا الرَّحْمٰنُ ۗ
اَنَسْجُدُ لِمَا تَاْمُرُنَا وَزَادَهُمْ نُفُوْرًا ۩ ﴿٦١﴾
تَبٰرَكَ الَّذِىْ جَعَلَ فِى السَّمَآءِ بُرُوْجًا
وَّجَعَلَ فِيْهَا سِرٰجًا وَّقَمَرًا مُّنِيْرًا ﴿٦٢﴾
وَهُوَ الَّذِىْ جَعَلَ الَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً لِّمَنْ
اَرَادَ اَنْ يَّذَّكَّرَ اَوْ اَرَادَ شُكُوْرًا ﴿٦٣﴾
وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا
وَّاِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا ﴿٦٤﴾

*(திருக்குர்ஆன் 25:61-64)*

அதாவது நீங்கள் ரஹ்மானுக்கு சஜ்தா செய்யுங்கள் என்று இறை மறுப்பாளர்கள், மார்க்கமற்றவர்கள் மற்றும் நாத்திகர்களுக்குக் கூறப்பட்டால் அவர்கள் ரஹ்மான் என்ற

பெயரால் வெறுப்படைந்து மறுக்குமுகமாக ரஹ்மான் என்பவன் யார் எனக் கேள்வி கேட்கின்றனர்.

(அதற்கு விடையாக அல்லாஹ் கூறினான்:) ரஹ்மான் என்பவன் அதிக அருள்களைக் கொண்டவன். அவன் நிரந்தர நன்மைகளைக் கொண்டவன். அவன் வானத்தில் நட்சத்திரக் கூட்டங்களை அமைத்தான். அந்த நட்சத்திரக் கூட்டங்களில் நம்பிக்கை கொண்டவர், இறைமறுப்பாளர் என்ற எந்த வித்தியாசமுமின்றி பொதுவாக எல்லா படைப்பினங்களுக்கும் ஒளியைத் தருவதற்காக சூரியனையும் சந்திரனையும் அமைத்தான்.

மேலும் அந்த ரஹ்மான்தான் இறைஞானத்தை வேண்டுபவர் அந்த ஞானங்களின் நுண்ணியதன்மைகளிலிருந்து பயன்பெறுவதற்காகவும், அறியாமை மற்றும் கவனமின்மை என்ற திரையிலிருந்து ஈடேற்றத்தைப் பெறுவதற்காகவும், இறை அருளுக்கு நன்றி செலுத்த ஆயத்தமாக இருப்பவர் நன்றி செலுத்துவதற்காகவும் உங்களுக்காக அதாவது எல்லா மனித குலத்திற்காகவும் இரவையும் பகலையும் ஒன்றையொன்று பின்தொடரக் கூடியதாக உருவாக்கினான்.

**ரஹ்மானை உண்மையாக வணங்குபவர் பூமியில் பணிவுடன் நடப்பவர்களாவர்.** மேலும் அறிவற்றவர்கள் அவர்களுடன் கடுமையான வார்த்தைகளில் பேசினால் சாந்தி மற்றும் கருணையின் சொற்களில் பதில் கூறுகின்றனர். **அதாவது கடுமைக்கு பதிலாக மென்மையாகவும் ஏசுவதற்கு பதிலாக அருளுக்கான துஆவும் செய்கின்றனர்.** மேலும் ரஹ்மானின் பண்புகளை ஒத்த பண்புகளை மேற்கொள்கின்றனர். ஏனெனில் ரஹ்மானும் நல்லவர்,

கெட்டவர் என்ற எந்த வித்தியாசமுமின்றி தனது எல்லா அடியார்களுக்கும் சூரியன், சந்திரன், பூமி மற்றும் பிற எண்ணற்ற அருள்களினால் பயன்பெறச் செய்கின்றான்.

எனவே ரஹ்மான் என்ற சொல் அல்லாஹ்வுக்காக இந்த பொருளில் கூறப்படுகிறது என்பதை இறைவன் இந்த வசனங்களில் நன்றாக விளக்கி விட்டான். அவனுடைய பரந்த கருணை பொதுவாக எல்லா நல்லவர், தீயவரையும் சூழ்ந்திருக்கிறது. இன்னோரிடத்தில் இந்த பொதுவான அருளை இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறான்:

عَذَابِيٓ أُصِيبُ بِهِۦ مَنۡ أَشَآءُۖ وَرَحۡمَتِي وَسِعَتۡ كُلَّ شَيۡءٖۚ

அதாவது எனது தண்டனையை யாருக்கு உரியதாக நான் கருதுகிறேனோ அவருக்கு வழங்குகிறேன். மேலும் எனது கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. *(திருக்குர்ஆன் 7:157)*

இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

قُلۡ مَن يَكۡلَؤُكُم بِٱلَّيۡلِ وَٱلنَّهَارِ مِنَ ٱلرَّحۡمَٰنِۗ

அதாவது அந்த நிராகரிப்பவர்களுக்கும் கட்டுப்படாதவர்களுக்கும் கூறுவீராக: இறைவனிடம் ரஹ்மானிய்யத் என்ற பண்பு இல்லாதிருக்குமென்றால் நீங்கள் அவனுடைய தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருப்பது சாத்தியமில்லை. *(திருக்குர்ஆன் 21:43)* அதாவது அவன் நிராகரிப்பவர்களுக்கும் இறைநம்பிக்கை இல்லாதவர்களுக்கும் காலக்கெடு வழங்குவதும் சீக்கிரம் பிடிக்காதிருப்பதும் அவனது ரஹ்மானிய்யத்தின் விளைவாகும்.

பிறகு இன்னோரிடத்தில் இதே ரஹ்மானிய்யத்தை இவ்வாறு சுட்டிக் காட்டுகிறான்:

اَوَلَمۡ يَرَوۡا اِلَى الطَّيۡرِ فَوۡقَهُمۡ صٰٓفّٰتٍ وَّ يَقۡبِضۡنَ ؕۘ مَا يُمۡسِكُهُنَّ اِلَّا الرَّحۡمٰنُ ؕ

அதாவது, **அவர்கள் தமது தலைகளுக்கு மேலே பறவைகளை பறக்கக் காணவில்லையா? அவை சில நேரத்தில் தனது இறக்கைகளை விரிக்கின்றன; சில நேரத்தில் சுருக்கிக் கொள்கின்றன. அவை கீழே விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்திருப்பது ரஹ்மானாகிய இறைவனே ஆவான்.** *(திருக்குர்ஆன் 67:20)*

அதாவது ரஹ்மானிய்யத்தின் அருள் எல்லா ஆன்மாக்களின் மீதும் எவ்வாறு பரவி இருக்கிறதென்றால், ஒரு பைசாவுக்கு இரண்டு மூன்று கிடைக்கக் கூடிய பறவைகளும் இந்த அருளின் பரந்த நதியில் மகிழ்ச்சியுடனும் இன்பத்துடனும் நீந்துகின்றன. (படைத்துக் காத்தோம்புதல் என்ற) ருபூபிய்யத்திற்குப் பிறகு அருளுக்கான இந்த அந்தஸ்துதான் இருக்கிறது. இந்த வகையில்தான் அல்லாஹ் சூரா ஃபாத்திஹாவில் ரப்புல் ஆலமீன் என்ற பண்பை எடுத்துக்கூறி அதற்குப் பிறகு ரஹ்மானாக இருக்கும் பண்பை எடுத்துக் கூறியிருக்கிறான். அவற்றின் இயல்பான வரிசை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான்.

**அருளின் மூன்றாவது வகை** *ஃபைஸானே காஸ்* **(சிறப்பான அருள்) என்பதாகும். இதிலும்** *ஃபைஸானே ஆம்* **(பொதுவான அருள்) என்பதிலும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், பொதுவான அருளில் அந்த அருளைப் பெறுபவர் அதைப் பெறுவதற்கு தனது நிலையை நல்லதாக மாற்றிக் கொள்ளத் தேவையில்லை. தனது**

உள்ளத்தை இருள்களின் திரைகளிலிருந்து வெளியே கொண்டு வரத் தேவையில்லை. அல்லது எந்தவிதமான உழைப்போ அல்லது முயற்சியோ தேவையில்லை. மாறாக, நாம் இப்போது விளக்கி வந்திருப்பது போன்று **அந்த அருளில் இறைவன் தானே ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதன் இயல்புக்கேற்ப அதன் தேவைகளை வழங்கி விடுகிறான்.** கேட்காமலேயே, எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமலேயே ஏற்பாடு செய்து விடுகிறான்.

**ஆனால் சிறப்பான அருளில் உழைப்பு, முயற்சி, உள்ளத்தை தூய்மைப்படுத்துவது, துஆ செய்வது, மன்றாடுவது, அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துவது, மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப மற்ற எல்லாவிதமான உழைப்பும் செய்வது நிபந்தனையாகும்.**

அதைத் தேடுபவர்தான் அந்த அருளைப் பெறுகிறார். மேலும் அதற்காக உழைப்பவருக்குத்தான் அது கிடைக்கிறது. இந்த அருள் இருப்பதும் இயற்கைச் சட்டத்தை நோக்கும்போது நிரூபணமாகின்றது. ஏனெனில் இறைவனின் வழியில் முயற்சி செய்பவர், கவனமில்லாதிருப்பவர் ஆகிய இருவரும் சமமானவராக மாட்டார் என்பது மிகவும் தெளிவானதாகும்.

சந்தேகமின்றி எவர்கள் உண்மையான உள்ளத்துடன் இறைவனின் வழியில் முயற்சி செய்கிறார்களோ எல்லா இருள்களிலிருந்தும், குழப்பங்களிலிருந்தும் விலகி இருக்கிறார்களோ அவர்களுடன் ஒரு சிறப்பான அருள் இருக்கின்றது. அந்த அருளின் அடிப்படையில் திருக்குர்ஆனில் இறைவனின் பெயர் ரஹீம் என்பதாகும்.

**மேலும் இந்த ரஹீமிய்யத் பண்பின் அந்தஸ்து சிறப்பாக இருப்பதன் காரணமாகவும்,**

**நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருப்பதன் காரணமாகவும் ரஹ்மானிய்யத்தின் அந்தஸ்தை விட அதிக தாக்கத்தைக் கொண்டதாகும்.** ஏனெனில் இறைவனிடமிருந்து முதலில் ரஹ்மானிய்யத் என்ற பண்பு வெளிப்பட்டது. அதற்குப் பிறகு ரஹீமிய்யத் என்ற பண்பு வெளிப்பட்டது. எனவே இந்த இயல்பான வரிசைக்கிரமத்திற்கேற்பவே சூரா ஃபாத்திஹாவில் ரஹீமிய்யத் என்ற பண்பு ரஹ்மானிய்யத் என்ற பண்புக்குப் பிறகு குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் الرَّحْمٰنِ الرَّحِيْمِ என்று கூறினான். மேலும் ரஹீமிய்யத் என்ற பண்பு பற்றி திருக்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பு உள்ளது.

ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

وَكَانَ بِالْمُؤْمِنِيْنَ رَحِيْمًا

அதாவது **அல்லாஹ்வின் ரஹீமிய்யத் என்ற பண்பு நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டுமே உரியதாகும். அதில் நிராகரிப்பவர்களுக்கு அதாவது இறை நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, வரம்பு மீறுபவர்களுக்கு பங்கு கிடையாது.** *(திருக்குர்ஆன் 33:44)*

இந்த இடத்தில் பார்க்க வேண்டியது என்னவென்றால், இறைவன் ரஹீமிய்யத் என்ற பண்பை எவ்வாறு நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டும் சிறப்பாக்கியுள்ளான். ஆனால் ரஹ்மானிய்யத்தை எந்த இடத்திலும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு சிறப்பானதாக ஆக்கவில்லை.

وَكَانَ بِالْمُؤْمِنِيْنَ رَحِيْمًا (அவன் ரஹ்மானின் பண்பை நம்பிக்கை கொண்டவர்களுக்காக ஆக்கிக் கொண்டான்) என எந்த இடத்திலும் கூறவில்லை. மாறாக, நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டும் உரித்தான சிறப்பான கருணை

பற்றி எல்லா இடத்திலும் ரஹீமிய்யத் பண்புடன் தொடர்புபடுத்திக் குறிப்பிட்டிருக்கிறான்.

பிறகு இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

اِنَّ رَحۡمَتَ اللّٰهِ قَرِيۡبٌ مِّنَ الۡمُحۡسِنِيۡنَ

அதாவது அல்லாஹ்வின் அருள் நன்மை செய்பவர்களுக்கு அருகிலேயே இருக்கிறது. *(திருக்குர்ஆன் 7:57).*

பிறகு இன்னோரிடத்தில் கூறுகிறான்:

اِنَّ الَّذِيۡنَ اٰمَنُوۡا وَالَّذِيۡنَ هَاجَرُوۡا وَجٰهَدُوۡا فِىۡ سَبِيۡلِ اللّٰهِ ۙ اُولٰٓـئِكَ يَرۡجُوۡنَ رَحۡمَتَ اللّٰهِ ؕ وَاللّٰهُ غَفُوۡرٌ رَّحِيۡمٌ

அதாவது எவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்களோ, இறைவனுக்காக நாடுகளை விட்டும் அல்லது நஃப்ஸை வணங்குவதிலிருந்தும் தனித்து விட்டார்களோ இறைவனின் வழியில் முயற்சி செய்தார்களோ அவர்கள் இறைவனின் ரஹீமிய்யத்தை நம்பியிருப்பவர்களாவர். மேலும் இறைவன் மிக்க மன்னிப்பவனும் மிக்க கருணை காட்டுபவனுமாவான். *(திருக்குர்ஆன் 2:219)* அதாவது அவனுடைய ரஹீமிய்யத்தின் அருள் அதற்குரியவர்களுக்கு கண்டிப்பாகக் கிடைக்கிறது. அதை ஒருவர் வேண்டி, அதைப் பெறாதவர் யாருமில்லை.

(பாரசீக கவிதையின் பொருள்:)

''அன்பு கொள்பவனின் நிலையின் பக்கம் கவனம் செலுத்தாத எந்த அன்பாளனும் இல்லை. ஐயா! வேதனையே இல்லை. மற்றபடி மருத்துவர் இருக்கத்தான் செய்கிறார்.''

**அருளின் நான்காவது வகை *ஃபைஸானே அகஸ்* (மிக மிகச் சிறப்பு மிக்க அருள்) என்பதாகும்.**

இந்த அருள் வெறும் உழைப்பு, முயற்சியால் மட்டும் கிடைப்பதில்லை. மாறாக, அது வெளிப்படுவதற்கும் தோன்றுவதற்கும் முதல் நிபந்தனை, குறுகலான, இருளான இடமாகிய வழிவகைகளைக் கொண்ட இந்த உலகம் முற்றிலும் இல்லாமற்போய் விட வேண்டும்; அழிந்து விட வேண்டும். மேலும் ஏக இறைவனின் முழுமையான ஆற்றல், வழிவகைகளின் கலப்படமின்றி வெளிப்படையான முறையில் தனது முழுமையான பிரகாசத்தைக் காட்ட வேண்டும்.

ஏனெனில் எல்லா அருள்களும் சென்று முடிகின்ற அந்த கடைசி அருளில் முந்தைய அருள்களை அறிவுக்கு அதிகமானதாகவும் முழுமையானதாகவும் சிந்திக்க முடிந்ததாக இருக்கிறதோ அந்த அருள் மிகவும் பகிரங்கமானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும். அதில் எந்த சந்தேகமும் மறைவும், குறைவும் இருக்கக் கூடாது.

அதாவது, அருளை வழங்குபவன் தீர்மானத்துடன் அருளை வழங்குகிறான் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கக் கூடாது. மேலும் அருளை வழங்குபவனின் உண்மையான அருளிலும் களங்கமற்றதும் முழுமையானதுமான கருணையில் எந்த ஆட்சேபனையும் இருக்கக் கூடாது.

மாறாக, எந்த பழமையான எஜமானனிடமிருந்து அருள் கிடைத்ததோ அவனுடைய அருள் மற்றும் நற்கூலியை வழங்குவது பகல் வெளிச்சம் போன்று வெளிப்பட வேண்டும். மேலும் அருளைப் பெறுபவர், உண்மையில் அந்த அனைத்து உலகங்களின் எஜமானன்தான் தனது எண்ணம், கவனம், சிறப்பான ஆற்றல் ஆகியவற்றின் மூலமாக ஒரு மகத்தான அருளையும் மாபெரும் இன்பத்தையும் தனக்கு வழங்குகிறான் என்பதை உறுதித்தன்மையுடன் காணவும் உணரவும்

வேண்டும். மேலும் உண்மையில் தனக்கு தனது நற்செயல்களுக்கு மிகவும் தூய்மையான, மிகவும் உயர்வான, மிகவும் விருப்பத்திற்குரிய, மிகவும் நேசத்திற்குரிய ஒரு முழுமையான, நிரந்தரமான நற்கூலி கிடைத்துக் கொண்டிருக்கிறது; அதில் எந்தவிதமான சோதனையும் இல்லை என்பதையும் அவர் உணர வேண்டும்.

மேலும் அத்தகைய அருள் முழுமையாகவும், நிறைவாகவும், நிரந்தமானதாகவும், உயர்வானதாகவும், மிகவும் ஒளிமிக்கதாகவும் இருப்பது அடியார் இந்த குறைபாடுள்ள, கறைபடிந்த, அசுத்தமான, குறுகலான, இறுக்கமான, மாய்ந்து விடுகின்ற, சந்தேகத்திற்குரிய நிலையில் இருக்கின்ற இன்னோர் உலகிற்கு மாறிச் செல்வதைச் சார்ந்திருக்கிறது.

ஏனெனில் இந்த அருள்கள் மிகவும் மகத்தான தோற்றங்களின் காட்சியாகும். அவற்றில் உண்மையான அருள் புரிகின்றவனின் அழகு பகிரங்கமாகவும் உறுதித்தன்மை என்ற அந்தஸ்திலும் தெளிவாக காட்சி தர வேண்டும். காணுதல், வெளிப்படுதல், உறுதியான நம்பிக்கை ஆகியவற்றின் எந்த அந்தஸ்தும் எஞ்சியிருக்கக் கூடாது. இடையில் எவ்வித திரையும் இல்லாதிருக்க வேண்டும்.

மேலும் முழுமையான இறைஞானத்தின் ஒவ்வொரு நுட்பமும் சாத்தியமான ஆற்றலினால் செயலுக்கு வந்து விட வேண்டும். மேலும் அருளும் எந்த அளவுக்கு தெளிவாகவும் உண்மையை கண்டறியத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென்றால், தான் எல்லாவிதமான சோதனையிலிருந்தும் கறையிலிருந்தும் தூயதாக இருப்பதாக இறைவன் வெளிப்படுத்தி இருக்க வேண்டும். மேலும் அந்த அருளில் உயர்ந்த, முழுமையான தரத்தைக் கொண்ட

இன்பங்கள் இருக்க வேண்டும். அதில் அதை விட அதிகமாக அறிவுப்பூர்வமாகவோ சிந்தனைபூர்வமாகவோ நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவற்றின் தூய, முழுமையான நிலை மனிதனின் உள்ளம், ஆன்மா, வெளிப்படையானது, மறைமுகமானது, உடல், உயிர் மற்றும் எல்லா ஆன்மீக, உடல் அளவிலான ஆற்றலின் மீது முழுமையாகவும் நிரந்தமாகவும் சூழ்ந்திருக்க வேண்டும்.

மேலும் குறைபாடுள்ள, கறைபடிந்துள்ள, அழியக் கூடிய, சந்தேகத்திற்குரிய நிலையைக் கொண்ட குறுகலான இந்த உலகம் அந்த மகத்தான தோற்றங்களையும் தூய ஒளிகளையும், நிரந்தரமான அன்பளிப்புகளையும் தாங்கிக் கொள்ள முடியாது. மேலும் (உலகமான) அது நிறைவானதும், முழுமையானதும், நிரந்தரமானதுமாகிய ஒளிக்கதிர்களையும் உள்ளடக்க முடியாது.

மாறாக அதைப் புரிவதற்கு இன்னோர் உலகம் தேவை. அது பல்வேறு காரணிகள் எனும் இருளிலிருந்து முற்றிலும் பரிசுத்தமானதும், தூயதும், அச்சப்படத்தகுந்த ஏகனுடைய முழுமையான ஆற்றலின், கலப்பற்ற தன்மையின் தோற்றமாகும்.

**ஆயினும் உண்மையின் வழியில் முழுமையான முறையில் காலெடுத்து வைக்கும் முழுமையான மனிதர்களுக்கு இந்த வாழ்க்கையிலேயே இந்த *ஃபைஸானே அகஸ்* (மிக மிகச் சிறப்பு மிக்க அருள்) என்பதிலிருந்து சிறிது இன்பம் கிடைக்கிறது. அவர்கள் தமது நஃப்ஸின் எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருந்து முற்றிலும் இறைவன் பக்கம் குனிந்து விடுகின்றனர். ஏனெனில் அவர்கள் மரணிப்பதற்கு முன் மரணித்து விடுகின்றனர். அவர்கள் வெளிப்படையில் இந்த உலகில் இருக்கின்றனர்; ஆனால்**

உண்மையில் அவர்கள் வேறோர் உலகில் வாழ்கின்றனர். எனவே அவர்கள் தமது உள்ளங்களை இந்த உலகின் ஊடகங்களிலிருந்து விலக்கிக் கொள்கின்றனர்.

மேலும் மனிதனின் பழக்கங்களை உடைத்தெறிந்து **அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து முற்றிலும் முகத்தைத் திருப்பியவாறு வழக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையைக் மேற்கொள்கின்றனர். எனவே இறைவனும் அவர்களுடன் அப்படியே நடந்து கொள்கிறான்.** வழக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில் அவர்களுக்கு தனது சிறப்பான ஒளிகளை வெளிப்படுத்துகின்றான். அது மற்றவர்களுக்கு மரணத்தை மேற்கொண்டாலன்றி கிடைக்க முடியாது.

**சுருக்கமாக, மேற்குறிப்பிட்ட விஷயங்களின் காரணமாக அவர்கள் இந்த உலகிலும் *ஃபைஸானே அகஸ்* (மிகச் சிறப்பான அருளின்) ஒளியிலிருந்து கொஞ்சம் பங்கைப் பெற்றுக் கொள்கின்றனர்.**

இந்த அருள் எல்லா அருள்களை விட சிறப்பு மிக்கதாகும். அனைத்து அருள்களுக்கும் முடிவுரை ஆகும். இதைப் பெறுகின்றவர் மகத்தான நற்பேற்றை அடைந்து விடுகின்றார். அது எல்லா மகிழ்ச்சிகளின் தலையூற்றாகும். அதைப் பெறுபவர் நிரந்தரமான மகிழ்ச்சியைப் பெற்று விடுகிறார். எவர் இதை இழந்தவராக இருக்கிறாரோ அவர் நிரந்தரமான நரகத்தில் வீழ்ந்து விட்டார்.

இந்த அருளின் அடிப்படையில் இறைவன் திருக்குர்ஆனில் தனது பெயராக *‘மாலிகி யவ்மித்தீன்’* (தீர்ப்பு நாளின் அதிபதி) எனக் குறிப்பிட்டிருக்கிறான். *‘தீன்’* என்ற சொல்லில் *‘அலிஃப், லாம்’* என்ற எழுத்துக்களை கொண்டு வந்ததன் நோக்கம் (அதாவது அத்தீன் என்று கொண்டு வந்ததன் நோக்கம்),

நற்கூலி என்பதன் கருத்து திருக்குர்ஆனில் கூறப்பட்ட முழுமையான நற்கூலி என்ற பொருள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகத்தான். அந்த முழுமையான நற்கூலி எவ்வித காரணிகளையும் கொண்டிராத முழுமையான மாலிகிய்யத்தின் தோற்றமின்றி வெளிப்பட முடியாது.

இதன் பக்கம் சுட்டிக்காட்டியவாறே, لِمَنِ الْمُلْكُ الْيَوْمَ ۖ لِلّٰهِ الْوَاحِدِ الْقَهَّا என்று அவன் கூறினான்.

(அந்த நாள் ஆட்சி எவனுக்குரியது? அது தனித்தவனும், அதிகாரத்தையுடையவனுமாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும்-*திருக்குர் ஆன் 40:17).*

அதாவது அந்த நாளில் இறைவனின் ருபூபிய்யத் (படைத்து காத்தோம்பும் பண்பு) வழக்கமான காரணிகளின்றி தனது தோற்றத்தை தானே வெளிப்படுத்தும். படைப்பாளனாகிய இறைவனின் மகத்தான வல்லமையும் முழுமையான ஆற்றலுமின்றி மற்றவையெல்லாம் வீணானவையாகும் என்றே காணப்படவும், உணரப்படவும் செய்யும்.

அப்போது எல்லா சொகுசுகளும், இன்பங்களும் எல்லா நற்கூலியும் தண்டனையும் தெளிவான, அப்பட்டமான பார்வையில் இறைவன் புறமிருந்தே தென்படும். எந்த திரையும் இடையில் இருக்காது. மேலும் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமிருக்காது. அப்போது அதற்காக தம்மை துண்டித்துக் கொண்டவர்கள் தம்மை ஒரு முழுமையான நற்பேற்றில் காண்பார்கள். அது அவர்களின் உடலையும், உயிரையும், அகத்தையும், புறத்தையும் சூழ்ந்து கொள்ளும். அவர்களின் எந்தவொரு பகுதியும் அந்த மகத்தான நற்பேற்றை பெறுவதிலிருந்து இழப்பிற்குரியதாக இருக்காது.

மேலும் இந்த இடத்தில் مٰلِكِ يَوْمِ الدِّيْنِ என்ற சொல்லில், அந்த நாளில் சுகம் அல்லது தண்டனை, இன்பம் அல்லது வேதனை ஆகிய எது மனிதனுக்குக் கிடைத்தாலும் அதற்கு அசல் காரணம் அல்லாஹ்வாக இருப்பான் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் உண்மையான முறையில் அதிகாரங்களுக்கான எஜமானன் அவனாகவே இருப்பான்.

அதாவது, அவனை சந்திப்பதும் அல்லது விலகியிருப்பதுமே நிரந்தர நற்பேற்றிற்கும் நிரந்தர பேறிழப்பிற்கும் காரணமாக இருக்கும். இவ்வாறு எவர்கள் அவன் மீது ஈமான் கொண்டிருந்தார்களோ தவ்ஹீதை மேற்கொண்டிருந்தார்களோ அவனுடைய கலப்பற்ற அன்பினால் தன் உள்ளங்களை வண்ணமயமாக்கினார்களோ அவர்கள் மீது அந்த முழுமையானவனின் கருணையின் ஒளிகள் தெளிவாகவும், பகிரங்கமாகவும் இறங்கும். மேலும் எவர்களுக்கு ஈமானும் இறையன்பும் கிடைக்கவில்லையோ அவர்கள் இந்த இன்பத்திலிருந்தும் சொகுசிலிருந்தும் பேறிழந்தவர்களாக இருப்பர். மேலும் மிகப் பெரிய தண்டனைக்கு உள்ளாகியிருப்பர்.

இவைதான் நான்கு இறைஅருள்களாகும். அவற்றை நாம் விளக்கமாக எழுதியிருக்கிறோம். இப்போது, ரஹ்மான் (சுயமாக அருள்பாலிப்பவன்) என்ற பண்பை ரஹீம் (செயலுக்கேற்ப நற்பலன் அளிப்பவன்) என்ற பண்பை விட முன்னுரிமையாக வைப்பது மிகவும் அவசியமானதும், முழுமையான பொருள் செறிவும் கொண்டதற்கு ஏற்றதாகும் என்பது வெளிப்படை. ஏனெனில் இறைவேதத்தைப் பார்க்கும்போது முதன்முதலில் இறைவனின் பொதுவான ருபூபிய்யத்தின் மீது பார்வை படுகிறது. பிறகு அவனுடைய ரஹ்மானிய்யத்தின் மீதும் பிறகு

ரஹீமிய்யத்தின் மீதும் அடுத்து மாலிகி யவ்மித்தீன் ஆக இருப்பதன் பக்கமும் பார்வை படுகிறது.

**இயல்பில் என்ன வரிசைக்கிரமம் இருக்கின்றதோ அதுவே இறை வேதத்திலும் கவனத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே முழுமையான கருத்துச் செறிவாகும்.**

ஏனெனில் சொற்றொடரில் இயற்கையின் வரிசைக்கிரமத்தை மாற்றுவது என்பது இயற்கைச் சட்டத்தை மாற்றுவதும் இயற்கை அமைப்பை புரட்டுவதுமாகும். இறைவசனம் இயற்கை அமைப்புக்கு ஏற்றதாக - அதாவது அதை பிரதிபலித்துக் காட்டும் படமாக இருக்க வேண்டியது சொற்செறிவுக்கு மிகவும் அவசியமாகும். எந்த விஷயம் இயல்பிலும், நடைபெற்றதிலும் முன்னுரிமை பெற்றதாக இருக்கிறதோ அதை குறிப்பிடும்போதும் முன்னுரிமையாகக் குறிப்பிட வேண்டும்.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள வசனத்தில் இந்த உயர்தரமான கருத்துச் செறிவு இருக்கிறது. முழுமையான சொற்செறிவு, அழகிய முறையில் எடுத்துக் குறிப்பிட்டபோதிலும் உண்மையில் வரிசைக்கிரமத்தை படம்பிடித்துக் காட்டியிருக்கிறது. ஒவ்வொரு பார்வையாளருக்கும் உலக அமைப்பில் பகிரங்கமாக தென்படும் எடுத்துரைக்கும் அந்த முறையையே மேற்கொண்டுள்ளது. இயல்பில் காணப்படுகின்ற அதே வரிசைக்கிரமமே இறைவேதத்திலும் காணப்படுவது மிகவும் நேரான வழியில்லையா என்ன?

எனவே அப்படிபட்ட அருமையான, ஞானம் நிறைந்த வரிசைக்கிரமத்தில் ஆட்சேபனை செய்வது என்பது எவர்களின்

அகப்பார்வையும், வெளிப்பார்வையும் உண்மையில் குருடாகி விட்டனவோ அவர்களின் வேலையாகும்.

*பாரசீகக் கவிதையின் பொருள்:*

*‘‘தீமையை விரும்புபவரின் கண்களை இறைவன் நாசமாக்குவானாக. அவருக்கு திறமையும் குறையாகவே தெரிகிறது.’’*

இப்போது நாம் மீண்டும் தலைப்பின் பக்கம் திரும்பியவாறு, இந்த சூராவில் இறைவன் رَبِّ الْعٰلَمِيْنَ என்ற பண்பிலிருந்து مٰلِكِ يَوْمِ الدِّيْنِ என்பது வரை என்ன குறிப்பிட்டிருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறோம்.

திருக்குர்ஆனின் இந்த விளக்கங்களுக்கேற்ப இதில் நான்கு மாபெரும் உண்மைகள் இருக்கின்றன. அவற்றை இந்த இடத்தில் விளக்கிக் கூறுவது பொருத்தமானதாகும். முதல் உண்மை, இறைவன் رَبِّ الْعٰلَمِيْنَ (அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்) ஆவான் என்பதாகும்.

அதாவது உலகின் பொருள்களில் இருக்கின்ற அனைத்தையும் படைத்தவனும், எஜமானனும் இறைவன் ஆவான். மேலும் உலகில் என்னவெல்லாம் வெளிப்பட்டு விட்டனவோ, பார்க்கப்படுகின்றனவோ அல்லது உணரப்படுகின்றனவோ அல்லது அறிவு எவற்றை சூழ்ந்து கொள்ள முடியுமோ அவை அனைத்தும் படைக்கப்பட்டவையே ஆகும். மேலும் படைப்பாளனாகிய ஒருவனைத் தவிர உண்மையான இருப்பு வேறு எதற்கும் இல்லை.

சுருக்கமாக, உலகம் அதன் எல்லா பகுதிகளுடனும் படைக்கப்பட்டவையும், இறைவனின் படைப்பும் ஆகும். இறைவனின் படைப்பு இல்லாத எந்தவொரு பொருளும் உலக பகுதிகளில் இல்லை. மேலும் இறைவன் தனது நிறைவான

ருபூபிய்யத்துடன் உலகின் ஒவ்வோர் அணுவின் மீதும் அதிகாரம் செலுத்துபவனாகவும் அதிபதியாகவும் இருக்கின்றான்.

**அவனது ருபூபிய்யத் எல்லா நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இறைவன் உலகைப் படைத்து அதற்கான ஏற்பாட்டிலிருந்து தனித்து விட்டான் என்பதோ, தான் எந்த வேலையிலும் ஈடுபடாத அளவுக்கு உலகை இயற்கையின் விதிமுறையிடம் ஒப்படைத்து விட்டான் என்பதோ அன்று. ஒரு கருவி உருவாக்கப்பட்ட பிறகு அது உருவாக்கப்பட்டவனை விட்டு தொடர்பற்றதாகி விடுவதைப் போன்று படைக்கப்பட்டவை படைத்தவனை விட்டும் தொடர்பற்றவையாக இருக்கின்றன என்பதன்று.**

மாறாக, அந்த رَبِّ الْعٰلَمِيْنَ தனது நிறைவான ருபூபிய்யத் எனும் நீர்ப்பாய்ச்சுதலை எல்லா நேரமும் தொடர்ச்சியாக அனைத்து உலகங்களுக்கும் செய்து கொண்டிருக்கின்றான். மேலும் அவனது ருபூபிய்யத்தின் மழை இடைவிடாது எல்லா உலகத்தின் மீதும் பொழிந்து கொண்டிருக்கின்றது. அவனுடைய அருளின் நீர்த் துளியிலிருந்து வெறுமையாக இருக்கும் எந்த நேரமும் இல்லை.

மாறாக, உலகத்தை படைத்த பிறகும் அந்த அருள்களின் தோற்றம் உண்மையில் எந்தவோர் இடைவெளியுமின்றி, அவன் இதுவரை எதையும் படைக்கவே இல்லை என்பது போன்று தேவையுடையதாக இருக்கிறது. மேலும் உலகம் தனது இருப்புக்கும் வெளிப்பாட்டிற்கும் அவனது ருபூபிய்யத்தின் தேவையுடையதாக இருந்ததைப் போன்றே தன்னை எஞ்சியிருக்க வைப்பதற்கும், நிலைபெற

வைப்பதற்கும் அவனுடைய ருபூபிய்யத்தின் தேவை இருகிறது. அவனே எல்லா நொடிப்பொழுதும் உலகத்தை காப்பாற்றி வருகிறான். உலகின் ஒவ்வோர் அணுவும் அவனாலேயே பசுமையாகவும் செழிப்பாகவும் இருக்கின்றது. மேலும் அவன் தனது விருப்பத்திற்கேற்பவும், எண்ணத்திற்கேற்பவும் ஒவ்வொரு பொருளையும் ருபூபிய்யத் செய்கின்றான். எந்த திட்டமிடலுமின்றி எந்த பொருளின் ருபூபிய்யத்திற்கும் காரணமாக அவன் இருப்பதில்லை.

ஆக, திருக்குர்ஆனின் வசனங்களின்படி, நாம் சுருக்கமாகக் கூறிவருகின்ற இந்த உண்மையின் நோக்கம் என்னவெனில், உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் படைக்கப்பட்டதாகும். மேலும் அவை எல்லா முழுமைத் தன்மைகளிலும், எல்லா நிலைமைகளிலும், எல்லா நேரங்களிலும் இறைவனின் ருபூபிய்யத்தின் தேவையுடையவையாக இருக்கின்றன. அந்த முழுமையான ஆதிக்கம் கொண்டவனின் குறிப்பிட்ட எந்த எண்ணமுமில்லாமல் எந்த படைப்பினமும் தானாகவே பெறக் கூடிய எந்த ஆன்மீக அல்லது பௌதீக முழுமைத்தன்மையும் இல்லை. மேலும் இந்த தூய இறை வார்த்தைக்கேற்பவே இந்த உண்மையிலும் மற்ற உண்மைகளிலும் இன்னொரு பொருளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அது என்னவெனில், இந்த சூராவின் முதல் சொற்றொடரில் اَلْحَمْدُ لِلّٰهِ அதாவது புகழ்கள் அனைத்தும் இறைவனுக்கு மட்டுமே சிறப்பிற்குரியதாகும் என்று கூறப்பட்டுள்ளது போன்று இறைவனிடம் காணப்படுகின்ற رَبِّ الْعٰلَمِيْنَ ஆகிய பண்புகள் ஏகனும், இணையற்றவனுமாகிய அவனுக்கு மட்டுமே சிறப்பிற்குரியதாகும். வேறு யாரும்

அதற்கு இணையானவர் இல்லை.

**இரண்டாவது உண்மை,** *ரஹ்மான்* என்பதாகும். அது رَبِّ الْعٰلَمِيْنَ என்பதற்குப் பிறகு கூறப்பட்டுள்ளது. மேலும் நாம் முன்பும் குறிப்பிட்டிருந்தது போன்று ரஹ்மான் என்பதன் பொருள், எந்த அளவுக்கு உயிருள்ளவை இருக்கின்றனவோ - அவை அறிவுடையவையாக இருந்தாலும், அறிவற்றவையாக இருந்தாலும் நல்லவையாக இருந்தாலும், தீயவையாக இருந்தாலும் அவை அனைத்தின் இருப்பை நிலைபெறச் செய்வதற்காகவும், எஞ்சியிருக்கச் செய்வதற்காகவும் அதன் வகையை எஞ்சியிருக்கச் செய்வதற்காகவும் அவற்றை முழுமை செய்வதற்காகவும் இறைவன் தனது பொதுவான கருணையின் அடிப்படையில் எல்லா விதமான தேவைப்பட்ட காரணிகளை ஆயத்தம் செய்துள்ளான்; எப்போதும் ஆயத்தம் செய்து வந்து கொண்டிருக்கிறான். மேலும் இது சுயமாக அவன் வழங்கும் அருளாகும். எவருடைய செயலையும் சார்ந்ததன்று.

**மூன்றாவது உண்மை** *ரஹீம்* ஆகும். அது ரஹ்மான் என்பதற்குப் பிறகு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் பொருள், இறைவன் முயற்சி செய்கின்றவர்களின் முயற்சிக்கு சிறப்பான ரஹ்மத்தின் (அருளின்) எதிர்பார்ப்புக்கேற்ப அழகிய சிறப்பான நற்கூலிக்கான ஏற்பாடு செய்கின்றான். பாவமன்னிப்பு கோருபவர்களின் பாவத்தை மன்னிக்கின்றான். கேட்பவர்களுக்கு வழங்குகின்றான்; கதவை தட்டுபவர்களுக்கு திறக்கின்றான்.

சூரா ஃபாத்திஹாவில் குறிப்பிடப்பட்டுள்ள **நான்காவது உண்மை,** مٰلِكِ يَوْمِ الدِّيْنِ என்பதாகும். அதாவது நிறைவானதும் முழுமையானதுமான நற்கூலி, தண்டனை. அது ஒவ்வொரு விதமான சோதனை, பரீட்சை, கவனக்குறைவு,

இட்டுக்கட்டுதல் ஆகியவற்றிலிருந்து தூய்மையானதாகும்.

மேலும் ஒவ்வொரு அழுக்கு, கறை மற்றும் சந்தேகம், ஐயம், நஷ்டம் ஆகியவற்றிலிருந்து தூய்மையானதாகும். மேலும் மகத்தான இறைதோற்றங்களின் வெளிப்பாடு ஆகும். அதன் எஜமானனும் அந்த முழு ஆற்றல் மிக்க அல்லாஹ்வே ஆவான்.

அவன் பகலைப் போன்று வெளிச்சமாக இருக்கும் நற்கூலியை வெளிக்கொணர ஒருபோதும் இயலாதவன் அல்லன். இறைவன் அந்த மகத்தான உண்மையை வெளிப்படுத்துவதன் பொருள், ஒவ்வொரு நஃப்ஸுக்கும் *'ஹக்குல் யகீன்'* ஆக கீழ்வரும் விளக்கமான விஷயங்கள் தெளிவாக வேண்டும் என்பதாகும்.

முதலாவதாக, நற்கூலி, தண்டனை என்பது ஓர் உண்மையான, உறுதியான விஷயமாகும். அது உண்மையான எஜமானனிடமிருந்து அவனுடைய சிறப்பான எண்ணத்தினாலேயே அடியார்கள் மீது இறங்குகிறது. மேலும் அப்படி இறங்குவது உலகில் சாத்தியமில்லை.

ஏனெனில் இந்த உலகில் என்னென்ன நன்மை தீமை, சுகம், துக்கம் ஏற்படுகிறதோ அது ஏன் ஏற்படுகிறது? யாருடைய கட்டளை, அதிகாரத்தினால் ஏற்படுகிறது? என்பது பொது மக்களுக்கு வெளிப்படுவதில்லை.

மேலும் அவர் தனது நற்கூலியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்ற குரல் அவர்களில் எவருக்கும் கேட்பதில்லை. அவர் அனுபவித்துக் கொண்டிருப்பது உண்மையில் அவருடைய செயல்களின் விளைவாகும் என்பது எவருக்கும் காணப்படுவதோ உணரப்படுவதோ இல்லை.

இரண்டாவதாக, இந்த (நான்காவது) உண்மையில் இந்த விஷயத்தை வெளிப்படுத்துவது நோக்கமாகும். அது

என்னவெனில், பழக்கமான காரணிகள் ஒன்றுமல்ல. உண்மையாக செயல்படுபவன் இறைவன் ஆவான். மேலும் அவனே ஒரு மகத்தானவன் ஆவான். எல்லா அருள்களின் ஆரம்பமும் எல்லா நற்கூலிக்கும் தண்டனைக்கும் எஜமானன் ஆவான்.

மூன்றாவதாக, இந்த (நான்காவது) உண்மையில் இந்த மகத்தான நற்பேறு, மிகப் பெரிய பேறிழந்த நிலை ஆகியவை என்ன என்ற விஷயத்தை வெளிப்படுத்துவது நோக்கமாகும். அதாவது மகத்தான நற்பேறு என்பது மனிதனின் எல்லா அகத்திலும், புறத்திலும், உடலிலும், உயிரிலும், ஒளி, மகிழ்ச்சி, இன்பம், சொகுசு ஆகியவை சூழ்ந்து விடும் அந்த மகத்தான நிலைமையாகும். மேலும் எந்தவோர் உறுப்பும் ஆற்றலும் இதை விட்டு வெளியில் இருக்கக் கூடாது. மேலும் மிகப் பெரிய பேறிழந்த நிலை என்பது கட்டுப்படாததன் காரணமாகவும்,

அசுத்தத்தின் காரணமாகவும், விலகியிருப்பதன் காரணமாகவும் உள்ளங்களிலிருந்து எரிந்து உடல்களின் மீது பரவி விடுகின்ற வேதனை மிகு தண்டனையாகும். மேலும் எல்லா இருப்பும் நரக நெருப்பில் இருப்பதாக தெரியும். மிகப் பெரிய இந்த வெளிப்பாடுகள் இந்த உலகில் வெளிப்பட முடியாது. ஏனெனில் காரணிகளால் மறைந்து ஒரு குறைபாடுள்ள நிலைமையில் கிடக்கின்ற இந்த குறுகலானதும், இறுக்கமானதும், கறைபடிந்ததுமான உலகம் இதை சகித்துக் கொள்ள முடியாது. மாறாக, இந்த உலகில் சோதனை, பரீட்சை மிகைத்திருக்கிறது. மேலும் இதன் சொகுசும், துன்பமும் பலவீனமானதும், குறைபாடுள்ளதும் ஆகும்.

மேலும் இந்த உலகில் மனிதனுக்கு என்னென்ன ஏற்படுகின்றனவோ அவற்றின் திரைக்குப் பின்னால்

காரணிகள் இருக்கின்றன. அவற்றால் நற்கூலி வழங்குபவனின் முகம் திரையிடப்படுகிறது; மறைக்கப்படுகிறது. எனவே இ(ந்த உலகமான)து கலப்பற்ற முறையிலும், முழுமையாகவும், தெளிவாகவும் *'யவ்முல் ஜஸா'* (நற்கூலி, தண்டனையின் நாள்) ஆக முடியாது.

மாறாக, இந்த உலகம் முடிந்த பிறகு வருவதுதான் கலப்பற்ற முறையிலும், முழுமையாகவும், தெளிவாகவும் *'யவ்முத்தீன்'* அதாவது (நற்கூலிக்கான நாளாகிய) யவ்முல் ஜஸாவுக்கான உலகமாக இருக்கும். மேலும் அதுவே (மகத்தான இறைதோற்றங்கள் வெளிப்படும் உலகமாகிய) ஆலமே தஜல்லியாத்தே உஸ்மாவின் தோற்றமும் கம்பீரமும், அழகும் முழுமையாக வெளிப்படும் இடமும் ஆகும்.

மேலும் இந்த பௌதீக உலகம் தனது உண்மையான படைப்பின் அடிப்படையில் தாருல் ஜஸா (நற்கூலி, தண்டனைக்கான இடம்) அல்ல. மாறாக, சோதனைக்கான இடமாகும். எனவே இந்த உலகில் மக்களுக்கு ஏற்படும் எளிமை, கடினம், இன்பம், துன்பம், கவலை, மகிழ்ச்சி ஆகியவை இறைவனின் அன்பு அல்லது கோபத்தை குறிப்பிடுவதில்லை.

**உதாரணமாக, ஒருவர் செல்வந்தராக ஆவது இறைவன் அவர் மீது மகிழ்ச்சி அடைந்திருக்கிறான் என்பதை ஒருபோதும் சுட்டிக்காட்டுவதில்லை. அவ்வாறே ஒருவர் ஏழையாக இருப்பதும், வறுமையில் இருப்பதும் இறைவன் அவர் மீது கோபம் கொண்டிருக்கிறான் என்பதை சுட்டிக்காட்டுவதில்லை.**

மாறாக, செல்வந்தரை அவருடைய செல்வத்தினாலும் ஏழையை அவருடைய வறுமையினாலும் பிரித்தறிவிக்க

இவை இரண்டுமே சோதனைகள் ஆகும். இவை திருக்குர்ஆனில் விரிவாக கூறப்பட்டுள்ள நான்கு உண்மைகளாகும்.

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் 4 பாகம். ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 444-461 அடிக்குறிப்பு எண் 11)*

உலகப் பொருள்களில் காணப்படும் ஒவ்வொன்றின் இருப்பும் நிலைபெற்றிருப்பதும் தென்பட வேண்டியதும் அவசியமில்லை என்பது பகிரங்கமாக நிரூபணமாகின்றது. உதாரணமாக, பூமி உருண்டையானது. மேலும் அதன் குறுக்களவு சிலருடைய கணிப்பிற்கேற்ப சுமார் 8 ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ளது.

ஆனால் இந்த வடிவமே, இந்த குறுக்களவே அதற்கு அவசியமானது என்பதற்கும் ஏன் அதை விட அதிகமாகவோ அல்லது அதை விட குறைவாகவோ இருக்கக் கூடாது என்பதற்கும் அல்லது இருக்கின்ற இந்த வடிவத்திற்கு மாற்றமாக வேறு ஒரு வடிவத்தில் ஏன் இருக்கக் கூடாது என்பதற்கும் எந்த சான்றும் நிலைபெற முடியாது.

மேலும் இதற்கு எந்தச் சான்றும் நிலைபெறாதிருக்கும்போது எதன் ஒட்டுமொத்தமான பெயர் இருப்பு என்றிருக்கிறதோ அதன் இந்த வடிவம், இந்தக் குறுக்களவு பூமிக்கு அவசியமானதாக இல்லை. இந்த கணிப்பின்படியே உலகின் எல்லா பொருள்களின் இருப்பும் நிலைபெற்றிருப்பதும் அவசியமில்லை என்றாகி விடும். சாத்தியமான ஒவ்வொரு பொருளின் இருப்பும் சுயமாக தென்படுவதும் அவசியமில்லை என்பது மட்டுமல்ல; மாறாக, பெரும்பாலான பொருள்கள் இல்லாமல் போய்விடுவதற்கான காரணிகளும் நிலைபெற்று விடுகின்றன என்பதற்கான சில

நிலைமைகளும் தென்படுகின்றன. பிறகு அந்தப் பொருள்கள் இல்லாமையாகி விடுவதில்லை.

உதாரணமாக, கடுமையான பஞ்சமும், தொற்று நோயும் உருவானாலும் ஆரம்ப காலத்திலிருந்தே ஒவ்வொரு பொருளின் விதை எஞ்சி வந்திருக்கிறது. ஆனால் அறிவின் அடிப்படையில் பார்க்கும்போது ஆரம்பத்திலிருந்து உலகத்தில் ஏற்பட்டு வந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான கடுமைகள், விபத்துகளினால் எப்போதாவது கடும் பஞ்சத்தின்போது மனிதனின் உணவாக இருக்கின்ற தானியம் முற்றிலும் இல்லாமலும் போயிருப்பது சாத்தியமாகி இருக்க வேண்டும்;

இன்னும் கூறுவதென்றால் அது கட்டாயமானதாகி இருக்க வேண்டும். அல்லது ஏதாவது தானியத்தின் வகை இல்லாமற்போயிருக்க வேண்டும். அல்லது கடுமையான பேரிடரின்போது மனிதனின் அடையாளம் ஒருபோதும் எஞ்சியில்லாமல் போயிருக்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது உயிரினங்களின் வகைகள் இல்லாமல்

போயிருக்க வேண்டும். அல்லது சில நேரத்தில் சூரியன், சந்திரன் என்னும் இயந்திரம் சீர்குலைந்து போயிருக்க வேண்டும். அல்லது உலகின் அமைப்பை சீர்செய்வதற்கு அவசியமான எண்ணற்ற பொருள்களால் இன்னொரு பொருளின் இருப்புக்கு இடையூறு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கோடிக்கணக்கான பொருள்கள் ஒன்றுடன் ஒன்று கலக்காமலும் குழப்பத்திற்கு உள்ளாகாமலும் சீராக இருப்பது அவற்றிற்கு ஒருபோதும் ஆபத்து ஏற்படாமல் இருப்பதும் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும்.

எனவே எந்த பொருள்கள் கண்டிப்பாக இருக்க வேண்டுமோ கண்டிப்பாக நிலைபெற்றிருக்க வேண்டுமோ எப்போதாவது

சீர்குலைந்துபோவது அவை நிலைத்திருப்பதை விட அதிகமாக சாத்தியக்கூறைக் கொண்டதாகும். அவற்றிற்கு ஒருபோதும் வீழ்ச்சி ஏற்படாமலிருப்பதும் உறுதியான வரிசைக்கிரமத்திலும், உயர்வான வரிசைக்கிரமத்திலும் அழகிய முறையில் அவற்றின் இருப்பும் நிலைபெற்றிருத்தலும் காணப்படுவதும் உலகத்தின் கோடிக்கணக்கான தேவைகளில் எதுவும் இல்லாமல் போய்விடாதிருப்பதும் அவை அனைத்திற்கும் ஓர் உயிரூட்டுபவன், பாதுகாப்பவன், நிலைபெறச் செய்பவன் இருக்கின்றான் என்பதற்கு தெளிவான அடையாளமாகும்.

அவன் எல்லா முழுமையான பண்புகளையும் அதாவது திட்டம் தீட்டுபவன், ஞானம் நிறைந்தவன், அருளாளன், மேன்மேலும் கருணை காட்டுபவன், தன் நிலையில் ஆதியும் அந்தமும் இல்லாதவன், எல்லா நஷ்டத்திலிருந்தும் தூயவன் ஆவான். அவனுக்கு ஒருபோதும் மரணமோ மாய்ந்து போவதோ ஏற்படுவதில்லை. இன்னும் கூறுவதென்றால், மரணத்திற்கு ஒப்பாக இருக்கின்ற சிற்றுறக்கம், தூக்கம் ஆகியவற்றிலிருந்தும் அவன் தூயவன் ஆவான். எனவே அவன்தான் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவன். அவன் இந்த சாத்தியமான உலகத்திற்கு முழுமையான முறையில் ஞானம் நிறைந்த, பொருத்தமான இருப்பை வழங்கினான். இல்லாமையை விட இருப்புக்கு முன்னுரிமையை வழங்கினான்.

மேலும் அவனே தனது கமாலிய்யத், காலிகிய்யத், ருபூபிய்யத், கய்யூமிய்யத் ஆகியவற்றின் காரணமாக வணக்கத்திற்கு உரியவன்.

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ
لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ

என்ற வசனத்திற்கு இதுவரை மொழியாக்கம் வந்து விட்டது. *(திருக்குர் ஆன் 2: 256)*

**இப்போது இந்த வசனத்தில் எவ்வளவு சொற்செறிவுடனும், நுட்பமாகவும், நுணுக்கமாகவும், ஞானத்துடனும் உலகத்தைப் படைத்தவனின் இருப்புக்கு சான்று கூறப்பட்டுள்ளது என்பதை நீதிக் கண் கொண்டு பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு கொஞ்ச சொற்களில் அதிகமான பொருள்களையும், நுட்பமான ஞானங்களையும் நிரப்பி விட்டான்.**

மேலும், مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ *(திருக்குர்ஆன் 2:256)* என்பதற்கு முழுமையான பண்புகளைக் கொண்ட படைப்பாளன் என்பதை உறுதியான சான்றின் மூலமாக நிரூபித்துக் காட்டி விட்டான். அவனுடைய முழுமை மற்றும் வியாபித்திருத்தல் ஆகியவற்றை எடுத்துரைப்பதற்கு நிகராக எந்தவொரு தத்துவ ஞானியும் இன்று வரை எந்த சொற்பொழிவையும் ஆற்றியதில்லை.

மாறாக, குறைந்த புரியும் திறன் கொண்ட ஞானிகள் ஆன்மாக்களையும் உடல்களையும் அழியக் கூடியவையாகவே கருதவில்லை. உண்மையான வாழ்வும், உண்மையான இருப்பும், உண்மையான நிலைபெற்றிருத்தலும் இறைவனுக்கு மட்டுமே ஒப்புக்கொள்ளப்பட்டதாகும் என்ற நுட்பமான இரகசியத்தை அறியாதிருந்தனர்.

இந்த நுட்பமான ஞானம் இந்த வசனத்திலிருந்தே மனிதனுக்கு கிடைக்கின்றது. அதில் இறைவன், உண்மையான முறையில் வாழ்க்கை, வாழ்க்கையின் எஞ்சியிருத்தல் எல்லா முழுமையான பண்புகளை ஒருங்கே கொண்டவனாகிய அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும் என்று கூறுகிறான்.

அவனையன்றி யாருக்கும் உண்மையான இருப்பும், உண்மையான நிலைபெறுதலும் இல்லை. மேலும் இந்த விஷயத்தையே உலகத்தைப் படைத்தவனின் தேவைக்கு சான்றாக எடுத்து வைத்து இவ்வாறு கூறுகிறான்:

لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ

*(திருக்குர்ஆன் 2:256)*

அதாவது உலகத்திற்கு உண்மையான வாழ்வு இல்லை; உண்மையான நிரந்தரத்தன்மையும் இல்லை. அப்படி இருக்கும்போது அதற்கு ஒரு காரணகர்த்தா தேவைப்படுகிறான். அவன் மூலமாக வாழ்வும் நிலைபெற்றலும் கிடைக்க வேண்டும். மேலும் காரணகர்த்தா முழுமையான பண்புகளை கொண்டவனாகவும் தன் எண்ணத்திற்கேற்ப திட்டம் தீட்டக் கூடியவனாகவும், ஞானம் கொண்டவனாகவும், மறைவானவற்றை அறிபவனாகவும் இருக்க வேண்டும். அவனே அல்லாஹ் ஆவான்.

ஏனெனில் அல்லாஹ் என்பவன் திருக்குர்ஆனின் சொல் வழக்கில் நிறைவான முழுமைத்தன்மைகளை ஒருங்கே கொண்டவன் ஆவான். இந்தக் காரணத்தினாலேயே திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் பெயர் முழுமையான பண்புகளை ஒருங்கே கொண்டவன் எனக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் ரப்புல் ஆலமீன் ஆவான்; ரஹ்மான் ஆவான்; ரஹீம் ஆவான்; எண்ணத்திற்கேற்ப திட்டம் தீட்டுபவன் ஆவான்; ஞானம் மிக்கவன் ஆவான்; மறைவானவற்றை அறிபவன் ஆவான் ஆற்றல் மிக்கவன் ஆவான்; ஆதியும் அந்தமும் இல்லாதவன் ஆவான் ஆகியவை. ஆக, அல்லாஹ் எல்லா பண்புகளையும் ஒருங்கே கொண்டவன் என்ற இது திருக்குர்ஆனின் ஒரு மரபுச் சொல்லாகி விட்டது. இந்த

வகையிலேயே இந்த வசனத்தின் துவக்கத்திலும் அல்லாஹ் என்ற பெயரை கொண்டு வந்துள்ளான்.

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَیُّ الْقَیُّوْمُ ۚ

*(திருக்குர்ஆன் 2:256)*

அதாவது சுயமாகவே நிலைபெற்றிராத இந்த உலகத்தை நிலைநிறுத்துபவன் எல்லா முழுமைகளையும் ஒருங்கே கொண்டவன் ஆவான்.

**இந்த உலகம் எத்தகைய உறுதியான வரிசைக்கிரமத்திலும், முழுமையான சீரமைப்பிலும் காணப்படுகிறதோ, தொகுக்கப்பட்டுள்ளதோ அதைப் பற்றி அந்த பொருள்களிலிருந்தே சில பொருள்கள், சிலவற்றின் இருப்பிற்குக் காரணிகளாக ஆக முடியும் எனக் கருதுவது அபத்தமானதாகும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.**

**மாறாக, முழுக்க முழுக்க ஞானத்தால் நிரம்பியிருக்கின்ற இந்த ஞானத்தின் வேலைக்கு ஒரு படைப்பாளனின் தேவை இருக்கிறது. அவன் சுயமாக எண்ணத்திற்கேற்ப திட்டம் வகுப்பவனும், ஞானம் மிக்கவனும், மிக்க அறிந்தவனும், கருணை காட்டுபவனும், அழிவில்லாதவனும், முழுமையான எல்லா பண்புகளையும் ஒருங்கே கொண்டவனும் ஆக இருக்க வேண்டும். எனவே அவனே அல்லாஹ் ஆவான்.**

அவனுக்கு சுயமாக தன்னிடத்தில் நிறைவான முழுமைத்தன்மை இருக்கிறது. உலகைப் படைத்தவனின் இருப்பு பற்றி நிரூபித்த பிறகு உண்மையை தேடுபவருக்கு அந்த படைப்பாளன் எல்லாவிதமான இணையிலிருந்தும் தூயவன் என்பதை புரிய வைப்பது அவசியமாக இருந்தது.

எனவே இதன் பக்கம் சுட்டிக்காட்டியவாறு,

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ

எனக் கூறியுள்ளான். எனவே **ஒரு வரி கூட இல்லாத மிகக் குறைந்த இந்த சொற்றொடரைப் பார்க்க வேண்டும்.** எந்த அளவுக்கு நுட்பமாகவும் அழகாகவும் எல்லாவிதமான இணையிலிருந்தும் படைப்பாளனான இறைவனை தூய்மையானவனாக குறிப்பிட்டிருக்கிறான்!

இதன் விளக்கம் என்னவென்றால், **ஷிர்க் (இறைவனுக்கு இணை வைத்தல்) என்பது அறிவின் அடிப்படையில் நான்கு வகைப்படும்.** சில நேரத்தில் ஷிர்க் என்பது **எண்ணிக்கையில்** ஏற்படுகிறது; சில நேரத்தில் **அந்தஸ்தில்** ஏற்படுகிறது; சில நேரத்தில் **உறவில்** ஏற்படுகிறது; சில நேரத்தில் **செயல் மற்றும் தாக்கத்தை உருவாக்குவதில்** ஏற்படுகிறது. **எனவே இந்த சூராவில் இந்த நான்கு விதமான ஷிர்க்கிலிருந்து இறைவன் தூயவன் எனக் கூறியிருக்கிறான்.**

அவன் தனது எண்ணிக்கையில் ஒருவன் ஆவான்; இரண்டோ மூன்றோ அல்ல என்பதை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறான். அவன் *ஸமது* ஆவான். அதாவது அந்தஸ்து மற்றும் தேவைகளில் தனித்தவனும் ஏகனும் ஆவான். மேலும் அவனைத் தவிர மற்றெல்லாப் பொருள்களும் இருப்பைக் கொண்டிருப்பவையும் அழியக் கூடியவையும் ஆகும். அவை அவன் பக்கம் எல்லா நொடிப்பொழுதும் தேவையுடையவையாக இருக்கின்றன.

மேலும் அவன், لَمْ يَلِدْ ஆவான்.

அதாவது மகன் இருப்பதன் காரணத்தால் அவனுக்கு யாராவது இணையாகுவதற்கு அவனுக்கு எந்த மகனுமில்லை.

மேலும் அவன், وَلَمْ يُوْلَدْ ஆவான். அதாவது, தந்தை இருப்பதன் காரணத்தால் அவனுக்கு யாராவது இணையாகுவதற்கு அவனுக்கு எந்தத் தந்தையும் இல்லை.

மேலும் அவன், وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا ஆவான். அதாவது செயலின் அடிப்படையில் அவனுக்கு நிகராக இருப்பதற்கு அவனது பணிகளில் அவனுக்கு நிகராக செயல்படுபவன் எவனுமில்லை.

எனவே இவ்விதமாக இறைவன் நான்கு வகையான ஷிர்க்கிலிருந்தும் தூயவன்; பரிசுத்தமானவன்; தனித்தவன்; இணையில்லாதவன் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறான். இதற்குப் பிறகு அவன் தனித்தவன்; இணையில்லாதவன் என்பதற்கு ஓர் அறிவுப்பூர்வமான சான்றை விளக்கியவாறு இவ்வாறு கூறுகிறான்:

لَوْ كَانَ فِيْهِمَآ اٰلِهَةٌ اِلَّا اللّٰهُ لَفَسَدَتَا ۚ

*(திருக்குர்ஆன் 21:23)*

وَّمَا كَانَ مَعَهٗ مِنْ اِلٰهٍ

*(திரு.க்குர்ஆன் 23:92)*

அதாவது முழுமையான எல்லா பண்புகளையும் ஒருங்கே கொண்டவனைத் தவிர வேறு ஓர் இறைவன் இருந்தால் வானம் பூமி ஆகிய இரண்டும் சீர்குலைந்து விடும். ஏனெனில் கடவுளர்களின் அந்த கூட்டம் சில நேரத்தில் ஒருவர் மற்றவருக்கு எதிராக வேலை செய்வர். எனவே இந்த பிளவு மற்றும் கருத்து வேறுபாட்டினால் உலகில் குழப்பத்திற்கான வழி உருவாகும். மேலும் தனித்தனி படைப்பாளன் இருந்தால் ஒவ்வொருவனும் தனது படைப்பினங்களின் நலனையே

நாடுவான். அவர்களின் சொகுசுக்காக மற்றவர்களை நாசமாக்குவதை நியாயமானதாகக் கொள்வான். எனவே இதுவும் உலகம் குழப்பத்திற்குள்ளாவதற்குக் காரணமாக அமையும்.

எனவே இதுவரை **காரணச் சான்றின் மூலமாக** இறைவன் தனித்தவன்; இணையில்லாதவன் என்பதை நிரூபித்திருக்கிறான்.

பிறகு இறைவன் தனித்தவனும் இணையில்லாதவனும் ஆவான் என்பதற்கு **புறச் சான்றைக்** குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறான்:

قُلِ ادْعُوا الَّذِيْنَ زَعَمْتُمْ مِّنْ دُوْنِهٖ فَلَا
يَمْلِكُوْنَ كَشْفَ الضُّرِّ عَنْكُمْ وَلَا تَحْوِيْلًا

*(திருக்குர்ஆன் 17:57)*

அதாவது, ஏக இறைவனை மறுப்பவர்களுக்கும் இணைவைப்பவர்களுக்கும் நீர் கூறுவீராக: இறைவனின் செயலில் வேறு மற்றவர்களும் இணையாக இருக்கின்றார்கள் என்றால் அல்லது காரணிகள் இருப்பது மட்டுமே போதுமானதாக இருக்குமென்றால் இஸ்லாத்தின் உண்மையான சான்றுகள், அதன் கம்பீரம், ஆற்றல் ஆகியவற்றிற்கு எதிரில் நடுங்கிக்கொண்டிருகின்ற நீங்கள் உங்கள் இணைகளை உதவிக்காக அழையுங்கள். அவர்கள் ஒருபோதும் உங்கள் கஷ்டங்களை நீக்க மாட்டார்கள் என்றும் உங்கள் தலையிலிருந்து சோதனையை அகற்ற மாட்டார்கள் என்றும் நினைவில் கொள்ளுங்கள்.

தூதரே! இந்த இணைவைப்பவர்களுக்குக் கூறுவீராக: நீங்கள் வணங்குகின்ற உங்கள் இணைகளை எனக்கு எதிரில்

அழையுங்கள். என்னை வெற்றி கொள்ள வைக்க முடிந்த எல்லா திட்டங்களையும் செய்யுங்கள். எனக்கு எந்தக் காலக்கெடுவும் கொடுக்காதீர்கள். மேலும் திருக்குர்ஆனை இறக்கிய அந்த இறைவனே எனது பாதுகாவலனும், உதவியாளனும் வேலைகளை செய்ய வைக்கும் ஆற்றல் கொண்டவனும் ஆவான். மேலும் அவன் தனது உண்மையான மற்றும் நல்லடியார்களான தூதர்களையும் தானே பாதுகாக்கின்றான். ஆனால் **நீங்கள் உங்கள் உதவிக்காக அழைப்பவர்கள் உங்களுக்கும் உதவி செய்ய இயலாது; அவர்கள் தமக்கும் உதவி செய்ய இயலாது.**

இதற்குப் பிறகு எல்லா நஷ்டத்திலிருந்தும் குறைகளிலிருந்தும் இறைவன் தூய்மையானவன் என்பதை இயற்கைச் சட்டத்தின் அடிப்படையில் நிரூபித்திருக்கிறான். மேலும் இவ்வாறு கூறுகிறான்:

تُسَبِّحُ لَهُ السَّمٰوٰتُ السَّبْعُ وَالْاَرْضُ وَمَنْ فِيْهِنَّ

*(திருக்குர்ஆன் 17:45)*

அதாவது, ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவையும் இறைவனின் தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவன் தூய்மையை எடுத்துரைக்காத எந்தப் பொருளும் இல்லை. ஆனால் அவை தூய்மையை எடுத்துரைப்பதை நீங்கள் அறிவதில்லை. அதாவது வானங்கள் பூமி ஆகியவற்றை கவனமாகப் பார்ப்பதால் இறைவன் முழுமையானவனாக இருப்பதும், தூயவனாக இருப்பதும், ஆண் மக்கள் மற்றும் இணைகள் ஆகியவற்றிலிருந்து தூயவனாக இருப்பதும் நிரூபணமாகின்றது. ஆனால் புரியும் திறன் கொண்டவர்களுக்குத்தான். இதற்குப் பிறகு

படைக்கப்பட்டவற்றை வணங்குபவர்களை குற்றவாளிகளாக்கி அவர்கள் தவற்றில் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறான்.

மேலும் இவ்வாறு கூறுகிறான்:

قَالُوا اتَّخَذَ اللَّهُ وَلَدًا سُبْحَانَهُ هُوَ الْغَنِيُّ

அதாவது, இறைவன் மகனைக் கொண்டிருக்கின்றான் என சிலர் கூறுகின்றனர். ஆனால் மகன் எனும் தேவையைக் கொண்டிருப்பது ஒரு குறைபாடாகும். மேலும் இறைவன் எல்லா குறைபாடுகளிலிருந்தும் தூயவன் ஆவான். மேலும் அவன் தன்னிறைவு பெற்றவன் ஆவான். அவனுக்கு எவருடைய தேவையுமில்லை. வானம், பூமியில் உள்ள அனைத்தும் அவனுக்குரியதேயாகும். உங்களிடம் சான்று ஏதும் இல்லாத ஒன்றை அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிக் கூறுகின்றீர்களா? *(திருக்குர்ஆன் 10:69 காண்க).*

**இறைவனுக்கு மகன்களுக்கான என்ன தேவை வந்து விட்டது? அவன் முழுமையானவன் ஆவான்.** மேலும் இறைமையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவனே தனியாக போதுமானவன் ஆவான். வேறு எந்த திட்டத்தின் தேவையுமில்லை.

அல்லாஹ் பெண் மக்களைக் கொண்டிருப்பதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் அவன் இந்த எல்லா வகையான குறைபாடுகளிலிருந்தும் தூயவன் ஆவான். உங்களுக்கு ஆண் மக்களும் அவனுக்கு பெண் மக்களுமா? இது சரியான பங்கீடு அல்லவே? மக்களே! உங்களையும் உங்கள் முன்னோரையும் படைத்த ஏகனும் இணையில்லாதவனுமாகிய அந்த இறைவனை நீங்கள் வணங்குங்கள். பூமியை விரிப்பாகவும்

வானத்தை கூரையாகவும் ஆக்கிய அந்த ஆற்றல் மிக்க இறைவனுக்கு நீங்கள் அஞ்ச வேண்டும். அவன் வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி பழங்களிலிருந்து உங்களுக்காக பலவிதமான உணவை உருவாக்கினான்.

எனவே நீங்கள் அறிந்து கொண்டே உங்களுடைய பயனுக்காக படைக்கப்பட்டுள்ள பொருள்களை இறைவனுக்கு இணையாக்காதீர்கள். இறைவன் ஒருவன் ஆவான். அவனுக்கு எந்த இணையுமில்லை. அவனே வானத்திலும் இறைவன் ஆவான்; அவனே பூமியிலும் இறைவன் ஆவான். அவனே முதலும் ஆவான்; அவனே இறுதியும் ஆவான்.

அவனே வெளிப்படையானவனும் ஆவான்; அவனே மறைவானவனும் ஆவான். அவனது எல்லையை கண்களால் அறிய முடியாது. ஆனால் அவனுக்கு கண்களின் ஆழம் வரை ஞானம் இருக்கிறது. அவன் அனைத்தையும் படைத்தவன் ஆவான். அவனைப் போன்றது எதுவுமில்லை.

அவன் எல்லா பொருள்களையும் ஒரு குறிப்பிட்ட கணிப்பிற்குள் வரையறுக்கப்பட்டவையாகவும், எல்லைக்குட்பட்டவையாகவும் படைத்திருப்பது அவன் படைத்தவன் என்பதற்கு தெளிவான சான்றாகும். இதன் மூலம் அவன் சூழ்ந்திருக்கின்றவனும் எல்லைக்குட்படச் செய்பவனும் ஆவான் என்பது நிரூபணமாகின்றது. அவனுக்கு எல்லா புகழ்களும் உரியன என்பது நிரூபணமாகின்றன. உலகத்திலும் மறுமையிலும் அவனே உண்மையான அருட்கொடை வழங்குபவன். மேலும் அவனுடைய கையிலேயே எல்லா கட்டளையும் இருக்கிறது. மேலும் அவனே எல்லா பொருள்களின் திரும்புமிடமும் ஆவான். இறைவன் தான் நாடுபவருக்கு அனைத்து பாவங்களையும் மன்னித்து விடுவான்;

ஆனால் இணை வைப்பதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான்.

எனவே இறைவனை சந்திக்க விரும்புபவர் எந்தவிதமான குழப்பமும் இல்லாத செயலை மேற்கொள்ள வேண்டியதும், இறைவணக்கத்தில் எவரையும் இணையாக்காதிருப்பதும் கட்டாயமாகும். நீங்கள் இறைவனுக்கு வேறு எதனையும் இணையாக்காதீர்கள். இறைவனுக்கு இணை வைப்பது கடுமையான அநீதியாகும். நீங்கள் இறைவனைத் தவிர வேறு எவரிடமும் வேண்டாதீர்கள். அனைத்தும் அழிந்து போய் விடும். அவன் மட்டுமே எஞ்சியிருப்பான். அவனுடைய கையிலேயே ஆட்சி இருக்கிறது. அவனே நீங்கள் திரும்பும் இடமாவான்.

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் 4 பகுதிகள். ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 515-521 அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு எண்:3)*

இறைவனுடைய இயற்கைச் சட்டமும் இயல்பான சட்டமும் மனிதனின் அடிப்படைக் காலகட்டத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. அது, இறைவனுடன் உறுதியான தொடர்பு ஏற்படுவதற்கு அவனுடைய *இஹ்ஸான்* எனும் பேரருளிலிருந்தும் அழகிலிருந்தும் பயன் பெறுவது அவசியமாகும் என்பதை நமக்குக் கற்றுத் தருகின்றது. நாம் இப்போது எழுதியிருப்பதைப் போன்று இஹ்ஸான் எனும் பேரருள் என்பதன் கருத்து ஒரு மனிதன் தன்னைப் பற்றி தானாகவே கண்ட இறைவனின் நற்பண்புகளின் முன்மாதிரிகளாகும். உதாரணமாக, ஒன்றுமற்ற, ஆற்றலில்லாத, பலவீனமான அநாதை போன்ற நிலையில் இருக்கும்போது இறைவன் அவருக்கு காப்பாளனாக இருந்திருக்க வேண்டும். மேலும் தேவைகள், அத்தியாவசியங்களின் நேரத்தில் இறைவன் தானாவே அவரது தேவைகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். மேலும்

கடுமையான, இடுப்பை முறிக்கக் கூடிய துக்கங்களின்போது இறைவனே அவருக்கு உதவி செய்திருக்க வேண்டும். மேலும் இறைவனிடம் வேண்டிய நேரத்தில் எந்த வழிகாட்டுபவரின் மூலமாகவுமின்றி இறைவன் தானாகவே அவருக்கு வழிகாட்டி இருக்க வேண்டும். மேலும் *ஹுஸ்ன்* என்பதன் கருத்தும் *இஹ்ஸான்* என்ற வகையிலும் காணப்படுகின்ற இறைவனின் அதே அழகிய பண்புகள்தான்.

உதாரணமாக, இறைவனின் முழுமையான ஆற்றல், இறைவனிடம் காணப்படுகின்ற மென்மை, அருமை, படைத்துக் காத்தோம்புதல், கருணை மற்றும் தென்படுகின்ற அவனுடைய பொதுவான ருபூபிய்யத், மனிதனுடைய வசதிக்காக அதிகமாகக் காணப்படுகின்ற அவனுடைய பொதுவான அருள்கள், மனிதன் நபிமார்களின் மூலமாகப் பெறும் இறைவனைப் பற்றிய ஞானம் அதன் மூலமாக அவன் மரணத்திலிருந்தும் அழிவிலிருந்தும் தப்பிக்கின்றான்.

நிம்மதியிழந்தவர்களின், துன்பத்தில் இருப்பவர்களின் துஆக்களை ஒப்புக்கொள்ளும் அவனது பண்பு அவன் பக்கம் குனிபவர்களுக்கு முன் அவன் அவர்களை விட அதிகமாக குனிகின்றான் என்ற அவனது சிறப்புத்தன்மை ஆகிய இவை அனைத்து பண்புகளும் இறைவனின் ஹுஸ்ன் (அழகு) என்பதில் அடங்கும்.

மற்றவை ஹுஸ்ன் என்பதில் அடங்கும் என்றாலும் பிறகு இந்தப் பண்புகளிலிருந்தே ஒருவர் குறிப்பாக அருளைப் பெற்றும் விடுகிறார் என்றால் அதைப் பற்றி *இஹ்ஸான்* என்றும் கூறப்படுகிறது.

உண்மையில் இறைவனின் *ஹுஸ்ன்* (அழகு), *ஜமால்* (பொலிவு) ஆகிய இறைவனின் இந்தப் பண்பை எவர் *இஹ்ஸான்*

(பேரருள்) என்ற வகையிலும் கண்டு விடுகிறாரோ அவரது ஈமான் மிகவும் வலிமை கொண்டதாகி விடுகிறது. மேலும் இரும்பு காந்தத்தின் பக்கம் ஈர்க்கப்படுவதைப் போன்று அவர் இறைவன் பக்கம் ஈர்க்கப்படுகிறார். இறைவனுடன் அவருக்கு இருக்கும் அன்பு மிகவும் அதிகமாகி விடுகிறது. மேலும் இறைவன் மீது அவருக்கு இருக்கும் நம்பிக்கை மிகவும் வலுவாகி விடுகிறது. ஏனெனில் அவருடைய எல்லா நன்மைகளும் இறைவனிடத்தில் இருப்பதை அவர் கண்டு விடுகிறார்.

எனவே இறைவன் மீதிருக்கும் அவரது நம்பிக்கை மிகவும் உறுதியாகி விடுகிறது. எந்தவொரு செயற்கையாகவோ பகட்டாகவோ இல்லாமல் அவர் இறைவன் பக்கம் இயல்பாக குனிந்தே இருக்கிறார். மேலும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவர் தன்னை இறைவனிடமிருந்து உதவியைப் பெறுவதற்கான தேவை உடையவராகக் காண்கிறார். அவனுடைய அந்த முழுமையான பண்புகளைப் பற்றிய சிந்தனையின் மூலமாக தாம் கண்டிப்பாக வெற்றி பெறுவேன் என உறுதி கொள்கிறார்.

ஏனெனில் இறைவனின் அருள், கருணை, வாரி வழங்கும் பண்பு ஆகியவற்றின் பல உதாரணங்கள் அவருடைய கண்களால் கண்டவையாக இருக்கின்றன. எனவே அவரது துஆக்கள் ஆற்றல் மற்றும் உறுதித்தன்மை எனும் நீரூற்றிலிருந்து வெளியாகின்றன. மேலும் அவரது தைரியம் மிகவும் உறுதியாகவும் வலிமையாகவும் இருக்கிறது. இறுதியில் அவர் அல்லாஹ்வின் அருள்களையும், ஒளிகளையும் கண்டதனால் உறுதியின் ஒளி அவருக்குள் மிக வலுவாக நுழைகின்றது. மேலும் அவருடைய இருப்பு முற்றிலும் எரிந்து

விடுகிறது. இறைவனின் வல்லமை மற்றும் மகத்துவத்தின் அதீத சிந்தனையினால் அவருடைய உள்ளம் இறையில்லமாக மாறிவிடுகிறது. மனிதனின் ஆன்மா அவன் உயிருடன் இருக்கும் நிலையில் அவனிடமிருந்து ஒருபோதும் பிரியாததைப் போன்று ஆற்றல் மிக்க கம்பீரமான இறைவனிடமிருந்து அவருக்குள் நுழைந்த உறுதித்தன்மையும் அவரிடமிருந்து ஒருபோதும் பிரிவதில்லை.

எப்போதும் தூய ஆன்மா அவருக்குள் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. மேலும் அந்த தூய ஆன்மாவின் போதனையினாலேயே அவர் பேசுகிறர்; அவரிடமிருந்து உண்மைகளும், இறைஞானங்களும் வெளிப்படுகின்றன. மேலும் அவருடைய உள்ளத்தில் கண்ணியமிக்க, ஆற்றல்மிக்க (இறை)வனின் மகத்துவம் எல்லா நேரமும் நிலைத்திருக்கிறது.

மேலும் அவருக்குள் நம்பிக்கை, உண்மை, அன்பு ஆகியவற்றின் இன்பம் எந்நேரமும் தண்ணீரைப் போன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அவருடைய ஒவ்வோர் உறுப்பும் நீர்ப்பாய்ச்சப்பட்டதாகத் தென்படுகிறது. கண்களில் ஒரு தனிப்பட்ட நீர்ப்பாய்ச்சுதல் தென்படுகிறது.

அந்த நீர்ப்பாய்ச்சுதலின் ஒரு தனிப்பட்ட ஒளி நெற்றியில் அலைபாய்வதாகத் தென்படுகிறது. மேலும் முகத்தில் இறையன்பின் ஒரு மழை பொழிவதாக உணரப்படுகிறது. மேலும் அந்த ஒளியின் நீர்ப்பாய்ச்சுதலினால் நாவும் முழுமையான பங்கைப் பெறுகிறது.

இவ்வாறே வசந்தகால மேகத்தின் மழை பொழிந்த பிறகு வசந்த காலத்தில் மரங்களின் கிளைகளிலும், இலைகளிலும், மலர்களிலும், பழங்களிலும் உள்ளத்தை ஈர்க்கக் கூடிய ஒரு பசுமை உணரப்படுவது போன்று எல்லா உறுப்புகளிலும் ஒரு

பசுமை தென்படுகிறது. ஆனால் எவரிடம் இந்த ஆன்மா இறங்கவில்லையோ அவருக்கு இந்த பசுமை கிடைக்கவில்லை. அவருடைய எல்லா உடலும் மரணித்தது போன்று இருக்கிறது. எழுதுகோலால் விளக்க முடியாத இந்த நீர்ப்பாய்ச்சுதல், செழுமை, பசுமை ஆகியவை உறுதித்தன்மை என்ற ஒளியின் நீரூற்று பசுமையை வழங்காத அந்த மரணித்துப் போன உள்ளத்திற்குக் கிடைக்க முடியாது.

இன்னும் கூறுவதென்றால் அதிலிருந்து ஒருவிதமான கெட்டுப்போன நாற்றம் வருகிறது. ஆனால் எவருக்கு இந்த ஒளி வழங்கப்பட்டுள்ளதோ எவரிடமிருந்து இந்த நீரூற்று பீறிட்டெழுந்ததோ அவருடைய அடையாளங்களில் ஓர் அடையாளம், ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு செயலிலும் இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெற வேண்டுமென்று அவருடைய உள்ளம் எப்போதும் விரும்புகிறது. மேலும் இதிலேயே அவருக்கு இன்பம் இருக்கிறது. மேலும் இதிலேயே அவருக்கு சுகம் இருக்கிறது. அவர் இது இல்லாமல் வாழவே முடியாது.

*(இஸ்மத்தே அன்பியா அலைஹிஸ் ஸலாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 668-671. கணினிப் பதிப்பு)*

முழுமையான புகழ் இரண்டு வகையான மேன்மைகளுக்காக இருக்கின்றது. ஒன்று, முழுமையான அழகு. இன்னொன்று முழுமையான பேரருள். ஒருவரிடம் இரண்டு மேன்மைகளும் ஒன்று சேர்ந்திருந்தால் பின்னர் அவருக்காக உள்ளம் அர்ப்பணமாகிறது; தன்னை மாய்த்துக் கொள்கிறது. மேலும் இறைவனுடைய இரண்டு வகையான மேன்மைகளை உண்மையை நாடுபவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதே திருக்குர்ஆனின் மிகப் பெரிய நோக்கமாகும்.

அதனால் மக்கள் நிகரற்ற அந்த இறைவன் பக்கம் ஈர்க்கப்பட வேண்டும் ; ஆன்மாவின் எழுச்சி மற்றும் ஈர்ப்பு ஆகியவற்றால் அவனை வணங்க வேண்டும் என்பதுமாகும். எனவே முதல் சூராவிலேயே எந்த இறைவன் பக்கம் திருக்குர்ஆன் அழைக்கின்றதோ அவன் எத்தகைய மேன்மையை தன்னிடத்தில் கொண்டிருக்கிறான் என்ற நுட்பமான விஷயத்தை படம்பிடித்துக் காட்ட விரும்பியிருக்கிறான்.

எனவே இந்த நோக்கத்திற்காகவே இந்த சூராவை اَلْحَمْدُ لِلّٰهِ (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது) என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் பொருள், அல்லாஹ் என்ற பெயரைக் கொண்டவனுக்கே எல்லாப் புகழ்களும் உரியனவாகும். மேலும் திருக்குர் ஆனின் சொல் வழக்கின்படி எவனுடைய எல்லா மேன்மைகளும், அழகும், பேரருளும் முழுமையான உச்சத்தை எட்டியுள்ளதோ அவனுடைய பெயர் அல்லாஹ்வாகும்.

மேலும் அவனிடம் எந்த குறையும் இல்லாதிருக்க வேண்டும். முழுமையான எல்லா பண்புகளும் காணப்படும்போதுதான் அல்லாஹ் என்ற பெயர் பொருந்த முடியும் என்ற விஷயத்தைக் குறிப்பிடுவதற்காக திருக்குர்ஆனில் எல்லா பண்புகளுக்கும் உரியவனாக அல்லாஹ் என்ற பெயரையே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே எல்லா விதமான மேன்மைகள் அவனிடம் காணப்படும்போது அவனுடைய அழகும் வெளிப்படையானதாகும். இந்த அழகைப் பொருத்த வகையிலேயே திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் பெயர் நூர் (ஒளி) என்பதாகும்.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ என்று அவன் கூறுகின்றான்.

*(திருக்குர்ஆன் 24: 36)*

அதாவது அல்லாஹ் வானங்கள், பூமியின் ஒளியாவான்; ஒவ்வோர் ஒளியும் அவனுடைய ஒளியின் பிரதிபலிப்பு ஆகும்.

மேலும் பேரருள் என்பதன் மேன்மைகள் அல்லாஹ்விடம் அதிகமாக இருக்கின்றன. அவற்றில் நான்கு அடிப்படையானவை ஆகும்.மேலும் அவற்றின் இயல்பான வரிசையைப் பொருத்தவரை **முதல் மேன்மை**, சூரா ஃபாத்திஹாவில் رَبِّ الْعٰلَمِيْنَ என்ற சொற்றொடரில் குறிப்பிடப்பட்டுள்ளதாகும்.

மேலும் அது என்னவெனில், **இறைவனின் ருபூபிய்யத்.** அதாவது படைத்தலும், அதன் முழுமையான நோக்கம் வரை கொண்டு செல்வதுமாகும். இது எல்லா உலகங்களிலும் தொடர்கின்றது. அதாவது, விண்ணுலகமும், மண்ணுலகமும், உடலளவிலான உலகமும், ஆன்மாக்களின் அளவிலான உலகமும், மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட உலகமும், இன்னொன்றை சார்ந்திராத உலகமும், உயிரினங்களின் உலகமும், தாவரங்களின் உலகமும், உயிரற்ற பொருள்களும் மற்ற எல்லா வகையான உலகமும் அவனுடைய ருபூபிய்யத்திலிருந்து வளர்ந்து வருகின்றன.

எதுவரை என்றால், மனிதனின் மீதும் விந்தாக இருக்கும் நிலையிலிருந்து அல்லது அதற்கும் முன்பிருந்த மரணத்தின் உலகம் வரை மறு வாழ்வின் காலம் வரை ஏற்படும் நிலைமைகள் அனைத்தும் ருபூபிய்யத்தின் நீரூற்றிலிருந்து அருளைப் பெறுகின்றன. எனவே இறைவனின் ருபூபிய்யத் எல்லா வகையான ஆன்மாக்களையும், உடல்களையும்,

உயிரினங்களையும், தாவரங்களையும், உயிரற்ற பொருள்களையும் உள்ளடக்கி இருப்பதனால் அது *'ஃபைஸானே அஅம்'* என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு பொருளும் அவனிடமிருந்து அருளைப் பெறுகிறது.

மேலும் அவன் மூலமாகவே ஒவ்வொரு பொருளும் இருக்கின்றன. ஆயினும் இறைவனின் ருபூபிய்யத் (படைத்து காத்தோம்புதல்) என்ற பண்பு இருக்கின்ற, காணப்படுகின்ற எல்லா பொருள்களையும் படைத்து காத்தோம்புகிறது. ஆனால் அவன் இஹ்ஸான் (பேரருள் புரிபவன்) என்ற வகையில் அவனுடைய அதிகமான பயன் மனிதனுக்குக் கிடைக்கிறது. ஏனெனில் இறைவனின் எல்லா படைப்பினங்களிலிருந்தும் மனிதன் பயன் அடைகின்றான்.

எனவே நமது பயனுக்காக இறைவனின் ஆற்றல்கள் பரந்திருக்கின்றன. மேலும் உலகின் பலவிதமான காரணிகளை வெளிக்கொணரலாம் என்று மனிதனின் நம்பிக்கை அதிகமாக வேண்டும்; உறுதி கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுடைய இறைவன் ரப்புல் ஆலமீன் ஆவான் என மனிதனுக்கு நினைவூட்டப்பட்டுள்ளது.

பேரருளின் இரண்டாவது படித்தரமாக விளங்குகின்ற இறைவனுடைய **இரண்டாவது மேன்மை** - அதை *ஃபைஸானே ஆம்* (பொதுவான அருள்) என்ற பெயரால் அழைக்கலாம் - அது **ரஹ்மானிய்யத்** ஆகும். அதை சூரா ஃபாத்திஹாவில் அர்ரஹ்மான் என்ற சொற்றொடரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆனின் சொல்வழக்கின்படி இறைவனுடைய பெயர் ரஹ்மான் என இருப்பதற்குக் காரணம், இறைவன் மனிதனோடு சேர்த்து எல்லா உயிரினங்களையும் அவற்றிற்குப் பொருத்தமான வடிவத்திலும், பண்பிலும் படைத்திருக்கிறான்.

அதாவது அதற்கு எந்த வகையான வாழ்வு திட்டமிடப்பட்டுள்ளதோ அந்த வாழ்விற்குப் பொருத்தமான என்னென்ன ஆற்றல்கள், வல்லமைகள் தேவைப்பட்டனவோ அல்லது எந்த வகையான உடல் அமைப்பும் உடல் உறுப்புகளும் தேவைப்பட்டனவோ அவை அனைத்தையும் அதற்கு வழங்கினான். மேலும் அவை நிலைபெற்றிருப்பதற்கு என்னென்ன பொருள்களின் அவசியம் இருந்ததோ அதை ஏற்படுத்திக் கொடுத்தான்.

மேலும் அது மட்டுமல்லாமல், பறவைகளுக்கு பறவைகளுக்குப் பொருத்தமானவையாகவும், விலங்குகளுக்கு விலங்குகளுக்குப் பொருத்தமானவையாகவும், மனிதனுக்கு மனிதனுக்குப் பொருத்தமானவையாகவும் இருக்கின்ற ஆற்றல்களை வழங்கினான். மேலும் அது மட்டுமன்று; மாறாக, இந்த பொருள்களின் இருப்பிற்கு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தனது ரஹ்மானிய்யத் எனும் பண்பின் காரணமாக வானத்தின், பூமியின் கோளங்களை, அவை அந்த பொருள்கள் நிலைத்திருப்பதற்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகப் படைத்தான்.

எனவே இந்த ஆய்விலிருந்து இறைவனின் ரஹ்மானிய்யத்தில் எவருடைய செயலுக்கும் தொடர்பில்லை என்பது நிரூபணமாகின்றது. மாறாக, அது அவனுடைய தனிப்பட்ட அருள் ஆகும். அதற்கான அடித்தளம் இந்தப் பொருள்களின் இருப்புக்கு முன்பே இடப்பட்டுள்ளது. ஆயினும் மனிதனுக்கு இறைவனின் ரஹ்மானிய்யத்திலிருந்து எல்லாவற்றையும் விட அதிகமாக பங்கு இருக்கிறது. ஏனெனில் அவனுடைய வெற்றிக்காக ஒவ்வொரு பொருளும் தியாகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே உங்களுடைய இறைவன் ரஹ்மான்

ஆவான் என மனிதனுக்கு நினைவூட்டப்பட்டுள்ளது.

பேரருளின் மூன்றாவது படித்தரமாக இருக்கின்ற இறைவனுடைய **மூன்றாவது மேன்மை ரஹீமிய்யத்** ஆகும். அதை சூரா ஃபாத்திஹாவில் அர்ரஹீம் என்ற சொற்றொடரில் கூறப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆனின் சொல்வழக்கின்படி, இறைவன் மக்களின் துஆக்களையும் மன்றாடல்களையும் நற்செயல்களையும் ஏற்றுக் கொண்டு ஆபத்துகள், சோதனைகள் மற்றும் செயல்கள் வீணாகி விடுதல் ஆகியவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகின்றான். இந்த நிலையில் அவன் *'ரஹீம்'* என அழைக்கப்படுகிறான்.

இந்த பேரருள் வேறு சொற்களில் *'ஃபைஸே காஸ்'* (சிறப்பான அருள்) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. மேலும் சிறப்பாக இது சில மனிதருடன் மட்டும் தொடர்புடையது. துஆ, மன்றாடுதல், நற்செயல்கள் ஆகியவற்றிக்கான திறமையை இறைவன் மற்றவற்றிற்கு வழங்கவில்லை. ஆனால் மனிதனுக்கு வழங்கி இருக்கிறான். மனிதன் பேசக் கூடிய உயிரினமாவான். அவன் தனது பேச்சின் மூலமாகவும் இறைவனின் அருளைப் பெற முடியும். மற்றவற்றிக்கு பேசும் திறன் வழங்கப்படவில்லை.

எனவே மனிதன் துஆ செய்வது அவனது மனிதத்தன்மையின் ஒரு சிறப்பம்சமாகும்; அது அவனது இயல்பில் வைக்கப்பட்டுள்ளது என்பது இந்த இடத்திலிருந்து தெளிவாகிறது. இறைவனின் *ருபூபிய்யத்* (படைத்து வளர்த்து காத்தோம்புதல்) என்ற பண்பிலிருந்தும், *ரஹ்மானிய்யத்* (சுயமாக அருள்பாலித்தல்) என்ற பண்பிலிருந்தும் அருள் கிடைப்பதைப் போன்று *ரஹீமிய்யத்* (ஒரு செயலுக்கு பிரதிபலனாக வழங்குதல்) என்பதிலிருந்தும் ஓர் அருள்

கிடைக்கிறது.

வித்தியாசம் என்னவென்றால், *ருபூபிய்யத்* மற்றும் *ரஹ்மானிய்யத்* என்ற பண்புகளுக்கு துஆ தேவையில்லை. ஏனெனில் இந்த இரு பண்புகளும் மனிதனுக்கு மட்டும் உரியனவல்ல. அது தனது அருளினால் எல்லா பறவைகளையும், விலங்குகளையும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது.

இன்னும் கூறுவதென்றால், ருபூபிய்யத் என்ற பண்பு எல்லா விலங்குகள், செடி கொடிகள், உயிரற்ற பொருள்கள், பூமி வானத்தின் கோளங்கள் ஆகியவற்றிற்கு அருளை எட்ட வைத்துக் கொண்டிருக்கின்றது. அவனது அருளிலிருந்து எந்தவொரு பொருளும் வெளியில் இல்லை. *ரஹீமிய்யத்* என்ற பண்பு இதற்கு நேர்மாற்றமானதாகும்.

அது மனிதனுக்கென்றுள்ள ஒரு சிறப்புப் பண்பாகும். மனிதனாக இருந்து இந்த பண்பிலிருந்து பயன்பெறவில்லை என்றால் அப்படிப்பட்ட மனிதன் விலங்குகளுக்கு ஒப்பாவான்; இன்னும் கூறுவதென்றால் அவன் உயிரற்ற பொருள்களுக்கு ஒப்பாவான்.

இறைவன் அருளை எட்டவைப்பதற்கான நான்கு பண்புகளை தன்னிடம் கொண்டிருக்கின்றான். மேலும் மனிதனின் துஆவுக்கு தேவைப்படுகின்ற *ரஹீமிய்யத்* பண்பை மனிதனுக்காக மட்டும் சிறப்பாக வைத்திருக்கின்றான். எனவே இதிலிருந்து துஆ செய்வதுடன் தொடர்புடைய ஒருவிதமான அருள் இறைவனிடம் இருக்கிறது என்பது தெரிகிறது. துஆ இல்லாமல் எந்நிலையிலும் அது கிடைக்க முடியாது. இது அல்லாஹ்வின் நடைமுறையாகும்; இறைசட்டமாகும். இதில் முரண்பாடு இருப்பது ஆகுமானதன்று. இதன்

காரணமாகத்தான் நபிமார்கள் (அலைஹிமுஸ் ஸலாம்) தத்தமது உம்மத்திற்காக எப்போதும் துஆக்களை செய்து வந்தனர். தவ்ராத்தைப் பாருங்கள். இஸ்ராயீல் சமுதாயத்தினர் எத்தனை முறை இறைவனை கோபப்படுத்தி, தண்டனைக்கு அருகில் சென்று விட்டனர்.

பிறகு எவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் துஆ, மன்றாடுதல் மற்றும் சஜ்தா ஆகியவற்றால் அந்தத் தண்டனை விலகி விட்டது. ஆனால் நான் அவர்களை நாசமாக்குவேன் என்ற வாக்குறுதி மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தது.

இப்போது இந்த எல்லா சம்பவங்களிலிருந்தும் துஆ வெறும் வீணானதோ, எந்த விதமான அருளும் இறங்காத இறைவணக்கமோ அல்ல எனத் தெரிகிறது. இது இறைவனுக்கு மதிப்பளிக்க வேண்டிய அளவுக்கு மதிப்பளிக்காதவர்களின் எண்ணமாகும். அவர்கள் இறைவனின் சொற்களை ஆழமான பார்வையுடன் பார்ப்பதில்லை; இயற்கை சட்டத்தையும் பார்ப்பதில்லை.

உண்மை என்னவென்றால் துஆவினால் கண்டிப்பாக அருள் இறங்குகிறது; அது நமக்கு ஈடேற்றத்தை வழங்குகிறது. இதன் பெயரே *ரஹீமிய்யத்* என்ற அருளாகும். அதிலிருந்து மனிதன் முன்னேற்றமடைந்து கொண்டே செல்கின்றான். இந்த அருளினாலேயே மனிதன் இறைநேசராகும் அந்தஸ்து வரை சென்றடைகின்றான். இறைவனை கண்களால் கண்டு விட்டது போன்று அவன் மீது உறுதி கொள்கின்றான். பரிந்துரை என்ற விஷயமும் *ரஹீமிய்யத்* என்ற பண்பின் அடிப்படையில் இருக்கிறது. நல்ல மனிதர்கள் தீய மனிதர்களுக்கு பரிந்துரை செய்யட்டும் என இறைவனின் ரஹீமிய்யத் என்ற பண்பே விரும்பியது.

நான்காவது வகையான மேன்மையாக இருக்கின்ற **இறைவனின் நான்காவது பேரருள்** - அதை *ஃபைஸானே அகஸ்* (சிறப்பான அருள்) என்ற பெயரால் அழைக்கலாம் - அது *மாலிக்கிய்யத்தே யவ்மித்தீன்* ஆகும்.

அது சூரா ஃபாத்திஹாவில் *மாலிகி யவ்மித்தீன்* என்ற சொற்றொடரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இதிலும் *ரஹீமிய்யத்* என்ற பண்பிலும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், *ரஹீமிய்யத்தில்* துஆ, இறைவணக்கம் ஆகியவற்றின் மூலமாக வெற்றிக்கான உரிமை நிலைபெறுகிறது. மேலும் *மாலிகி யவ்மித்தீன்* என்ற பண்பின் மூலமாக அந்தக் கனிகள் வழங்கப்படுகின்றன.

இதற்குரிய உதாரணம், ஒரு மனிதன் அரசாங்கத்தின் ஒரு சட்டத்தை மனனம் செய்வதில் உழைத்து, முயற்சி செய்து தேர்வு எழுதி பிறகு அதில் தேர்ச்சி பெறுவதைப் போன்றதாகும். எனவே *ரஹீமிய்யத்தின்* விளைவாக ஒருவர் வெற்றிக்கான உரிமைப் பெற்று விடுவது தேர்ச்சி பெறுவதற்கு ஒப்பானதாகும். பிறகு எதற்காக அவர் தேர்ச்சி பெற்றாரோ அது அல்லது அந்த அந்தஸ்து கிடைத்து விடுவது மனிதன் அருளைப் பெறுவதன் நிலைக்கு ஒப்பானதாகும். அதன் நிழல் மாலிக்கி யவ்மித்தீன் என்ற பண்பிலிருந்து கிடைக்கிறது.

*ரஹீமிய்யத், மாலிகிய்யத்தே யவ்மித்தீன்* ஆகிய இவ்விரண்டு பண்புகளிலும் ரஹீமிய்யத் என்ற அருள் இறைவனின் கருணையிலிருந்து கிடைக்கிறது. மேலும் மாலிகிய்யதே யவ்மித்தீன் இறைவனின் அருளிலிருந்து கிடைக்கிறது. மேலும் மாலிக்கி யவ்மித்தீன் பண்பு பரந்த அளவிலும், முழுமையாகவும் திரும்பிச் செல்லும் அந்த உலகில் தோற்றமளிக்கும். ஆயினும் அந்த உலகின் வட்டத்திற்கேற்ப

இவ்வுலகிலும் நான்கு பண்புகளும் தோற்றமளித்துக் கொண்டிருக்கின்றன.

*(அய்யாமுஸ் ஸுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 247- 251)*

''இறைவன் உலகில் மூன்று விதமான பணியைச் செய்கின்றான்.

1. இறைமை என்ற அடிப்படையில்.
2. நண்பன் என்ற அடிப்படையில்.
3. பகைவன் என்ற அடிப்படையில்.

பொதுவான படைப்பினங்களுடன் நடைபெறும் பணிகள் இறைமை என்ற அடிப்படையில் மட்டும் நடக்கின்றன. மேலும் எந்த பணிகள் அன்பிற்குரியவர்கள் நேசிக்கப்படுபவர்களுக்காக நடக்கின்றனவோ அவை இறைமை என்ற அடிப்படையில் மட்டுமின்றி அவற்றில் நட்பு என்ற நிலை மேலோங்கி இருக்கிறது. இறைவன் அந்த நபருக்கு நட்பு அடிப்படையில் உதவி செய்து கொண்டிருக்கின்றான் என்பது உலகிற்கு தெளிவாகத் தெரிகிறது. மேலும் எந்தப் பணிகள் எதிரிகளுக்காக நடக்கின்றனவோ அவற்றுடன் துன்பம் தரும் ஒரு தண்டனை இருக்கிறது.

மேலும் எத்தகைய அடையாளம் வெளிப்படுகிறதென்றால் அவற்றிலிருந்து இறைவன் அந்த சமுதாயத்திடம் அல்லது அந்த நபரிடம் பகைமை கொள்கின்றான் என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. இறைவன் சில நேரத்தில் முழு உலகையும் தனது நண்பரின் பகைவர்களாக ஆகிவிடும் அளவுக்கு நடந்து கொள்கிறான் என்றால் கொஞ்ச காலத்திற்கு அவர்களின் நாவுகளுக்கும் அல்லது அவர்களின் கைகளுக்கும் அவர் மீது ஆதிக்கத்தை வழங்குகின்றான் என்றால் தன்மானமுள்ள இறைவன் தனது அந்த நண்பரை அழிக்க நாடுகிறான் அல்லது

அவமானப்படுத்தவோ அல்லது இழிவுபடுத்தவோ நாடுகிறான் என்பதற்காக செய்வதில்லை. மாறாக, உலகிற்கு தன் அடையாளத்தைக் காட்டுவதற்காகவும், அகம்பாவம் கொண்ட அந்த எதிரிகள் பகைமையில் கடுமையாக அழுத்தம் காட்டியும் என்ன நஷ்டத்தை ஏற்படுத்த முடிந்தது என்பது தெரிய வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்கிறான்.

*(நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 517-518)*

''திருக்குர்ஆனில் இறைவனின் பெயர் செயப்பாட்டு வினையில் வரவில்லை. உதாரணமாக குத்தூஸ் (தூய்மையானவன்) என்று வந்துள்ளது. ஆனால் மஃஸூம் (பாவத்திலிருந்து விலகியவன்) என்று எழுதப்படவில்லை. ஏனெனில் பிறகு காப்பாற்றக் கூடியவன் வேறு ஒருவர் இருப்பார்.''

*(அல்ஹகம் 10.11.1902 பக்கம் 5. மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 447 பதிப்பு 2003)*

நமது இறைவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன் ஆவான். அவன் ஆன்மாவைப் படைக்கவில்லை என்றும் உடலின் அணுக்களையும் படைக்கவில்லை என்றும் கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். அவர்கள் இறைவனைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். நாம் அவனுடைய புதிய படைப்புகளை நாள்தோறும் காண்கின்றோம். மேலும் முன்னேற்றங்களினால் புத்தம் புதிய ஆன்மாவை அவன் நம்மிடம் ஊதிக் கொண்டிருக்கிறான். அவன் இல்லாமையிலிருந்து உருவாக்குபவனாக இல்லாதிருந்தால் நாம் உயிருடன் இருக்கும்போதே மரணித்திருப்போம். நமது இறைவன் அற்புதமானவன். அவனைப் போன்றவன் யார்? அவனது பணிகள் அற்புதமானவையாகும். அவனுடைய

பணிகளைப் போன்று எவருடைய பணிகள் இருக்கின்றன? அவன் முற்றிலும் ஆற்றல் மிக்கவன் ஆவான்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 435)*

உண்மையில் இறைபண்புகளை மறுப்பதும் இறைவனை ஆற்றல் மிக்க ஆதிக்கம் கொண்டவன் என்பதிலிருந்து விலகி இருப்பதாக கருதுவதுமே உண்மையில் தேவதைகளை வணங்குவதற்கும் மறு பிறவிக் கொள்கைக்கும் காரணமாகும். ஏனெனில் இறைவனை திட்டம் தீட்டி வேலை செய்பவன் என்பதிலிருந்தும் அவன் ஒன்றுமற்றவனாக கருதப்பட்டபோது தேவையை நிறைவேற்றுபவையாக தேவதைகள் புனையப்பட்டன. இறை நியதியின் அடிப்படையில் ஏற்படும் மாற்றங்களும் புரட்சிகளும் சென்றகால செயல்களின் விளைவு எனக் கருதப்பட்டது. ஆக, இந்த ஒரு எண்ணத்தினாலேயே இந்த இரு தீமைகளும் உருவெடுத்தன. அதாவது மறு பிறவி; தேவதைகளை வணங்குவது.

*(ஷஹ்னயே ஹக். ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 407-408)*

*'வல்லமையினால் தன் இருப்பிற்கான சான்றை வழங்குகின்றான்*
*இதுதானே அந்த அடையாளமில்லாதவனின் முகத்தின் தோற்றம்!*
*எந்த விஷயத்தைப் பற்றி கண்டிப்பாக நான் செய்வேன் எனக் கூறுகிறானோ*
*அந்த விஷயம் தள்ளி வைக்கப்படுவதில்லை. இதுதானே இறைமை!!*

*(துர்ரே ஸமீன். பக்கம் 158 நஸாரத் இஷாஅத் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, ரப்வா)*

நமது இறைவனிடம் எண்ணற்ற அற்புதங்கள் இருக்கின்றன. ஆனால் உண்மையுடனும் நன்றியுணர்வுடனும் அவனுக்காகவே ஆகிவிட்டவர்கள்தான் அவற்றைப்

பார்க்கின்றனர். அவனுடைய ஆற்றல்கள் மீது உறுதி கொள்ளாதவர்களுக்கும் அவனுக்கு உண்மையாளராகவும் நன்றியுள்ளவராகவும் இல்லாதவர்களுக்கும் அவன் அற்புதங்களை வெளிப்படுத்துவதில்லை. எல்லாவற்றின் மீதும் ஆற்றல்மிக்க ஓர் இறைவன் இருக்கின்றான் என்பதை அறியாத மனிதன் எவ்வளவு துரதிஷ்டசாலியாக இருக்கின்றான்?

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 21)*

அவனுடைய ஆற்றல்கள் எல்லையற்றவையாகும். மேலும் அவனுடைய அற்புத பணிகள் எல்லைக்குட்படாதவையாகும். அவன் தனது சிறப்பிற்குரிய அடியார்களுக்காக தனது சட்டத்தையும் மாற்றிக் கொள்கிறான். ஆனால் அவ்வாறு மாறுவதும் அவனுடைய சட்டத்திற்கு உட்பட்டதேயாகும்.

ஒருவர் ஒரு புதிய ஆன்மாவுடன் அவன் சன்னிதியில் வந்து நிற்கும்போது, தமக்குள் அவனுடைய திருப்திக்காக ஒரு சிறப்பான மாற்றத்தை உருவாக்கிக் கொள்கின்றபோது அந்த அடியாருக்கு வெளிப்படும் இறைவன் ஒரு தனி இறைவனே ஆவான். அவன் பொதுவான மக்கள் அறியக் கூடிய அந்த இறைவன் அல்லன்; எவருடைய ஈமான் பலவீனமாக இருக்கிறதோ அவருக்கு அவன் பலவீனமானவனாகவே வெளிப்படுகிறான். ஆனால் அவனிடம் ஓர் உறுதியான ஈமானுடன் வருபவருக்கு, உமக்கு உதவி செய்வதற்கு நானும் உறுதியானவன் என்பதை அவன் காட்டுகிறான்.

இவ்வாறு மனிதனின் மாற்றங்களுக்கு ஏற்ப அவனுடைய பண்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒருவர் ஈமானின் நிலைமையில் மரணித்தவரைப் போன்று ஆற்றல் அற்றவராக இருக்கும்போது இறைவனும் அவருக்கு ஆதரவளிப்பதிலிருந்தும் உதவி செய்வதிலிருந்தும் அவன் -

நவூது பில்லாஹ் - மரணித்து விட்டான் என்பது போன்று தன் கையை அகற்றி மவுனமாகி விடுகின்றான். ஆனால் இந்த எல்லா மாற்றங்களையும் அவன் தனது சட்டத்திற்குட்பட்டு தனது பரிசுத்தத்தன்மைக்கு ஏற்ப செய்கின்றான். அவனுடைய சட்டத்தை எவரும் எல்லைக்குட்படுத்த முடியாது.

எனவே எந்தவொரு ஒளி மிக்க, தெளிவான, உறுதியான சான்றுமின்றி இந்த விஷயம் இயற்கைச் சட்டத்திற்கு எதிரானது என்று ஆட்சேபனை செய்வது வெறும் முட்டாள்தனமாகும். ஏனெனில் எந்தப் பொருளுக்கு இன்னும் எல்லை வகுக்கப்படவில்லையோ, அதற்கு எந்த உறுதியான சான்றும் நிலைபெறவில்லையோ அது பற்றி எவர் கருத்து தெரிவிக்க முடியும்?

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீகஸாயின் தொகுதி 23 பக்கம் 104-105)*

இறைவனை ஆற்றல் மிக்கவனாக ஒப்புக் கொள்ளவில்லையென்றால் பிறகு இதனால் எல்லா நம்பிக்கைகளும் அபத்தமானவையாகி விடுகின்றன. ஏனெனில் நமது துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுவது இறைவன் எப்போது விரும்பினாலும் உடலின் மூலக்கூறுகளில், ஆன்மாக்களில் அவற்றில் இல்லாத ஆற்றல்களை படைக்க முடியும் என்ற விஷயத்தை சார்ந்திருக்கிறது.

உதாரணமாக நாம் ஒரு நோயாளிக்காக துஆ செய்கிறோம் என்றால், வெளிப்படையில் பார்க்கும்போது அவரிடம் மரணிப்பவர்களுக்கான அடையாளங்கள் காணப்படுகிறதென்றால் இறைவா! இவரை மரணத்திலிருந்து காப்பாற்றக் கூடிய ஆற்றலை இவருடைய உடலின் மூலக்கூறுகளில் உருவாக்குவாயாக என வேண்டுகிறோம். அப்போது பெரும்பாலும் அந்த துஆ ஒப்புக்கொள்ளப்பட்டு

விடுவதை நாம் பார்க்கிறோம். இந்த மனிதர் மரணிக்கவிருக்கிறார்; இவருடைய வாழ்வின் ஆற்றல்கள் முடிவுக்கு வந்து விட்டன என சில நேரத்தில் நமக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதிகமாக துஆ செய்யப்படும்போது, எல்லையை எட்டிவிடும்போது துஆவின் கடுமை, துடிப்பு, அமைதியின்மை ஆகியவற்றால் நமது நிலைமை ஒரு மரணத்தைப் போன்று ஆகி விடும்போது அந்த மனிதரிடத்தில் மீண்டும் வாழ்வின் ஆற்றல்கள் உருவாக்கப்பட்டு விட்டன என்று இறைவனிடமிருந்து நமக்கு வஹி வருகிறது. அப்போது மரணித்தவர் உயிர் பெற்றதைப் போன்று ஒருமுறை அவர் சுகத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தத் துவங்கி விடுகிறார்.

அவ்வாறே எனக்கு நினைவிருக்கிறது. பிளேக் நோயின் காலத்தில் நான் இறைவனிடம், ஆற்றல் மிக்க இறைவா! எங்களை இந்த துன்பத்திலிருந்து காப்பாற்றுவாயாக. பிளேக் நோயின் விஷத்திலிருந்து நாங்கள் தப்பிக்கும் அளவிலான விஷ முறிவின் தன்மையை எங்கள் உடலில் உருவாக்குவாயாக என்று துஆ செய்தேன். அப்போது அந்த சிறப்புத்தன்மையை இறைவன் நம்மிடம் உருவாக்கி விட்டான். மேலும் நான் பிளேக் நோயின் மரணத்திலிருந்து உம்மைக் காப்பாற்றுவேன் என்றும் உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கின்ற ஆணவம் கொள்ளாதவர்கள் - அதாவது இறைவனுக்குக் கட்டுப்படுவதிலிருந்து விலகி, கிளர்ச்சி செய்யாதவர்கள், தூய்மையானவர்கள் - அவர்கள் அனைவரையும் நான் காப்பாற்றுவேன் என்றும் பிளேக் நோய் கடுமையாக மேலோங்குவதிலிருந்தும், பொதுவான அழிவிலிருந்தும் காதியானை பாதுகாப்பேன் என்றும் கூறினான். அதாவது, மற்ற

கிராமங்களை நாசமாக்கிவிடுகின்ற அளவிலான அழிவு காதியானில் ஏற்படாது என்று கூறினான்.எனவே நாம் பார்த்தோம். இறைவனின் இந்த எல்லா விஷயங்களையும் கண்டோம். எனவே புத்தம் புதிய ஆற்றல்களையும், தாக்கங்களையும், சிறப்புகளையும் உலகின் அணுக்களில் உருவாக்குகின்ற இறைவனே நம் இறைவன் ஆவான்...

நாம் அந்த இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று மனிதனுடைய திட்டமாகிய தடுப்பூசி போடுவதிலிருந்தும் விலகிக் கொண்டோம். மேலும் தடுப்பூசி போட்ட பலர் இந்த உலகத்திலிருந்து காலம் சென்று விட்டனர். இப்போதுவரை நாம் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கின்றோம். அல்லாஹ் நமக்காக நமது உடலில் விஷ முறிவுக்கான அணுக்களை உருவாக்கி இருப்பதைப் போன்றே அணுக்களை உருவாக்குகிறான். அவ்வாறே அந்த இறைவன் ஆன்மாவைப் படைக்கின்றான். அவன் என்னிடம் தூய ஆன்மாவை ஊதினான். அதனால் நான் உயிர் பெற்றேன். அவன் ஆன்மாவைப் படைத்து நமது உடலை உயிரூட்டுவதற்கு மட்டும் நாம் தேவையுடையவர்கள் அல்ல.

மாறாக, நமது ஆன்மாவுக்கும் இன்னோர் ஆன்மா தேவைப்படுகிறது. அதன் மூலமாக மரணித்த அந்த ஆன்மா உயிர் பெற வேண்டும். எனவே இந்த இரண்டு ஆன்மாக்களையும் இறைவனே படைக்கின்றான். இந்த இரகசியத்தைப் புரியாதவர் இறைவனின் ஆற்றல்களைப் புரியாதவரும் இறைவனை அறியாதவரும் ஆவார்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 390-391)*

இறைவனின் இறைமையும் அவனது வல்லமையும் எந்த அளவுக்கு எல்லையற்றதாக இருக்கிறதென்றால்,

எண்ணிலடங்காத இரகசியங்களையும் கொண்டதாக இருக்கிறதென்றால் அதை சட்ட அளவில் ஓர் எல்லைக்குள் வரையறுப்பது மனிதனின் வேலையன்று. கம்பீரமிக்க இறைவனின் ஆற்றல்கள், ஞானங்கள் எல்லையற்றவையாகும் என்பது இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்கு மிகவும் அடிப்படையான விஷயமாகும்.

இந்த விஷயத்தின் உண்மைநிலையை புரிந்து கொள்வதனால் இது பற்றி ஆழமாக சிந்திப்பதனால் எல்லா குழப்பமான, சிக்கலான சிந்தனைகளும் நீங்கி விடுகின்றன. இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்கான, அவனை வணங்குவதற்கான நேரான வழி தென்படத் தொடங்குகின்றது.

இறைவன் எப்போதும் தனது தொன்மையான, நிரந்தரமான பண்புகளுக்கேற்ப செயல்படுகின்றான் என்பதை நாம் இந்த இடத்தில் மறுக்கவில்லை. இந்த தொன்மையானதும் நிரந்தரமாக நிலைத்து நிற்பதுமான இந்த பண்புகளின்படி செயல்படுவதை நாம் வேறு சொற்களில் இயற்கைச் சட்டம் எனப் பெயர் வைப்போம் என்றால் அது பொருத்தமானதேயாகும்.

ஆனால் நமது கூற்றும் வாதமும், அந்த தொன்மையானதும் முடிவில்லாததுமான பண்புகளின் அடையாளங்களை அல்லது இறைவனின் தொன்மையான சட்டங்களை எல்லைக்குட்பட்ட வையாகவும் எண்ணிக்கைக்குட்பட்டவையாகவும் ஏன் நம்ப வேண்டும்? என்பதில் இருக்கிறது.

எந்த பண்புகள் அல்லாஹ்விடம் காணப்படுகின்றனவோ அந்த பண்புகளின் எல்லைக்குட்படாத அடையாளங்கள் தத்தமது காலகட்டத்தில் வெளிப்படுகின்றனவேயொழிய அவை தவிர மற்றவை எதுவுமில்லை என்பதை சந்தேகமின்றி

நாம் ஏற்றுக் கொள்கிறோம்; ஏற்றுக் கொண்டாக வேண்டும். மேலும் அந்தப் பண்புகளால் பூமியிலுள்ள, வானத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் இந்த பண்புகளின் அடையாளங்களுக்கே அல்லாஹ்வின் நடைமுறை அல்லது இயற்கைச் சட்டம் என்று பொருள். ஆனால் இறைவன் தனது முழுமையான பண்புகளுடன் எல்லையற்றவனும் முடிவில்லாதவனும் ஆவான். எனவே அவனுடைய பண்புகளின் அடையாளங்கள் அதாவது இயற்கைச் சட்டங்கள் நமது அனுபவம் அல்லது புரிதல் அல்லது பார்த்தல் ஆகியவற்றின் அனுமானத்திற்கேற்ப இருக்கின்றன; அதை விட அதிகமாக இல்லை என நாம் வாதிட்டால் அது நமது மிகப் பெரிய அறிவீனமாக இருக்கும்.

இன்றைய இயற்கைவாத இயல்பு கொண்டவர்களின் மிகப் பெரிய தவறு என்னவென்றால், இயற்கை சட்டத்தை அவர்கள் முழுமையாக எல்லைக்குட்பட்டதாக ஆகி விட்டது என புரிந்து வைத்துள்ளார்கள். அதற்குப் பிறகு தோன்றும் புதிய விஷயத்தை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. இந்த சிந்தனையின் அடிப்படை நேரிய வழியில் இல்லை என்பது வெளிப்படையானதாகும்.

இதுவே உண்மையாக இருக்குமென்றால் பிறகு எந்த புதிய விஷயத்தை ஏற்றுக் கொள்வதற்கும் எந்த வழியும் எஞ்சியிருக்காது. மேலும் புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிவது சாத்தியமில்லாததாகி விடும். ஏனெனில் இந்த நிலையில் ஒவ்வொரு புதிய செயலும் இயற்கை சட்டங்களின்படி குறைபாடுள்ளதாகத் தெரியும். மேலும் அதை விட்டு விடுவதால் அநியாயமாக ஒரு புதிய உண்மையை விட்டு விட வேண்டியது வரும்.........

வரலாற்றின் சம்பவங்களில், ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஒருவர் சிந்தித்துப் பார்த்தால் அவர்களுடைய சிந்தனைகளின் தொடர் வண்டி எத்தனை வேறுபட்ட பாதைகளில் அல்லது எந்த அளவுக்கு முரண்பட்ட நடையில் சென்றுள்ளது என்றும், எந்த அளவுக்கு அவமானம், வெட்கம் எனும் கறையுடன் ஒரு கருத்தை இன்னொரு கருத்தால் மாற்றியமைத்தனர் என்பது தெரிய வரும்.

மேலும் எந்த அளவுக்கு ஒரு விஷயத்தை நீண்ட காலமாக மறுத்து, அதை அந்த இயற்கை சட்டத்திற்கு அப்பாற்பட்டதாகப் புரிந்து, கடைசியில் வெட்கமடைந்த நிலைமையில் அந்த விஷயத்தையே ஏற்றுக் கொண்டு விட்டனர்! எனவே அந்த கருத்துக்களை மாற்றியதன் காரணம் என்ன? அவர்கள் புரிந்து வைத்திருந்தது ஒரு கற்பனையான விஷயமாக இருந்தது என்பதும் அதை புதிய கண்டுபிடிப்புகள் பொய்ப்படுத்தியது என்பதும்தானே!

எனவே எந்த வடிவங்களிலும், நிலைமைகளிலும் அந்த புதிய கண்டுபிடிப்புகள் தோன்றினவோ அவற்றிற்கேற்ப அவர்களின் கருத்துக்களின் பாதையும் இங்குமங்கும் மாறிக் கொண்டிருந்தது. மேலும் புதிய அனுபவங்களின் திசை எங்கெல்லாம் மாறிக் கொண்டே சென்றதோ அதன் பக்கமே அவர்களின் எண்ணங்களும் மாறிக் கொண்டிருந்தன.

சுருக்கமாக, தத்துவ வாதிகளுடைய சிந்தனைகளின் கடிவாளம் எப்போதும் புதிய கண்டுபிடிப்புகளின் கையில் இருந்திருக்கிறது. இப்போதும் பல விஷயங்கள் அவர்களின் பார்வைகளிலிருந்து மறைந்திருக்கின்றன. அவற்றைப் பற்றி இனி அவர்கள் தடுமாற்றம் அடைந்து, அடைந்து பலவிதமான அவமானங்களைக் கண்டு ஏதாவது ஒரு காலத்தில்

ஒப்புக்கொள்வார்கள் என நம்பிக்கை வைக்கப்படுகிறது. ஏனெனில் இயற்கை சட்டங்கள் மனித அறிவின் ஏட்டில் இதுவரை கட்டுக்கோப்பாக்கப்படவில்லை; கட்டுக்கோப்பாக்கப்படவும் முடியாது. அவற்றைப் பார்த்து புதிய ஆய்வுகளிலிருந்து அவநம்பிக்கை கொண்டு விட முடியாது.

மனிதன் இந்த அளவுக்கு குறைவான ஆயுளைக் கொண்டவனாக இருந்தும் உலகம் என்னும் கல்விச்சாலையிலிருந்து ஆதியும் அந்தமுமில்லாத இரகசியங்களை பெறுவதை விட்டும் முற்றிலும் முழுமையடைந்து விட்டான் என்றும், இப்போது மனிதனின் அனுபவம் இறைவனின் அற்புதங்களை முற்றிலும் சூழ்ந்துள்ளது என்றும், மனிதனின் அனுபவத்திற்கு அப்பாற்பட்டவையாக இருப்பவை உண்மையில் இறைவனுடைய ஆற்றலை விட்டும் அப்பாற்பட்டவையாக இருக்கின்றன என்றும் எந்த அறிவுள்ளவராவது நினைக்க முடியுமா?

அப்படிப்பட்ட சிந்தனையை ஒரு வெட்கமில்லாத, அறிவில்லாத மனிதரைத் தவிர வேறு எந்த அறிவுள்ளவரும் நினைக்க மாட்டார் என்பதை நான் அறிவேன். தத்துவ வாதிகளிலும் எவர்கள் உண்மையிலேயே நல்லவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், உண்மையான ஆன்மீகமானவர்களாகவும் இருந்திருக்கின்றார்களோ அவர்கள் எல்லைக்குட்பட்டதும், வரையறைக்குட்பட்டதுமான நமது சிந்தனைகள் இறைவனையும் அவனது எல்லையற்ற இரகசியங்களையும், ஞானங்களையும் கண்டறிவதற்கு காரணியாக அமைய முடியாது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.............

ஒவ்வொரு பொருளும் தன்னகத்தே ஒரு சிறப்புத்தன்மையைக் கொண்டிருக்கிறது. அதன் மூலமாக இறைவனின் எல்லையற்ற ஆற்றல்களிலிருந்து அது தாக்கத்தை பெற்றுக்கொண்டு வந்திருக்கிறது என்பது மிகவும் ஆய்வு செய்யப்பட்ட உண்மையாகும்.

எனவே சிறப்புத்தன்மை கொண்ட பொருள்களைப் பற்றி நாம் தகவலை அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவை முடிவு பெறுவதில்லை என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது. ஒரு கசகசா விதையின் சிறப்புத்தன்மையைப் பற்றி ஆய்வுசெய்வதற்காக ஆரம்பத்திலிருந்து கடைசி வரையுள்ள எல்லா தத்துவ ஞானிகள் மறுமை வரை தமது மூளைத் திறன்களை செலவு செய்தாலும் அவர் அந்த சிறப்புத்தன்மைகளைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டார் என எந்த அறிவாளியும் உறுதி கொண்டு விட முடியாது.

எனவே எந்த அளவுக்கு விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவையின் சிறப்புத்தன்மைகள் பற்றி வானியல் அல்லது இயல்பியல் அறிவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோ அவற்றுடனேயே அவை முடிந்து விட்டன என்ற எண்ணத்தை விட அதிகமாக புரிய முடியாத விஷயம் வேறு எதுவுமில்லை.

இப்போது இந்த எல்லா வாதங்களின் சுருக்கம் என்னவென்றால், இயற்கை சட்டம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மைக்கு முன்னால் வந்து நிற்கக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில் இறைவனின் இயற்கைச் சட்டம் என்பதன் கருத்து, இயற்கையாக வெளிப்பட்ட அல்லது இனி வெளிப்படவிருக்கின்ற செயல்கள் என்பதாகும். ஆனால் இறைவன் தனது ஆற்றல்களை வெளிப்படுத்துவதில் களைப்படைந்து விடவில்லை; அல்லது தனது ஆற்றல்களைக்

காட்ட முடியாமலும் போய்விடவில்லை; அல்லது அவன் தூங்கி விடவில்லை; அல்லது ஏதாவதொரு பக்கம் நழுவிச் சென்று விடவுமில்லை; அல்லது வெளிப்படையான பலவந்தம் செய்பவனால் பலவந்தம் செய்யப்படவுமில்லை. மேலும் பலவந்தத்திற்குள்ளாகி அற்புதங்களைக் காட்டும் பணியிலிருந்து கையை விலக்கிக் கொள்ளவுமில்லை. நமக்காக சில நூற்றாண்டுகளுக்கான (அல்லது அதை விட கொஞ்சம் அதிகமாக என்று கருதிக் கொள்ளுங்கள்) சாதனைகளை மட்டுமே விட்டுச் சென்றுள்ளான் என்பதன்று.

எனவே இன்னும் நூற்றுக்கணக்கான நடைமுறைகளின் தொகுப்பு எஞ்சியிருக்கும்போது இருக்கின்றதும், காணப்படுகின்றதுமாகிய ஆற்றல்களை ஒட்டுமொத்தமான இயற்கைச் சட்டங்களாகக் கருதிவிடக் கூடாது என்பதிலேயே எல்லா அறிவுடைமையும், ஞானமும், தத்துவமும், கண்ணியமும், போதனையும் இருக்கிறது. இறைவனுடைய செயல் நமது பார்வைகளை விட்டும் ஒருபோதும் தப்பிவிட முடியாது என அறிவிலிகளைப் போன்று நாம் பிடிவாதம் பிடிக்கக் கூடாது...

எந்த பொருள்கள் முழுமையாக வெளிப்படுவதில் இன்னும் பல படித்தரங்கள் எஞ்சியுள்ளனவோ அப்படிப்பட்ட பொருள்கள் முழுமையான முறையிலும், உறுதியான முறையிலும் தனது உண்மையை எடைபார்க்கக் கூடியதாகவும் அல்லது உண்மையை அளந்து பார்க்கக் கூடியதாகவும் எவ்வாறு இருக்க முடியும்? என நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். (இவ்வாறு கூறுவதில்) நான் உண்மையில் இருக்கிறேன். மேலும் இந்த சிக்கலிலும் சிக்கலான புதிர்கள் தத்துவ வாதிகளை எந்த அளவுக்கு ஆச்சரியம் மற்றும் அதிர்ச்சியில் ஆழ்த்தி

விட்டதென்றால், அவர்களில் சிலர் பொருள்களின் உண்மைத்தன்மைகளையே மறுத்து விட்டனர். (பொருள்களின் உண்மைத்தன்மைகளை மறுப்பவர்கள் என்பது சூஃப்ஸ்தாயீ என்று அழைக்கப்படுகின்ற அதே பிரிவினர்கள்தான்).

அவர்களில் சிலர், பொருள்களுக்கென்று சிறப்புத்தன்மை நிரூபணமாகின்றதென்றாலும், நிரந்தமாக அவற்றிற்கு சான்று காணப்படுவதில்லை என்றும் கூறுகின்றனர். நீர் நெருப்பை அணைத்து விடுகிறது; பூமியிலுள்ள அல்லது வானத்திலுள்ள ஏதாவது தாக்கத்தினால் ஏதேனும் நீரூற்று நீரின் இந்த சிறப்புத்தன்மையை விட்டு விடலாம். நெருப்பு விறகை எரித்து விடுகிறது. ஆனால் ஒரு நெருப்பு உற்புறமான அல்லது வெளிப்புறமான காரணிகளால் அந்த சிறப்புத்தன்மையை வெளிப்படுத்த முடியாமல் போகலாம். ஏனெனில் அப்படிப்பட்ட அற்புதமான விஷயங்கள் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஞானிகளின் இன்னொரு கூற்றும் இருக்கிறது.

அது என்னவெனில், பூமியிலுள்ள சில தாக்கங்கள், அல்லது வானத்திலுள்ள சில தாக்கங்கள் ஆயிரக்கணக்கான இன்னும் கூறுவதென்றால் இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு வெளிப்படுகின்றன. அவை அறியாத, தெரியாத மக்களுக்கு வழக்கத்திற்கு அப்பாற்பட்டதாகத் தெரிகிறது. மேலும் ஏதாவதொரு காலத்தில் அப்படி நடந்து வந்திருக்கிறது.

மாபெரும் தத்துவவாதிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடக் கூடிய சில அற்புதங்கள் வானத்திலும், பூமியிலும் வெளிப்படுகின்றன. பிறகு தத்துவவாதிகள் (நம்பிக்கை வைத்திருக்கும்) தமது இயற்கைச் சட்டத்தில் எந்த வித்தியாசமும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அந்த

உறுதியான சான்று, சாட்சியத்திலிருந்து கதிகலங்கியவாறும், வெட்கப்பட்டவாறும் ஏதாவது பகட்டைக் கூறி அதை இயற்கையின் பக்கம் அல்லது வானவியலின் பக்கம் இழுத்துச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறே இந்த மக்கள் இங்குள்ளதை அங்கு இணைத்து புதிய விஷயங்களை ஏதாவது அறிவியல் விதிமுறையில் பலவந்தமாக திணித்து தட்டிக்கழித்து விடுகின்றனர். இறக்கை கொண்ட மீனைப் பார்க்காத வரை எந்த தத்துவவாதியும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை; தொடர்ச்சியாக வால் வெட்டப்பட்டதால், வால் வெட்டப்பட்ட நாய் உருவாகாதவரை அந்த சிறப்புத்தன்மையை எந்த தத்துவவாதியும் ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும் சில இடங்களில் ஏதாவது கடுமையான பூகம்பத்தின் காரணமாக கற்களை உருக்கி விடக் கூடிய - அதே சமயத்தில் விறகை எரிக்க முடியாத அளவிலான நெருப்பு வெளிப்படாத வரை தத்துவவாதிகள் அத்தகைய சிறப்புத்தன்மை நெருப்பில் இருப்பதை இயற்கைச் சட்டத்திற்கு எதிரானதாகக் கருதினர்.

Aspirator கருவி கண்டு பிடிக்கப்படாத வரை Transfusion of Blood பற்றி (அதாவது ஒரு மனிதரின் இரத்தத்தை இன்னொரு மனிதருக்குள் செலுத்துவது) அது இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டது என எந்த தத்துவவாதி அறிந்திருந்தார்? மின்சார இயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் அந்த மின்சாரத்தை உருவாக்குவதை ஒப்புக்கொண்ட எந்த தத்துவவாதியின் பெயரையாவது கூற முடியுமா என்ன?..............

திறமை வாய்ந்த மருத்துவரும் மிகப் பெரும் தத்துவ வாதியுமான அல்லாமா ஷாரிஹ் கானூன் அவர்கள் தமது

நூலில் ஓரிடத்தில் எழுதுகிறார்கள்.

**கிரேக்கர்களிடம் இந்த சம்பவம் மிகவும் புகழ்பெற்றதாகும். அதாவது தமது காலத்தில் கற்புள்ளவர்களாகவும் நல்லவர்களாகவும் விளங்கிய சில பெண்களுக்கு ஆண்களின் துணையின்றி கர்ப்பிணியாகி குழந்தை பிறந்துள்ளன.**

பிறகு அல்லாமா அவர்கள் தமது கருத்தாக இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்: **இந்த எல்லா சம்பவங்களும் இட்டுக்கட்டிக் கூறப்பட்டவையாக இருக்க முடியாது. ஏனெனில் அடிப்படை சரியாக இல்லாமல் பல்வேறு நபர்கள், நாகரிமுள்ள பல்வேறு சமுதாயங்களுக்கு மத்தியில் அப்படிப்பட்ட வாதங்கள் ஒருபோதும் முன்னேற்றம் காண முடியாது...**

இந்த எல்லா சம்பவங்களைப் பற்றியும் மறுக்கின்ற எவருக்கும் என்ன கருத்து இருந்தாலும் அவை அரிதாக நடந்தன என்பதன் காரணமாக மட்டும் எல்லாவற்றையும் மறுத்து விட முடியாது. மேலும் அவை அபத்தமானவை என்பதற்கு தத்துவ வாதியின் எந்தவொரு சான்றும் நிலைபெற முடியாது...

அல்லாமா அவர்கள் இந்த இடத்தில் ஓர் அருமையான சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: எல்லா மனிதர்களும் ஒரே விதமானவர்களாக இருப்பதன் காரணமாக ஒருவருக்கொருவர் பொருத்தமான இயல்பு கொண்டவர்கள்தான். ஆயினும் அவர்களில் சிலருக்கு மிக அரிதாக எப்போதாவது ஏதாவது ஒரு காலத்தில் சிறப்பான ஆற்றல்கள் அல்லது ஏதாவது உயர்தரமான வல்லமைகள் வழங்கப்படுகின்றன. அவை பொதுவாக மற்றவர்களிடம் காணப்படுவதில்லை. சிலர் அண்மைக் காலத்தில்

வழக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில் 300 ஆண்டுகளுக்கும் அதிகமான வயதைப் பெற்றிருக்கின்றனர்.

மேலும் சிலருடைய மனன சக்தி, பார்வைத் திறன் எத்தகு முழுமையான தகுதியை அடைந்திருக்கிறதென்றால் அதற்கு நிகராகக் காணக் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட மக்கள் மிகவும் அரிதாக இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றுகின்றார்.

பொது மக்களின் பார்வை பெரும்பாலும் அதிகமாக வெளிப்பட்ட விஷயங்கள், தொடர்ந்து வெளிப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றின் மீது இருக்கிறது. மேலும் பொது மக்களின் பார்வையில் எந்த விஷயங்கள் அதிகமாக நடைபெற்றவையாகவும், தொடர்ந்து வெளிப்பட்டவையாகவும் இருக்கின்றவோ அவை முறைப்படி இயற்கைச் சட்டமாக ஒப்புக்கொள்ளப்படுன்றன என்பதும் நடக்கிறது. மேலும் இந்த உண்மைகளின் மீதே அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

எனவே அரிதாக நடைபெறுகின்ற விஷயங்களை அதிகமாக நடைபெறுகின்றவற்றை விட மிகவும் பலவீனமானவையாகவும் சந்தேகத்திற்குரியவையாகவும் - இன்னும் கூறுவதென்றால் அபத்தமானவையாகவும் தென்படுகின்றன. இதன் காரணமாகத்தான் பொது மக்கள் மட்டுமின்றி சிறப்பான மக்களுக்கும் இவற்றின் இருப்பு பற்றி ஐயமும் சந்தேகமும் உருவாகி விடுகின்றன.

**எனவே ஆலிம்களுக்கு ஏற்படுகின்ற பெரும் தவறும், முன்னால் காலெடுத்து வைப்பதிலிருந்து அவர்களைத் தடுக்கின்ற மிகப் பெரும் தடுமாற்றமும் என்னவென்றால், அதிகமாக நடைபெறுகின்ற சம்பவங்களுடன்**

**ஒப்பிடுகையில் அரிதாக நடைபெறுகின்ற சம்பவங்களை ஆய்வு செய்ய அவர்கள் ஆயத்தமாவதில்லை.**

மேலும் அவற்றின் அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவற்றை வெறும் கதையாகவும், கற்பனையாகவும் கருதி தன்னிடமிருந்து கழற்றி விடுகிறார்கள். ஆனால் அதிகமாக வெளிப்படும் விஷயங்களுடன் அரிதாக வெளிப்படும் அற்புதங்களும் அவ்வப்போது வெளிப்பட்டு வருகின்றன என்பதுதான் பழமையிலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறையாக இருக்கிறது. அதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. அவற்றை எழுதுவது நீண்டு போவதற்குக் காரணமாகி விடும்.

மேலும் பக்ராத் என்ற மருத்துவர் தனது ஒரு மருத்துவ நூலில் கண் கண்ட சாட்சியைக் கொண்ட சில நோயாளிகளின் நிலைமையைப் பற்றியும் எழுதியுள்ளார். அது மருத்துவ விதிமுறைகள் மற்றும் மருத்துவர்களின் அனுபவத்தின்படி அவர்கள் ஒருபோதும் சிகிச்சை பெறத்தகுந்தவர்களாக இருக்கவில்லை. ஆனால் அந்த நோயாளிகள் அற்புதமான முறையில் குணமடைந்தனர். அந்த சிகிச்சை பூமியின், வானத்தின் சில அரிதான தாக்கங்களினால் ஆகும் என்பது இதைப் பற்றி அவருடைய கருத்தாகும்.

இந்த இடத்தில் நாம் மேற்கொண்டு எழுத விரும்பும் விஷயம் என்னவென்றால், அதிகமாக நடைபெறுதல் மற்றும் அரிதாக சிறப்பாக நடைபெறுதல் என்ற இந்தத் தொடர் மனிதனுடன் மட்டும் எல்லைக்குட்பட்டதன்று. மாறாக, சிந்தித்துப் பார்த்தால் இந்த இருவகையான தொடர் எல்லாவற்றிலும் காணப்படுகிறது.

**உதாரணமாக, தாவரங்களில் எருக்கஞ் செடியைப் பாருங்கள். அது எந்த அளவுக்கு கசப்பானதாகவும், நஞ்சாகவும் இருக்கிறது. ஆனால் நீண்ட காலத்திற்குப் பிறகு பல ஆண்டுகளுக்குப் பிறகு அதிலிருந்து ஒருவகையான மிகவும் இனிப்பான, சுவையான கனி உருவாகிறது. இப்போது எவர் அந்த கனியை ஒருபோதும் பார்க்கவில்லையோ முன்னாலுள்ள கசப்பை மட்டும் பார்த்து வந்தாரோ அவர் சந்தேகமின்றி இந்த கனியை இயல்புக்கு எதிரான ஒன்றாகக் கருதுவார்.**

அவ்வாறே மற்ற வகையான பொருள்களிலும் நீண்ட காலத்திற்குப் பிறகு சில அரிதான சிறப்புகள் வெளிப்படுகின்றன.

**கொஞ்ச காலத்திற்கு முன் முஸஃப்ஃபர்கட் ஊரில் பெண் ஆட்டைப் போன்று பாலைத் தந்து கொண்டிந்த ஓர் ஆண் ஆடு பிறந்தது.**

அந்த ஊரில் இது பற்றி அதிகமாக பேசப்பட்டு வந்தபோது முஸஃப்ஃபர் கட் ஊரின் டெபுடி கமிஷனர் மீகாலீஃப் என்பவருக்கும் இது பற்றி தகவல் கிடைத்தது. அவர் இதை ஒரு வினோதமானதாவும் இயற்கைச் சட்டத்திற்கு நேர்மாற்றமானதாகவும் கருதி அந்த ஆண் ஆட்டை தனக்கு முன்னால் கொண்டு வர வைத்தார். அவருக்கு முன்னால் **அந்த ஆண் ஆட்டிலிருந்து பால் கறக்கப்பட்டபோது அநேகமாக ஏறக்குறைய ஒன்றரை லிட்டர் பாலை அது தந்தது....**

**இதற்குப் பிறகு மூன்று நம்பத்தகுந்த உறுதியான கண்ணியமிக்க நபர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: சில ஆண்கள் பெண்களைப் போன்று பாலூட்டுவதை நாங்கள் எங்கள் கண்களால் கண்டுள்ளோம்....**

**அவ்வாறே சில நேரத்தில் பெண் பட்டுப் பூச்சிகள் ஆண் பட்டுப் பூச்சியின்றி முட்டையிடுகின்றன; அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிவருகின்றன என்பது சிலருடைய அனுபவமாகும். காய்ந்த மண்ணிலிருந்து எலி உருவாகியுள்ளதையும் சிலர் கண்டுள்ளனர். அதன் பாதி பகுதி மண்ணாக இருந்தது; பாதி எலியாகி விட்டது.**

ஹகீம் ஃபாஸில் குரைஷீ அல்லது அநேகமாக அல்லாமா (ஷாரிஹ் கானூன்) அவர்கள் ஓரிடத்தில் எழுதியிருக்கிறார்கள்: நாங்கள் ஒரு நோயாளியைக் கண்டோம். அவருடைய காது உணர்ச்சி இழந்து செவிடாகி விட்டது. பிறகு காதின் கீழ் புரையோடிய புண் போன்று ஆகி விட்டது. கடைசியில் அது ஓட்டையாகி விட்டது. அந்த ஓட்டையின் மூலமாக அவர் சரியாக கேட்டு வந்தார். ஆக, இறைவன் அவருக்கு இன்னொரு காதை வழங்கினான்...

மனிதன் கண்களின் வழியினால் கேட்க முடியுமா என (கிரேக்க மருத்துவரும், மெய்யியலாளரும் ஆகிய) கேலென் (Galen) என்பவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், இதுவரை அனுபவம் சாட்சி பகரவில்லை. ஆனால் காதுகளுக்கும் கண்களுக்கும் மறைவான ஓர் இணைப்பு இருந்து, எந்தவொரு கையின் செயலால் அல்லது வானத்தின் ஏதாவதொரு காரணத்தால் வெளிப்பட்டு, இந்தச் சிறப்புத்தன்மை வெளிப்படுவதற்குக் காரணமாகி விடலாம்; ஏனெனில் இப்போது சிறப்பான ஞானத்தைப் பற்றிய புரிதல் முடிவடைந்து விடவில்லை என்று கூறினார்.

டாக்டர் பர்னியர் அவர்கள் தனது காஷ்மீர் பயணத்தில் பீர் பஞ்சால் நிகழ்வு பற்றி குறிப்பிடும்போது ஓர் அற்புதமான சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அது அந்த நூலின்

மொழியாக்கத்தின் 80-ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஓரிடத்தில் கற்கள் அகன்றதனால் எங்களுக்கு ஒரு கருமையான தேள் தென்பட்டது. அதை எனக்கு அறிமுகமான முகலாயரைச் சேர்ந்த ஓர் இளைஞர் தனது உள்ளங்கையில் நசுக்கி விட்டார். பிறகு எனது பணியாளரிடமும் என்னிடமும் கொடுத்தார். ஆனால் அது எங்களில் யாரையும் கொட்டவில்லை. அந்த இளைஞர் கூறினார்: நான் அதன் மீது திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதி ஊதினேன். மேலும் இந்த செயல்முறை மூலமாகவே நான் பெரும்பாலான தேள்களை பிடித்து விடுகின்றேன்.**

மேலும் ஃபுதூஹாத், ஃபுஸூஹ் ஆகிய நூல்களையும், தத்துவ நூல்களையும் சூஃபியிஸ நூல்களையும் எழுதிய மிகப் பெரிய புகழ்பெற்ற மார்க்க அறிஞர் தமது நூலாகிய ஃபுதூஹாத் என்பதில் எழுதுகிறார்கள்:

**எங்கள் வீட்டில் ஒரு தத்துவவாதிக்கும் இன்னொருவருக்கும் நெருப்பின் சிறப்புத்தன்மையைப் பற்றி வாக்குவாதம் நடந்தபோது அந்த நபர் ஒரு நூதனமான விஷயத்தைக் காண்பித்தார். அதாவது தத்துவவாதியின் கையை தன் கையில் பிடித்து எங்களுக்கு முன்னால் எரிந்து கொண்டிருந்த அடுப்பில் இட்டு விட்டார். கொஞ்ச நேரம் தனது கையையும் தத்துவவாதியின் கையையும் நெருப்பில் இருக்க வைத்து விட்டார். ஆனால் நெருப்பு அந்த இருவருடைய கைகளில் எதன் மீதும் கொஞ்சமும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.**

**அவ்வாறே இந்த நூலை எழுதுபவனாகிய நான் ஓர் பெரியவரைக் கண்டேன். அவர் கடுமையான கோடைக்**

**காலத்தில், وَإِذَا بَطَشْتُمْ بَطَشْتُمْ جَبَّارِينَ (நீங்கள் எவரையும் பிடித்துக் கொண்டால் கொடுங்கோலனைப் போன்று பிடித்துக் கொள்கிறீர்கள் 26:131) என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஓதி குளவியைப் பிடித்து வந்தார்; மேலும் அது கொட்டுவதிலிருந்தும் பாதுகாப்பாக இருந்து வந்தார். எழுதுகின்ற இந்த எளியவனின் அனுபவத்திலும் திருக்குர்ஆனுடைய சில வசனங்களின் அற்புதமான தாக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து அல்லாஹ்வின் அற்புதமான வல்லமைகள் தெரிகின்றன.**

சுருக்கமாக, அற்புதங்களின் வீடாகிய இவ்வுலகம் எண்ணற்ற அற்புதங்களால் நிரம்பியுள்ளது.

**கடந்து சென்ற அறிவுள்ள, நேர்மையான ஞானிகள் தமது எல்லைக்குட்பட்ட அறிவுகளின் மீது ஒருபோதும் பெருமை பாராட்டவில்லை. தமது எல்லைக்குட்பட்ட அனுபவத்திற்கு இறைவனின் இயற்கைச் சட்டம் எனப் பெயர் வைப்பதை அவர்கள் மிகவும் வெட்கமற்ற நிலையாகவும், அவமரியாதையாகவும் கருதி வந்தனர்...**

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றின் விளக்குகளால் மிளிர்கின்ற வானத்தையும், பலவிதமான படைப்பினங்களால் நிரம்பியுள்ள நறுமணம் மிகுந்த பூமியையும் எந்த ஒரு கஷ்டமுமின்றி தனது சொந்த நாட்டத்தினாலேயே உருவாக்கிய இறைவனின் ஆற்றல்களின் எல்லையை எவராவது அடைய முடியுமா?

*(சுர்மா சஷ்ம் ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 90-101)*

அல்லாஹ்வின் வார்த்தைகளினால் இறைவனின் படைப்பினங்கள் உருவாகுவது ருபூபிய்யத்தின்

இரகசியமாகும். இதை ஒவ்வொரு நபரும் தத்தமது புரியும் திறனுக்கேற்ப புரிய முடியும். படைப்பினங்கள் இறைவனுடைய வார்த்தைகளின் நிழல்களாகவும் அடையாளங்களாகவும் விளங்குகின்றன என்றும் புரிந்து கொள்ளலாம். அல்லது இறைவனுடைய வார்த்தைகள்தான் இறைவனுடைய ஆற்றலாக படைப்பு என்ற தோற்றத்தில் வெளிப்படுகின்றன எனப் புரிந்து கொள்ளலாம். இந்த இரு பொருள்களையும் புரிவதற்கு இறைவனுடைய கூற்றின் சொற்றொடர் பரந்ததாக இருக்கிறது.மேலும் சில சந்தர்ப்பங்களில் திருக்குர்ஆனின் வெளிப்படையான சொற்றொடரில் படைப்பினங்களுக்கு அல்லாஹ்வின் வார்த்தைகள் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அவை ருபூபிய்யத்தின் தோற்றங்களினால் இறை ஆற்றலின் மூலமாக கட்டாயமானவையையும் புதிய சிறப்புத்தன்மைகளையும் பெற்று புதிய முழுமையான வடிவத்தைப் பெற்று விடுகின்றன. உண்மையில் இந்த இரகசியம் அறிவின் சக்கரத்தில் ஏற்றி நன்றாக புரிய இயலாத அந்த படைப்பாளனின் இரகசியங்களுள் ஒன்றாகும். இறைவன் படைக்க விரும்பியவையெல்லாம் நடந்து விட்டன. மேலும் எல்லாம் அவனாலேயே படைக்கப்பட்டவையும், அவனது படைப்பினங்களும், அவனுடைய ஆற்றலின் கையினால் உருவானதும் ஆகும் என்பதே பொதுமக்களுக்கு புரியும் நேரான வழியாகும்.

ஆனால் இறைஞானம் பெற்றவர்களுக்கு கடும் முயற்சிக்குப் பின்னர் கஷ்ஃபாக இந்த புதிய நிலை தெளிவாகி விடுகிறது. மேலும் **கஷ்ஃப் பார்வையில் இந்த எல்லா ஆன்மாக்களும், உடல்களும் அல்லாஹ்வின்**

**வார்த்தைகளேயாகும் என்றே தோன்றுகிறது.** அவை இறைவனின் முழுமையான ஞானத்தினால் புதிய கோணத்திலும், புதிய படைப்பிலும் சேர்ந்து ஒன்றாகி விட்டன. ஆனால் எந்த உறுதிமிக்க ஒன்றின் மீது காலடி எடுத்து வைப்பதும், நிலைபெற வேண்டியதும் அவசியமானதாக இருக்கிறதோ அது அந்த கஷ்ஃப் நிலைகள், அறிவுள்ள நிலைகள் ஆகியவற்றிலிருந்து பொதுவாக பயனைப் பெறுவதாகும். அதாவது இறைவன் எல்லாவற்றையும் படைப்பவனும், உருவாக்குபவனுமாவான். மேலும் எந்தவொரு பொருளும் அது ஆன்மாக்களாயினும் அல்லது உடல்களாயினும் அவன் இல்லாமல் வெளிப்படவில்லை; வெளிப்படவும் முடியாது.

ஏனெனில் இறைவார்த்தை என்ற சொற்றொடர் இந்த இடத்தில் உண்மையில் இரு காரணங்களைக் கொண்டதாக இருக்கிறது. திருக்குர்ஆன் திடமாகவும், உறுதியாகவும் கூறுவது என்னவெனில், **ஒவ்வொரு பொருளும் இறைவனால் வெளிப்பட்டது; தோன்றியது; அவனையன்றி எந்த பொருளும் உருவாகவில்லை; தானாக தோன்றவில்லை.**

எனவே இந்த அளவுக்கான உறுதி நம்பிக்கை ஆரம்ப நிலைக்கு போதுமானதாகும். பிறகு எவருக்கு இறைஞானத்தின் களங்களில் செல்வது நற்பேறாக இருக்கிறதோ அவருக்கு கடும் முயற்சிக்குப் பிறகு, وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا (எவர்கள் எமது வழியில் கடும் முயற்சி செய்கிறார்களோ அவர்களுக்கு நாம் நமது நேர்வழிகளைக் காட்டுகிறோம் - 29:70) என அல்லாஹ் கூறுவது போன்று, அந்த நிலை தெளிவாகி விடும்.

*(சுர்மா சஷ்ம் ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 173-175 அடிக்குறிப்பு)*

இங்கு இந்த நுட்பமான விஷயத்தையும் குறிப்பிடுவது அவசியமாகும். அதாவது, காரணகர்த்தாவாகிய எத்தகைய இறைவனுடைய இருப்புடன் எல்லா இருப்புகளும் சார்ந்திருக்கின்றனவோ அவன் எப்போதாவது பரிபாலிக்கும்தன்மையுடன் அல்லது வல்லமையுடன் ஒன்றை உருவாக்குவதற்காக ஏதாவது அசைவை, எண்ணத்தை உருவாக்கும்போது அந்த அசைவு நிறைவானதாகவும், முழுமையானதாகவும் இருக்கும்போது எல்லா இருப்புகளுக்கும் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அது பகுதி அளவிலான அசைவாக இருக்குமென்றால் அதற்கேற்பவே உலகின் சில பகுதிகளில் அசைவு உருவாகி விடுகிறது.

உண்மை என்னவென்றால், **இறைவனுடன் அவனது எல்லா படைப்பினங்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் உள்ள தொடர்பு உடலுக்கு உயிருடன் உள்ள தொடர்பைப் போன்றதாகும்.** மேலும் உடலின் எல்லா உறுப்புகளும் ஆன்மாவின் எண்ணங்களுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கின்றன. ஆன்மா குனிவதன் பக்கமே அவை குனிகின்றன.

இதே மாதிரியான ஒரு தொடர்புதான் இறைவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையே காணப்படுகிறது. ஃபுஸூஸ் என்ற நூலின் ஆசிரியர் (ஆகிய முஹ்யுத்தீன் இப்னு அரபி) அவர்களைப் போன்று இறைவனைப் பற்றி, ‘கலகல் அஷ்யாஅ வஹுவ அய்னுஹா’ (அதாவது அவன் எல்லா பொருள்களையும் படைத்தான். அவனே அப்பொருளாகும்) என்று நான் கூறுவதில்லை.

ஆயினும் நான், *கலகல் அஷ்யாஅ. வஹுவ கஅய்னிஹா* (இறைவனே பொருள்களைப் படைத்தான்; மேலும் அவன் அப்பொருள்களைப் போன்றவன் ஆவான்) என்று

கண்டிப்பாகக் கூறுவேன். இந்த உலகம் வழுவழுப்பான கண்ணாடித் துண்டுகளால் தளம் போடப்பட்ட அரண்மனையைப் போன்றதாகும். அதன் கீழ் மகத்தான வலிமை கொண்ட தண்ணீர் ஓடுகிறது. அவன், தான் விரும்புவதை செய்கிறான். குறைபாடுள்ள கண்கள் அவற்றை இறைவன் எனக் கருதுகின்றன. அவர்கள் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் சுயமாக இயங்கக் கூடியவையாகக் கருதுகின்றனர். ஆனால் இறைவன்தான் அவற்றை இயக்குகின்றான்.

ஞானம் மிக்கவன் மறைந்திருக்கும் இந்த இரகசியத்தை எனக்கு தெளிவுபடுத்தியிருக்கிறான். இந்த எல்லா உலகமும் தனது அனைத்து பகுதிகளுடனும் காரணகர்த்தாவாக விளங்கும் இறைவனின் பணிகளையும், எண்ணங்களையும் நிறைவேற்றுவதற்காக உண்மையிலேயே அவனுடைய உறுப்புகளைப் போன்று இருக்கின்றன. அவை சுயமாக நிலைபெறவில்லை.

மாறாக, உடலின் எல்லா ஆற்றல்களும் உயிரின் மூலமாகவே ஏற்படுவது போன்று ஒவ்வொரு நேரமும் அந்த மகத்தான ஆன்மாவிலிருந்து ஆற்றலைப் பெறுகிறது. மேலும் அந்த மகத்தான இருப்பு (எனும் இறைவனு)க்கு உறுப்புகளைப் போன்று விளங்கும் இந்த உலகம்-இதில் சில பொருள்கள் இறைவனின் முகத்தின் ஒளி போன்று விளங்குகின்றன. அவை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இறைவனுடைய எண்ணங்களுக்கு ஏற்ப ஒளியாக பயன்படுகின்றன.

இன்னும் சில பொருள்கள் அவனுடைய கைகளைப் போன்று இருக்கின்றன. வேறு சில பொருள்கள் அவனுடைய

கால்களைப் போன்று இருக்கின்றன. இன்னும் பிற பொருள்கள் அவனுடைய மூச்சு போன்று இருக்கின்றன.

**சுருக்கமாக, ஒட்டுமொத்தமான இந்த உலகம் இறைவனுக்கு ஓர் உடலைப் போன்று அமைந்துள்ளது. மேலும் உடலின் அனைத்து ஒளியும் பொலிவும் அனைத்து வாழ்வும் அதனை உயிருடன் நிலைநாட்டக் கூடிய (இறை)வனாகிய மகத்தான ஆன்மாவுடன் தொடர்புடையதாகும். மேலும் கய்யூம் (நிலைநாட்டக் கூடியவன்) ஆகிய இறைவனுடன் என்ன ஒரு தூண்டுதல் உருவானாலும் கய்யூம் (நிலைநாட்டுபவன்) ஆகிய இறைவன் விரும்புவதைப் போன்ற அதே தூண்டுதல் அந்த உடலின் அனைத்து உறுப்புகளிலோ அல்லது சிலவற்றிலோ உருவாகி விடுகிறது.**

மேற்குறிப்பிட்ட விஷயத்தை படம்பிடித்துக் காட்டுவதற்கு வருணனையாக நாம் இவ்வாறு நினைத்துப் பார்க்கலாம். அதாவது, இவ்வுலகங்களின் கய்யூம் (நிலைநாட்டக்கூடிய இறைவன்) என்பவன் எத்தகையவன் என்றால், அவனுக்கு எண்ணற்ற கைகளும், எண்ணற்ற கால்களும் இருக்கின்றன. மேலும் ஒவ்வோர் உறுப்பும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டதும், எல்லையற்ற நீளமும் அகலமும் கொண்டதாகும். மேலும் அந்த மகத்தான இருப்புக்கு உறுப்புகளும் உள்ளன.அவை அண்டசராசரங்களின் அனைத்து எல்லைகள் வரையிலும் பரவியிருக்கின்றன. மேலும் அவை ஈர்ப்புப் பணியைச் செய்கின்றன.

இந்த உறுப்புகளை வேறு சொற்களில் கூறுவதென்றால், அதற்குப் பெயர்தான் உலகம் என்பதாகும். உலகத்தை நிலைநாட்டக் கூடியவனின் எந்தவோர் இயக்கமும்

பகுதியாகவோ, முழுமையாகவோ இயங்கினால் அவனுடைய இயக்கத்துடன் அவனுடைய உறுப்புகளிலும் இயக்கம் தோன்றுதல் ஒரு கட்டாயமானதாகும். மேலும் அவன் தனது எல்லா எண்ணங்களையும் இந்த உறுப்புகளின் மூலமாகவே வெளிப்படுத்துவான். வேறு எந்த வகையாலும் வெளிப்படுத்த மாட்டான்.

எனவே படைப்பினங்களின் எந்தவொரு பகுதியும் இறைவனுடைய எண்ணங்களுக்கு கட்டுப்பட்டவாறு, அவனுடைய மறைவான நோக்கங்களை தனது பணிவான முகத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் முழுமையான தரம் கொண்ட கட்டுப்படுதலினால் இறைவனுடைய எண்ணங்களின் வழியில் மூழ்கி விடுகின்றது.

இதுவே இந்த ஆன்மீக விஷயத்திற்குக் கூறப்படும் பொதுவாக புரியும்தன்மை கொண்ட உதாரணமாகும். மேலும் இந்தக் கட்டுப்படுதல் ஒருபோதும் வெறும் ஆட்சி, பலவந்தம் ஆகியவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, ஒவ்வொரு பொருளிடமும் இறைவனை நோக்கிய ஒரு காந்த ஈர்ப்புவிசை காணப்படுகிறது. ஒருவரின் பல்வேறு உறுப்புகள் அவர் பக்கம் குனிந்திருப்பதைப் போன்றே, ஒவ்வோர் அணுவும் இயல்பாகவே இறைவன் பக்கமே குனிந்திருப்பதாகத் தெரிகிறது.

எனவே இந்த எல்லா உலகமும் மகத்தான அ(ந்த இறை)வனுக்கு உறுப்புகளைப் போன்று அமைந்திருக்கின்றன என்பதுதான் உண்மையாகும். ஆம்! இது முற்றிலும் உண்மையாகும். மேலும் இதன் காரணமாகத்தான் அவன் அகில உலகங்களின் கய்யூம் (நிலைநாட்டக் கூடியவன்) என அழைக்கப்படுகின்றான். ஏனெனில், உயிர் அதன் உடலை

நிலைநாட்டக் கூடியதாக இருப்பதைப் போன்றே இறைவனும் அனைத்து படைப்பினங்களையும் நிலைநாட்டக் கூடியவனாக இருக்கின்றான். அப்படி இல்லாவிட்டால், உலக அமைப்பு முற்றிலும் சீர்குலைந்து விடும்.

அந்த கய்யூம் (ஆகிய நிலைநாட்டக் கூடியவன்)-ன் ஒவ்வோர் எண்ணமும் - அது வெளிப்படையானதாகவோ அல்லது மறைமுகமானதாகவோ, மார்க்கத்தைச் சேர்ந்ததாகவோ அல்லது உலகத்தைச் சேர்ந்ததாகவோ இருந்தாலும் - அது இந்தப் படைப்பினங்களின் மூலமாகவே வெளிப்படுகின்றது. இந்த ஊடகங்கள் இன்றி பூமியில் வெளிப்படுகின்ற எந்தவோர் எண்ணமும் இல்லை. இதுதான் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்டு வந்து கொண்டிருக்கின்ற தொன்மையான இயற்கைச் சட்டமாகும்.

*(தவ்ஸீஹே மராம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 88-91)*

வான் கோள்களிலும், மூலக்கூறுகளிலும் பௌதீகமான முறையிலும் அழிகின்ற முறையிலும் என்னென்ன பண்புகள் காணப்படுகின்றனவோ அவை ஆன்மீகமான முறையிலும் நிரந்தமாகவும் இறைவனிடம் காணப்படுகின்றன என்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. மேலும் சூரியன் ஆகியவை சுயமாக ஒன்றுமே அல்ல; திரையில் இருக்கும் அவனுடைய வலுவான ஆற்றலே எல்லா வேலைகளையும் செய்கின்றது என்ற விஷயத்தையும் இறைவன் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிறான்.

அவன் இருண்ட உள்ளங்களில் தானே நுழைந்து அவற்றை ஒளிமயமாக்கி தானே மனிதனுக்குள் பேசுவது போன்று அவனே சந்திரனை தனது திரையின் கீழ் மறைப்பதாக ஆக்கி இருண்ட இரவில் ஒளியை வழங்குகிறான். அவனே தனது ஆற்றல்களின்

மீது சூரியன் எனும் திரையை இட்டு பகலை ஒரு மகத்தான ஒளியை வெளிப்படுத்தக் கூடியதாக ஆக்குகிறான். மேலும் பல்வேறு பயிர்களில் அவன் பல்வேறு பணிகளைச் செய்கிறான். அவனுடைய ஆற்றலே வானத்திலிருந்து பொழிகின்றது. அது மழை என்று அழைக்கப்படுகிறது. அது காய்ந்த நிலத்தை பச்சைப் பசுமையாக்கி விடுகிறது. தாகித்தவர்களுக்கு நீரூட்டுகிறது. அவனது ஆற்றலே நெருப்பில் நுழைந்து எரிக்கின்றது. காற்றில் நுழைந்து மூச்சுக் காற்றை புத்துயிரூட்டுகிறது. மலர்களை மலரச் செய்கின்றது. மேகங்களை எடுத்துச் செல்கின்றது. மேலும் ஓசையை காதுகள் வரை கொண்டு செல்கின்றது. அவனது ஆற்றலே பூமியின் வடிவில் மாறி மனித குலத்தையும் உயிரினங்களையும் தனது பாதுகாப்பில் தாங்கிக் கொள்கிறது. ஆனால் இவை இறைவனா என்ன? இல்லை.

மாறாக, படைப்பினங்களாகும். ஆயினும் எழுதுகோலுடன் கை இணைந்திருப்பது போன்று அந்தக் கோளங்களுடன் இறைவனின் ஆற்றல் இணைந்திருக்கின்றது. எழுதுகோல் எழுதுகிறது என நாம் கூறலாம்; ஆனால் எழுதுகோல் எழுதுவதில்லை; மாறாக, கை எழுதுகிறது. அல்லது உதாரணமாக, ஓர் இரும்புத் துண்டு நெருப்பில் வீழ்ந்து நெருப்பின் வடிவத்தைப் பெற்று விடுவது போன்றதாகும். அது எரிக்கின்றது; ஒளியையும் கொடுக்கிறது என நாம் கூற முடியும். ஆயினும் உண்மையில் அந்தப் பண்புகள் அதற்குரியதன்று; மாறாக நெருப்பிற்குரியதாகும்.

அவ்வாறே ஆய்வின் பார்வையில் வானத்தின் கோளங்கள், பூமியிலுள்ள மூலக்கூறுகள் இன்னும் கூறுவதென்றால் பூமியின் கீழேயும் மேலேயும் காணப்படுகின்றதும்,

உணரப்படுகின்றதுமான ஒவ்வோர் அணு ஆகிய அனைத்தும் - அவற்றிடம் காணப்படுகின்ற பல்வேறு சிறப்பம்சங்களைப் பொருத்தவரை - அவை இறைவனின் பெயராகும்; இறைவனின் பண்பாகும்; இறைவனின் ஆற்றல் ஆகும். அவை அவற்றில் மறைமுகமாக வெளிப்படுகின்றன என்பதும் உண்மையாகும். மேலும் இவை அனைத்தும் ஆரம்பத்தில் அவனுடைய வார்த்தையாகவே இருந்தது. அதை அவனுடைய ஆற்றல் பல்வேறு வகையாக வெளிப்படுத்தியிருக்கிறது.

**இறைவனின் வார்த்தை எவ்வாறு உருவமடைந்தது? அவை பிரிந்து விட்டதனால் இறைவன் குறைந்து விட்டானா என அறிவிலி கேள்வி கேட்கலாம். சூரியனிடமிருந்து ஒரு பூதக் கண்ணாடி நெருப்பைப் பெறுகின்றது; ஆனால் அந்த நெருப்பு சூரியனிடமிருந்து எதனையும் குறைத்து விடுவதில்லை. அவ்வாறே சந்திரனின் தாக்கத்தினால் கனிகளில் பருமன் உருவாகிறது. அது சந்திரனை ஒல்லியதாக்கி விடுவதில்லை. இதுவே இறைவனுடைய ஞானத்தின் இரகசியமும் எல்லா ஆன்மீக அமைப்பின் தலையூற்றும் ஆகும். இறைவனின் வார்த்தைகளினாலேயே உலகின் படைப்பு இருக்கிறது.**

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 423,424)*

நான் இந்த பெரும் பெரும் கோள்களைப் பார்க்கும்போது அவற்றின் மகத்துவத்தையும் அற்புதங்களையும் பற்றி சிந்திக்கும்போது இறைவனின் எண்ணத்தினாலும் அவனது சைகையினாலுமே எல்லாம் நடந்து விட்டன என்பதை நான் பார்க்கும்போது எங்கள் ஆற்றல் மிக்க இறைவா! நீ எத்தகைய கண்ணியமிக்க ஆற்றல்களைக் கொண்டவனாவாய்!! உனது

பணிகள் எத்தகைய அற்புதமானவையும் அறிவுக்கு அப்பாற்பட்டவையுமாகும்.!!!

உனது ஆற்றல்களை மறுக்கின்றவர் அறிவிலியாவார். அவன் இந்த பொருள்களை எந்த மூலப் பொருளிலிருந்து உருவாக்கினான் என்று உன்னைப் பற்றி ஆட்சேபனை செய்பவர் முட்டாள் ஆவார்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 425 அடிக்குறிப்பு)*

நமது இறைவன் என்று அழைக்கப்படுகின்ற அந்த இறைவனின் இறைத்தன்மையின் உண்மைநிலை என்னவெனில், அவன் அருளின் ஓர் ஆரம்பம் ஆவான். அவனது கையினால் எல்லா இருப்புகளும் தோன்றுகின்றன. இதனாலேயே அவனை வணங்குவதற்கான உரிமை உருவாகிறது. மேலும் அதனாலேயே நமது உடல், உள்ளம், உயிர் ஆகியவற்றின் மீது அவனது பிடி உரிமையுள்ள பிடியாகும் என்பதை நாம் உள்ளத்தின் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறோம். ஏனெனில் நாம் ஒன்றுமற்றவர்களாக இருந்தோம். அவனே நமக்கு இருப்பை வழங்கினான். எனவே இல்லாமையிலிருந்து நம்மை உருவாக்கியவன் முழுமையான உரிமையுடன் நமது எஜமானனாக இருக்கிறான்.

*(ஷஹ்னயே ஹக். ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 428, 429)*

உண்மை என்னவெனில் எதனால் இறைவன், இறைவன் என அழைக்கப்படுகிறானோ அந்த இறைவனின் வல்லமையில் இருக்கும் ஒரு சிறப்புத்தன்மை அவன் ஆன்மீக பௌதீக ஆற்றல்களை உருவாக்கக் கூடியவன் என்பதாகும். உதாரணமாக, உயிரினங்களின் உடலுக்கு அவன் கண்களை வழங்கி இருப்பதில் உள்ள உண்மையான மேன்மை அவன்

அந்த கண்களை உருவாக்கினான் என்பதில் அல்ல; மாறாக, அவன் உடலின் அணுக்களில் பார்வைக்கான ஒளி உருவாகும் பொருட்டு முன்னரே மறைமுகமான ஆற்றல்களை அவற்றில் உருவாக்கி வைத்திருந்தான் என்பதில் மேன்மை இருக்கிறது. எனவே அந்த ஆற்றல்கள் தாமாகவே இருக்கின்றனவென்றால் பிறகு இறைவன் ஒன்றுமேயில்லை. வேலை செய்வது ஒருவன்; பெயர் வாங்குவது இன்னொருவன் என்ற கூற்றிக்கிணங்க அந்த பார்வைப் புலனுக்கு அவை ஆற்றல்களை உருவாக்குகின்றன என்றால் அதில் இறைவனுக்கு எந்த சம்பந்தமும் இல்லை. உலகின் அணுக்களில் அந்த ஆற்றல்கள் இல்லை என்றால் இறைத்தன்மை ஒன்றுமற்றதாகி விடுகின்றது.

எனவே இறைவன் உலகின் ஆன்மாக்கள் மற்றும் அணுக்களின் எல்லா ஆற்றல்களையும் தானே படைத்தான்; படைக்கின்றான். மேலும் அவனே அவற்றில் பலவிதமான சிறப்புத்தன்மைகளை வைத்திருக்கிறான்; வைக்கிறான். இதிலேயே இறைமையின் எல்லா அடிப்படையும் இருக்கிறது. எனவே அந்த சிறப்புப் பண்புகள் இணையும்போது தமது அற்புதத்தைக் காட்டுகின்றன.

எனவே இந்த காரணத்தினாலேயே எந்த **கண்டுபிடிப்பாளரும் இறைவனுக்கு நிகராக முடியாது. ஏனெனில் ஒருவர் தொடர் வண்டியைக் கண்டுபிடித்தவராக இருந்தாலும் அல்லது தந்தியை அல்லது நிழற்படத்தை அல்லது அச்சகத்தை அல்லது வேறு எந்த தயாரிப்பைக் கண்டு பிடித்தவராக இருந்தாலும், எந்த ஆற்றல்களின் மூலமாக அவர் அந்த தயாரிப்பை ஆயத்தம் செய்தாரோ அந்த ஆற்றல்களை**

**உருவாக்கியவர், தாம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது வருகிறது.**

இன்னும் கூறுவதாயின், இஞ்சினை ஓட்டுவதற்கு நீராவியின் ஆற்றல் பயன்படுத்தப்படுவதைப் போன்று இந்த எல்லா கண்டுபிடிப்பாளர்களும் ஏற்கனவே படைக்கப்பட்ட ஆற்றல்களை பயன்படுத்துகின்றனர். எனவே வித்தியாசம் என்னவெனில், இறைவன் மூலக்கூறில் இந்த ஆற்றல்களை உருவாக்கி இருக்கிறான். ஆனால் இவர்கள் ஆற்றல்களையும் சக்திகளையும் தாமாகவே உருவாக்க முடியாது.

எனவே இறைவனை உலகின் அணுக்களின் ஆன்மாக்களின் எல்லா ஆற்றல்களையும் கண்டு பிடித்தவனாக குறிப்பிடாதவரை அவனது இறைமை ஒருபோதும் நிரூபணமாக முடியாது. அப்படிப்பட்ட நிலையில் அவனது அந்தஸ்து ஒரு கட்டுமானப் பணி செய்பவன் அல்லது தச்சன் அல்லது கொல்லன் அல்லது குயவன் ஆகியவர்களைத் தவிர வேறொன்றும் இருக்காது. இது மறுக்க முடியாத மிகத் தெளிவான விஷயமாகும்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 383,384)*

**ஆன்மாக்களும் அணுக்களும் தனது எல்லா ஆற்றல்களுடன் தொன்மையானவையும், முடிவில்லாதவையும் படைக்கப்படாதவையும் ஆகும் என்ற ஆர்ய சமாஜிகளின் கொள்கை ஒருபோதும் சரியானதல்ல என்று நாம் முழுமையான ஈமானுடனும், முழுமையான ஞானத்துடனும் சாட்சி கூறுகிறோம். இதனால் இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் இடையில் இருக்கும் எல்லா தொடர்பும் அறுந்து விடுகின்றது.**

பண்டிதர் தயானந் எடுத்து வைத்திருக்கும் இது ஒரு புதிய, வெறுக்கத்தக்க கொள்கையாகும். இந்த கொள்கைக்கு வேதத்துடன் எந்த அளவுக்கு தொடர்பு இருக்கிறது என்பதை நாம் அறியோம். ஆனால் ஆர்ய சமாஜிகள் தமது கைகளால் வெளியிட்டிருக்கும் இந்தக் கொள்கை முழுமையான ஞானம், முழுமையான கவனம், முழுமையான சிந்தனை ஆகியவற்றிற்குப் பிறகு பகுத்தறிவின் பார்வையில் ஒருபோதும் சரியானதன்று.

இதற்குப் போட்டியாக இருக்கும் சனாதன தர்மத்தின் கொள்கையை பண்டிதர்களின் தேவையில்லாத மிகைத்திருக்கும் பண்பு சீர்குலைத்து விட்டது என்றாலும் - வேத பண்டிதர்களின் அளவுகடந்த தன்மை பல ஆட்சேபனைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கி விட்டதென்றாலும் - அதில் உண்மையின் ஒரு பொலிவு காணப்படுகிறது.

இந்த கொள்கைகளை அதிகப்படியானவற்றிலிருந்து தனியாக்கி விட்டால் எல்லா பொருளும் பரமேசுவரனின் கைகளிலிருந்தே வெளியானது என்ற கருத்தே கிடைக்கிறது.

எனவே இந்த நிலையில் எல்லா சந்தேகங்களும் விலகி விடுகின்றன. இந்த எல்லா ஆன்மாக்களும் உடல்களின் அணுக்களும் அவற்றின் ஆற்றல்களும் சக்திகளும் தாக்கங்களும் சிறப்புத்தன்மைகளும் இறைவன் புறமிருந்துள்ளன என்பதே சனாதன தர்மத்தின் கொள்கையின்படி வேதத்தின் கொள்கையுமாகும்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 387)*

மனிதன் தனது ஆன்மா மற்றும் எல்லா ஆற்றல்கள், இருப்பின் ஒவ்வோர்அணுவுடனும் இறைவனின் படைப்பாகும். அதை அவன் படைத்தான் என்பதை திருக்குர்ஆன் நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றது.

**திருக்குர்ஆனின் போதனையின்படி நாம் இறைவனின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கிறோம். நாம் அவனிடம் கேட்கும் எதற்கும் நமக்கு எந்த உரிமையுமில்லை. அல்லது எதையாவது நிறைவேற்றாததன் காரணமாக அவன் குற்றவாளியாவதற்கு அவன் மீது நமக்கு எந்த உரிமையுமில்லை. எனவே நாம் நமக்குப் போட்டியாக இறைவனுக்கு நீதிமான் என்று பெயர் வைக்க முடியாது. மாறாக, நாம் முற்றிலும் ஒன்றுமற்றவர்களாக இருப்பதன் காரணமாக அவனுக்கு ரஹீம் (மேன்மேலும் கருணை காட்டுபவன்) எனப் பெயர் வைக்கிறோம்.**

சுருக்கமாக நீதிமான் என்று கூறுவதில் நாம் அவனுக்கு எதிரில் உரிமைகளைக் கொண்டிருக்கிறோம் என்றும் அந்த உரிமையை நிறைவேற்றாத நிலையில் அவனை உரிமையைப் பறித்தல் என்பதுடன் தொடர்புபடுத்திக் கூறலாம் என்ற விஷமத்தனம் மறைந்திருக்கிறது.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 36)*

**ஆனால் திருக்குர்ஆன் வேதத்தைப் போன்று காரணமின்றி வலுக்கட்டாயமாக மகத்துவமிக்க அல்லாஹ்வை எல்லா ஆன்மாக்களுக்கும் உடல்களின் ஒவ்வோர் அணுக்களுக்கும் எஜமானனாகக் குறிப்பிடவில்லை.**

لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

*(திருக்குர்ஆன் 57:3)*

خَلَقَ كُلَّ شَىْءٍ فَقَدَّرَهٗ تَقْدِيْرًا

*(திருக்குர்ஆன் 25:3)* என்று குறிப்பிட்டது போன்று அதற்கு ஒரு காரணத்தைக் கூறியிருக்கிறது.

இதன் பொருள்: வானம், பூமி மற்றும் அதில் உள்ள அனைத்தும் அவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன. ஏனெனில் அந்த அனைத்து பொருள்களையும் அவனே படைத்திருக்கிறான். பிறகு ஒவ்வொரு படைப்பினத்தின் ஆற்றலுக்கும் வேலைக்கும் ஓர் எல்லையை நியமித்துள்ளான். எல்லைக்குட்பட்ட பொருள்கள், இறைவனாக இருக்கும் ஓர் எல்லைக்குட்படுத்துபவனைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்துள்ளான்.

**உடல்கள் தத்தமது எல்லைகளுக்குள் வரையறுக்கப்பட்டிருப்பதையும், அந்த எல்லையை விட்டும் வெளியேற முடியாததையும் போன்று ஆன்மாக்களும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தமக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆற்றல்களை விட அதிகமாக எந்தவோர் ஆற்றலையும் உருவாக்க முடியாது என்பதை நாம் பார்க்கிறோம்.**

இப்போது நாம் முதலில் உடல்கள் எல்லைக்குட்பட்டவையாக இருக்கின்றன என்பது பற்றி சில உதாரணங்களை எடுத்து வைக்கிறோம். உதாரணமாக, சந்திரன் ஒரு மாதத்தில் தனது சுற்றை முடித்து விடுகிறது. அதாவது 29 நாட்கள் அல்லது 30 நாட்கள். ஆனால் சூரியன் 364 நாட்களில்

தனது சுற்றை முழுமை செய்கின்றது. மேலும் சூரியன் தனது சுற்றை, சந்திரனின் சுற்றின் அளவைப் போன்று அந்த அளவுக்கு குறைப்பதற்கு அதற்கு ஆற்றல் இல்லை.

அவ்வாறே சூரியனுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அளவுக்கு தனது சுற்றின் நாளை அதிகமாக்குவதற்கு சந்திரனுக்கு ஆற்றல் இல்லை. இந்த இரண்டு கோளங்களின் சுற்றில் கொஞ்சம் கூடுதல் குறைவு செய்வதற்கு முழு உலகமும் ஒன்றுபட்டாலும் அது ஒருபோதும் அவர்களால் முடியாது. அவ்வாறே சூரியனும் சந்திரனும் தத்தமது சுற்றுப் பயணத்தில் ஏதாவது மாற்றம் செய்வதற்கு ஆற்றல் இல்லை.

எனவே எவன் இந்த நட்சத்திரங்களை அவற்றிற்குரிய எல்லைக்குள் நியமித்துள்ளானோ அதாவது எவன் அவற்றிற்கான எல்லையை வகுக்கக் கூடியவனோ அவனே இறைவன் ஆவான். அவ்வாறே மனிதனின் உடலிலும் யானையின் உடலிலும் மிகப் பெரும் வித்தியாசம் இருக்கிறது.

**மனிதன் தனது உடல் அளவிலான ஆற்றல்களிலும், உடலின் பருமனிலும் யானைக்கு சமமாவதற்கு எல்லா மருத்துவர்களும் இணைந்து செயல்பட்டாலும் அது அவர்களுக்கு சாத்தியமற்றதாகும். யானை மனிதனின் உயரம் அளவுக்கே எல்லைக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என அவர்கள் விரும்பினாலும் அதுவும் அவர்களுக்கு சாத்தியமில்லை.**

ஆக, இங்கும் ஓர் எல்லையை உருவாக்க வேண்டியதிருக்கிறது. சூரியன் சந்திரனிடம் ஓர் எல்லை இருக்கிறது. அந்த எல்லையே எல்லைக்குட்படுத்துபவனை சுட்டிக்காட்டுகிறது. அதாவது யானைக்கு அந்த அளவை உருவாக்கி இருக்கிறான்; மனிதனுக்கு அந்த அளவை

உருவாக்கி இருக்கின்ற அத்தகைய இறைவனை சுட்டிக்காட்டுகிறது.

சிந்தித்துப் பார்த்தால் இந்த எல்லா பௌதீக பொருள்களிலும் அற்புதமான முறையில் இறைவனின் ஆதிக்கம் மறைமுகமாக தென்படுகிறது. மேலும் அற்புதமான முறையில் அதன் வரையறுக்கப்பட்ட நிலை காணப்படுகிறது. நுண்நோக்கிக் கருவிகள் இன்றி காண முடியாத அந்த புழுக்களின் அளவிலிருந்து பெரும் கப்பலையும் ஒரு சிறு கவளத்தைப் போன்று விழுங்கக் கூடிய மாபெரும் மீன்களின் அளவு வரை உயிரினங்களின் உடல்களில் ஓர் எல்லைக்குட்பட்ட அற்புதமான காட்சி காணப்படுகிறது. எந்தவோர் உயிரினமும் தனது உடலின் அடிப்படையில் தனது எல்லைக்கு அப்பால் வெளியே செல்ல முடியாது. அவ்வாறே வானத்தில் தென்படுகின்ற எல்லா நட்சத்திரங்களும் தத்தமது எல்லையை விட்டு வெளியே செல்ல முடியாது. எனவே இந்த எல்லை, திரைக்குப் பின்னால் எல்லையை வகுப்பவன் ஒருவன் இருக்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

خَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهُ تَقْدِيرًا என்ற மேற்குறிப்பிட்ட (25:3) வசனத்தின் பொருள் இதுவேயாகும்.

**இந்த எல்லை உடல்களில் இருப்பதைப் போன்றே இந்த எல்லை ஆன்மாக்களிலும் இருப்பது நிரூபணமாகின்றது. மனிதனுடைய ஆன்மா எந்த அளவுக்கு தனது மேன்மைகளை வெளிப்படுத்த முடியுமோ அல்லது எந்த அளவுக்கு மேன்மையின் பக்கம் முன்னேற்றம் அடைய முடியுமோ அந்த மேன்மைகளை ஒரு யானையின் ஆன்மா - அது பருமனான உடலைக்**

**கொண்டதாக இருந்தாலும் பெற முடியாது.**

அவ்வாறே ஒவ்வொரு விலங்கின் ஆன்மாவும் தனது ஆற்றல்கள், சக்திகள் ஆகியவற்றைப் பொருத்தவரை தனது வகையின் வட்டத்திற்குள் எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. தமது வகைக்காக நியமிக்கப்பட்டுள்ள, விதிக்கப்பட்டுள்ள மேன்மைகளை மட்டுமே அவை பெற முடியும். எனவே உடல்கள் எல்லைக்குட்படுத்தப்பட்டிருப்பது அவற்றை எல்லைக்குட்படுத்துபவன், படைப்பாளன் இருக்கின்றான் என்பதை சுட்டிக்காட்டுவதைப் போன்றே ஆன்மாக்களின் ஆற்றல்கள் எல்லைக்குட்படுத்தப்பட்டிருப்பதும் அவற்றையும் படைத்தவன், எல்லைக்குட்படுத்துபவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 17-19)*

**இறைவன் பல்வேறு விதமான இயல்புகளை ஏன் உருவாக்கினான்? அனைவரும் முழுமையான இறைஞானம், முழுமையான அன்பு ஆகியவற்றின் படித்தரம் வரை சென்றடையும் அளவிலான ஆற்றல்களை அவர்கள் அனைவருக்கும் ஏன் வழங்கவில்லை? என்ற சந்தேகம் எவருடைய உள்ளத்திலாவது உருவாகிறதென்றால் அந்த கேள்வியும் இறைவனின் பணியில் ஒரு வீணான தலையீடு ஆகும். அது ஒருபோதும் ஆகுமானதன்று.**

**எல்லா படைப்பினங்களையும் ஒரே படித்தரத்தில் வைப்பதும் எல்லாவற்றிற்கும் உயர்ந்த மேன்மைகள் வழங்குவதும் இறைவன் மீது கடமையான ஒன்றன்று. அது அவனுடைய அருள் மட்டுமே ஆகும். அதை அவன் எவருக்கு விரும்புகிறானோ செய்யலாம்; எவருக்கு**

விரும்புகிறானோ அவன் செய்யாமல் இருக்கலாம்; அதற்கான அதிகாரம் அவனுக்கு இருக்கிறது என்பதை ஒவ்வோர் அறிவுடையவரும் புரிய முடியும்.

உதாரணமாக, உங்களை இறைவன் மனிதனாகப் படைத்துள்ளான்; கழுதையை மனிதனாகப் படைக்கவில்லை. உங்களுக்கு அறிவை வழங்கியுள்ளான்; அதற்கு அறிவை வழங்கவில்லை. உங்களுக்கு கல்வி கிடைத்துள்ளது; அதற்கு கிடைக்கவில்லை. இவையெல்லாம் எஜமானனின் விருப்பத்திற்குட்பட்டவையாகும். உங்களுக்கு உரிமை இருந்தது; அதற்கு இருக்கவில்லை என்ற எந்த விஷயமும் இல்லை.

சுருக்கமாக, எந்த நிலையில் இறைவனுடைய படைப்பினங்களில் தெளிவான படித்தரங்களின் தெளிவான வித்தியாசங்கள் காணப்படுகின்றனவோ அவற்றை எந்த அறிவுள்ளவரும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறிருக்கும்போது அதிகாரத்தைக் கொண்ட எஜமானனுக்கு முன்னால் காணப்படுவதற்கும் எந்த உரிமையும் இல்லாத படைப்பினங்கள் பெரியவையாக இருப்பதில் ஏதாவது பெருமை பாராட்ட முடியுமா என்ன?

இறைவன் தனது அடியார்களுக்கு இருப்பு எனும் அந்தஸ்தை வழங்குவது ஓர் அருளும் கருணையுமாகும். அருள்பாலிப்பவனும் கருணைகாட்டுபவனும் தனது அருளிலும், கருணையிலும் கூட்டவோ குறைக்கவோ அதிகாரம் கொண்டவனாக இருக்கிறான்.

அவனுக்கு குறைவாகக் கொடுக்க அதிகாரம் இல்லை என்றால் பின்னர் அதிகம் கொடுக்கவும் அதிகாரம் இருக்காது. அந்நிலையில் அவன் எஜமானன் என்ற

**முறையிலான அதிகாரங்களை நிலைநாட்ட முடியாதவனாகி விடுவான்.**

படைத்தவன் மீது படைப்பினங்களுக்கு தேவையில்லாமல் ஏதாவது ஓர் உரிமை இருப்பதாகக் குறிப்பிட்டால் பிறகு அதனால் தொடர் கட்டாயமானதாகி விடும் என்பது வெளிப்படையாகும். (அதாவது படைக்கப்பட்ட மக்களுக்காக படைத்தவனாகிய இறைவன் மீது கடமை இருக்கிறது என நம்பினால் அது ஒரு தொடர்கதையாகி விடும். படைக்கப்பட்ட மக்கள் படைத்த இறைவனிடம் தமது உரிமைகளைக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இறைவனும் அவற்றை நிறைவேற்றிக் கொண்டே இருக்க வேண்டியது வரும் - மொழிபெயர்ப்பாளர்.)

ஏனெனில் படைப்பாளன் ஒரு படைப்பினத்தை எந்த அந்தஸ்தில் உருவாக்குவானோ அந்த அந்தஸ்திலேயே அந்த படைப்பினம் எனது உரிமை இதை விட அதிகமானதாகும் எனக் கூற முடியும். இறைவனால் எல்லையற்ற அந்தஸ்துகளில் படைக்க முடியும். அவனுடைய எல்லையற்ற ஆற்றலுக்கு முன்னால் மனிதனை உருவாக்குவதனால் மட்டும் படைக்கும் சிறப்புத்தன்மை முடிவு பெற்று விடுவதில்லை.

அந்நிலையில் படைப்பினங்களைப் பற்றிய கேள்விகளின் தொடர் ஒருபோதும் முடிவுறாது. மேலும் ஒவ்வொரு படைப்பின் அந்தஸ்தில் மிகவும் அதிகமாக தனது உரிமையை வேண்டுவதற்கான உரிமை அதற்குக் கிடைக்கும். மேலும் இதுவே தொடர் என்பதாகும்.

படித்தரங்களின் இந்த வித்தியாசங்களை வைப்பதில் என்ன ஞானம் இருக்கிறது என்பதை தேடுவதாக இருந்தால் இது தொடர்பாக திருக்குர்ஆன் மூன்று ஞானங்களை

எடுத்துரைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவை அறிவின் அடிப்படையில் மிகவும் தெளிவானவையும், ஒளிமிக்கவையும் ஆகும். அவற்றை அறிவுடையவர் எவரும் மறுக்க முடியாது. அவை விரிவாக இவ்விதமாகும்:

முதலாவதாக, உலக விவகாரங்கள் அதாவது சமூக விஷயங்கள் அழகிய காரணத்துடன் வடிவமைய வேண்டும். உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான்:

وَقَالُوا لَوْلَا نُزِّلَ هَٰذَا الْقُرْآنُ عَلَىٰ رَجُلٍ مِّنَ الْقَرْيَتَيْنِ عَظِيمٍ ﴿٣٢﴾
أَهُمْ يَقْسِمُونَ رَحْمَتَ رَبِّكَ ۚ نَحْنُ قَسَمْنَا بَيْنَهُم مَّعِيشَتَهُمْ
فِي الْحَيَاةِ الدُّنْيَا ۚ وَرَفَعْنَا بَعْضَهُمْ فَوْقَ بَعْضٍ
دَرَجَاتٍ لِّيَتَّخِذَ بَعْضُهُم بَعْضًا سُخْرِيًّا ۗ وَرَحْمَتُ
رَبِّكَ خَيْرٌ مِّمَّا يَجْمَعُونَ ﴿٣٣﴾

*(திருக்குர்ஆன் 43:32,33)*

அதாவது, திருக்குர்ஆன் மக்காவின், தாயிஃபின் மிகப் பெரிய செல்வந்தர்கள் மீது - தலைவர்களில் பெருந்தலைவர்கள் மீது - ஏன் இறங்கவில்லை? அப்போது அவருடைய தலைமையின் மகத்துவத்திற்கு ஏற்றதாக இருந்திருக்குமே! மேலும் அவர்களைப் பற்றிய அச்ச உணர்வு, அரசாட்சி, செல்வம் ஆகியவற்றை செலவு செய்வதால் மார்க்கம் சீக்கிரம் பரவி விடுமே! எவரிடம் உலக சொத்துக்களில் எதுவுமில்லையோ அப்படிப்பட்ட ஓர் ஏழையான மனிதர் ஏன் இந்த பதவியால் சிறப்பிக்கப்பட்டார்? என காஃபிர்கள் கூறுகின்றனர்.

(பிறகு அடுத்து அதற்கு விடையாக அவனே இவ்வாறு கூறுகின்றான்:) اَهُمْ يَقْسِمُوْنَ رَحْمَتَ رَبِّكَ - துவக்க காலத்திலிருந்தே விநியோகிப்பவனாக இருப்பவனின் கருணைகளை விநியோகம் செய்வது அவர்களின் அதிகாரத்தில் இருக்கிறதா என்ன?

அதாவது இது ஞானம் மிக்க இறைவனின் செயலாகும். சிலருடைய திறமைகளை குறைவாக வைப்பதும் அவர்கள் உலக செல்வங்களில் சிக்கியிருக்கின்றனர். தலைவர், செல்வந்தர் என அழைக்கப்பட்டதால் அவர்கள் பெருமையடித்துக் கொண்டனர். அசல் நோக்கத்தை மறந்து விட்டனர். மேலும் அவன் சிலருக்கு ஆன்மீக அருள்களையும் பரிசுத்தமான மேன்மைகளையும் வழங்கினான். மேலும் அவர்கள் அந்த உண்மையான அன்பிற்குரியவனின் அன்பில் மூழ்கி நெருக்கமானவர்களாகி விட்டனர். மேலும் ஏக இறைவனால் ஒப்புக் கொள்ளப்பட்டவர்களாகி விட்டனர்.

(பிறகு அதற்குப் பின்னர் இந்த தகுதிகளின் வேறுபாடுகள், சிந்தனைகளின் வேறுபாடுகள் ஆகியவற்றில் மறைந்திருக்கும் ஞானத்தின் பக்கம் சுட்டிக் காட்டினான்.)

نَحْنُ قَسَمْنَا بَيْنَهُمْ مَّعِيْشَتَهُمْ

**அதாவது நான் சிலரை பணக்காரர்களாகவும் சிலரை ஏழையாகவும் சிலரை மென்மையான இயல்பு கொண்டவர்களாகவும் சிலரை கடுமையான இயல்பு கொண்டவர்களாகவும் சிலருடைய பண்புகளை சில பணியின் மீதும் வேறு சிலருடைய பண்புகளை மற்ற பணியின் மீதும் சாய்ந்திருக்குமாறு செய்தோம் என்றால் அதற்குக் காரணம், நாம் சிலருக்கு சிலர் பயன்படக்**

**கூடியவராகவும் தொண்டராகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் ஒருவர் மீது மட்டும் சுமை இருக்கக் கூடாது என்பதற்காகவும் இந்த வசதி அவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காகவுமே ஆக்கினோம்.**

மேலும் இவ்விதமாக மனித குலத்தின் பணிகள் அனைத்தும் எளிதாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும் ஆகும். பிறகு கூறினான்: இது தொடர்பாக உலகின் செல்வங்களை விட இறைவனின் வேதம் அதிகமாக பயன்தரக் கூடியதாகும். இது இறையறிவிப்பின் தேவையின் பக்கம் சுட்டிக்காட்டும் நுட்பமான ஒன்றாகும்.

இதன் விபரமாவது, மனிதன் இயல்பாக தனது சுற்றார்களுடன் சேர்ந்து வாழ்பவனாக இருக்கின்றான். ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யாமல் எதுவும் நடக்க முடியாது. உதாரணமாக, வாழ்க்கையின் அடிப்படையாக இருக்கும் ஒரு ரொட்டியைப் பாருங்கள். அது ஆயத்தமாவதற்கு எந்த அளவுக்கு சார்ந்திருத்தலும் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது! விவசாயம் செய்வதிலிருந்து ரொட்டி சுட்டு சாப்பிடுவதற்கு தகுதியாகும் வரை இருபதுக்கும் மேற்பட்ட தொழில் செய்பவர்களின் உதவி தேவைப்படுகிறது!!

எனவே பொதுவான சமூக விவகாரங்களில் எந்த அளவுக்கு ஒத்துழைப்பும் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் தேவையும் இருக்கும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இந்த தேவையின் ஏற்பாட்டாகத்தான் ஞானம் மிக்க(இறை)வன் மனித குலத்தை பல்வேறு இயல்புகளைக் கொண்டவர்களாகவும், திறன்களைக் கொண்டவாறும் படைத்திருக்கிறான். ஒவ்வொரு நபரும் தனது திறன் மற்றும் இயல்புக்கேற்ப ஒரு செயலில் மிக நன்றாக ஈடுபட வேண்டும்

என்பதற்காக அவ்வாறு செய்துள்ளான்.

சிலர் உழலாம்; சிலர் விவசாயத்திற்கான கருவிகளை உருவாக்கலாம். சிலர் மாவை அரைக்கலாம். சிலர் நீரைக் கொண்டு வரலாம். சிலர் ரொட்டியை சுடலாம்; சிலர் நூல் நூற்கலாம். சிலர் ஆடையை பின்னலாம். சிலர் கடையை திறக்கலாம். சிலர் வியாபாரத்திற்கான பொருள்களை வாங்கி வரலாம். சிலர் பணி செய்யலாம். இவ்வாறு ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவர்களாக ஆகலாம். மேலும் சிலர் சிலருக்கு உதவி செய்து கொண்டிருக்கலாம்.

எனவே ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதன் தேவை இருக்கும்போது அவர்கள் ஒருவர் மற்றவருடன் தொடர்பு வைப்பதும் அவசியமாகி விட்டது. இந்த விவகாரத்திலும் ஒருவர் மற்றவருக்கு கொடுக்கல் வாங்கல் உருவாவதிலும் ஈடுபட வேண்டியது ஏற்பட்ட பிறகு உலக விவகாரங்களில் மூழ்கியிருப்பதன் பண்பாகிய கவனக் குறைவும் ஏற்பட்டுவிட்டபோது, உலக அமைப்பில் குழப்பம் ஏற்படாதிருப்பதற்காக அவர்களை அநீதி, வரம்பு மீறுதல், வெறுப்பு, குழப்பம் செய்தல், அல்லாஹ்விடமிருந்து கவனமற்று இருத்தல் ஆகியவற்றிலிருந்து அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு நீதி, சட்டத்தின் தேவை ஏற்பட்டது.

ஏனெனில் வாழ்வு மரணம் ஆகியவற்றின் அனைத்து அடிப்படையும் நீதி மற்றும் இறைவனை புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றில் உள்ளது. மேலும் நீதியை நிலைநாட்டுதல் மற்றும் இறைவனை கண்டறிதல் ஆகியவை ஒரு சட்டத்தில் நிலைகொள்ள வேண்டும். அதில் நீதியின் நுண்ணிய கருத்துகள், இறைஞானத்தின் உண்மைகள் முழுமையாக சரியான முறையில் இருக்க வேண்டும்.

எந்த விதமான அநீதி அல்லது எந்தவிதமான தவறு மறதியினாலோ அல்லது தெரிந்தோ காணப்படக் கூடாது. மறத்தல், தவறிழைத்தல், அநீதியிழைத்தல், வரம்பு மீறுதல் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் தூய்மையானவனாகவும், கட்டுப்படத்தகுந்தவனாகவும், கண்ணியத்திற்குரியவனாகவும் இருப்பவனால்தான் அப்படிப்பட்ட சட்டம் உருவாக முடியும்.

ஏனெனில் ஒரு சட்டம் சிறப்பாக இருந்தாலும் அந்த சட்டத்தை செயல்படுத்துபவருக்கு தனது தகுதிக்கேற்ப மற்ற அனைவர் மீதும் மேலோங்குதல் மற்றும் ஆட்சியின் உரிமை இல்லை என்றால் அல்லது அவர் மக்களின் பார்வையில் எல்லா வகையிலும் அநீதி, அசுத்தம், குற்றம், தவறு ஆகியவற்றிலிருந்து தூயவராக இல்லாவிட்டால் அப்படிப்பட்ட சட்டம் முதலில் செல்லவே செல்லாது.

சில நாட்கள் சென்றாலும் சில நாட்களிலேயே பல விதமான குழப்பங்கள் உருவாகி விடும். நன்மைக்கு பதிலாக தீமைக்குக் காரணமாக அமைந்து விடும். இந்த எல்லா காரணங்களினாலும் இறை வேதத்தின் தேவை ஏற்பட்டது. ஏனெனில் எல்லா நல்ல பண்புகளும் எல்லாவிதமான நல்ல மேன்மைகளும் சிறப்புகளும் இறை வேதத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

**இரண்டாவது,** படித்தரங்களில் வித்தியாசங்களை வைத்திருப்பதன் ஞானம், நல்லவர்களின், தூயவர்களின் மேன்மை வெளிப்பட வேண்டும் என்பதாகும். ஏனெனில் எல்லா மேன்மைகளும் ஒப்பாய்வின் மூலமாகவே தெரிய வருகிறது. உதாரணமாக அவன் கூறுகிறான்:

إِنَّا جَعَلْنَا مَا عَلَى الْأَرْضِ زِينَةً لَّهَا

لِنَبْلُوَهُمْ اَيُّهُمْ اَحْسَنُ عَمَلًا

*(திருக்குர்ஆன் 18:8)*

அதாவது, நாம் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் பூமியின் அலங்காரமாகப் படைத்துள்ளோம். தீயவர்களுக்கெதிரில் நல்லவர்களின் தகுதி வெளிப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தோம். கடுமையானவர்களைக் காண்பதன் மூலம் மென்மையானவர்களின் மென்மை தெரிய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தோம். ஏனெனில் எதிர்மறையான அம்சம் இன்னோர் எதிர்மறையான அம்சத்தின் மூலமாகவே கண்டறியப்படுகிறது. மேலும் நல்லவர்களின் மதிப்பும் மேன்மையும் தீயவர்களினாலேயே தெரிய வருகிறது.

**மூன்றாவது,** படித்தரங்களில் வித்தியாசங்களை வைத்திருப்பதன் ஞானம், ஆற்றல்களின் விதங்களை வகைகளை வெளிப்படுத்துவதாகும். மேலும் தனது மகத்துவத்தின் பக்கம் கவனமூட்டுவதாகும். உதாரணமாக அவன் கூறுகிறான்:

مَا لَكُمْ لَا تَرْجُوْنَ لِلّٰهِ وَقَارًا ۝١٤ وَقَدْ خَلَقَكُمْ اَطْوَارًا ۝١٥

*(திருக்குர்ஆன் 71: 14,15)*

அதாவது உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நீங்கள் இறைவனின் மகத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லை? ஆனால் அவன் தனது மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக உங்களை பல்வேறு வடிவங்களிலும், இயல்புகளிலும் படைத்துள்ளான். அதாவது ஞானம் மிக்கவன் அவனது மகத்துவமும் ஆற்றலும் கண்டறியப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே அவன் பல்வேறுபட்ட திறன்களையும்

இயல்புகளையும் உருவாக்கினான். உதாரணமாக, *(திருக்குர்ஆன் 24:46)* இன்னோரிடத்தில் கூறுகிறான்:

وَاللّٰهُ خَلَقَ كُلَّ دَآبَّةٍ مِّنْ مَّآءٍ ۚ فَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰى بَطْنِهٖ ۚ وَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰى رِجْلَيْنِ ۚ وَمِنْهُمْ مَّنْ يَّمْشِىْ عَلٰٓى اَرْبَعٍ ۭ يَخْلُقُ اللّٰهُ مَا يَشَآءُ ۭ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

அதாவது இறைவன் எல்லா உயிரினங்களையும் தண்ணீரிலிருந்து படைத்தான். எனவே சில உயிரினங்கள் வயிற்றில் ஊர்ந்து செல்கின்றன. சில இரண்டு கால்களில் செல்கின்றன. சில நான்கு கால்களில் செல்கின்றன. இறைவன், தான் நாடுவதைப் படைக்கின்றான். இறைவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவனாவான். இறைவனுடைய பல்வேறு ஆற்றல்கள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே அவன் பல்வேறு பொருள்களைப் படைத்துள்ளான்.

சுருக்கமாக, படைப்பினங்களின் இயல்பில் காணப்படுகின்ற பல்வேறு விதமான இயல்புகளில் உள்ள இறைஞானம் இந்த வசனங்களில் இறைவன் குறிப்பிட்டுள்ள இந்த மூன்று விஷயங்களையே சார்ந்துள்ளது. எனவே சிந்தியுங்கள்.

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் 4 பகுதிகள். ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 203-207 அடிக்குறிப்பு எண்:11)*

**பண்டிதர் தயானந்த சரஸ்வதியின் சத்யார்த்த பிரகாஷ் என்ற நூலில் உருது பக்கம் 501-ல் எழுதியிருப்பதாவது, பரமேசுவரர் எவருடைய பாவத்தையும் மன்னிக்க முடியாது. அவ்வாறு மன்னித்தால் அவர் நீதியாளனாக இருக்க மாட்டார். எனவே பரமேசுவரரை வெறும் ஒரு**

**நீதிபதி என்ற அளவுக்கு மட்டுமே அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். எஜமானன் என்ற அந்தஸ்து அவருக்கு இல்லை என்று கூறுகிறார்.**

அவ்வாறே பண்டிதர் தயானந் தனது மொழியாக்கம் செய்யப்பட்ட நூல் பக்கம் 501-ல் **எல்லைக்குட்பட்ட செயல்களுக்கு பரமேசுவரர் எல்லையற்ற பிரதிபலனைத் தரவியலாது என்று எழுதியிருக்கிறார். எனவே அவன் எஜமானன் என்ற அந்தஸ்தைக் கொண்டிருக்கிறான் என்றால் எல்லைக்குட்பட்ட தொண்டுக்கு பிரதிபலனாக எல்லையற்ற கனிகளைத் தருவதில் என்ன குற்றம் இருக்கிறது?**

ஏனெனில் எஜமானரின் வேலைகளுக்கு நீதியுடன் எந்தத் தொடர்பும் இல்லை. நாமும் ஏதாவது செல்வத்திற்கு எஜமானராக இருந்து யாசிப்பவருக்கு ஏதாவது கொடுக்க விரும்பினால் இன்னவருக்கு நீங்கள் அதிகம் கொடுத்தீர்கள். எனக்கு குறைவாகக் கொடுத்தீர்கள் என முறையிடுவதற்கு எந்த யாசிப்பவருக்கும் உரிமை இல்லை.

**அவ்வாறே இறைவனுக்கு முன்னால் எந்த அடியாருக்கும் அவனிடம் நீதி கேட்பதற்கு உரிமை இல்லை. ஏனெனில் அடியாருக்கு இருப்பதெல்லாம் இறைவனுக்கு உரியவையாகும். எனவே நீதியின் அடிப்படையில் அவனிடம் தீர்ப்பைப் பெறுவதற்கு அடியாருக்கு உரிமையும் இல்லை;**

தனது அடியார்கள் தமது உரிமைகளை வேண்டுவதற்கு தகுதியுடையவர்கள் என்ற அளவுக்கு அவர்களின் அந்தஸ்தை ஒப்புக்கொள்வது இறைவனின் உயர் தகுதிக்கு உகந்ததும் இல்லை.

எனவே இறைவன் தனது அடியார்களுக்கு கொடுப்பதெல்லாம் அவனது அருளினால் ஆகும். மற்றபடி செயல்கள் ஒன்றுமே அல்ல. இறைவனின் ஆதரவும் அருளும் இல்லாமல் செயல்கள் எப்போது நடைபெற முடியும்?

அது மட்டுமின்றி, நாம் இறைவனின் இயற்கைச் சட்டத்தைப் பார்க்கும்போது இறைவன் தனது அடியார்களுக்காக எதை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறானோ அல்லது செய்கிறனோ அது இரு வகையான அருள் எனத் தெரிகிறது.

*ஒன்று,* மனிதனுடைய இருப்புக்கும் முன்பே இருக்கின்ற அருள்களும் கருணைகளும் ஆகும். அவற்றில் மனிதனுடைய செயலுக்கு அணுவளவும் தொடர்பில்லை. உதாரணமாக அவன் மனிதனுடைய சுகத்திற்காக சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றைப் படைத்துள்ளான். மேலும் இந்த பொருள்கள் மனிதனுடைய இருப்பு மற்றும் அவனுடைய செயல்களுக்கும் முன்னரே இருக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மேலும் மனிதனின் இருப்பு இவற்றின் இருப்புக்குப் பின்னரே ஆகும். இது இறைவனின் எத்தகைய கருணையின் வகை என்றால் அதை திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில் ரஹ்மானிய்யத் என்று கூறுகிறோம். அதாவது அடியானின் செயல்களின் விளைவாக அல்லாமல் அருளின் வழியினால் மட்டும் கிடைக்கும் அருளும் அருட்கொடையும் ஆகும்.

*அருளின் இரண்டாவது வகையை* திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில் *'ரஹீமிய்யத்'* என்று கூறுகிறோம். அதாவது அழகிய செயல்களின் பெயரில் மனிதனுக்கு வழங்கப்படும் அருளும் அருட்கொடையும் ஆகும். எனவே எந்த இறைவன் அற்ப அடியார்களுக்கு, அவர்கள் மற்றும் அவர்களுடைய செயல்களின் எந்த அடையாளமும் இல்லாத நிலையில் பூமி, வானம், சந்திரன், சூரியன் ஆகியவற்றை படைத்து தான் அருள்பாலிக்கும் எஜமானன் என்னும் முன்மாதிரியைக் காட்டியுள்ளானோ அவனைப் பற்றி அடியார்களுக்கு அவன் கடன்பட்டவனாகி அவர்களுடைய உரிமைகளை மட்டும் நிறைவேற்றுகின்றான்; அதை விட அதிகமாக வேறொன்றும் இல்லை என்று கற்பனை செய்ய முடியுமா?

அடியார்களுக்காக அவன் பூமியையும் வானத்தையும் உருவாக்கி, வானத்தில் ஆயிரக்கணக்கான ஒளிமிக்க விண்மீன்களையும், பூமியில் ஆயிரக்கணக்கான சுகத்திற்கும் சொகுசுக்குமான பொருள்களை உருவாக்கிக் கொடுப்பதற்கும் அடியார்களுக்கு ஏதும் உரிமை இருந்ததா என்ன?

**எனவே அந்த முற்றிலும் அருள்பாலிப்பவனாகிய இறைவனை நீதி வழங்கக் கூடிய ஒரு நீதிபதியாக மட்டும் குறிப்பிடுவதும், அவனது எஜமானன் என்ற அந்தஸ்தையும், மகத்துவத்தையும் மறுப்பதும் எந்த அளவுக்கு அருளை மறுப்பதாகும்?**

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 26- 28)*

**மாலிக் (எஜமானன்) என்பது எத்தகைய சொல் என்றால் அதற்கு முன்னால் எல்லா உரிமைகளும் விலகி விடுகின்றன. இந்த சொல் முழுமையான முறையில் இறைவனுக்கு மட்டுமே பொருந்துகிறது.**

ஏனெனில் முழுமையான எஜமானன் அவனே ஆவான். எவர், இன்னொருவரை தனது உயிர் ஆகியவற்றின் எஜமானராகக் குறிப்பிடுகிறாரோ அவர் தனது உயிர், பொருள் ஆகியவற்றின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை; எல்லாம் எஜமானருக்குரியவைதான் என்று ஒப்புக் கொள்கிறார். அந்நிலையில் அவர் தனது எஜமானரிடம், இந்த நீதி அல்லது உயிர் விவகாரத்தில் என்னுடன் நீதியுடன் நடந்து கொள் என்று கூறுவது ஆகுமானதாக இருப்பதில்லை; ஏனெனில் நீதி உரிமையை நாடுகிறது. ஆனால் அவரோ தனது உரிமைகளை கைவிட்டு விட்டார்.அவ்வாறே **மனிதன் தனது உண்மையான எஜமானனுக்கு எதிரில் தனது பெயரை அடிமை எனப் பெயர் வைத்து விட்டான்.**

**மேலும் اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ (அதாவது நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்களாவோம்; மேலும் நாம் அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாவோம்) என ஒப்புக் கொண்டு விட்டான். அதாவது நமது செல்வம், உயிர், உடல், சந்ததிகள் ஆகிய அனைத்தும் இறைவனின் அதிகாரத்திற்குட்பட்டவையாகும் என்று ஒப்புக் கொண்ட பிறகு அவர் இறைவனிடம் கோரிக்கை வைப்பதற்கு எந்த உரிமையும் இல்லை.**

இதன் காரணமாகவே உண்மையில் இறைஞானம் கொண்டவர்கள் நூற்றுக்கணக்கான முயற்சிகளையும், இறைவணக்கங்களையும், தான தருமங்களையும் செய்தும் கூட தம்மைத் தாமே இறைவனின் கருணையில் விட்டு விடுகிறார்கள். தனது செயல்களை ஒன்றுமற்றவையாகக் கருதுகிறார்கள்.

நமக்கு ஓர் உரிமை இருகிறது அல்லது நாம் ஏதோ உரிமையை நிறைவேற்றுகிறோம் என எவரும் வாதிடுவதில்லை. ஏனெனில் எவனுடைய வாய்ப்பினால் ஒருவர் நன்மை செய்வாரோ அதுவே உண்மையில் நன்மை ஆகும். அவன் இறைவனே ஆவான்.

**எனவே மனிதன் தனது எந்தவொரு தகுதியின் காரணத்தினாலும் திறமையின் காரணத்தினாலும் இறைவனிடம் நீதியை கோர ஒருபோதும் முடியாது.**

**திருக்குர்ஆனின் அடிப்படையில் இறைவனின் பணிகள் அனைத்தும் எஜமானன் என்ற வகையில் ஆகும். அவன் சில நேரத்தில் பாவத்திற்கு தண்டனை வழங்குவது போன்றே சில நேரத்தில் பாவத்தை மன்னித்தும் விடுகின்றான். அதாவது இரண்டு வகையிலும் அவனது வல்லமை செயல்படுகிறது. எஜமானன் என்ற பண்பின் எதிர்பார்ப்பு இருக்க வேண்டியதைப் போன்று அவன் எப்போதும் பாவத்திற்கு தண்டனை வழங்கினால் பிறகு மனிதனுக்கு புகலிடம் எங்கே?**

**அவன் பெரும்பாலும் பாவங்களை மன்னித்து விடுகிறான். மேலும் எச்சரிப்பதன் நோக்கத்தில் சில நேரத்தில் பாவத்திற்கு தண்டனையும் வழங்குகிறான். கவனமற்ற மனிதன் எச்சரிக்கையாகி அவன் பக்கம் திரும்ப வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கிறான்.** உதாரணமாக திருக்குர்ஆன் *42:31*-ல் இவ்வாறு வருகிறது:

وَمَآ اَصَابَكُمْ مِّنْ مُّصِيْبَةٍ فَبِمَا كَسَبَتْ

اَيْدِيْكُمْ وَيَعْفُوْا عَنْ كَثِيْرٍ

பொருள்: உங்களுக்கு ஏற்படும் துன்பம் உங்களின் தீய

செயல்களின் காரணத்தினால் ஆகும். மேலும் இறைவன் அதிகமானவற்றை மன்னித்து விடுகிறான். மேலும் சில பாவங்களுக்கு தண்டனை வழங்குகிறான்.

பிறகு இந்த சூராவிலேயே இந்த வசனமும் இருக்கிறது:

وَهُوَ الَّذِى يَقْبَلُ التَّوْبَةَ عَنْ عِبَادِهِ وَيَعْفُوا عَنِ السَّيِّاٰتِ

*(திருக்குர்ஆன் 42:26).*

அதாவது உங்கள் இறைவன் அடியார்களின் பாவமன்னிப்பை ஒப்புக் கொள்கிறான். மேலும் அவர்களின் தீமைகளை அவர்களுக்கு மன்னித்து விடுகிறான்.

وَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَّرَهٗ

*(திருக்குர்ஆன் 99:9)*

அதாவது எவர் அணுவளவு தீங்கு செய்வாரோ அவர் அதற்கான தண்டனையைப் பெறுவார் என்ற வசனமும் திருக்குர்ஆனில் உள்ளதே என்ற ஏமாற்றம் யாருக்கும் ஏற்பட வேண்டாம். அது தொடர்பாக நினைவில் கொள்ளுங்கள். இதற்கும் மற்ற வசனங்களுக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை.

**ஏனெனில் இந்த தீங்கு என்பதன் கருத்து, மனிதன் அடம்பிடித்திருக்கின்ற, அதை செய்வதிலிருந்து விலகாதிருக்கின்ற, அதிலிருந்து பாவமன்னிப்பு தேடாதிருக்கின்ற தீங்காகும். இந்த நோக்கத்திற்காகவே இந்த இடத்தில் *'ஷர்ருன்'* (தீங்கு) என்ற சொல்லை பயன்படுத்தி இருக்கிறான். *'ஸன்ப்'* (பாவம்) என்ற சொல்லை பயன்படுத்தவில்லை; இந்த இடத்தில் ஒரு தீங்கின் செயல் என்பது கருத்தாகும். அதிலிருந்து தீங்கிழைப்பவர் விலக விரும்புவதில்லை. மற்றபடி,**

**வெட்கப்படுதல், பாவமன்னிப்புக் கோருதல், பிடிவாதத்தை விட்டு விடுதல் மற்றும் பிழை பொறுக்கத் தேடுதல் ஆகியவற்றால் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பது பற்றி திருக்குர்ஆன் நிரம்பி காணப்படுகிறது.**

பாவமன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கின்றான் என்று வருகிறது.

உதாரணமாக, அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறியிருக்கிறான்:

إِنَّ اللَّهَ يُحِبُّ التَّوَّابِينَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِينَ

*(திருக்குர்ஆன் 2:223)*

அதாவது அல்லாஹ் பாவமன்னிப் தேடுபவர்களை நேசிக்கின்றான்; எப்படியாவது பாவத்திலிருந்து தூய்மையடைந்து விட வேண்டும் என்பதில் அழுத்தம் கொடுப்பவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான். சுருக்கமாக, எல்லா தீமைகளுக்கும் தண்டனை வழங்குவது இறைவனின் மன்னித்தல், கண்டும் காணாதிருத்தல் ஆகியவற்றிற்கு எதிரானதாகும்.

**ஏனெனில் அவன் வெறும் நீதிபதியைப் போன்று மட்டும் இல்லாமல் எஜமானனாக இருக்கிறான்.**

திருக்குர்ஆனின் முதல் சூராவிலேயே அவன் தனது பெயரை *'மாலிக்'* என்று வைத்துள்ளான். மேலும் مٰلِكِ يَوْمِ الدِّيْنِ என்று கூறியிருக்கிறான். *(திருக்குர்ஆன் 1:4)*.

அதாவது இறைவன் நற்கூலி, தண்டனை வழங்குவதற்கு எஜமானன் ஆவான். **எந்தவொரு எஜமானனுக்கும் இரு வகையிலும் அதிகாரங்கள் இருக்காதவரை அவர் மாலிக் என அழைக்கப்பட முடியாது என்பது வெளிப்படை.**

**அதாவது அவன் விரும்பினால் பிடிக்கலாம்; விரும்பினால் விட்டு விடலாம்.**

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 23,24)*

பிறகு நாம் உண்மையான விஷயத்தின் பக்கம் திரும்பியவாறு எழுதுகிறோம். ஆரியர்களின் கொள்கையின் அடிப்படையில் பரமேசுவரன் எஜமானனாக இருப்பதில்லை. ஏனெனில் அவனிடம் உள்ளதை எந்தவொரு கட்டாய உரிமையுமின்றி வேறு எவருக்கும் அருளாகவும் கருணையாகவும் கொடுக்க முடியாது. ஆனால் எவர் ஒரு செல்வத்திற்கு எஜமானராக இருக்கின்றாரோ அவர், தான் விரும்பிய அளவுக்கு இன்னொருவருக்கு கொடுக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம்.

ஆனால் **பரமேசுவரனைப் பற்றி, அவன் பாவங்களை மன்னிக்கவும் முடியாது; அவன் அருட்கொடையாகவும் ஈகையாகவும் எவருக்கும் எதையும் கொடுக்க முடியாது; அவன் அவ்வாறு செய்தால் அதனால் அநீதி கட்டாயமாகி விடுகிறது என்பது ஆரியர்களின் கொள்கையாகும். எனவே மறுபிறவிக் கொள்கையை ஒப்புக் கொள்கின்றவர்கள் பரமேசுவரன் படைப்பினங்களைப் படைத்தவன் என எவ்விதத்திலும் கூற முடியாது.**

எஜமானனைப் பற்றி அவனை நீதியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவன் என நிபந்தனை வகுப்பது முற்றிலும் பொருத்தமற்றதாகும் என நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். ஆயினும் எஜமானனின் அழகிய பண்புகளைப் பற்றி, அவன் கருணைமிக்கவன், தாராளமாக வழங்குபவன், அருள்பாலிப்பவன், பாவங்களை மன்னிப்பவன் என்று வேண்டுமானால் கூறலாம்; ஆனால் தன்னால் விலைக்கு

வாங்கப்பட்ட அடிமைகள், குதிரைகள், பசுக்கள் ஆகியவற்றில் நீதியான பண்பை வெளிப்படுத்துபவன் என்று நாம் கூற முடியாது. ஏனெனில் இருபக்கமும் ஒருவகையான சுதந்திரம் இருக்கும் இடத்தில்தான் நீதி என்ற சொல் கூறப்படுகிறது.

**உதாரணமாக, உருவகமாக விளங்கும் அரசர்களைப் பற்றி நாம் அவர்களை நீதிமான்கள் எனக் கூறலாம்.** அவர்கள் நாட்டு மக்களுடன் நீதியுடன் நடந்து கொள்கின்றனர். மேலும் நாட்டு மக்கள் (அரசர்களாகிய) அவர்களுக்கு கட்டுப்படும் வரை நாட்டு மக்களின் கட்டுப்படுதல் மற்றும் வரி செலுத்துதல் ஆகியவற்றிற்கு பிரதிபலனாக அவர்களின் உயிரையும் செல்வத்தையும் (அரசர்கள்) கண்காணிக்க வேண்டும்; தேவையான நேரத்தில் தனது செல்வத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை நீதியின் சட்டம் அவர்களுக்கும் கட்டாயப்படுத்துகிறது.

**எனவே ஒரு வகையில் அரசர்கள் நாட்டு மக்களின் மீது ஆட்சி செலுத்துகிறார்கள்; மற்றொரு வகையில் நாட்டு மக்கள் அரசர்களின் மீது ஆட்சி செலுத்துகின்றனர். மேலும் இந்த இரு அம்சங்களும் சரிசமமாக நடக்கும் வரை அந்த நாட்டில் அமைதி இருக்கிறது. ஏதாவதொரு சமச்சீரற்ற நிலை மக்கள் சார்பாகவோ அல்லது மன்னர்கள் சார்பாகவோ வெளிப்படும்போது உடனே நாட்டிலிருந்து அமைதி சென்று விடுகிறது.**

இதிலிருந்து நாம் மன்னர்களை உண்மையான முறையில் எஜமானர் எனக் கூற முடியாது என்பது வெளிப்படை. ஏனெனில் அவர்கள் மக்களுடனும், மக்கள் அவர்களுடனும் நீதிக்குக் கட்டுப்பட வேண்டியது ஏற்படுகிறது.

**ஆனால் நாம் இறைவனை *'மாலிகிய்யத்'* (எஜமானனாக இருத்தல்) என்ற வகையில் *'ரஹீம்'* (மிக்க கருணை காட்டுபவன்) என்று வேண்டுமானால் கூறலாம்; ஆனால் நீதியை நிலைநாட்டுபவன் என்று கூற முடியாது. எந்த நபரும் அடிமையாக இருந்து கொண்டு எஜமானனிடம் நீதியை கோரிக்கையாக வைக்க முடியாது. ஆயினும் மன்றாடலுடனும் பணிவுடனும் கருணை புரியுமாறு விண்ணப்பிக்கலாம். இதன் காரணமாகத்தான் இறைவன் முழுக் குர்ஆனிலும் எங்கேயும் தனது பெயரை நீதிமான் என வைக்கவில்லை. ஏனெனில் நீதிக்கு இரு புறத்திலுள்ள சமன்பாடும் சமநிலையும் தேவைப்படுகிறது. ஆயினும் இறைவன் அடியார்களின் பரஸ்பர உரிமைகளில் நீதியை செலுத்துகிறான் என்ற வகையில் அவன் நீதிமான் ஆவான். ஆனால் ஓர் அடியார் பங்குதாரரைப் போன்று அவனிடம் ஏதாவதோர் உரிமையை வேண்டலாம் என்ற வகையில் அவன் நீதிமான் அல்லன்.**

அடியார் இறைவனின் சொத்தாவார். அவன் தன் சொத்துடன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வதற்கு அவனுக்கு அதிகாரம் உள்ளது. எவரை விரும்புகிறானோ அவரை மன்னராக்கலாம்; எவரை விரும்புகிறானோ அவரை வறியவராக்கலாம். அவன் விரும்பியவருக்கு சிறிய வயதில் மரணத்தை தரலாம்; அவன் விரும்பியவருக்கு நீண்ட ஆயுளை வழங்கலாம். நாமும் ஏதாவதொன்றிற்கு எஜமானராகும்போது அது தொடர்பாக நாம் முழுமையான சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கின்றோம்.

ஆயினும் இறைவன் *ரஹீம்* (கருணை காட்டுபவன்) ஆவான். இன்னும் கூறுவதென்றால் அவன் *அர்ஹமுர் ராஹிமீன்* (கருணை

காட்டுபவர்களிலெல்லாம் மிகஅதிக கருணை காட்டுபவன்) ஆவான். அவன் எந்த நீதியின் கட்டுப்பாட்டினாலும் அல்லாமல் தனது கருணையின் எதிர்பார்ப்பினால் தனது படைப்பினங்களை படைத்து, காத்து, வளர்க்கின்றான்.

**ஏனெனில் எஜமானன் என்பதன் கருத்து நீதிமான் என்பதன் கருத்தை விட்டும் முற்றிலும் வேறுபட்டதாகும் என நாம் மீண்டும் மீண்டும் கூறியுள்ளோம்.** நாம் அவனால் படைக்கப்பட்டவர்களாக இருக்கும்போது நாம் அவனிடம் நீதியை கேட்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? ஆயினும் மிகவும் பணிவுடன் அவனுடைய கருணையை கண்டிப்பாக வேண்டுகிறோம். அடியார் விஷயத்தில் அல்லாஹ் அந்த அடியருடன் நடந்து கொள்ளும் விவகாரம் தொடர்பாக நீதியை வேண்டும் அடியார் மிகவும் தீயவராவார். மனித இயல்பின் எல்லா அடிப்படையும் இறைவன் புறமிருந்து வந்ததாகும்.

**மேலும் எல்லா ஆன்மீக பௌதீக ஆற்றல்களும் அவனாலே வழங்கப்பட்டவையாகும். மேலும் அவன் வழங்கிய வாய்ப்பினாலும் ஆதரவினாலும் எல்லா நல்ல செயல்களும் வெளிப்பட முடியும். அப்படி இருக்கும்போது தமது செயல்களின் மீது நம்பிக்கை வைத்து அவனிடம் நீதியை வேண்டுவது மிகவும் இறைநம்பிக்கையற்ற நிலையும் அறிவீனமும் ஆகும்.**

அப்படிப்பட்ட போதனையை நாம் அறிவுள்ள போதனை என்று கூற முடியாது. மாறாக, இந்த போதனை உண்மையான ஞானத்தை விட்டு முற்றிலும் விலகியதும் முற்றிலும் அறிவீனத்தால் நிரம்பிய போதனையும் ஆகும். எனவே இறைவன் திருக்குர்ஆனாகிய தனது தூய வேதத்தில்

அடியாருக்கு எதிரில் இறைவனுடைய பெயரை நீதிமான் என வைப்பது பாவம் மட்டுமின்றி தெளிவான இறை மறுப்பாகும் எனக் கற்றுத் தந்துள்ளான்.''

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 32-34)*

**நீதி, கருணை ஆகிய இரண்டும் இறைவனிடம் ஒன்று சேர முடியாது; ஏனெனில் நீதி என்பது தண்டனை கொடுப்பதை நாடுகிறது; கருணை என்பது மன்னிக்க வேண்டும் என்பதை நாடுகிறது என்ற சந்தேகம் எப்படிப்பட்ட ஏமாற்றம் என்றால், இதில் சிந்தனைக் குறைவின் காரணமாக குறைமதியுள்ள கிறித்தவர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர். இறைவனின் நீதி என்பதும் ஒரு கருணைதானே என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை.**

காரணம் என்னவெனில் அது முழுக்க முழுக்க மனிதர்களின் பயனுக்காகத்தான்.

உதாரணமாக, **இறைவன் ஒரு கொலைகாரனைப் பற்றி தனது நீதியின் அடிப்படையில் அவன் கொல்லப்பட வேண்டும் எனக் கட்டளையிடுகிறான் என்றால் அதனால் அவனது இறைமைக்கு எந்த பயனும் ஏற்படுவதில்லை. மாறாக, மனித குலம் ஒருவர் மற்றவரைக் கொன்று நாசமாகி விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு கட்டளையிட்டான். எனவே இது மனித குலத்திற்கு கருணையாகும்.**

மேலும் அமைதி நிலைபெற வேண்டும்; ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினர் மீது அநீதி இழைத்து உலகில் குழப்பத்தை உருவாக்கக் கூடாது என்பதற்காகவே இறைவன்,

**இந்த எல்லா மனித உரிமைகளையும் நிலைநாட்டியுள்ளான். எனவே செல்வம், உயிர்,**

கண்ணியம் ஆகியவை தொடர்பான உரிமைகளும் தண்டனைகளும் உண்மையில் மனித குலத்திற்கு ஒரு கருணையாகும்...

எனவே நீதி, கருணை ஆகியவற்றில் எந்த முரண்பாடும் இல்லை. அவை தத்தமது இடத்தில் ஓடும் இரு நதிகளாகும். ஒரு நதி இன்னொரு நதிக்கு தடையாக ஒருபோதும் இல்லை. உலக அரசாங்களிலும் நாம் இதைத்தான் பார்க்கிறோம். குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கிறது. ஆனால் நல்ல பணிகளினால் அரசாங்கத்தை மகிழ்விப்பவர்கள் அருளுக்கும் அருட்கொடைக்கும் உரியவர்கள் ஆகின்றனர்.

இன்னொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவனின் உண்மையான பண்பு கருணை ஆகும். மேலும் நீதி என்பது அறிவு மற்றும் சட்டத்தை வழங்கிய பிறகு உருவாகிறது. உண்மையில் அதுவும் ஒரு கருணைதான். அது வேறு ஒருவகையில் வெளிப்படுகிறது. ஒரு மனிதனுக்கு அறிவு வழங்கப்படும்போது அறிவின் மூலமாக அவர் இறைவனின் வரையறைகள், சட்டங்கள் ஆகியவற்றை அறியும்போது அந்த நிலையில் அவர் நீதியின் பிடியின் கீழ் வருகிறார். ஆனால் கருணைக்கு அறிவு மற்றும் சட்டத்தின் நிபந்தனை இல்லை.

மேலும் இறைவன் கருணை செய்து மனிதர்களுக்கு அனைவரையும் விட சிறப்பை வழங்க விரும்பினான். எனவே அவன் மனிதர்களுக்கு நீதியின் விதிமுறைகளையும் வரையறைகளையும் வகுத்தான். எனவே நீதி, கருணை

ஆகியவற்றிற்கிடையில் முரண்பாடு இருப்பதாகக் கருதுவது அறிவீனமாகும்.

*(கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 73,74)*

இறைவனின் ஞானம் முழுமைத்தன்மையைக் கொண்டிருப்பதன் காரணமாக அது ஒவ்வோர் அணுவின் அகத்தையும் புறத்தையும் பற்றி அறிகின்றது. இது எப்படி, எவ்விதம் நடக்க முடியும்? என்பது மிகவும் நுட்பமான உண்மையாகும். இதன் உண்மையான நிலைமை பற்றி எந்த அறிவும் சூழ்ந்து கொள்ள முடியாது என்றாலும் அது சிந்தனையில் உதிக்கக் கூடிய அறிவின் எல்லா வகைகளிலும் மிக அவசியமானதும், ஆற்றல் மிக்கதும், நிறைவானதும்,

முழுமையானதும் ஆகும் என்று கூறுவது முழுக்க முழுக்க உண்மையை அடிப்படையாகக் கொண்டது ஆகும். நாம் நமது அறிவைப் பெறும் வழிமுறைகளைப் பார்க்கும்போது, அதன் வகைகளைப் பார்க்கும்போது நமது சாதாரண அறிவிலேயே நமக்கு மிகவும் உறுதியானதும் உறுதிப்பாட்டுடனுமான அறிவு நமது இருப்பைப் பற்றிய அறிவுதான் எனத் தெரிகிறது.

ஏனெனில் நாம் அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் எந்நிலையிலும் தன் இருப்பை மறந்துவிட முடியாது. அதில் எந்த சந்தேகமும் கொள்ள முடியாது. நமது அறிவு எட்டுவதைப் பொருத்தவரை நாம் இந்த வகையான அறிவை மிக தேவையானதாகவும், ஆற்றல் மிக்கதாகவும், நிறைவானதாகவும், முழுமையானதாகவும் காண்கிறோம்.

தனது அடியார்களைப் பற்றி இறைவனது அறிவு இந்த படித்தரத்தை விட, இந்த வகையான அறிவை விட குறைவானதாக இருக்கும் என்பதை இறைவனின் முழுமைத்தன்மைக்கு அப்பாற்பட்டதாக நாம் கருதுகிறோம்.

ஏனெனில் சிந்தனையில் தோன்றுகின்ற உயர்தரமான அறிவு இறைவனிடம் காணப்படாமல் இருப்பதென்பது மிகவும் குறைபாடுள்ள விஷயமாகும். இறைவனுடைய அறிவு எந்த காரணத்தினால் உயர்தரமான அறிவை விட வீழ்ச்சியடைந்ததாக இருந்தது? அவனுடைய எண்ணத்தினாலா? அல்லது ஏதாவது நிர்பந்தம் செய்பவனின் நிர்பந்தத்தினாலா? என ஆட்சேபனை எழ முடியும்.

அவனுடைய சொந்த எண்ணத்தினால்தான் எனக் கூறுவீர்களாயின் அது ஆகுமானதன்று. ஏனெனில் எவரும் வேண்டுமென்றே தனக்காக நஷ்டத்தை பொருத்தமானதாகக் கொள்வதில்லை. அப்படி இருக்கும்போது, சுயமாகவே மேன்மைகளைக் கொண்டுள்ள இறைவன் அப்படிப்பட்ட நஷ்டங்களை தனக்காக எப்படி பொருத்தமானதாகக் கொள்வான்? கட்டாயப்படுத்துகின்றவரின் கட்டாயத்தினால் அவனுக்கு இந்த நஷ்டம் ஏற்பட்டது என்று கூறுவீர்களாயின் அப்படிப்பட்ட கட்டாயப்படுத்துகின்றவர் தனது ஆற்றல்களில், வல்லமைகளில் இறைவனை விட மேலோங்கியவராக இருக்க வேண்டும்.

அவர் தனக்கு இருக்கும் அதிகப்படியான ஆற்றலினால் இறைவனை தனது எண்ணங்களிலிருந்து தடுக்க வேண்டும். ஆனால் இதுவோ தடையானதும், சாத்தியமற்றதுமாகும். ஏனெனில் இறைவன் மீது பலவந்தம் செய்பவர் வேறு யாரும் இல்லை - அவருடைய தடையினால் அவனுக்கு ஏதாவதொரு நிர்பந்தம் ஏற்படுவதற்கு.

எனவே இறைவனுடைய அறிவு முழுமையானதும் நிறைவானதுமாகும் என்பது நிரூபணமாகிறது. மேலும் அறிவின் எல்லா வகைகளிலும் முழுமையானதும்

நிறைவானதுமாகிய அறிவு ஒரு மனிதனுக்கு தன்னைப் பற்றி இருக்கும் அறிவைப் போன்று இருக்கும் அறிவாகும் என நாம் இப்போது நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

எனவே தனது படைப்பினங்களைப் பற்றி இறைவனுக்குள்ள அறிவு இந்த அறிவைப் போன்றதேயாகும். அதற்கேற்றதாகும் - அதன் உண்மை நிலைமையை நாம் சூழ்ந்து கொள்ள முடியாது என்றாலும் சரியே. ஆனால் எதன் மூலமாக நாம் கட்டாயத்திற்குட்படுத்தப்பட்டிருக்கிறோமோ அந்த அறிவினால் அறிபவனுக்கும் அறியப்படுகின்றவனுக்கும் இடையில் எவ்வித தூரமும் திரையும் இருக்கக் கூடாது என்பதே உறுதியான, திடமான அறிவாகும் என்பதை நாம் புரிய முடியும்.

எனவே அந்த அறிவின் வகை இதுவேயாகும். மேலும் எவ்வாறு ஒரு மனிதனுக்கு தன்னைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வேறு எந்த ஊடகத்தின் தேவையும் இல்லையோ இன்னும் கூறுவதென்றால் உயிருள்ளதாக இருப்பதும் தன்னை உயிருள்ளதாக கருதுவதும் ஆகிய இரு விஷயங்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று நெருங்கியவையாக இருக்கின்றனவோ - அவற்றில் அணுவளவும் எந்த வித்தியாசமும் இல்லையோ - அவ்வாறே அனைத்து பொருள்களைப் பற்றியும் இறைவனுக்கு ஞானம் இருப்பது அவசியமாகும்.

அதாவது இந்த இடத்திலும் அறிந்தவனுக்கும் அறியப்பட்டவனுக்கும் இடையில் ஓர் அணுவளவும் வித்தியாசமும் தூரமும் இருக்கக் கூடாது. இறைவனுக்கு தனது இறைமையின் உண்மை நிலைக்கு அவனுக்கு அவசியமாக இருக்கின்ற இந்த உயர்தரமான ஞானம் அவனிடத்திலும் அவனால் அறியப்பட்டவற்றிலும் அதை விட அதிகமாக அனுமானிப்பது சாத்தியமே இல்லாத அளவுக்கு நெருக்கமும்

தொடர்பும் இருக்கும் அந்த நிலையிலேயே ஒப்புக்கொள்ளப்பட முடியும்.

மேலும் அறியப்பட்டவற்றுடன் இந்த முழுமையான தொடர்பு அவனது அறியப்படுகின்றவையாக இருக்கின்ற உலகின் அனைத்து பொருள்களும் அவனது ஆற்றல் மிக்க கையினால் வெளிவந்தவையாக இருக்கும் நிலையிலேயே ஏற்பட முடியும். மேலும் அவனால் படைக்கப்பட்டவையாகவும், படைப்பினங்களாகவும் இருக்க வேண்டும். அவனது இருப்பினால் அவற்றின் இருப்பு இருக்க வேண்டும். அதாவது உண்மையான இருப்பு அவன் ஒருவன் மட்டுமே இருக்க வேண்டும். மற்ற அனைத்தும் அவனால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் அவனுடன் நிலைபெற்றிருக்க வேண்டும்.

அதாவது உருவானாலும் தனது இருப்பில் அவனை விட்டு தன்னிறைவு பெற்றதாகவோ அவனை விட்டு தனியாகவோ ஆகி விடக் கூடாது. மாறாக, உண்மையில் எல்லா பொருள்களும் படைக்கப்பட்ட பிறகும் உண்மையிலேயே உயிருள்ளவன் அவன் மட்டுமே இருக்க வேண்டும். மற்ற ஒவ்வொரு வாழ்வும் அவன் மூலமாகவே பிறந்திருக்க வேண்டும். மேலும் அவனுடன் நிலைபெற்றிருக்க வேண்டும். மேலும் எவ்வித கட்டுப்பாடும் இன்றி அவன் ஒருவன் மட்டுமே இருக்க வேண்டும்.

ஆன்மாக்கள், உடல்கள் ஆகிய மற்ற அனைத்து பொருள்களும் அவனால் வகுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டவையாகவும், அவனது கைகளால் கட்டப்பட்ட வையாகவும், அவனால் நியமிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டவையாகவும் இருக்க வேண்டும். மேலும் அவன் எல்லா பொருள்களையும் சூழ்ந்தவனாக இருக்க வேண்டும்.

மேலும் அனைத்து பொருள்களும் அவனது ருபூபிய்யத்தின் கீழ் சூழப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் அவனது கைகளிலிருந்து வெளிவராத, அவனது ருபூபிய்யத்திற்கு உட்படாத அல்லது அவனது ஆதரவினால் நிலைபெறாத எந்த பொருளும் இருக்கக் கூடாது.

சுருக்கமாக, அப்படிப்பட்ட நிலையில் முழுமையான ஞானத்திற்கு நிபந்தனையாக இருக்கின்ற இறைவனுடைய முழுமையான தொடர்பு தனது கண்டறியப்பட்ட ஞானத்தால் இருக்கும். இந்த முழுமையான தொடர்பைப் பற்றியே அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறியுள்ளான்:

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

*(திருக்குர்ஆன் 50:17)*

அதாவது நாம் மனிதனின் நாடி நரம்பை விட அவனுக்கு மிக அருகில் இருக்கிறோம். அவ்வாறே திருக்குர்ஆனின் இன்னோரிடத்தில் கூறுகிறான்:

هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْ

*(திருக்குர்ஆன் 2:256)*

அதாவது உண்மையான வாழ்வு அவனுக்கே உரியது. மற்ற அனைத்து பொருள்களும் அவனால் படைக்கப்பட்டதும் அவன் மூலமாக உயிருள்ளவையுமாகும்.

அதாவது உண்மையில் எல்லா உயிர்களின் உயிரும், எல்லா ஆற்றல்களின் ஆற்றலும் அவனே ஆவான்...

ஆன்மாவை படைக்கப்பட்டதாகவும் அழிந்து போகக் கூடியதாகவும் ஒப்புக் கொள்ளாவிட்டால் கற்பனையாக பரமேசுவரன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற தொடர்பற்ற

அந்த நபர் ஆன்மாவின் உண்மைநிலை பற்றி ஏதோ அறிந்திருக்கின்றான் என்றும் அது பற்றி அதன் ஆழம் வரை அறிந்திருக்கிறான் என்றும் ஒப்புக் கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லை.

**ஏனெனில் எவருக்கு ஒன்றைப் பற்றி முழுமையான ஞானம் இருக்குமோ அதை உருவாக்குவதற்கும் ஆற்றல் பெற்றவராக இருக்கலாம். ஆற்றல் பெற்றிருக்கவில்லை என்றால் அவனது ஞானத்தில் கண்டிப்பாக ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. முழுமையான ஞானம் இல்லாவிட்டால் உருவாக்குவது போகட்டும் ஒன்றுபட்ட பொருள்களை ஒன்றுக்கொன்று வித்தியாசம் காண்பதும் கடினமாகி விடுகிறது.**

எனவே பொருள்களைப் படைத்தவன் இறைவன் இல்லையென்றால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவன் குறைபாடுள்ள அறிவு கொண்டவனாக ஆகிவிடுவான் என்ற குறைபாடு மட்டுமல்லாமல் கோடிக்கணக்கான ஆன்மாக்களை வித்தியாசப்படுத்தி, அடையாளங் காண்பதில் அன்றாடம் ஏமாற்றம் அடைவான் என்பதும் கட்டாயமானதாகி விடும். மேலும் சில நேரத்தில் ஸைது என்பவரின் ஆன்மாவை பக்ர் என்பவரின் ஆன்மாவாகக் கருதி விடலாம். ஏனெனில் குறைபாடுள்ள அறிவினால் அப்படிப்பட்ட ஏமாற்றம் கண்டிப்பாக ஏற்படுகிறது. ஏற்படாது எனக் கூறுவீர்களாயின் அதற்குரிய சான்றை எடுத்து வைக்க வேண்டும்.

*(சுர்மா சஷ்ம் ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 221-226. அடிக்குறிப்பு)*

ஒரு பொருளைப் பற்றி முழுமையான ஞானம் கிடைப்பதனால் அந்தப் பொருள் படைக்கப்பட்டதாக ஆகி

விடுகிறதென்றால் பரிசுத்த இறைவனுக்கு தன்னைப் பற்றி இருக்கின்ற அறிவும் எந்நிலையிலும் முழுமையானதாகும். அப்படி இருக்கும்போது இறைவன் தன்னை தானே படைத்தானா? அல்லது தன்னைப் போன்றவனை படைக்க முடியுமா? என்ற சந்தேகம் எவருடைய உள்ளத்திலாவது எழுமென்றால் அந்த ஆட்சேபனையின் முதல் பகுதிக்கான பதில், இறைவன் தன்னை தானே படைத்தான் என்றால் அதனால் அவன் தனது இருப்புக்கு முன்னர் இருந்திருக்க வேண்டியது கட்டாயமாகிறது. ஆனால் எந்தப் பொருளும் தனது இருப்புக்கு முன்னர் இருக்க முடியாது என்பது வெளிப்படை. இல்லையென்றால் பொருள்கள் தமக்கு முன்பே இருப்பது கட்டாயமாகிறது.

தன்னைப் பற்றி முழுமையான ஞானம் கொண்ட இறைவன் இந்த இடத்தில் அறிந்தவன், அறிவு, அறியப்பட்டவன் என ஒரே பொருளாகி விடுகிறான். அதில் தனிமை, இரட்டிப்பு ஆகியவற்றிற்கு இடமில்லை என்றால் பிறகு படைப்பினம் என்று கூறப்பட்ட அந்த தனித்த பொருள் எது?

எனவே இறைவன் தன்னைப் பற்றி கொண்டுள்ள அறிவை மற்ற பொருள்களுடன் கணித்துப் பார்க்க முடியாது. சுருக்கமாக, இறைவனைப் பற்றிய இறைவனின் ஞானத்தில் அறிபவன் அறியப்பட்டதை விட்டும் வேறுபட்ட ஒன்றல்ல - ஒன்றை படைத்தவனாகவும் இன்னொன்றை படைக்கப்பட்டதாகவும் குறிப்பிடுவதற்கு.

ஆயினும் இறைவனுடைய இருப்பில் படைக்கப்பட்டது எனக் கூறுவதற்குப் பதிலாக அவன் மற்றவர்களிடமிருந்து படைக்கப்பட்டவன் அல்லன். மாறாக, ஆதியாகவும் அந்தமாகவும் தன் புறமிருந்து தானாகவே

வெளிப்பட்டிருக்கிறான் எனக் கூற வேண்டும். குதா (இறைவன்) என்ற (உருது) சொல்லுக்கும் இதே பொருள்தான். அதாவது, குத் ஆயிந்தா (தானாகவே வந்தவன்).

அதாவது மேற்கூறப்பட்ட சொற்பொழிவிலிருந்து இறைவன் தன்னைப் போன்றவனை உருவாக்குவதற்கு ஆற்றல் உடையவனாக இருப்பது கட்டாயமாகிறது என்பது ஆட்சேபனையின் இன்னொரு பகுதியாகும். அதற்குரிய விடை என்னவென்றால், இறைவனின் ஆற்றல் அவனது ஆதியும் அந்தமுமான பண்புகளுக்கு எதிரானதாக இல்லாதவற்றின் பக்கம் திரும்புகிறது. சந்தேகமின்றி இந்த இந்த விஷயம் சரியானதும் எல்லா வகையிலும் சான்றைக் கொண்டிருப்பதும், அறிவுப்பூர்வமானதும் ஆகும்.

அதாவது எந்த பொருளைப் பற்றிய ஞானம் அல்லாஹ்வுக்கு முழுமையானதாக இருக்கிறதோ அதை அவன் படைக்கவும் செய்யலாம். ஆனால் எந்த விஷயங்களை செய்வதற்கு அவன் ஆற்றல் உடையவனாக இருக்கின்றானோ அந்த அனைத்து விஷயங்களையும் தனது முழுமையான பண்புகளை கவனத்தில் கொள்ளாமல் அவன் செய்தும் காட்ட வேண்டும் என்பது ஒருபோதும் சரியானதும் அவசியமானதும் அல்ல.

மாறாக, அவன் தனது ஒவ்வோர் ஆற்றலை வெளிப்படுத்துவதிலும் தனது முழுமையான பண்புகளை கண்டிப்பாக கவனத்தில் கொள்கிறான். அவன் தனது ஆற்றலினால் செய்ய விரும்பும் விஷயம் அவனது முழுமையான பண்புகளுக்கு எதிரானதும் முரண்பட்டதும் இல்லையே என்று பார்க்கிறான்.

உதாரணமாக, ஒரு பெரிய தூய்மையான நல்லடியாரை நரக நெருப்பில் இட்டு எரித்து விடுவதற்கு அவன் ஆற்றல் உடையவனாவான். ஆனால் அவனுடைய கருணை, நீதி

மற்றும் ஒன்றை செய்யும் ஆற்றலைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகள் அவ்வாறு செய்வதற்கு தடையாக இருக்கிறது.

எனவே அவன் அப்படிப்பட்ட செயலை ஒருபோதும் செய்வதில்லை. அவ்வாறே அவன் தன்னைத்தானே அழித்துக் கொள்வதன் பக்கமும் அவனது ஆற்றல் திரும்புவதில்லை. ஏனெனில் இந்த செயல் அவனது ஆதியும் அந்தமுமில்லாமல் உயிருடன் இருப்பவன் என்ற அவனது பண்புக்கு மாற்றமானதாகும். அவ்வாறே அவன் தன்னைப் போன்ற இறைவனையும் உருவாக்குவதில்லை எனப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஆதியும் அந்தமுமில்லாமல் அவனிடம் இருந்து வருகின்ற அவனது ஏகத்துவனாக இருத்தல், நிகரற்றவனாக இருத்தல் ஆகிய பண்பு இதன் பக்கம் திரும்புவதிலிருந்து அவனைத் தடுக்கிறது.

எனவே ஒரு வேலையை செய்ய முடியாமல் இருப்பது என்பது வேறு. ஆனால் ஆற்றல் பெற்றிருந்தும் முழுமையான பண்புகளை கவனத்தில் கொண்டவாறு எதிரான பண்புகளின் பக்கம் கவனம் செலுத்தாதிருப்பது என்பது வேறு. இதன் பக்கம் கொஞ்சம் கண்ணை திறந்து பார்க்க வேண்டும்.

*(சுர்மா சஷ்மே ஆர்யா . ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 230-233 அடிக்குறிப்பு)*

தனது சொந்த ஆற்றலினாலும், தனது சொந்த சிறப்புத் தன்மையினாலும் மறைவானவற்றை அறியக் கூடியவனாக இருப்பது இறைவனின் சொந்த சிறப்பேயாகும். தொன்மையிலிருந்தே உண்மையாளர்கள் இறைவன் மறைவானவற்றை அறிவதைப் பற்றி, அவன் சுயமாக இருப்பவன் என்ற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். மேலும் மற்ற எல்லா சாத்தியமான பொருள்களைப் பற்றியும் அவை

சொந்தமாக இருக்க முடியாதவை என்றும், இறைவனின் இருப்புடன் சார்ந்திருப்பதால் இருக்கும் சாத்தியத்தைக் கொண்டவை என்றும் நம்பிக்கை கொள்வதுமாகும்.

அதாவது இறைவனுக்கு அவன் மறைவானவற்றை அறிபவனாக இருப்பது கட்டாயமாகும். அவனுடைய சொந்த சிறப்புத்தன்மை அவன் மறைவானவற்றை அறிபவனாக இருப்பதாகும். ஆனால் சுயமாக அழியக் கூடியதாகவும், நாசமாகக் கூடியதாகவும் இருக்கின்ற சாத்தியக்கூறான பொருள்கள் இந்த பண்பிலும் அவ்வாறே மற்ற பண்புகளிலும் இறைவனுக்கு இணையானவையாக இருப்பது ஆகுமானதல்ல.

**இறைவனுக்கு இணை இருப்பது தடையாக இருப்பதைப் போன்றே அவனுடைய பண்பிலும் இணை இருப்பது தடையாக இருக்கிறது. எனவே மற்ற சாத்தியமான பொருள்களுக்கு தன்னைப் பற்றி மறைவான விஷயங்களை அறிவதும் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும்- அவர் நபியாக இருந்தாலும், இறைவனுடன் உரையாடுபவராக இருந்தாலும், இறை நேசராக இருந்தாலும் சரியே.**

ஆயினும் இறைவனுடைய இல்ஹாமின் மூலமாக மறைவான இரகசியங்களை தெரிவது எப்போதும் சிறப்பானவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பங்கில் கிடைத்து வந்திருக்கிறது; இப்போதும் கிடைக்கிறது. இதை இப்போது நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களிடமே காண்கிறோம்.

*(ஏக் ஈசாயி கே தீன் சவால் அவ்ர் உன்கே ஜவாபாத். ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 453,454)*

நமது உயிருள்ள, நிலைநாட்டக் கூடிய இறைவன் நம்மிடம் மனிதனைப் போன்று உரையாடுகின்றான். **நாம் ஒரு விஷயத்தைக் கேட்டால் துஆ செய்தால் அவன் வல்லமையால் நிரம்பிய வார்த்தைகளால் பதிலளிக்கிறான்.** இந்தத் தொடர் ஆயிரக்கணக்கான முறை தொடர்ந்தாலும் அவன் பதிலளிப்பதிலிருந்து முகம் திருப்புவதில்லை. **அவன் தனது பேச்சில் அற்புதத்திலும் அற்புதமான மறைவான செய்திகளை வெளிப்படுத்துகின்றான்.** மேலும் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஆற்றல்களின் தோற்றங்களை அவன் காட்டுகிறான். எதுவரை என்றால் அவனைத்தான் இறைவன் எனக் கூற வேண்டும் என்று அவன் உறுதி கொள்ள வைக்கிறான். அவன் துஆக்களை ஒப்புக் கொள்கிறான்; ஒப்புக் கொள்வதற்கான அறிவிப்பை வழங்குகிறான். அவன் மாபெரும் கஷ்டங்களுக்கு தீர்வு வழங்குகிறான்.

**இறந்தவர்களைப் போன்று நோயுற்றவர்களையும் அதிகமான துஆக்களினால் உயிரூட்டி விடுகின்றான். மேலும் இந்த எல்லா எண்ணங்களையும் அதற்குரிய நேரத்திற்கு முன்பே தனது வார்த்தையின் மூலமாக தெரிவித்து விடுகிறான்.**

நமது இறைவனே அந்த இறைவன் ஆவான். அவன் இனி வரும் சம்பவங்களைக் கொண்ட தனது வார்த்தைகளால் பூமி, வானத்திற்கு அவன்தான் இறைவன் என்பதை நமக்கு நிரூபிக்கின்றான்.

**நான் உம்மை பிளேக் நோயிலிருந்து காப்பாற்றுவேன்; மேலும் உமது வீட்டில் நன்மை மற்றும் இறையச்சத்துடன் வாழ்க்கை நடத்துபவர்கள் அனைவரையும்**

**காப்பாற்றுவேன் என அவனே என்னை நோக்கி கூறினான். இக்காலத்தில் என்னையன்றி இப்படிப்பட்ட இல்ஹாமை வெளியிட்டவர் வேறு யார் இருக்கிறார்?**

இந்த நான்கு சுவர்களுக்குள் இருக்கின்ற என்னையும், எனது மனைவி, எனது பிள்ளைகள் மற்றும் பிற நல்ல மனிதர்களுக்காக இறைவனின் பொறுப்பை வெளிப்படுத்தியவர் என்னையன்றி வேறு யார்?

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 448-449)*

மனிதனுடைய இயல்புக்கு கட்டாயமாக இருக்கின்ற இயல்பான நிலைமைகளில் ஒன்று ஓர் உயர்ந்த இருப்பைத் தேடுவதாகும். அதற்காக உள்ளுக்குள்ளேயே மனிதனுடைய உள்ளத்தில் ஓர் ஈர்ப்பு காணப்படுகிறது. குழந்தை தாயின் வயிற்றிலிருந்து வெளிவரும் நேரத்திலிருந்தே அந்த தேடுதலின் தாக்கம் உணர ஆரம்பித்து விடுகிறது.

ஏனெனில் குழந்தை பிறந்ததுமே, தான் காட்டுகின்ற முதல் ஆன்மீக சிறப்புத்தன்மை என்னவெனில், தாயின் பக்கம் குனிந்து கொண்டே செல்கின்றது. மேலும் அது இயல்பாகவே தனது தாயின் மீது அன்பு கொள்கிறது. பிறகு அதனுடைய புலன்கள் வளர்ந்து கொண்டே செல்லும்போது இயல்பின் இதழ் மலர்ந்து கொண்டே செல்கின்றது. அதனுள் மறைந்திருந்த அன்பின் இந்த ஈர்ப்பு தனது தன்மையை பகிரங்கமான முறையில் காட்டிக் கொண்டே செல்கின்றது.

பிறகு தனது தாயின் மடியைத் தவிர அது வேறு எதனிடமும் சுகத்தைப் பெறுவதில்லை. அதன் முழு சுகமும் அதன் கருணையினாலேயே ஏற்படுகிறது. தாயிடமிருந்து பிரித்து விட்டால், தனியாக்கி விட்டால் அதன் எல்லா சுகமும் கசப்பானதாகி விடுகின்றது. அதற்கு முன் அருள்களின் ஒரு

குவியலையே வைத்தாலும் அது தனது தாயின் மடியையே உண்மையான மகிழ்ச்சியாகக் காண்கிறது. அது இல்லாமல் அது எவ்வகையிலும் சுகத்தைப் பெறுவதில்லை. எனவே அதற்கு தன் தாயின் புறமிருந்து உருவாகும் அந்த அன்பின் ஈர்ப்பு என்ன?

உண்மையில் அது உண்மையான வணக்கத்திற்குரியவனுக்காக குழந்தையின் இயல்பில் வைக்கப்பட்டுள்ள அதே ஈர்ப்புதான். இன்னும் கூறுவதென்றால், மனிதன் அன்பின் தொடர்பை வைக்கும் ஒவ்வோர் இடத்திலும் இந்த ஈர்ப்புதான் செயல்படுகிறது. அன்பின் உணர்ச்சியைக் காட்டுகின்ற ஒவ்வோர் இடத்திலும் உண்மையில் இதே அன்பின் பிரதிபலிப்புதான் இருக்கிறது. பிற பொருள்களைத் தூக்கிப் பார்த்து காணாமற்போன ஒரு பொருளைத் தேடுகிறான். அதன் பெயரை தற்போது மறந்து விட்டான்.

எனவே மனிதன் செல்வம் அல்லது சந்ததிகள் அல்லது மனைவியுடன் அன்பு கொள்வது அல்லது ஏதாவது அழகிய குரலைக் கொண்ட பாடலின் பக்கம் அவனது ஆன்மா ஈர்க்கப்படுவது உண்மையில் காணாமற்போன அன்பிற்குரியவனை தேடுதலாகும். நெருப்பைப் போன்று எல்லாவற்றிலும் மறைமுகமாக இருக்கின்ற, நுட்பத்திலும் நுட்பமான அந்த இருப்பை மனிதன் தன் பௌதீகக் கண்களால் காண முடியாது. அவன் தனது முழுமையற்ற அறிவினால் அதைப் பெற முடியாது.

எனவே அவனைப் பற்றிய ஞானம் தொடர்பாக மனிதனுக்கு மிகப் பெரும் தவறுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் தவறுதலாக இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமை மற்றவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது.

இறைவன் திருக்குர்ஆனில் அருமையான உதாரணத்தைக் கூறியிருக்கிறான். உலகம் எப்படிப்பட்ட கண்ணாடி மாளிகை போன்றது என்றால், அதன் தரை மிகவும் சுத்தமான கண்ணாடிகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. பிறகு அந்த கண்ணாடிகளுக்குக் கீழே தண்ணீர் ஓட விடப்பட்டுள்ளது. அது மிகவும் வேகமாக ஓடுகின்றது. கண்ணாடிகளைப் பார்க்கின்ற ஒவ்வொரு பார்வையும் தமது தவற்றினால் அந்தக் கண்ணாடிகளையும் தண்ணீர் எனக் கருதுகின்றது. பிறகு மனிதன் அந்தக் கண்ணாடியில் நடப்பதற்கு, தண்ணீரில் நடப்பதற்கு பயப்பட வேண்டியதைப் போன்று பயப்படுகிறான். ஆனால் அது உண்மையில் கண்ணாடிதான். ஆயினும் மிகத் தெளிவானது.

எனவே சூரியன் சந்திரன் ஆகிய இந்த மிகப் பெரிய கோள்கள் காணப்படுகின்றனவே இவை தெளிவான கண்ணாடிகள் ஆகும். அவை தவறுதலாக வணங்கப்பட்டன. அவற்றிற்குப் பின்னால் ஓர் உயர்ந்த ஆற்றல் செயல்படுகின்றது. அது அந்த கண்ணாடிகளுக்குப் பின்னால் தண்ணீரைப் போன்று விரைவாக ஓடிக் கொண்டிருக்கின்றது. கீழேயுள்ள ஆற்றல் செய்து கொண்டிருக்கும் வேலையை இந்தக் கண்ணாடிகளுடன் தொடர்புபடுத்திக் கூறுவது படைப்பினங்களை வணங்குபவர்களின் பார்வைக் கோளாறாகும்.

إِنَّهُۥ صَرۡحٞ مُّمَرَّدٞ مِّن قَوَارِيرَ

(கண்ணாடித் துண்டுகளால் தளம்போடப்பட்ட அரண்மனையாகும் 27:45) என்ற வசனத்திற்கு இதுவே விளக்கமாகும்.

சுருக்கமாக, இறைவனின் இருப்பு மிகவும் ஒளிமிக்கதாக இருந்தாலும் கூட அது மிகவும் மறைவாக இருக்கிறது. எனவே அதனை அடையாளம் கண்டு கொள்வதற்கு நமது பார்வைகளுக்கு முன்னால் இருக்கின்ற இந்த பௌதீக அமைப்பு போதுமானதன்று. இதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட அமைப்பின் மீது நம்பிக்கை வைப்பவர்கள் நூற்றுக்கணக்கான அற்புதங்களைக் கொண்ட மிகவும் சொற்செறிவுள்ள, உறுதியான கட்டமைப்பை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். இன்னும் கூறுவதென்றால் வானம் பூமிக்குள் நுழைந்து விடும் அளவுக்கு வானவியல், இயல்பியல், தத்துவம் ஆகியவற்றில் அவர்கள் திறமைகளை உருவாக்கினர். ஆயினும் அவர்கள் சந்தேகங்கள், ஐயங்கள் எனும் இருளிலிருந்து விடுதலை பெற முடியவில்லை. மேலும் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் பலவிதமான தவறுகளில் மூழ்கி விட்டனர். மேலும் முட்டாள்தனமான சந்தேகங்களில் மூழ்கி எங்கோ சென்று விட்டனர்.

அவர்களுக்கு இந்த படைத்தவனைப் பற்றிய சிந்தனை கொஞ்சம் வந்ததென்றாலும், இந்த உயர்ந்த சிறந்த அமைப்பைப் பார்த்து தன்னுடன் ஞானம்மிக்க அமைப்பைக் கொண்டுள்ள இந்த மகத்தான இயக்கத்தை படைத்தவன் ஒருவன் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற அளவுக்கு மட்டுமே அவர்களுடைய உள்ளத்தில் சிந்தனை வந்தது. ஆனால் இந்த சிந்தனை முழுமையற்றதும், இந்த ஞானம் குறைபாடுள்ளதும் ஆகும்.

ஏனெனில் இந்த இயக்கத்திற்கு ஓர் இறைவனுடைய தேவை இருக்கிறது என்று கூறுவது, அந்த இறைவன் உண்மையில் இருக்கவும் செய்கிறான் என்று கூறும் கூற்றுக்கு ஒருபோதும் சமமானதன்று. சுருக்கமாக, இது அவர்களின் அனுமான ஞானமாக இருந்தது. அது மன அமைதியையும், நிம்மதியையும் தர முடியாது;

உள்ளத்திலிருந்து சந்தேகங்களை முற்றிலும் நீக்க முடியாது;

மேலும் அப்படிப்பட்ட கோப்பையினால் மனிதனின் இயல்பில் இடப்பட்டுள்ள முழுமையான இறைஞானம் எனும் தாகம் தணிய முடியாது. இன்னும் கூறுவதென்றால் அப்படிப்பட்ட குறைபாடுள்ள ஞானம் மிகவும் அபாயகரமானதாகும். ஏனெனில் மிகவும் கூச்சலிட்ட பிறகு கடைசியில் வீணானதாகவும், விளைவற்றதாகவும் ஆகி விடுகிறது.

சுருக்கமாக, இறைவன் தனது கூற்றின் மூலமாக வெளிப்படுத்தி இருப்பது போன்று, தான் இருக்கின்றான் என்பதை தனது சொல்லின் மூலமாக வெளிப்படுத்தாத வரை செயலை மட்டும் பார்ப்பது திருப்தி அளிப்பதில்லை. உதாரணமாக, நாம் ஒரு வீட்டைப் பார்க்கின்றோம். அதில் நூதனமாக உள்ளேயிருந்து தாழ்பாள் இடப்படிருக்கிறதென்றால் யாரோ ஒரு மனிதர் இருக்கின்றார்; அவர் உள்ளே இருந்து தாழிட்டிருக்கிறார் என்று நாம் முதலில் கருதுவோம். ஏனெனில் வெளியே இருந்து உள்ளே தாழிடுவது சாத்தியமில்லை.

ஆனால் ஒரு காலம் வரை - இன்னும் கூறுவதென்றால் பல ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் குரல் கொடுத்தபோதும் அந்த மனிதனிடமிருந்து குரல் வரவில்லை என்றால் இறுதியில் உள்ளே யாரோ இருக்கிறார் என்ற நமது எண்ணம் மாறி விடும். இன்னும் கூறுவதென்றால், உள்ளே யாருமில்லை; ஏதோ ஓர் உத்தியைக் கொண்டு உள்ளே உள்ள தாழ்பாள் போடப்பட்டுள்ளது எனக் கருதுவோம்.

இதே நிலைதான் தத்துவவாதிகளுடையதாகும். அவர்கள் வினையை மட்டும் கவனித்து தனது ஞானத்தை முடித்து விட்டனர். அல்லது இறைவனை இறந்த ஒருவனைப்

போன்றும் அவனை கபரிலிருந்து வெளியே கொண்டு வருவது மனிதனுடைய வேலை என்றும் கருதப்படுவதும் மிகப் பெரிய தவறாகும். மனிதனுடைய முயற்சி இறைவனைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு அவன் இருக்கிறான் என்றால் அப்படிப்பட்ட இறைவனைப் பற்றி நமது எல்லா நம்பிக்கைகளும் வீணானவையாகும்.

**இதற்கு நேர் மாறாக, இறைவன் என்பவன் எப்போதும் தொன்மையிலிருந்தே, தானே 'நான் இருக்கிறேன்' எனக் கூறியவாறு மக்களை தன் பக்கம் அழைத்துக் கொண்டிருக்கின்றான். அவனைக் கண்டறிவதில் மனிதனுடைய அருள் அ(ந்த இறை)வன்மீது இருக்கிறது என்றும், தத்துவவாதிகள் இல்லாவிட்டால் அவன் காணாமற்போனவனாகவே இருந்திருப்பான் என்றும் நாம் கருதுவது மிகப் பெரும் அவமரியாதையாகும்.**

**மேலும் இறைவன் எப்படி உரையாட முடியும்? அவனுக்கு நாவு இருக்கிறதா? என்று கூறுவதும் மிகப் பெரிய விஷமத்தனமாகும். அவன் பௌதீகமான கைகள் இன்றி வானத்தின் எல்லா கோள்களையும் பூமியையும் படைக்கவில்லையா? அவன் பௌதீகமான கண்கள் இன்றி அனைத்து உலகத்தையும் பார்க்கவில்லையா? அவன் பௌதீகமான காதுகள் இன்றி நமது குரல்களைக் கேட்பதில்லையா? எனவே அவ்வாறு அவன் உரையாடுவதும் அவசியமில்லையா என்ன?**

இறைவன் உரையாடுவது அடுத்து நடைபெறப் போவதில்லை. மாறாக, அது பின்தங்கி விட்டது என்று கூறுவதும் ஒருபோதும் சரியன்று. நாம் அவனது உரையாடல் மற்றும் பேசும் பண்பில் கால நிர்ணயம் செய்து ஒருபோதும்

முத்திரையிடுவதில்லை.

**சந்தேகமின்றி அவன் இப்போதும் தேடுபவர்களுக்கு இல்ஹாமிய நீரூற்றிலிருந்து செழிப்பை வழங்குவதற்கு, முன்னர் இருந்தைப் போன்றே ஆயத்தமாக இருக்கின்றான்.** மேலும் முன்னர் இருந்ததைப் போன்றே இப்போதும் அவனது அருளின் வாசல்கள் திறந்திருக்கின்றன.

**ஆயினும் தேவைகள் முடிந்து விட்டதனால் ஷரீஅத்துகள், நன்மைகள் தண்டனைகள் பற்றிய இறைகட்டளைகள் முடிந்து விட்டன. மேலும் எல்லா தூதுத்துவங்களும், நபித்துவங்களும் இறுதிக் கட்டமாக விளங்கும் நமது தலைவரும் எஜமானருமாகிய ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்து தனது முழுமையை அடைந்து விட்டன.**

*(இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸஃபீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 363-367)*

தனது நெருக்கத்திற்குரிய மனிதர்களுடன் மிகவும் தெளிவாக உரையாடுகின்ற அந்த உயிருள்ள இறைவன் வரை சென்றடைவதே இறைவனை உண்மையாக அறிந்து கொள்ளுதல் ஆகும். மேலும் அவன் தனது கம்பீரமான இன்பமான உரையாடலினால் அவர்களுக்கு ஆறுதலும் அமைதியையும் வழங்குகிறான்.

மேலும் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் பேசுவது போன்றே முற்றிலும் சந்தேகம் மற்றும் ஐயத்திலிருந்து தூய்மையாக இருக்கின்ற வகையில் உறுதியாக **அவர்களுடன் பேசுகின்றான்; அவர்களின் பேச்சுகளைக் கேட்கின்றான்.** மேலும் அவர்களுக்கு பதில் அளிக்கிறான். **மேலும் அவர்களின் துஆக்களைக் கேட்டு துஆக்களை ஒப்புக்**

**கொண்டது பற்றி அவர்களுக்கு தெரிவிக்கின்றான்.**

அவன் ஒருபக்கம் இன்பமான, கம்பீரமான கூற்றினாலும் மறுபக்கம் அற்புதமான செயலினாலும் தனது ஆற்றல் மிக்கதும், வலுவானதுமான அடையாளங்களினாலும் நானே இறைவன் என்று அவர்களுக்கு நிரூபிக்கின்றான்.

**அவன் முதலில் முன்னறிவிப்பாக அவர்களுடன் தனது ஆதரவு, உதவி மற்றும் சிறப்பான அரவணைப்பு ஆகியவற்றிற்கான வாக்குறுதிகளை வழங்குகிறான். பிறகு மறுபக்கம் தனது வாக்குறுதிகளின் மகத்துவத்தை அதிகரிப்பதற்காக ஓர் உலகத்தை அவர்களுக்கு எதிராக ஆக்கி விடுகின்றான்.** இறைவனின் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்த அடியார்களின் ஆதரவு, உதவி, வெற்றி ஆகியவற்றை பற்றிய இறைவனின் வாக்குறுதிகளை நீக்கி விடுவதற்காக **எதிரிகள் தனது எல்லா ஆற்றல், வஞ்சனை, ஏமாற்றுதல், எல்லாவிதமான சதித்திட்டங்கள் ஆகியவற்றால் முயற்சி செய்கின்றனர். இறைவன் அவர்களின் அனைத்து முயற்சிகளையும் நாசமாக்கி விடுகின்றான்.**

அவர்கள் தீங்குகளை விதைக்கின்றனர். இறைவன் அதன் வேரை வெளியே பிடுங்கி எறிகின்றான். அவர்கள் நெருப்பை மூட்டுகின்றனர்; இறைவன் அதை அணைத்து விடுகின்றான். அவர்கள் சதித்திட்டங்களில் மிகவும் கடுமையாக இறங்குகின்றனர். கடைசியில் இறைவன் அவர்களின் சதித்திட்டங்களை அவர்களுக்கே திருப்பி அனுப்பி, அவர்களை அழித்து விடுகின்றான்.

**இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள், நேர்வழியில் இருப்பவர்கள், மிகவும் சாதுவான இயல்பு கொண்டவர்களாக தாயின் மடியில் இருக்கும்**

**குழந்தைகளைப் போன்று இறைவனின் முன்பு இருக்கிறார்கள்.**

உலகம் அவர்கள் மீது பகைமை பாராட்டுகிறது. ஏனெனில் அவர்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருப்பதில்லை. அவர்களை வேரோடு பிடுங்குவதற்காக பலவிதமான சூழ்ச்சியும் சதியும் செய்யப்படுகின்றன. அவர்களுக்கு துன்பமிழைப்பதற்கு சமுதாயங்கள் ஒன்றுபட்டு விடுகின்றன. மேலும் அவர்கள் எப்படியாவது நாசமாகி விட வேண்டும்; அவர்களின் அடையாளம் எஞ்சியிருக்கக் கூடாது என்பதற்காக பொருத்தமற்ற அனைவரும் ஒரே வில்லின் மூலமாக அம்பு எய்கின்றனர். மேலும் பலவிதமான இட்டுக்கட்டும், பழியும் சுமத்தப்படுகின்றன. ஆனால் இறுதியில் இறைவன் தனது விஷயங்களை நிறைவேற்றிக் காட்டி விடுகின்றான்.

அவ்வாறே அவர்களின் வாழ்வில் இந்த விவகாரமும் தொடர்கிறது: அதாவது, ஒருபுறம் அவர்கள் சரியானதும், தெளிவானதும், உறுதியானதுமான உரையாடலினால் சிறப்பிக்கப்படுகிறார்கள். மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மறைவானவற்றைப் பற்றிய விஷயங்களை கண்ணியமிக்க, ஆற்றல் மிக்க இறைவன் தனது தெளிவான வார்த்தையின் மூலமாக அவர்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டே செல்கின்றான்.

மறுபக்கம் அந்த சொற்களை உண்மைப்படுத்திக் காட்டுகின்ற அற்புதமான செயல்களினால் அவர்களின் நம்பிக்கை ஒளிமயமாக்கப்படுகின்றது. மேலும் இறைவனைப் பற்றி உறுதியாக அடையாளம் கண்டு கொள்வதற்கு மனிதனுடைய இயல்பு எந்த அளவுக்கு ஞானத்தை எதிர்பார்க்கிறதோ அந்த ஞானம் சொல் அளவிலும் செயல்

அளவிலும் தெளிவாக நிறைவேற்றப்படுகிறது.

எதுவரை என்றால் இடையில் ஓர் அணுவளவுக்கு நிகரான இருளும் இருப்பதில்லை. இதுதான் இறைவன் ஆவான். ஆயிரக்கணக்கான அருள்களை தன்னகத்தே கொண்டிருக்கின்ற அவனது அந்த சொல்லளவிலான, செயலளவிலான தோற்றங்களுக்குப் பிறகு அவை உறுதியான தாக்கத்தை உள்ளத்தில் ஏற்படுத்துகின்றன. மேலும் மனிதனுக்கு உண்மையான, உயிருள்ள ஈமான் கிடைக்கிறது. மேலும் இறைவனுடன் ஓர் உண்மையான தூய தொடர்பு ஏற்பட்டு மன இச்சைகள் எனும் அசுத்தங்கள் நீங்கி விடுகின்றன. மேலும் எல்லா பலவீனங்களும் நீங்கி வானத்தின் ஒளியின் கூர்மையான சுடர்களினால் உட்புறமான இருள் விடை பெற்று விடுகின்றது. மேலும் ஓர் அற்புதமான மாற்றம் வெளிப்படுகிறது.

**ஆகவே இறைவன் எந்தப் பண்புகளைக் கொண்டவனாக நிரூபணமாகி இருக்கிறானோ அந்த இறைவனை எடுத்து வைக்காததும், ஈமானை வெறும் பழங்கால கதைகளுக்கும், பார்க்கப்படாத கூறப்படாத விஷயங்களுக்கும் உட்படுத்துகின்றதுமான மார்க்கம் ஒருபோதும் உண்மையான மார்க்கம் அல்ல. அப்படிப்பட்ட கற்பனையான இறைவனை பின்பற்றுவது இறந்தவரைப் பற்றி, அவர் உயிருள்ளவர்களைப் போன்று வேலை செய்வார் என நம்புவதைப் போன்றதாகும்.**

எப்போதும் புத்தம் புதிதாக தனது இருப்பை நிரூபிக்காத அப்படிப்பட்ட இறைவன், இருப்பதும் இல்லாதிருப்பதும் சரிசமமானதேயாகும். அது ஒரு சிலையாகும். அது பேசுவதுமில்லை; செவியேற்பதுமில்லை; கேட்பதற்கு

பதிலளிப்பதுமில்லை; உறுதியான நாத்திகர் கூட அதில் சந்தேகம் கொள்ள முடியாத அளவுக்கு தனது ஆற்றல் மிக்க சக்தியை காட்ட முடியாது.

*(பராஹீனே அஹ்மதிய்யா. ஐந்தாம் பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 31,32)*

**8-ஆவது சந்தேகம்:** மனிதனை இறைவனோடு உரையாடுவதாகக் குறிப்பிடுவது மரியாதைக்கு அப்பாற்பட்டதாகும். மரணிக்கக் கூடிய ஒருவனுக்கு ஆதியும் அந்தமும் இல்லாத ஒருவனுடன் என்ன தொடர்பு இருக்க முடியும்? கை அளவிலான மண்ணுக்கு ஒளியைக் கொண்டவனுடன் என்ன ஒப்புமை இருக்க முடியும்?

**பதில்:** இந்த சந்தேகமும் முற்றிலும் அடிப்படையற்றதும் வீணானதும் ஆகும். இதனை முறியடிப்பதற்கு மனிதன் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வது போதுமானதாகும். அதாவது எந்த கண்ணியத்திற்குரியவன், அருளாளன் முழுமையான

ஆதமின் சந்ததிகளின் உள்ளத்தில் தனது ஞானத்திற்காக எல்லையற்ற ஆர்வத்தை இட்டிருக்கிறானோ அவை முற்றிலும் தன்னை இழந்து விடும் அளவுக்கு அவன் தனது அன்பு, நேசம், ஆர்வம் ஆகியவற்றின் பக்கம் ஈர்த்திருக்கிறான். அப்படி இருக்கும்போது இறைவன் அவர்களுடன் உரையாட விரும்புவதில்லை எனக் குறிப்பிடுவது அவர்களின் எல்லா அன்பும், நேசமும் வீணானது என்றும் அவர்களின் எல்லா ஆர்வமும் ஒருதலைப்பட்சமான சிந்தனைகளாகும் என்றும் கூறுவதற்கு சமமாகும்.

ஆனால் அப்படிப்பட்ட சிந்தனை எந்த அளவுக்கு முட்டாள்தனமானது என சிந்திக்க வேண்டும். எவன் மனிதனுக்கு தனது நெருக்கத்திற்கான திறனை

வழங்கினானோ எவன் தன்னைப் பற்றிய அன்பு மற்றும் நேசத்தினால் நிம்மதியிழக்கச் செய்தானோ அவனுடன் உரையாடும் அருளிலிருந்து அவனிடம் வேண்டுபவர் விலகியிருக்க முடியுமா?

இறைவன் மீது அன்பு கொள்வது, இறைவன் மீது நேசம் கொள்வது, இறைவனுக்காக தன்னை இழப்பது, தன்னை மாய்த்துக் கொள்வது ஆகிய இவை அனைத்தும் சாத்தியமானதும் ஆகுமானதும் ஆகும்; அதற்கு இறைவனுடைய மகத்துவத்தில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் தனது உண்மையான நேசரின் உள்ளத்தில் இறைவனின் இல்ஹாம் இறங்குவது சாத்தியமற்றதும், ஆகாததும் ஆகும் என்பது சரியானதா என்ன?

**மனிதன் இறையன்பு என்ற எல்லையற்ற நதியில் மூழ்குவதும் பிறகு எந்த இடத்திலும் நிறுத்தாதிருப்பதும் அவனது அற்புதமான ஆன்மா இறைவனின் ஞானத்திற்காக படைக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு உறுதியான சாட்சியாகும்.**

எனவே எது இறைவனுடைய ஞானத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதற்கு முழுமையான இறைஞானத்திற்கு ஊடகமாக இருக்கும் இல்ஹாம் கிடைக்கவில்லை என்றால் இறைவன் அதை தனது ஞானத்திற்காக படைக்கவில்லை எனக் கூற வேண்டியது வரும்.

**நல்ல இயல்பைக் கொண்ட மனிதனின் ஆன்மா இறைவனின் ஞானத்தின் பசியையும் தாகத்தையும் கொண்டது என்பதை பிரம்ம சமாஜிகளும் மறுக்கவில்லை. எனவே சரியான இயல்பைக் கொண்ட மனிதன் தானாகவே இறைவனுடைய ஞானத்தை**

**வேண்டுபவனாக இருக்கின்ற நிலையில், இறைஞானத்திற்கான முழுமையான வழிமுறை இறையறிவிப்பைத் தவிர வேறேதுமில்லை என்று நிரூபணமாகியிருக்கும்போது அந்த முழுமையான இறைஞானத்திற்கான வழிமுறை சாத்தியமற்றது எனக் கருதுவது - இன்னும் கூறுவதாயின் அதைத் தேடுவது மரியாதைக்கு அப்பாற்பட்டது என்றால் இறைவனுடைய ஞானத்தின்மீது மிகப் பெரிய ஆட்சேபனை எழும்.**

அதாவது அவன் மனிதனுக்கு தனது ஞானத்திற்கான ஆர்வத்தை வழங்கி விட்டான். ஆனால் அந்த ஞானத்தைப் பெறுவதற்கான வழிவகையை வழங்கவில்லை. எந்த அளவுக்கு பசி இருந்ததோ அந்த அளவுக்கு உணவை வழங்க விரும்பவில்லை. எந்த அளவுக்கு தாகத்தை வழங்கினானோ அந்த அளவுக்கு தண்ணீர் வழங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாகி விடும். ஆனால் அப்படிப்பட்ட சிந்தனை இறைவனுடைய மகத்தான கருணைகளுக்கு மதிப்பளிக்காததாகும் என்பதை அறிவுடைய மக்கள் நன்கு புரிகின்றனர்.

**வலுவான ஈர்ப்பினால் இறைவன் பக்கம் ஈர்க்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த உலகிலேயே இறைமையின் கதிர்களை முழுமையான முறையில் பார்க்க வேண்டும் என்பதிலேயே ஞானம் மிக்க இறைவன் மனிதனின் எல்லா நற்பேறுகளையும் வைத்திருக்கும்போது அப்படிப்பட்ட கண்ணியத்திற்குரிய, அருளாளனாகிய இறைவனைப் பற்றி, அவன் மனிதனை அவன் வேண்டுகின்ற நற்பேறு வரை, அவனது இயல்பான அந்தஸ்து வரை எட்ட வைக்க விரும்புவதில்லை எனக் கருதுவது பிரம்ம சமாஜிகளின்**

**நூதனமான அறிவுடைமை ஆகும்.**

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் நான்கு பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 230 - 232 அடிக்குறிப்பு எண்:11)*

இறைவன் மனிதர்களிடம் எந்த நோக்கத்திற்கான எண்ணம் கொண்டிருக்கின்றானோ முதலில் அந்த நோக்கத்தை முழுமை செய்வதற்காக எல்லா ஆற்றல்களையும், தானே படைத்துள்ளான். உதாரணமாக, மனித ஆன்மாக்களில் அன்பின் ஓர் ஆற்றல் காணப்படுகிறது. ஒரு மனிதன் தனது தவற்றின் காரணமாக மற்றவர் மீது அன்பு செலுத்தினாலும், தனது அன்பிற்கான வீடாக இன்னொருவரைக் கருதினாலும் இந்த அன்பின் ஆற்றல் அதன் இறைவனாகிய உண்மையான அன்பிற்குரியவனுடன் தனது முழு உள்ளத்துடனும், முழு ஆற்றலுடனும், முழு ஆர்வத்துடனும் நேசம் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆன்மாவில் வைக்கப்பட்டுள்ளது என்பதை பகுத்தறிவு மிக எளிதாகப் புரிய முடியும்.

எனவே மனிதனுடைய ஆன்மாவில் காணப்படும் இந்த அன்பின் ஆற்றல் - அதன் அலைகள் எல்லையற்றவை. அதன் முழுமையான அலை மேலோங்கும்போது மனிதன் தனது உயிரையும் விடுவதற்கு ஆயத்தமாகி விடுகின்றான். இது ஆன்மாவிடம் தொன்மையிலிருந்தே இருக்கிறது என்று கூற முடியுமா? அவ்வாறு ஒருபோதும் அல்ல.

இறைவன் மனிதனிடமும் தன்னிடமும் அன்பான தொடர்பை நிலைநாட்டுவதற்காக ஆன்மாவில் அன்பின் ஆற்றலை உருவாக்கி இந்த தொடர்பை தானே உருவாக்கவில்லை என்றால், பரமேசுவரனின் நற்பாக்கியத்தால் ஆன்மாக்களிடம் (பரமேசுவரன் மீது) அன்பின் ஆற்றல் காணப்படுவது என்பது தற்செயலான

விஷயமாகி விடும்.

இதற்கு எதிராக தற்செயலான ஒரு விஷயம் இருந்தால் அதாவது அன்பின் ஆற்றல் ஆன்மாக்களிடம் காணப்படாவிட்டால், மக்களுக்கு பரமேசுவரனின் பக்கம் ஒருபோதும் சிந்தனை போகாது. பரமேசுவரனும் இதில் எந்த திட்டமும் செய்ய முடியாது. ஏனெனில் இல்லாமையிலிருந்து இருப்பு தோன்ற முடியாது. ஆனால் இறையச்சம், இறைவணக்கம், நற்செயல்கள் ஆகிய விஷயத்தில் பரமேசுவரன் பிடிப்பது, அவனே அன்பு, கட்டுப்படுதல் ஆகியவற்றின் ஆற்றல்களை மனிதனுடைய ஆன்மாவிற்குள் வைத்திருக்கின்றான் என்பதற்கு சான்றாக இருக்கிறது.

எனவே அவனே இந்த ஆற்றல்களை மனிதனிடம் வைத்திருக்கும்போது அவனுடைய அன்பிலும் கட்டுப்படுதலிலும் மனிதன் தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும் என விரும்புகிறான். இல்லையென்றால் மக்கள் தன்னை நேசிக்க வேண்டும் என்றும் தனக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் அவனது விருப்பத்திற்கேற்ப நடப்பதும் பேசுவதும் இருக்க வேண்டும் என்றும் பரமேசுவரனிடம் ஏன் ஆசை தோன்றியது?

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 385 - 386)*

قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰىهَا

(திருக்குர்ஆன் 91:10)

*அந்தத் தூயவனிடம் ஒருவர் உள்ளம் வைத்தால்,*
*தன்னை அவர் தூய்மையாக்க வேண்டும்.*
*அப்போது அவர் அவனைப் பெறுவார். (கவிதை வரிகள்)*

**எங்களில் அதிகமானோர் இறைவனை நேசிப்பவர்களாவோம் என்பது எல்லா சமுதாயத்தின் வாதமாகும். ஆனால் இறைவனும் அவர்களை நேசிக்கின்றானா இல்லையா என்பதுதான் சான்றுக்குரிய விஷயமாகும்.**

மேலும் இறைவனின் அன்பு என்பது, முதலில் அவர்களுடைய உள்ளங்களிலிருந்து திரையை அகற்றி விடுவதாகும். அந்த திரையின் காரணமாகத்தான் மனிதன் இறைவனின் இருப்பின் மீது உறுதியான நம்பிக்கை வைப்பதில்லை. ஒரு மங்கலான, இருள்படிந்த இறைஞானத்துடன் அவனது இருப்பை ஒப்புக் கொள்கின்றான். இன்னும் கூறுவதாயின் சில நேரத்தில் சோதனையின்போது அவனது இருப்பையே மறுத்து விடுகின்றான். இறைவனுடன் உரையாடலின்றி இந்தத் திரை அகற்றப்படுவது எந்நிலையிலும் சாத்தியமே இல்லை.

எனவே இறைவன் மனிதனை நோக்கி, *அனல் மவ்ஜூது* (நான் இருக்கின்றேன்) என்று தானே நற்செய்தி வழங்கும் நாளில் மனிதன் உண்மையான இறைஞானம் என்னும் நீரூற்றில் நீந்துகின்றான். அப்போது மனிதனுடைய இறைஞானம் வெறும் அனுமானம், கற்பனை அல்லது முன்னர் எடுத்துக் கூறப்பட்ட சான்றுகள் என்ற எல்லைக்குள் மட்டும் இருப்பதில்லை. மாறாக, இறைவனைப் பார்க்கும் அளவுக்கு அவனுக்கு மிகவும் அருகில் சென்று விடுகிறான்.

**அல்லாஹ் தனது இருப்பிற்கான சான்றை தானே தரும் அந்த நாளில்தான் அல்லாஹ்வின் மீது முழுமையான ஈமான் உருவாகிறது என்பது உண்மையாகும்; முற்றிலும் உண்மையாகும். பிறகு இறைவனுடைய அன்புக்கு**

**இன்னோர் அடையாளம் என்னவெனில்,** அவன் தனது அன்பிற்குரிய அடியார்களுக்கு தனது இருப்பிற்கான செய்தியை மட்டும் தெரிவிப்பதில்லை; மாறாக, தனது அருள், கருணையின் அடையாளங்களையும் சிறப்பாக அவர்களுக்கு வெளிப்படுத்துகிறான்.

அது எவ்வாறென்றால் வெளிப்படையான நம்பிக்கைகளை விட **அதிகமாக இருக்கின்ற அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டு தனது இல்ஹாம், உரையாடல் மூலமாக அவர்களுக்கு தகவல் வழங்கி விடுகின்றான்.** அப்போது இது நமது ஆற்றல் மிக்க இறைவன் ஆவான்; அவன் நமது துஆக்களைக் கேட்கின்றான்; நமக்கு தகவல் தெரிவிக்கின்றான்; கஷ்டங்களிலிருந்து நமக்கு ஈடேற்றத்தை வழங்குகிறான் என அவர்களின் உள்ளங்கள் திருப்தியடைகின்றன.

அந்த நாளிலிருந்தே ஈடேற்றத்திற்கான விவகாரமும் அவர்களுக்கு புரிய வருகிறது. இறைவனுடைய இருப்பைப் பற்றியும் தெரிய வருகிறது. விழிப்புணர்வூட்டுவதற்காகவும், எச்சரிப்பதற்காகவும் சில நேரத்தில் மற்றவர்களுக்கும் உண்மையான கனவுகள் வரலாம். ஆனால் இந்த முறையிலான அந்தஸ்து, மகத்துவம் வேறு வகைப்பட்டதாகும். இறைவனுடைய இந்த உரையாடல் அவனுடைய சிறப்பான நெருக்கத்தைப் பெற்ற அடியார்களுடனேயே நடைபெறுகின்றது.

இறைநெருக்கத்தைப் பெற்ற அடியார் துஆ செய்யும்போது இறைவன் தனது இறைமையின் கம்பீரத்துடன் அவருக்கு தோற்றத்தை காட்டுகிறான். மேலும் தனது ஆன்மாவை அவர் மீது இறக்குகின்றான்.

**மேலும் தனது அன்பால் நிறைந்த சொற்களுடன் அவருக்கு துஆ ஒப்புக்கொள்ளப்பட்டதற்கான நற்செய்தியை வழங்குகின்றான். எத்தகையவருடன் இந்த உரையாடல் அதிகமாக நடக்கின்றதோ அவரை நபி என்றும்,முஹத்தஸ் (இறைவனிடமிருந்து உரையாடலைப் பெற்றவர்) என்றும் கூறுகிறோம்.**

*(ஹுஜ்ஜத்துல் இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 42,43)*

அடியார் அழகிய முறையில் நடந்து காட்டி உண்மையால் நிரம்பிய தனது அன்பை வெளிப்படுத்துகிறார். ஆனால் இறைவன் அதற்கு எதிரில் அளவு கடந்து விடுகின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவருடைய விரைவுக்கு எதிரில் மின்னலைப் போன்று அவர் பக்கம் ஓடியவாறு வருகின்றான். வானத்திலும் பூமியிலும் அவருக்காக அடையாளத்தை வெளிப்படுத்துகிறான். மேலும் அவருடைய நண்பர்களுக்கு நண்பனாகவும் எதிரிகளுக்கு எதிரியாகவும் ஆகி விடுகின்றான்.

50 **கோடி மனிதர்களும் அவரை எதிர்ப்பதில் நின்றாலும், மரணித்த ஒரு புழுவைப் போன்று அவர்களை இழிவாகவும் ஒன்றுமற்றவர்களாகவும் ஆக்கி விடுகின்றான். ஒரு நபருக்காக ஓர் உலகத்தை அழித்து விடுகின்றான்.**

மேலும் தனது வானத்தையும் பூமியையும் அவருக்கு தொண்டு செய்யக் கூடியவையாக ஆக்கி விடுகின்றான். அவரது கூற்றில் அருளை இட்டு விடுகின்றான். அவருடைய எல்லா வாசல்களிலும் சுவர்களிலும் ஒளியின் மழையை பொழிய வைக்கின்றான். அவரது ஆடையிலும் அவரது உணவிலும் அவரது காலடிபடும் மண்ணிலும் ஓர் அருளை வைத்து

விடுகின்றான். தோல்வியடைந்த நிலையில் அவருக்கு மரணத்தை வழங்குவதில்லை.

அவர் மீது செய்யப்பட்ட ஒவ்வோர் ஆட்சேபனைக்கும் அவனே பதிலளிக்கின்றான். அவர் பார்க்கும் கண்களாகி விடுகிறான். அவர் கேட்கும் காதுகளாகி விடுகிறான். அவர் பேசும் நாவாகி விடுகிறான். அவர் நடக்கும் கால்களாகி விடுகின்றான். அவரது எதிரிகளை தாக்கும் அவரின் கைகளாகி விடுகின்றான். அவருடைய எதிரிகளுக்கு எதிராக அவனே களமிறங்குகிறான். அவருக்கு துக்கத்தைக் கொடுக்கின்ற விஷமிகள் மீது அவனே வாளேந்துகின்றான். எல்லா களங்களிலும் அவருக்கு வெற்றியை வழங்குகிறான். தனது நியதியின் மறைவான இரகசியங்களை அவரிடம் கூறுகின்றான். சுருக்கமாக, அழகிய முறையில் நடந்து கொள்வது மற்றும் சொந்த அன்பு ஆகியவற்றிற்குப் பிறகு உருவாகும் அவருடைய ஆன்மீக அழகையும் பொலிவையும் முதலில் வாங்கக் கூடியவன் இறைவனே ஆவான். அப்படிப்பட்ட காலத்தைப் பெற்றிருந்தும் - அப்படிப்பட்ட சூரியன் அவர்கள் மீது உதித்திருந்தும் இருளில் இருக்கின்ற மக்கள் எவ்வளவு பேறிழந்தவர்களாக இருக்கின்றார்கள்!

*(பராஹீனே அஹ்மதிய்யா இணைப்பு. பகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 225)*

ஆன்மீக மாற்றம் முழுமையான பிறகு இறைவனுடைய சொந்த அன்பின் சுடர் மனிதனுடைய உள்ளத்தில் ஓர் ஆன்மாவைப் போன்று விழுகிறது. மேலும் நிரந்தமாக இருக்கும் நிலைமையை அவருக்கு வழங்குகிறது. முழுமையை அடைகிறது. அப்போதுதான் ஆன்மீக அழகு தனது முழு தோற்றத்தையும் காட்டுகிறது.

ஆனால் ஆன்மீக அழகாகிய இந்த அழகை அழகிய முறையில் நடந்து கொள்ளுதல் என்ற பெயரால் அழைக்கலாம். இது தனது வல்லமை மிக்க ஈர்ப்புகளுடன் ஓர் அழகிய முகத்தை விட மிகவும் அழகானதாகும். ஏனெனில் அழகிய முகம் ஒன்று அல்லது இரண்டு நபரின் அழிந்து போகின்ற அன்புக்குக் காரணமாக இருக்கும். அது சீக்கிரம் அழிந்து விடும். மேலும் அதன் ஈர்ப்பு மிகவும் பலவீனமானதாக இருக்கும்.

ஆனால் அழகிய விவகாரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற அந்த ஆன்மீக அழகு தனது ஈர்ப்பில் எத்தகைய உறுதியானதும் வலுவானதும் என்றால், அது ஓர் உலகத்தை தன் பக்கம் ஈர்த்து விடுகிறது. வானம், பூமி ஆகியவற்றின் ஒவ்வோர் அணுவும் அதன் பக்கம் ஈர்க்கப்படுகிறது. மேலும் உண்மையில் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதன் தத்துவமும் இதுவேயாகும்.

இறைவனுடைய அன்பின் ஆன்மா நுழைந்து விடுகின்ற அப்படிப்பட்ட ஆன்மீக அழகுடைய மனிதன் சாத்தியமில்லாததும் மிகவும் கடினமானதுமாகிய விஷயத்திற்காக துஆ செய்யும்போது அந்த துஆவில் முழுமையான அழுத்தம் கொடுக்கும்போது அவர் தன்னிடம் ஆன்மீக அழகைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இறைவனுடைய கட்டளையினாலும் அனுமதியினாலும் இந்த உலகின் ஒவ்வோர் அணுவும் அவர் பக்கம் ஈர்க்கப்படுகிறது.

எனவே அவருடைய வெற்றிக்குப் போதுமான வழிவகைகள் ஒன்று சேர்கின்றன. உலகின் ஒவ்வோர் அணுவுக்கும் இயல்பாக அப்படிப்பட்ட நபருடன் ஓர் அன்பு ஏற்படுகிறது; **அவரது துஆக்கள் காந்தம் இரும்பை ஈர்ப்பது போன்று அந்த எல்லா அணுக்களையும் தன் பக்கம்**

**ஈர்க்கிறது என்பது அனுபவத்தாலும் இறைவனுடைய தூய வேதத்தினாலும் நிரூபணமாகின்றது.**

எந்தவோர் இயல்பான அறிவிலும் தத்துவ வாதத்திலும் இல்லாத அசாதாரணமான விஷயங்கள் இந்த ஈர்ப்பின் கரணமாக வெளிப்பட்டு விடுகின்றன. மேலும் அந்த ஈர்ப்பு இயல்பானதாகும். படைத்தவன் உலகின் கோள்களை அணுக்களால் உருவாக்கியிருக்கும்போது ஒவ்வோர் அணுவிலும் அந்த ஈர்ப்பை வைத்திருக்கிறான். மேலும் ஒவ்வோர் அணுவும், அவ்வாறே ஒவ்வொரு நற்பேறு பெற்ற ஆன்மாவும் ஆன்மீக அழகின் உண்மையான நேசர் ஆகும். ஏனெனில் அந்த அழகின் தோற்றத்தின் இடம் உண்மையானதாகும்.

அந்த அழகிற்காகவே, اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوٓا إِلَّآ إِبْلِيسَ என்று கூறப்பட்டுள்ளது. (அதாவது ஆதமுக்குக் கட்டுப்படுங்கள் எனக் கூறினான். அவர்கள் கட்டுப்பட்டனர்; ஆனால் இப்லீஸ் கட்டுப்படவில்லை. *(திருக்குர்ஆன்2:35 காண்க).* இப்போதும் பல இப்லீஸுகள் இருக்கின்றனர். அவர்கள் இந்த அழகை அடையாளம் காண்பதில்லை. ஆனால் அந்த அழகு மிகப் பெரிய வேலையை செய்து கொண்டிருக்கிறது.

**நூஹ்விடமும் அந்த அழகுதான் இருந்தது. அதை கண்ணியத்திற்குரிய இறைவன் ஒப்புக் கொண்டான். மேலும் அனைத்து நிராகரிப்பாளர்களும் வெள்ளத்தால் அழிக்கப்பட்டனர். அதற்குப் பிறகு மூஸா (அலை) அவர்களும் அதே ஆன்மீக அழகைக் கொண்டு வந்தார். அது சில நாட்கள் துன்பங்களைத் தாங்கி கடைசியில் ஃபிர்அவ்னை அழித்தது. பிறகு அனைவருக்கும் பின்னர்**

**சய்யிதுல் அன்பியா (நபிமார்களுக்கெல்லாம் தலைவர்), கைருல் வரா (மக்களில் சிறந்தவர்) மவ்லானா வ சய்யித்னா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒரு மகத்தான ஆன்மீக அழகைக் கொண்டு வந்தார்கள். அதன் புகழ்ச்சியில், கீழ்வரும் திருவசனம் போதுமானதாகும்:**

دَنَا فَتَدَلّٰى - فَكَانَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى

*(திருக்குர்ஆன் 53:9,10)*

**அதாவது அந்த நபி இறைசந்நிதியில் மிகவும் அருகில் சென்று விட்டார். பிறகு படைப்பினங்களின் பக்கம் குனிந்தார். இவ்வாறு அல்லாஹ்வின் உரிமைகள், படைப்பினங்களின் உரிமைகள் ஆகிய இரண்டு உரிமைகளையும் நிறைவேற்றினார். மேலும் இரு வகையான ஆன்மீக அழகை வெளிப்படுத்தினார்.**

*(பராஹீனே அஹ்மதிய்யா இணைப்பு பகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 219 - 221)*

மாநாட்டில் படித்துக் காட்டப்பட்ட இதே கட்டுரையில் படித்துக் காட்டுபவர், பரமேசுவரன் கோபம், குரோதம், வெறுப்பு, பொறாமை ஆகியவற்றிலிருந்து தனித்தவர் ஆவார் என்று குறிப்பிட்டார். ஒருவேளை அவருடைய இந்த சொற்பொழிவின் கருத்து, திருக்குர்ஆனில் இறைவனைப் பற்றி கோபம் என்ற சொல் வந்துள்ளது என்பதாகும்.

**ஆக, அவர் இந்த கட்டுரையில் இறைவன் கோபமும்படுகின்றான் என்ற திருக்குர்ஆனின் போதனையை விட்டும் வேதத்தின் போதனையை தூயதாகக் காட்டுகிறார். ஆனால் அது முற்றிலும் அவருடைய தவறாகும். திருக்குர்ஆனில் எந்த**

**தேவையற்ற கோபத்தையும் அநியாயமான கோபத்தையும் இறைவனுடன் தொடர்புபடுத்திக் கூறப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.**

**மாறாக, மிகவும் தூய்மையானதும், பரிசுத்தமானதுமான காரணத்தினால் இறைவனிடம் கோபத்தைப் போன்றதொரு பண்பு இருக்கிறது என்ற அளவுக்கு மட்டுமே இதன் பொருளாகும். அந்தப் பண்பு வரம்பு மீறுவதிலிருந்து விலகாதவருக்கு கட்டுப்படாதவருக்கு தண்டனை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. மேலும் இதற்கு இணக்கமான ஒரு பண்பு அன்பாகும்.**

**அது கட்டுப்படுபவர்களுக்கு அவர்களின் கட்டுப்படுதலுக்கான நற்பலனைக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது.**

எனவே புரிய வைப்பதற்காக முதல் பண்பின் பெயர் கோபம் என்றும் இரண்டாவது பண்பின் பெயர் அன்பு என்றும் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த கோபம் மனிதனுடைய கோபத்தைப் போன்றதல்ல; அவனுடைய அன்பு மனிதனுடைய அன்பைப் போன்றதல்ல. உதாரணமாக, அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கிறான்:

لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞ

அதாவது இறைவனைப் போன்ற - அவனது பண்பைப் போன்ற எந்தப் பொருளும் இல்லை. ஆரியர்களின் வேதத்தின் அடிப்படையில் அவர்களின் பரமேசுவரன் ஏன் பாவிகளுக்கு தண்டனை வழங்குகிறான் என்று நாம் கேட்கிறோம். எதுவரை என்றால் மனித பிறவிலிருந்து மிகவும் தரம் தாழ்த்தி நாயாகவும், பன்றியாகவும், குரங்காகவும், பூனையாகவும் ஆக்கி

விடுகின்றான். கடைசியில் இந்த செயலை செய்யத் தூண்டும் அப்படிப்பட்ட பண்பு அவனிடத்தில் இருப்பதாக ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகிறது. இந்தப் பண்புக்குப் பெயர்தான் திருக்குர்ஆனில் கோபம் என்பதாகும்...

**பாவிகளுக்கு தண்டனை வழங்குவதற்கான பண்பு பரமேசுவரனுக்கு இல்லை என்றால் பிறகு ஏன் பரமேசுவரனின் இயல்பு தண்டனை வழங்குவதன் பக்கம் திரும்பியது?** இறுதியில் அவனிடம் பழி வாங்குவதன் பக்கம் கவனத்தைத் திருப்புகின்ற ஒரு பண்பு அவனிடம் இருக்கிறது. எனவே அந்தப் பண்புக்குப் பெயர்தான் கோபம் என்பதாகும். ஆனால் அந்தக் கோபம் மனிதனுடைய கோபத்தைப் போன்றது அல்ல. மாறாக, இறைவனுடைய மகத்துவத்தைப் போன்றதாகும். இந்த கோபத்தைப் பற்றிய குறிப்புதான் திருக்குர்ஆனில் காணப்படுகிறது...

அவன் நற்செயல்கள் செய்பவர்களுக்கு தனது அருள்களை இறக்கும்போது அவன் அவர் மீது அன்பு செலுத்தினான் என்று கூறப்படுகிறது. அவன் தீய செயலை செய்யும் ஒருவருக்கு தண்டனை வழங்கும்போது அவன் அவர் மீது கோபம் கொண்டான் என்று கூறப்படுகிறது.

சுருக்கமாக, **வேதத்தில் கோபத்தைப் பற்றிய குறிப்பு வருவதைப் போன்றே திருக்குர்ஆனிலும் குறிப்பு வருகிறது. வித்தியாசம் என்னவென்றால், இறைவன் கடும் கோபத்தின் காரணமாக பாவங்களின் காரணமாக மனிதர்களை புழு பூச்சிகளாக ஆக்கி விடுகின்றான் என்ற எல்லை வரை இறைவனின் கோபத்தை வேதம் கொண்டு சென்று விட்டது. ஆனால் திருக்குர்ஆன் இறைவனின் கோபத்தை இந்த எல்லை வரை கொண்டு செல்லவில்லை. மாறாக,**

**இறைவன் பாவங்களுக்கு தண்டனை வழங்கினாலும் அவன் மனிதனை மனிதனாகவே வைக்கின்றான். வேறு எந்த பிறவியிலும் இடுவதில்லை.**

இதிலிருந்து திருக்குர்ஆனின்படி இறைவனின் அன்பும் கருணையும் அவனது கோபத்தை விட அதிகமானதாகும் என்பது நிரூபணமாகின்றது. மேலும் **வேதத்தின் அடிப்படையில் பாவிகளின் தண்டனை எல்லையற்றது. பரமேசுவரனிடம் கோபம் மட்டுமே இருக்கிறது. கருணையின் அடையாளம் கூட இல்லை. ஆனால் நரகவாசிகளுக்கு கடைசியில் ஒரு காலம் வரும். அப்போது இறைவன் அவர்கள் அனைவர் மீதும் கருணை காட்டுவான் எனத் திருக்குர்ஆனிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிகிறது.**

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 46-50)*

இஞ்சீலில் இவ்வாறு வருகிறது: வானத்தில் இருக்கும் எங்களுடைய பிதாவே! உமது பெயருக்கு தூய்மை உண்டாகட்டுமாக என்று பிரார்த்தனை செய்யுங்கள். உமது ஆட்சி உண்டாகட்டுமாக. உமது விருப்பம் வானத்தில் இருப்பதைப் போன்று பூமியிலும் உண்டாவதாக. ஒவ்வொரு நாளுக்கான அப்பத்தை எங்களுக்கு வழங்குவீராக. நாங்கள் எங்களுக்குக் கடன்பட்டவர்களை மன்னிப்பதைப் போன்று நீர் எங்களை மன்னிப்பீராக. மேலும் எங்களை சோதனைக்கு உள்ளாக்காதிருப்பீராக. மாறாக, தீமையிலிருந்து காப்பாற்றுவீராக. ஏனெனில் ஆட்சி, ஆற்றல், கம்பீரம் ஆகிய அனைத்தும் எப்போதும் உமக்கே உரியனவாகும்.

ஆனால் பூமி தூய்மையிலிருந்தும் வெற்றிடமாக இருக்கிறது என திருக்குர்ஆன் கூறவில்லை. மாறாக,

வானத்தில் மட்டுமின்றி பூமியிலும் இறைவனுடைய தூய்மை எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என அது கூறுகின்றது:

وَاِنْ مِّنْ شَیْءٍ اِلَّا یُسَبِّحُ بِحَمْدِهٖ

*(திருக்குர்ஆன் 17:45)*

یُسَبِّحُ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ

*(திருக்குர்ஆன் 62:2)*

அதாவது வானம், பூமியின் ஒவ்வோர் அணுவும் இறைவனைப் புகழ்கின்றன; அவனது தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவற்றில் உள்ளவை அனைத்தும் அவனைப் புகழ்வதிலும் தூய்மையை எடுத்துரைப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றன. மலைகள் அவனை நினைவு கூர்வதில் ஈடுபட்டிருக்கின்றன; நதிகள் அவனை நினைவு கூர்வதில் ஈடுபட்டிருக்கின்றன; மரங்கள் அவனை நினைவு கூர்வதில் ஈடுபட்டிருக்கின்றன; பல நேர்வழிபெற்றவர்கள் அவனை நினைவு கூர்வதில் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் எவர் உள்ளத்தாலும் நாவினாலும் அவனை நினைவு கூர்வதில் ஈடுபடவில்லையோ, இறைவனுக்கு முன்னால் பணிவை மேற்கொள்ளவில்லையோ அவரை பலவிதமான கிடுக்கிகளின் மூலமாகவும், தண்டனையின் மூலமாகவும் இறைவனின் நியதி பணிவை மேற்கொள்ள வைக்கிறது.

மேலும் வானவர்களைப் பற்றி இறைவேதத்தில் என்ன எழுதப்பட்டுள்ளதோ அதாவது அவர்கள் மிகவும் உயர்தரமாக கட்டுப்படுகிறார்கள். அந்தப் புகழ்தான் பூமியின் ஒவ்வொரு புற்பூண்டுகளைப் பற்றியும், ஒவ்வோர்அணுக்களைப் பற்றியும்

திருக்குர்ஆனில் காணப்படுகிறது. ஒவ்வொரு பொருளும் அவனுக்குக் கட்டுப்படுகிறது. அவனுடைய அனுமதியின்றி ஓர் இலை கூட உதிர முடியாது. அவனுடைய கட்டளையின்றி எந்தவொரு மருந்தும் குணமளிக்க முடியாது. எந்த ஓர் உணவும் பொருத்தமானதாக முடியாது.

மேலும் ஒவ்வொரு பொருளும் மிகவும் அதிமான பணிவுடனும் இறைவனுக்கு அடிமையாக இருக்கும் பண்புடனும் இறைவனுடைய சந்நிதியில் வீழ்ந்து கிடக்கின்றன. மேலும் அவனுக்குக் கட்டுப்படுவதில் மூழ்கியிருக்கின்றன. மலைகள், பூமியின் ஒவ்வோர் அணுவும் நதிகள், கடல்களின் ஒவ்வொரு துளியும் மரங்கள், புற்பூண்டுகளின் ஒவ்வோர் இலையும் அவற்றின் ஒவ்வொரு பகுதியும் மனிதன், விலங்குகளின் ஒவ்வோர் அணுவும் இறைவனை புரிகின்றன. அவனுக்குக் கட்டுப்படுகின்றன. அவனைப் புகழ்வதிலும், அவனது தூய்மையை எடுத்துக் கூறுவதிலும் ஈடுபட்டுள்ளன. இதன் காரணமாகவே அல்லாஹ், يُسَبِّحُ لِلّٰهِ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ என்று கூறியிருக்கிறான். (62:2)

அதாவது வானத்தில் எல்லா பொருள்களும் இறைவனின் தூய்மையை எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதைப் போன்று பூமியிலும் ஒவ்வொரு பொருளும் அவனது தூய்மையை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றன.

எனவே பூமியில் இறைவனின் தூய்மையை எடுத்துக் கூறுவது நடக்கவில்லையா என்ன? அப்படிப்பட்ட சொல் ஒரு முழுமையான இறைஞானம்மிக்கவருடைய வாயிலிருந்து வெளிவர முடியாது. இன்னும் கூறுவதென்றால், பூமியிலுள்ள

பொருள்களில் சில ஷரீஅத்தின் கட்டளைகளுக்குக் கட்டுப்படுகின்றன. மேலும் சில இறைநியதிக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கின்றன.

இன்னும் சில இரண்டுக்கும் கட்டுப்படுவதில் ஈடுபட்டிருக்கின்றன. மேகம், காற்று, நெருப்பு, பூமி அனைத்தும் இறைவனுடைய தூய்மையை எடுத்துரைப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. ஒரு மனிதன் இறைவனுடைய ஷரீஅத்தின் கட்டளைக்கு மாறு செய்கின்றான் என்றால் அவன் இறைநியதியின் கட்டளையின் கீழ் இருக்கின்றான். இந்த இரு கட்டளைகளுக்கும் வெளியே யாரும் இல்லை. வானத்தின் ஏதாவது ஓர் ஆட்சியின் சுமை ஒவ்வொருவரின் கழுத்தில் இருக்கிறது. ஆயினும் மனித உள்ளத்தின் சீர்திருத்தம் மற்றும் குழப்பம் ஆகியவற்றிற்கேற்ப கவனமின்மையும் இறைவனை நினைவு கூருவதும் ஒவ்வொரு தடவையும் பூமியில் தனது மேலோங்குதலை உருவாக்குகின்றது. ஆனால் இறைவனுடைய ஞானம் இல்லாமல் இந்த ஏற்றத்தாழ்வு சுயமாகவே உருவாவதில்லை. பூமியில் அப்படி இருக்க வேண்டும் என இறைவன் நாடினான்;

எனவே அது அப்படி ஆகி விட்டது. எனவே ஒவ்வொன்றும் அவனது ஓசையைக் கேட்கிறது. அவனது தூய்மையை நினைவு கூருகிறது என்றாலும் நேர்வழி, வழிகேடு ஆகியவற்றின் காலகட்டமும் இரவு பகலின் காலகட்டத்தைப் போன்று இறைவனின் சட்டம் மற்றும் அனுமதிக்கேற்ப நடக்கின்றது. தானாகவே அல்ல.

ஆனால் **இஞ்சீல் இவ்வாறு கூறுகிறது:** பூமி இறைவனின் தூய்மையை விட்டும் வெற்றிடமாக இருக்கிறது. இதற்கான காரணம் இஞ்சீலின் பிரார்த்தனையின் அடுத்துள்ள

வாக்கியத்தில் சைகையாகக் காணப்படுகிறது. அது என்னவெனில் பூமியில் இன்னும் இறைவனின் ஆட்சி வரவில்லை.

எனவே **வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல - ஆட்சி இல்லாதிருப்பதன் காரணமாக வானத்தில் இருப்பதைப் போன்று இறைவனின் விருப்பம் பூமியில் நிலைபெற முடியாது. ஆனால் திருக்குர்ஆனின் போதனை இதற்கு முற்றிலும் நேர்மாற்றமானதாகும்.**

எந்தத் திருடனும், கொலைகாரனும், விபச்சாரனும், இறைமறுப்பாளனும், தீயவனும், வரம்பு மீறுபவனும், குற்றங்களை தொழிலாகக் கொண்டவனும் எவனும் வானத்திலிருந்து அவனுக்கு அதிகாரம் வழங்கப்படாதவரை எந்தவிதமான தீமையையும் பூமியில் செய்யவே முடியாது. எனவே வானத்தின் ஆட்சி பூமியில் இல்லை என்று எப்படிக் கூற முடியும்?

**எந்த எதிரியாவது பூமியில் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் தடையாக இருக்கிறாரா? சுப்ஹானல்லாஹ்! அப்படி ஒருபோதுமன்று.** மாறாக, இறைவனே வானவர்களுக்கு வானத்தில் தனியான கட்டளைகளையும் பூமியில் மனிதர்களுக்கு தனி கட்டளையையும் உருவாக்கியுள்ளான்.

மேலும் **இறைவன் தனது வானத்தின் ஆட்சியில் வானவர்களுக்கு எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை. மாறாக, அவர்களின் இயல்பிலேயே கட்டுப்படும் தன்மையை வைத்து விட்டான்.** அவர்கள் எதிர்ப்பு செய்யவே முடியாது. மேலும் தவறு மற்றும் மறதி அவர்களுக்கு ஏற்படவே

முடியாது. ஆனால் மனிதனுடைய இயல்புக்கு ஒப்புக்கொள்ளும் தன்மை, ஒப்புக்கொள்ளாமை ஆகிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் மேலே இருந்து வழங்கப்பட்டுள்ளது.

**எனவே தீய மனிதன் இருப்பதனால் இறைவனின் ஆட்சி பூமியிலிருந்து நீங்கி விட்டது எனக் கூற முடியாது. மாறாக, இறைவனின் ஆட்சி எல்லா வகையிலும் இருக்கிறது. ஆயினும் சட்டங்கள் இரு வகைப்படும். ஒன்று, வானத்தின் மலக்குகளுக்கு இறைநியதி என்னும் சட்டம். அதாவது அவர்கள் தீமையை செய்யவே முடியாது. இன்னொன்று பூமியில் மனிதர்களுக்காக இறைநியதி தொடர்பான சட்டங்கள்.**

**அது என்னவெனில், அவர்களுக்கு தீமை செய்வதற்கான அதிகாரம் வானத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் அவர்கள் இறைவனிடம் ஆற்றலை வேண்டும்போது அதாவது பாவமன்னிப்பு தேடும்போது பரிசுத்த ஆவியின் ஆதரவினால் அவர்களின் பலவீனம் நீங்கலாம். இறைவனுடைய நபிமார்கள் மற்றும் தூதர்கள் தப்பிப்பதைப் போன்று அவர்கள் பாவங்களை செய்வதிலிருந்து தப்பிக்கலாம்.**

பாவிகளாகி விட்டவர்கள் பாவமன்னிப்பு தேடினால் பாவத்தின் விளைவுகளிலிருந்து அதாவது தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுகின்றனர். பாவமன்னிப்பு அவர்களுக்கு இந்த பயனைத் தருகின்றது. ஏனெனில் ஒளி வருவதனால் இருள் எஞ்சியிருப்பதில்லை. மேலும் பாவமன்னிப்பு செய்யாத பாவிகள் அதாவது இறைவனிடம் ஆற்றலைக் கூட வேண்டாதவர்கள் தமது

பாவங்களுக்கான தண்டனையைப் பெறுகிறார்கள்.

பாருங்கள். **தற்போது பிளேக் நோயும் தண்டனையாக பூமியில் இறங்கியுள்ளது. மேலும் இறைவனுக்கு மாறு செய்பவர்கள் அதன் மூலமாக அழிந்து கொண்டிருக்கின்றனர். பிறகு இறைவனின் ஆட்சி பூமியில் இல்லை என்று எப்படிக் கூற முடியும்?** பூமியில் இறைவனுடைய ஆட்சி இருக்கிறதென்றால் மக்களிடமிருந்து ஏன் பாவங்கள் வெளிப்படுகின்றன? என நினைக்காதீர்கள்.

ஏனெனில் **குற்றங்களும் இறைவனுடைய நியதி என்னும் சட்டத்தின் கீழ் இருக்கின்றன. எனவே அவர்கள் ஷரீஅத்தின் சட்டத்திற்கு வெளியே சென்று விடுகின்றார்கள் என்றாலும் இறைவனால் உருவாக்கப்பட்ட சட்டத்திற்கு அதாவது இறைநியதிக்கு வெளியே அவர்கள் செல்ல முடியாது.** எனவே குற்றமிழைப்பவர்கள் இறை ஆட்சியின் சுமையை தமது கழுத்தின் மீது சுமப்பதில்லை என்று எவ்வாறு கூற முடியும்?...

இறைவனுடைய சட்டம் இன்னும் கடினமாகி விட்டால் விபச்சாரம் செய்யும் ஒவ்வொருவரின் மீதும் இடி விழுந்தால், திருடுகின்ற ஒவ்வொருக்கும் கை அழுகிப் போய் கீழே விழும் நோய் ஏற்பட்டு விட்டால் இறைவனை மறுக்கின்ற அவனது மார்க்கத்தை மறுக்கின்ற ஒவ்வொரு வரம்பு மீறுபவனும் பிளேக் நோயினால் மரணித்து விட்டால் ஒரு வாரம் கழிவதற்குள்ளேயே முழு உலகமும் நேர்வழி, நன்மை எனும் போர்வையை போர்த்திக் கொள்ள முடியும்.

**எனவே இறைவனின் பூமியில் அவனது ஆட்சி இருக்கிறதுதான்; ஆனால் வானத்தினுடைய சட்டத்தின் மென்மை குற்றவாளிகள் சீக்கிரம் பிடிக்கப்படாமல்**

**இருக்கும் அளவுக்கு சுதந்திரத்தை வழங்கி இருக்கிறது.**

ஆயினும் தண்டனைகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. பூகம்பங்கள் வருகின்றன. இடி விழுகின்றன. எரிமலைகள் வெடித்து ஆயிரக்கணக்கான உயிர்களை நாசமாக்குகின்றன. கப்பல்கள் மூழ்குகின்றன. தொடர் வண்டிகளின் மூலமாக நூற்றுக்கணக்கான உயிர்கள் நாசமாகின்றன. புயல் காற்றுகள் வருகின்றன. வீடுகள் இடிந்து விடுகின்றன. பாம்புகள் கடிக்கின்றன. கொடூரமான விலங்குகள் கடித்து குதறுகின்றன. தொற்று நோய்கள் உருவாகின்றன.

**அழிப்பதற்கு ஒரு வாசல் அல்ல; ஆயிரக்கணக்கான வாசல்கள் திறந்துள்ளன. குற்றமிழைப்பவர்களை அழிப்பதற்கு இறைவனின் இயற்கைச் சட்டங்கள் அவற்றை நியமித்துள்ளன. பிறகு இறைவனின் ஆட்சி பூமியில் இல்லை என்று எப்படிக் கூற முடியும்? உண்மை என்னவெனில் ஆட்சி இருக்கிறதுதான். ஒவ்வொரு குற்றவாளியின் கையிலும் சங்கிலிகள் இருக்கின்றன. கால்களில் சங்கிலிகள் இருக்கின்றன. ஆனால் அந்த கையிலிடப்படும் சங்கிலிகளையும் காலிலிடப்படும் சங்கிலிகளையும் உடனேயே தனது விளைவைக் காட்டாத அளவுக்கு இறைவனின் ஞானம் தனது சட்டத்தை மென்மையாக்கி இருக்கிறது.**

கடைசியில் மனிதன் திரும்பவில்லை என்றால் அது அவனை நிரந்தமான நரகம் வரை சென்றடைய வைக்கின்றது. மேலும் அது அவரை எப்படிப்பட்ட தண்டனையில் வீழ்த்தி விடுகிறது என்றால், பிறகு ஒரு குற்றவாளி உயிருடனும் இருக்க முடியாது; மரணிக்கவும் முடியாது.

சுருக்கமாக, இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. ஒன்று வானவர்களைப் பற்றியதாகும். அதாவது அவர்கள் கட்டுப்படுவதற்காக மட்டும் படைக்கப்பட்டுருக்கிறார்கள். மேலும் அவர்களின் கட்டுப்படுதல் இயல்பான ஒளியின் ஒரு தனிச் சிறப்பான பண்பாகும். அவர்கள் பாவம் செய்ய முடியாது. ஆனால் நன்மையில் முன்னேற்றம் காணவும் முடியாது. இரண்டாவது சட்டம், மனிதர்களைப் பற்றியதாகும்.

அதாவது, **மனிதனின் இயல்பில் வைக்கப்பட்டுள்ள சட்டம் என்னவெனில், அவன் பாவம் செய்யலாம். ஆயினும் நன்மையில் முன்னேற்றமும் அடையலாம்.** இந்த இரு இயல்பான சட்டங்களும் மாற்றமில்லாதவையாகும். வானவர் மனிதனாக முடியாததைப் போன்று மனிதனும் வானவராக முடியாது. இந்த இரு சட்டங்களும் மாற முடியாது. அவை ஆதி இல்லாததும், உறுதியானதும் ஆகும்.

எனவே **வானத்தின் சட்டம் பூமியில் வர முடியாது. பூமியின் சட்டம் வானவர்களுக்கு பொருந்தவும் முடியாது. மனிதனின் குற்றங்கள் பாவ மன்னிப்பின் மூலமாக முடிந்து விட்டால் அது அவனை வானவர்களை விட சிறந்தவராக்கி விட முடியும்.**

ஏனெனில் வானவர்களிடம் முன்னேற்றம் அடைவதற்கான இயல்பு இல்லை. மனிதனுடைய பாவங்கள் பாவமன்னிப்பினால் மன்னிக்கப்படுகின்றன. இறைவனுடைய ஞானம் சில நபர்களிடம் குற்றங்களின் தொடரை எஞ்சியிருக்க வைத்துள்ளது. அவர்கள் பாவம் செய்து தமது பலவீனங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் பிறகு பாவமன்னிப்பு செய்து மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்துள்ளது.

மனிதனுக்காக நியமிக்கப்பட்ட சட்டம் இதுவேயாகும். மேலும் இதையே மனிதர்களின் இயல்பும் விரும்புகிறது. தவறு செய்வதும்,மறப்பதும் மனிதனுடைய இயல்பின் சிறப்பான பண்பாகும். இது வானவர்களின் பண்பு அல்ல. பிறகு வானவர்கள் தொடர்பான சட்டம் மனிதர்களிடம் எப்படி செயல்பட முடியும்?

சட்டங்களின் விளைவுகள் மட்டும்தான் பூமியில் நடந்து கொண்டிருக்கின்றன என பலவீனத்தை இறைவனுடன் தொடர்பு படுத்திக் கூறுவது பாவமாகும். அவனுடைய ஆட்சி, வல்லமை, கம்பீரம் ஆகியவை வெறும் வானத்தில் மட்டும்தான் இருக்கிறதா என்ன?-நவூது பில்லாஹ். அல்லது பூமியில் அதற்கு எதிரான முறையில் தனது ஆதிக்கத்தை செலுத்துகின்ற வேறோர் இறைவன் இருக்கின்றானா? பூமியை அவன் எதிர் மறையாக பிடித்து வைத்திருக்கிறானா?

**வானத்தில் மட்டுமே இறைவனுடைய ஆட்சி இருக்கிறது; பூமியில் இன்னும் வரவில்லை என்று கிறித்தவர்கள் அழுத்தம் கொடுப்பது நல்லதல்ல. ஏனெனில் வானம் ஒரு பொருட்டே அல்ல என அவர்கள் கூறுகிறார்கள். இறைவனின் ஆட்சி இருக்கும் வானம் ஒரு பொருட்டே அல்ல என்றால் பூமியில் இன்னும் இறைவனின் ஆட்சி வரவில்லை என்ற நிலையில் இறைவனின் ஆட்சி எந்த இடத்திலும் இல்லை என்றாகி விடும்.அது மட்டுமின்றி நாம் இறைவனின் ஆட்சியை பூமியில் நம் கண்களால் கண்டு கொண்டிருக்கிறோம்.**

அவனது சட்டங்களுக்கேற்ப நமது வாழ்நாள் முடிந்து விடுகின்றன. மேலும் நமது நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. மேலும் நூற்றுக்கணக்கான

அமைதியையும், துக்கத்தையும் நாம் பார்க்கின்றோம். இறைவனின் கட்டளையினால் ஆயிரக்கணக்கான மக்கள் மரணித்துக் கொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பிறந்து கொண்டிருக்கின்றனர். துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அவனது கட்டளையினால் பூமி ஆயிரக்கணக்கான செடிகளையும் பூக்களையும் பழங்களையும் உருவாக்குகின்றன.

**இவையெல்லாம் இறைவனின் ஆட்சி இல்லாமல் நடக்கின்றனவா?** மாறாக, வானத்தின் கோள்கள் ஒரே நிலையிலும், முறையிலும் செல்கின்றன. அதை மாற்றக் கூடியவன் இருக்கிறான் என்பதை உணர்த்தும் எந்தவொரு மாறுபாட்டையும் மாற்றத்தையும் நாம் உணர்வதில்லை. ஆனால் பூமி ஆயிரக்கணக்கான மாற்றங்கள், புரட்சிகள், உருமாற்றங்களுக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்றன. நாள்தோறும் கோடிக்கணக்கானவர்கள் உலகை விட்டு காலம் சென்று கொண்டிருக்கின்றனர். கோடிக்கணக்கானவர்கள் பிறந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு கோணத்திலும் ஆற்றல் மிக்க ஒரு படைப்பாளனின் ஆதிக்கம் உணரப்படுகிறது. **அப்படியிருந்தும் இன்னும் இறைவனின் ஆட்சி பூமியில் இல்லையா என்ன?**

**இன்னும் பூமியில் இறைவனின் ஆட்சி ஏன் வரவில்லை என்பதற்கு இஞ்சீல் இதுவரை எந்த சான்றையும் எடுத்து வைக்கவில்லை. ஆயினும் இயேசு தோட்டத்திற்கு சென்று, தான் தப்பிப்பதற்காக இரவு முழுக்க பிரார்த்தனை செய்தும், (பைபிள் புதிய ஏற்பாடு) எபிரேயர் அத்தியாயம் 5 வசனம் 7-ல் எழுதப்பட்டிருப்பது**

**போன்று பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தும் இறைவன் அவரைக் காப்பாற்ற ஆற்றல் இல்லாமற்போனது ஆகிய கிறித்தவர்களின் இந்த கற்பனை வேண்டுமானால் அந்த காலத்தில் இறைவனின் ஆட்சி பூமியில் இல்லை என்பதற்கு சான்றாக இருக்கலாம். ஆனால் நாம் இதைவிட அதிகமான சோதனைகளைக் கண்டுள்ளோம்; மேலும் அவற்றிலிருந்து விடுதலை பெற்றோம். நாம் எப்படி இறைவனுடைய ஆட்சியை மறுக்க முடியும்?**

என்னை கொலை செய்வதற்காக என் மீது மார்டின் கிளார்க் சார்பாக கேப்டன் டக்லஸின் நீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட கொலை வழக்கு, எந்த கொலைக் குற்றத்தின் காரணமாகவும் இல்லாமல் மார்க்க கருத்து வேறுபாட்டின் காரணமாக மட்டும் யூதர்களின் சார்பாக பிலாத்துவின் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை விட ஏதாவது குறைந்ததா என்ன? ஆனால் இறைவன் வானத்தின் அரசனாக இருப்பதைப் போன்று பூமிக்கும் அரசனாவான். எனவே அவன் அந்த வழக்கிற்கு முன்னரே இப்படிப்பட்ட சோதனை வரவிருக்கிறது என செய்தி தெரிவித்திருந்தான். மேலும் நான் உம்மை குற்றமற்றவனாக விடுதலை செய்வேன் என்று அறிவித்திருந்தான்.

மேலும் அது நடைபெறும் நிகழ்விற்கு முன்பே நூற்றுக்கணக்கான மக்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. கடைசியில் நான் குற்றமற்றவனாக விடுவிக்கப்பட்டேன். எனவே **முஸ்லிம்கள், இந்துக்கள், கிறித்தவர்கள் ஒன்றுபட்டு என் மீது தொடுத்த வழக்கிலிருந்து இறைவனுடைய ஆட்சியே என்னை காப்பாற்றியது.**

**அவ்வாறே நான் ஒருமுறை அல்ல; மாறாக இருபதுக்கும் மேற்பட்ட முறை இறைவனுடைய ஆட்சியை பூமியில் பார்த்திருக்கிறேன்.**

மேலும், لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ என்ற இறை வசனத்தின் மீது எனக்கு நம்பிக்கை கொள்ள வேண்டியது ஏற்பட்டது. *(திருக்குர்ஆன் 57:3)*

அதாவது வானங்களிலும் இறைவனின் ஆட்சி இருக்கிறது. பூமியிலும் இருக்கிறது.

பிறகு, اِنَّمَآ اَمْرُهٗٓ اِذَآ اَرَادَ شَيْـًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ என்ற வசனத்தின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டியது ஏற்பட்டது. *(திருக்குர்ஆன் 36:83)*

அதாவது எல்லா வானமும் பூமியும் அவனுக்குக் கட்டுப்படுகின்றன. அவன் ஒரு வேலையை விரும்பினால் ஆகுக என்று கூறுகின்றான். உடனே அந்த வேலை ஆகிவிடுகின்றது.

பிறகு கூறுகிறான்:

وَاللّٰهُ غَالِبٌ عَلٰٓى اَمْرِهٖ وَلٰـكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ

*(திருக்குர்ஆன் 12:22)*

அதாவது இறைவன் தனது நாட்டத்தில் மேலோங்கி இருக்கின்றான். ஆனால் இறைவனின் வல்லமையையும் ஆதிக்கத்தையும் பற்றி பெரும்பாலான மக்கள் அறியாதிருக்கிறார்கள்.

**சுருக்கமாக, இது இஞ்சீலின் பிரார்த்தனையாகும். அது மனிதர்களை இறைவனின் கருணையிலிருந்து**

அவநம்பிக்கை கொள்ள வைக்கிறது.

மேலும் படைத்து பரிபாலிக்கின்றவன், அருள் புரிகின்றவன், நற்பலன் தண்டனை வழங்குகின்றவன் ஆகிய அவனது பண்புகளை விட்டும் அலட்சியம் கொண்டவர்களாக கிறித்தவர்களை நடந்து கொள்ள வைக்கிறது.

**அவனுடைய ஆட்சி பூமியில் வராத வரை அவனை பூமிக்கு உதவி செய்ய தகுதியுடையவனாகக் கருதுவதில்லை. ஆனால் இதற்கு மாற்றமாக இறைவன் திருக்குர்ஆனில் முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கும் துஆ, ஆட்சி பிடுங்கப்பட்டவர்களைப் போன்று இறைவன் பூமியில் வீணாக இருக்கவில்லை என்பதை எடுத்துரைக்கிறது. மாறாக, அவனுடைய ருபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத், அதிகாரங்கள் ஆகியவை பூமியில் இருக்கின்றன.**

மேலும் அவன் தன்னை வணங்குபவர்களுக்கு உதவி செய்ய ஆற்றல் கொண்டவனாவான். மேலும் குற்றவாளிகளை தனது கோபத்தினால் அழிக்கலாம். அந்த துஆ இதுவாகும்:

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பொருள்: எல்லா புகழ்களுக்கும் உரியவன் அந்த இறைவனே ஆவான். அதாவது அவனது ஆட்சியில் எந்த குறையும் இல்லை. அவனது மேன்மைகளில், ‘இன்று இல்லை; ஆனால் நாளை கிடைக்கும்’ என்று கூறும்

அளவிலான எந்தவொரு எதிர்பார்த்திருக்கும் நிலையும் எஞ்சியிருக்கவில்லை. மேலும் அவனது ஆட்சியின் கட்டாயங்களில் எந்தவொரு பொருளும் வீணாக இல்லை. அது எல்லா உலகங்களையும் பரிபாலனம் செய்து கொண்டிருக்கிறது. அவன் எந்த செயல்களின் பிரதிபலனாகவும் இல்லாமல் சுயமாக அருள்பாலிக்கின்றான்.

மேலும் செயல்களுக்கு பிரதிபலனாகவும் அருள் பாலிக்கின்றான். மேலும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நற்கூலி, தண்டனை வழங்குகிறான். அவனையே நாம் வணங்குகிறோம். அவனிடமிருந்தே நாம் உதவி தேடுகின்றோம். எங்களுக்கு எல்லா அருட்கொடைகளின் வழிகளை காட்டுவாயாக; கோபத்தின் வழிகளிலிருந்தும் வழிதவறியவர்களின் வழிகளிலிருந்தும் எங்களை தூர விலக்கி வைப்பாயாக என்று துஆ செய்கிறோம்.

**சூரா ஃபாத்திஹாவில் உள்ள இந்த துஆ இஞ்சீலின் துஆவிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும். ஏனெனில் இஞ்சீலில் இறைவனின் தற்போதைய ஆட்சி பூமியில் இருப்பது மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே இஞ்சீலின் அடிப்படையில் பூமியில் இறைவனின் ருபூபிய்யத்தும் எந்த வேலையும் செய்யவில்லை. ரஹ்மானிய்யத்தோ, ரஹீமிய்யத்தோ, நற்பலனை, தண்டனை வழங்கும் ஆற்றலோ எந்த வேலையும் செய்யவில்லை.**

**ஏனெனில் பூமியில் இறைவனின் ஆட்சி இன்னும் வரவில்லை. ஆனால் பூமியில் இறைவனின் ஆட்சி இருக்கிறது என சூரா ஃபாத்திஹாவிலிருந்து தெரிய வருகிறது. எனவேதான் அரசனிடம் இருக்க வேண்டிய அனைத்தும் சூரா ஃபாத்திஹாவில் கூறப்பட்டுள்ளன.**

**அரசன் மக்களை பரிபாலிப்பதற்கு ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் என்பது வெளிப்படையானதாகும்.**

எனவே சூரா ஃபாத்திஹாவில் ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்) என்ற சொல்லின் மூலமாக இந்தப் பண்பு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பிறகு **அரசனிடம் இருக்க வேண்டிய இரண்டாவது பண்பு,** அவனுடைய மக்களுக்கு அவர்கள் வாழ்வதற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் அவர்களுடைய எந்த தொண்டுகளின் பிரதிபலனாகவும் இல்லாமல் அரசனாக இருக்கும் கருணையினால் உருவாக்க வேண்டும்.

எனவே அர்ரஹ்மான் என்ற சொல்லின் மூலமாக இந்தப் பண்பை நிரூபித்திருக்கிறான். **அரசனிடம் இருக்க வேண்டிய மூன்றாவது பண்பு,** எந்தப் பணிகளை மக்கள் தனது முயற்சியால் முடிவு வரை எட்ட வைக்க முடியவில்லையோ அவற்றின் முடிவுக்காக பொருத்தமான முறையில் உதவி செய்ய வேண்டும். எனவே அர்ரஹீம் என்ற சொல்லின் மூலமாக இந்தப் பண்பை நிரூபித்திருக்கிறான். **அரசரிடம் இருக்க வேண்டிய நான்காவது பண்பு,** அரசு நிர்வாகத்தில் இடையூறு ஏற்படாதிருப்பதற்காக நற்பலன், தண்டனை ஆகியவற்றின் மீது அவன் ஆற்றல் கொண்டவனாக இருக்க வேண்டும். எனவே மாலிகி யவ்மித்தீன் என்ற சொல்லின் மூலமாக இந்தப் பண்பை வெளிப்படுத்தி இருக்கிறான்.

சுருக்கமாக, பூமியில் இறைவனுடைய ஆட்சியும், ஆட்சியின் அதிகாரங்களும் இருக்கின்றன என்பதை நிரூபிக்கும் ஆட்சியின் அனைத்து கட்டாயங்களையும் மேற்குறிப்பிட்டுள்ள சூரா எடுத்துரைத்துள்ளது... வானத்தின் ஒவ்வோர் அணுவும் இறைவனின் ஆட்சியின் கீழ் இருப்பதைப்

போன்றே பூமியின் ஒவ்வோர் அணுவும் இறைவனின் ஆற்றலின் கீழ் இருக்கின்றன்.

**வானத்தில் ஒரு மகத்தான இறைதோற்றம் இருப்பதைப் போன்றே பூமியிலும் ஒரு மகத்தான இறைதோற்றம் இருக்கிறது என்பதைக் கேளுங்கள்; புரியுங்கள். இதுதான் மிகப் பெரிய இறைஞானமாகும் இன்னும் கூறுவதென்றால் வானத்தின் இறைதோற்றம் ஓர் ஈமானிய விஷயமாகும். சாதாரண மனிதன் வானத்திற்கு செல்லவும் இல்லை; அதை அவன் காணவுமில்லை. ஆனால் பூமியில் இறைவனின் ஆட்சியின் தோற்றம் தெளிவாக ஒவ்வொரு மனிதனுடைய கண்களிலும் தென்படுகிறது.**

ஒவ்வொரு மனிதனும்-அவன் எப்படிப்பட்ட செல்வந்தனாக இருந்தாலும் தனது ஆசைக்கு எதிராக மரணத்தின் கோப்பையை அருந்துகிறான்.

**எனவே கட்டளை வந்து விடும்போது எவரும் தனது மரணத்தை ஒரு நொடிப்பொழுது கூட பிற்படுத்த முடியாது. அந்த உண்மையான அரசனின் கட்டளை பூமியில் எப்படி தோற்றமளிக்கிறது என்று பாருங்கள்!**

ஒவ்வோர் அசுத்தமான, சிகிச்சையில்லாத நோய் சூழ்ந்து கொள்ளும்போது எந்த மருத்துவரும் அதை நீக்க முடியாது. எனவே அவனுடைய கட்டளையை நிராகரிக்க முடியாத அளவிலான இறைவனின் எத்தகைய அந்த ஆட்சி பூமியில் தோற்றமளிக்கிறது!! பிறகு ‘பூமியில் இறைவனுடைய ஆட்சி இல்லை; இனி மேல் எந்த காலத்திலாவது வரும்’ என்று எப்படிக் கூற முடியும்?

**பாருங்கள் அவனுடைய வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு ஓர் அடையாளமாக இருப்பதற்காக இந்த**

**காலத்திலேயே இறைவனுடைய வானத்தின் கட்டளை பிளேக் நோயினால் பூமியை ஆட்டங் காணச் செய்தது. எனவே அவனது விருப்பமின்றி அதை யார் நீக்க முடியும்?**

எனவே இன்னும் பூமியில் இறைவனின் ஆட்சி இல்லை என்று எப்படிக் கூற முடியும்? ஆயினும் ஒரு தீயவர் சிறைவாசியைப் போன்று அவனது பூமியில் வாழ்க்கை நடத்துகின்றார். ஒருபோதும் மரணிக்க வேண்டாம் என அவர் விரும்புகிறார்.

**ஆனால் இறைவனின் உண்மையான ஆட்சி அவரை அழித்து விடுகிறது. அவர் கடைசியில் மலகுல் மவ்த்தின் (உயிரைக் கைப்பற்றும் வானவரின்) கையில் பிடிபட்டு விடுகிறார். பிறகு இறைவனது ஆட்சி இன்னும் பூமியில் வரவில்லை என்று நாம் எப்படிக் கூற முடியும்?**

பாருங்கள். பூமியில் நாள்தோறும் இறைவனின் கட்டளையினால் ஒரு நேரத்தில் கோடிக்கணக்கான மக்கள் மரணிக்கின்றனர்; மேலும் அவனது நாட்டத்தினால் கோடிக்கணக்கானோர் பிறக்கின்றனர். அவனது விருப்பத்தினால் கோடிக்கணக்கானோர் வறியவரிலிருந்து செல்வந்தராகவும், செல்வந்தரிலிருந்து வறியவராகவும் ஆகின்றனர்.

**பிறகு இன்னும் பூமியில் இறைவனின் ஆட்சி இல்லை என்று எப்படிக் கூற முடியும்?**

வானங்களிலோ வானவர்கள் மட்டும்தான் இருக்கின்றனர். ஆனால் பூமியிலோ மனிதர்களும் இருக்கின்றனர். இறைவனின் பணியாளர்களாகிய வானவர்களும் அவனது ஆட்சிக்கு தொண்டர்களாக இருக்கின்றனர். அவர்கள் மனிதர்களின் பல்வேறு பணிகளை பாதுகாக்கக் கூடியவர்களாக

நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் எல்லா நேரமும் இறைவனுக்கு கட்டுப்படுகின்றனர். மேலும் தமது அறிக்கைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

**அப்படியிருக்கும்போது பூமியில் இறைவனின் ஆட்சி இல்லை என்று எப்படிக் கூற முடியும்?**

இன்னும் கூறுவதென்றால், இறைவன் தனது பூமியின் ஆட்சியின் மூலமாக அதிகமாக கண்டறியப்பட்டான். ஏனெனில் வானத்தின் இரகசியம் மறைமுகமானதும், காணாததும் ஆகும் என்று ஒவ்வொரு நபரும் கருதுகின்றார். சுவிஷேசங்கள் இறைவனது ஆட்சியின் முழு அடிப்படையும் வானம் என்கிறது. ஆனால் இக்காலத்தின் ஏறக்குறைய எல்லா கிறித்தவர்களும் அவர்களின் தத்துவ வாதிகளும் வானங்கள் இருப்பதையே ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் பூமி நமது கால்களுக்குக் கீழே இருக்கும் ஒரு கோளமாகும்.மேலும் ஆயிரக்கணக்கான இறைவிதிகளின் விஷயங்கள் அதில் வெளிப்படுகின்றன. இந்த மாற்றங்கள், மாறுபாடுகள், நிர்மூலமாக்குதல், அழித்தல் ஆகியவை ஏதோ ஒரு குறிப்பிட்ட எஜமானனின் கட்டளையினால் நடப்பதாக நமக்குப் புரிகிறது. பிறகு பூமியில் இன்னும் இறைவனின் ஆட்சி வரவில்லை என்று எப்படிக் கூற முடியும்?...

நமது இறைவன் சூரா ஃபாத்திஹாவில் வானத்தின் பெயரையும் கூறவில்லை; பூமியின் பெயரையும் கூறவில்லை. அவன் அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன் என்று கூறி உண்மையைப் பற்றிய செய்தியை நமக்கு தெரிவித்து விட்டான். அதாவது, எங்கு வரை உயிரினங்கள் இருக்கின்றனவோ, எங்கு வரை ஏதாவதொரு படைப்பினம் இருக்கின்றதோ அது உடல் அளவில் இருந்தாலும் ஆன்மா

அளவில் இருந்தாலும் அவை அனைத்தையும் படைப்பவன், பரிபாலிப்பவன் இறைவன் ஆவான். அவன் எல்லா நேரமும் அவற்றை பரிபாலிக்கின்றான்.

மேலும் அவற்றிற்கு பொருத்தமான ஏற்பாட்டைச் செய்கின்றான். மேலும் எல்லா உலகங்களிலும் எல்லா நேரத்திலும் எப்போதும் அவனது ருபூபிய்யத், ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் மற்றும் நற்கூலி தண்டனை ஆகியவை தொடர்கின்றன.

மேலும் சூரா ஃபாத்திஹாவில் உள்ள **மாலிக்கி யவ்மித்தீன் என்பதற்கு, மறுமையில் நற்கூலி, தண்டனை கிடைக்கும் என்று மட்டும் பொருள் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். மாறாக, மறுமை என்பது செயல்களுக்கு இறுதியாகவும், பெரியதாகவும் பிரதிபலன் அளிக்கும் நேரமாகும்; ஆனால் ஒருவகையான பிரதிபலன் இவ்வுலகிலேயே ஆரம்பமாகி விடுகிறது என திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.**

அதன் பக்கம், يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا *(திருக்குர்ஆன் 8:30)* என்ற வசனம் சுட்டிக் காட்டுகிறது.

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 32- 42)*

திருக்குர்ஆனின் போதனையின்படி இறைவன் வானத்தில் இருப்பது போன்றே பூமியிலும் இருக்கின்றான்.

உதாரணமாக அவன் இவ்வாறு கூறுகிறான்:

وَهُوَ الَّذِي فِي السَّمَاءِ إِلَٰهٌ وَفِي الْأَرْضِ إِلَٰهٌ

*(திருக்குர்ஆன் 43:85)*

அதாவது, பூமியில் அவனே இறைவன்; அவனே வானத்திலும் இறைவன் ஆவான். மேலும் கூறுகிறான்: எந்த ஒரு மறைமுகமான ஆலோசனையில் மூன்று பேர் இருக்கும்போது நான்காவதாக இறைவன் இருக்கின்றான். மேலும் அவன் எல்லையற்றவன். உதாரணமாக அவன் கூறுகிறான்:

لَا تُدْرِكُهُ الْاَبْصَارُ ۫ وَهُوَ يُدْرِكُ الْاَبْصَارَ

*(திருக்குர்ஆன் 6:104)*

அதாவது கண்கள் அவனுடைய எல்லையை அடைய முடியாது; அவன் கண்களின் எல்லை வரை அடைகின்றான். அவ்வாறே இறைவன் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

*(திருக்குர்ஆன் 50:17)*

அதாவது நாம் மனிதனின் நாடி நரம்பை விட அவனுக்கு மிக அருகில் இருக்கின்றோம். மேலும் இறைவன் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளான் என்றும் ஓரிடத்தில் கூறியுள்ளான்.

மேலும் اَنَّ اللّٰهَ يَحُوْلُ بَيْنَ الْمَرْءِ وَقَلْبِهٖ என்றும் கூறியிருக்கிறான். *(திருக்குர்ஆன் 8:25)*

அதாவது இறைவன் யாரென்றால் அவன் மனிதன் மற்றும் அவனது உள்ளத்திற்கு இடையில் சூழ்ந்திருக்கிறான்.

மேலும், اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ என்றும் கூறியிருக்கிறான். *(திருக்குர்ஆன் 24:36)*

அதாவது வானத்திலும் பூமியிலும் அவனது முகத்தின்

பொலிவுதான் இருக்கிறது. அவனையன்றி மற்றவையெல்லாம் இருளாகும். மேலும்,

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ

وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ وَالْاِكْرَامِ

என்றும் கூறியிருக்கிறான். *(திருக்குர்ஆன் 55:27,28)*

அதாவது எல்லா இருப்புகளும் அழியக் கூடியவையாகும். மேலும் மாறக் கூடியதாகும். எஞ்சியிருப்பவன் இறைவன் மட்டுமே ஆவான். அதாவது எல்லா பொருளும் அழிந்து விடுவதை ஒப்புக்கொள்கின்றது; மாற்றத்தை ஒப்புக்கொள்கிறது. ஆனால் எல்லாவற்றிக்கும் அழிவு மற்றும் மாற்றம் ஏற்படும்போது எந்த மாறுதலும் அழிவும் ஏற்படாத ஒருவன் இந்த எல்லா பூமியின் உலகத்திலும் வானத்தின் உலகத்திலும் இருக்கிறான் என மனிதனின் இயல்பு ஒப்புக் கொள்ளும் கட்டாயத்தில் இருக்கிறது. அவன் தனது நிலையில் எஞ்சியிருக்கிறான். அவனே இறைவன் ஆவான். ஆனால் பூமியில் பாவம், குற்றம் அசுத்தம் ஆகிய வேலைகளும் வெளிப்படுகின்றன.

**மேலும் இறைவனை பூமி வரை எல்லைக்குட்பட்டவனாகக் கொள்பவர்கள் எல்லா இந்துக்களும் ஆகி விட்டதைப் போன்று, கடைசியில் சிலைகளை வணங்கக் கூடியவர்களாகவும், படைப்பினங்களை வணங்கக் கூடியவர்களாகவும் ஆகி விடுகின்றனர்.**

**எனவே திருக்குர்ஆனில் ஒருபக்கம் இறைவனுக்கு தனது படைப்பினத்துடன் அதிகமான அன்பு இருக்கிறது; மேலும்**

**அவன் ஒவ்வோர் உயிருக்கும் உயிராவான்; ஒவ்வோர் இருப்பும் அவனது ஆதரவுடனேயே இருக்கின்றது என்று கூறியிருக்கிறான்.**

**மறு பக்கம் மனிதனுடன் அவனுக்கு இருக்கும் தொடர்பினால் எவரும் வேதத்தை நம்புபவர்கள் போன்று மனிதனை அ(ந்த இறை)வன் என்றே கருதி விடக் கூடாது என்ற தவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக அவன் எல்லாரையும் விட மேலானவனும், எல்லா படைப்பினத்தையும் விட மிக மறைவிலும் மறைவான இடத்தில் இருக்கிறான் என்றும் கூறி விட்டான். அதை ஷரீஅத்தின் மரபுச் சொல்லில் அர்ஷ் என்று கூறுகிறோம்.**

**மேலும் அர்ஷ் என்பது படைக்கப்பட்ட ஒன்றல்ல. மறைவிலும் மறைவான அந்தஸ்தின் பெயராகும். இறைவனை மனிதனைப் போன்று எதிலோ அமர்ந்திருப்பதாக கற்பனை செய்யும் அளவுக்கு எந்தவொரு நாற்காலியும் இல்லை. மாறாக, அது படைப்பினங்களை விட்டு வெகு தொலைவிலுள்ள, தூய்மையான, பரிசுத்தமான அந்தஸ்து ஆகும்.**

அதற்கு அர்ஷ் எனக் கூறப்படும். உதாரணமாக, இறைவன் அனைவரிடத்திலும் படைத்தல் மற்றும் படைக்கப்படுதல் ஆகியவற்றிற்கிடையிலுள்ள தொடர்பை நிலைநாட்டிய பிறகு அர்ஷில் நிலை கொண்டான் என திருக்குர்ஆனில் வந்துள்ளது. அதாவது எல்லா தொடர்புகள் இருந்தாலும் அவன் தனியாகவே இருந்தான். அவன் படைப்பினங்களுடன் சேர்ந்து விடவில்லை.

சுருக்கமாக, இறைவன் மனிதனுடன் இருப்பது, எல்லாவற்றையும் சூழ்ந்திருப்பது ஆகியவை இறைவனுடைய தஷ்பீஹீ (ஒப்புமையுள்ள) பண்பு ஆகும்.

இறைவன் மனிதனுக்கு தனது நெருக்கத்தை நிரூபித்துக்காட்டுவதற்காகவே அவன் திருக்குர்ஆனில் இந்தப் பண்பைக் குறிப்பிட்டுள்ளான். மேலும் இறைவன் எல்லா படைப்பினங்களை விட்டும் மறைவிலும் மறைவாக இருப்பது, எல்லாவற்றையும் விட மிக மேலாகவும், உயர்வாகவும், மிகத் தொலைவிலும் இருப்பது, மக்லூகிய்யத் (படைக்கப்படுதல்) என்பதை விட்டும் தொலைவில் உள்ள அந்த தூய்மையான, பரிசுத்தமான இடத்தில் இருப்பது - அது அர்ஷ் என அழைக்கப்படுகிறது - ஆகிய அந்தப் பண்பின் பெயர் *தன்ஸீஹீ* பண்பு ஆகும். (அதாவது இறைவனின் ஒப்பற்ற பண்பு, மனித திறனுக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கின்ற இறைவனின் தனிச் சிறப்பான பண்பு ஆகும்).

இறைவன் இதன் மூலமாக தனது தவ்ஹீது மற்றும் ஒருவன், இணையில்லாதவன், படைப்பினங்களின் பண்புகளை விட்டும் தனது பண்பு தூய்மையானதாக இருத்தல் ஆகியவற்றை நிரூபிப்பதற்காக அவன் (மனித திறனுக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டதாகவும் இறைவனுக்கு மட்டுமே உரியதாகவும் இருக்கும் ஒப்பற்ற) இந்த *தன்ஸீஹீ* பண்பை திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறான்.

மற்ற சமுதாயங்கள் இறைவனைப் பற்றி ஒன்று, *தன்ஸீஹீ* (ஒப்பற்ற) பண்பாகக் குறிப்பிட்டுள்ளது. அதாவது, *நர்கன்* என்ற பண்புப் பெயரால் அழைத்திருக்கிறது. (அதாவது மனிதப் பண்புகளை விட்டும் அப்பாற்பட்டவன்; தனித்தன்மை வாய்ந்தவன்); அல்லது அவனை *சர்கன்* என்ற பண்பைக் கொண்டவனாக ஒப்புக் கொண்டு, அவனை படைப்பினம் போன்ற ஒருவன் என்ற அளவுக்கு ஒப்புமைப்படுத்தி இருக்கிறது. (அதாவது அவன் படைப்பினங்களைப் போன்றே

எல்லா பண்புகளையும் கொண்டிருப்பவன்.

மேலும் அவனை தனிச்சிறப்பான பண்புகளையும் கொண்டவன்; படைப்பினங்களைப் போன்ற பண்புகளையும் கொண்டவன் என ஏற்கவில்லை). இந்த இரு பண்புகளையும் (மற்ற சமுதாயங்கள்) ஒன்று சேர்க்கவில்லை. (அதாவது ஒப்புமையுள்ள பண்பு, அவனுக்கே உரித்தான தனித்தன்மை வாய்ந்த பண்பு ஆகிய இரண்டும் அவனிடம் இருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை.)

ஆனால் இறைவன் திருக்குர்ஆனில் இந்த இரண்டு பண்புகளின் கண்ணாடியில் தனது முகத்தைக் காட்டியிருக்கிறான். மேலும் இதுதான் முழுமையான தவ்ஹீது ஆகும்.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 97- 99)*

**அர்ஷ் என்பது இறைவன் அமர்ந்திருக்கும் பௌதீகமான படைக்கப்பட்ட ஒன்று என்பது முஸ்லிம்களின் கொள்கையல்ல. முழுக் குர்ஆனையும் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை படித்துப் பாருங்கள். அதில் அர்ஷும் ஓர் எல்லைக்குட்பட்டதும் படைக்கப்பட்டதும் ஆகும் என எங்கேயும் காணமாட்டீர்கள்.**

இருப்பைக் கொண்டுள்ள ஒவ்வொரு பொருளையும் நான்தான் படைத்துள்ளேன் என இறைவன் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் கூறியுள்ளான். நானே வானம், பூமி, ஆன்மாக்கள், அவற்றின் எல்லா ஆற்றல்களையும் படைத்தவன் ஆவேன். நான் சுயமாகவே நிலைபெற்றிருப்பவன். மேலும் எல்லா பொருள்களும் என்னால் நிலைபெற்றுள்ளன. ஒவ்வோர் அணுவும். காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் என்னால்

படைக்கப்பட்டதாகும். ஆனால் அர்ஷ் என்பதும் ஏதோ பௌதீகமான ஒன்று. அதைப் படைத்தவன் நான் என்று எங்கேயும் கூறவில்லை...

**திருக்குர்ஆனில் எங்கெல்லாம் அர்ஷ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அதன் பொருள், இறைவனின் மகத்துவம், ஆளுமை, மேன்மை என்பதாகும்.**

இதன் காரணமாகவே அதை படைக்கப்பட்டவற்றுடன் இணைக்கவில்லை. மேலும் இறைவனுடைய மகத்துவம், ஆளுமை ஆகியவற்றின் தோற்றம் நான்காகும். அது வேதத்தின் அடிப்படையில் நான்கு தேவதைகள் எனக் கூறப்படுகின்றன. ஆனால் திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில் அவற்றின் பெயர் வானவர்கள் என்பதுமாகும்.

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 453 - 456)*

**திருக்குர்ஆனில் அர்ஷ் என்பதன் கருத்து ஒப்புவமையுள்ள அந்தஸ்தை விட்டும் மேலானதும் எல்லா உலகத்தை விட்டும் உயர்வானதும், மறைவிலும் மறைவான தூய்மையான, புனிதமான அந்தஸ்து ஆகும்.**

அது கற்களாலோ அல்லது செங்கற்களாலோ அல்லது வேறு எந்த பொருளாலோ செய்யப்பட்ட ஒன்று; அதில் இறைவன் அமர்ந்திருக்கிறான் என்பதல்ல. எனவேதான் அர்ஷை படைக்கப்படாதது எனக் கூறுகிறோம்.

**இறைவன் சில நேரத்தில் நம்பிக்கையாளரின் உள்ளத்தில் நிலைகொள்கிறான் என அவன் கூறுவது போன்று அர்ஷின் மீது அவனது தோற்றம் ஏற்படுகிறது என அவன் கூறுகிறான்.**

மேலும் எல்லாவற்றையும் நான் சுமந்து கொண்டிருக்கிறேன் என அவன் தெளிவாகக் கூறுகிறான். ஏதாவதொன்று என்னையும் சுமந்து கொண்டிருக்கிறது என அவன் எங்கேயும் கூறவில்லை. எல்லா உலகத்தையும் விட மேலான அந்தஸ்தைக் கொண்ட அர்ஷ் என்பது அவனது *தன்ஸீஹீ* பண்புகளின் (ஒப்பற்ற பண்புகளின், தனித்தன்மை வாய்ந்த பண்புகளின்) தோற்றமாகும். இறைவனிடம் தொன்மையிலிருந்தே, ஆரம்பத்திலிருந்தே இரு பண்புகள் இருந்து வருகின்றன என நாம் மீண்டும் மீண்டும் எழுதியுள்ளோம்.

ஒரு பண்பு, *தஷ்பீஹீ* (ஒப்புமையுள்ளது) ஆகும்; இன்னொரு பண்பு *தன்ஸீஹீ* (ஒப்பற்றது, தனித்தன்மை வாய்ந்தது) ஆகும். இறைவனுடைய வார்த்தையில் இரண்டு பண்புகளையும் குறிப்பிடுவது அவசியமானதாக இருந்தது. அதாவது *தஷ்பீஹீ* (ஒப்புமையுள்ள) பண்பு; *தன்ஸீஹீ* ( ஒப்பற்றதும், தனித்தன்மை வாய்ந்ததுமான) பண்பு.

எனவே இறைவன் தனது *தஷ்பீஹீ* (ஒப்புமையுள்ள) பண்பை வெளிப்படுத்துவதற்காக தனது கை, கண், அன்பு, கோபம் ஆகிய பண்புகளை திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறான். மேலும் அவனைப் போன்றவன் என்ற சந்தேகம் உருவாகியிருக்கலாமோ என்ற வகையில் சில இடத்தில், அவனைப் போன்றவன் எவனுமில்லை என்று கூறி விட்டான். *(திருக்குர்ஆன் 42: 12 காண்க).*

சில இடத்தில், ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ எனக் கூறி விட்டான்.

சூரா ரஅது 11-வது ஜுஸூவிலும், ‘

اَللّٰهُ الَّذِىْ رَفَعَ السَّمٰوٰتِ بِغَيْرِ عَمَدٍ

تَرَوْنَهَا ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ

என்ற வசனம் உள்ளது. *(திருக்குர் ஆன் 13:3).* பொருள்: **உங்கள் இறைவன் நீங்கள் காண்பதைப் போன்று, வானங்களை தூண்கள் இன்றி உயர்த்தி இருக்கிறான். பிறகு அவன் அர்ஷில் நிலை கொண்டான்.**

**இந்த வசனத்தின் வெளிப்படையான பொருளின்படி, இறைவன் முதலில் அர்ஷில் நிலை கொள்ளவில்லையா என்ன? என்ற சந்தேகம் உருவாகிறது. இதற்குரிய விடை, அர்ஷ் என்பது ஒரு பௌதீகமான பொருள் அல்ல. மாறாக, அது அவனது பண்பாகிய மறைவிலும் மறைவாக இருக்கும் ஒரு நிலைமையாகும்.**

எனவே இறைவன் வானம், பூமி மற்றும் எல்லாவற்றையும் படைத்திருக்கும்போது நிழலான முறையில் தனது ஒளியால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒளியை வழங்கியிருக்கும்போது மனிதனையும் உருவகமாக தனது வடிவில் படைத்திருக்கிறான். மேலும் தனது கண்ணியத்திற்குரிய பண்புகளை அவன் மீது ஊதியவாறு இந்த வகையில் இறைவன் தனக்காக ஒரு உருவகத்தை நிலைநாட்டினான். ஆனால் அவன் ஒவ்வோர் உருவகத்தை விட்டும் தூயவன் ஆவான்.

எனவே அர்ஷில் நிலை கொள்வதன் மூலம் தனது பரிசுத்தத்தன்மையை அவன் வெளிப்படுத்தி இருக்கிறான். சுருக்கமாக, அவன் எல்லாவற்றையும் படைத்து அவன் படைப்பினங்களைப் போன்றவன் அல்லன்; மாறாக, அனைவரையும் விட தனித்தவனாகவும், மறைவிலும் மறைவான இடத்திலும் இருக்கிறான்.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 276 - 277)*

இன்னோர் ஆட்சேபனையை எதிரிகள் எடுத்து வைக்கின்றனர். அது என்னவெனில், மறுமை நாளில் அர்ஷை எட்டு வானவர்கள் சுமந்து கொண்டிருப்பார்கள் என திருக்குர்ஆனின் சில இடங்களிலிருந்து தெரிகிறது. இதிலிருந்து உலகில் நான்கு வானவர்கள் அர்ஷை சுமந்து கொண்டிருக்கிறார்கள் என வசனத்தின் சைகையாகத் தெரிகிறது.

**இறைவனின் அர்ஷை யாராவது சுமந்து கொள்வதை விட்டும் அவன் தூயவன் என்ற ஆட்சேபனை இவ்விடத்தில் எழுகிறது.**

**இதற்குரிய விடை** என்னவெனில், அர்ஷ் எந்தவொரு பௌதீகமான பொருளும் அல்ல - அது சுமக்கப்படுவதற்கு அல்லது சுமக்கப்படத் தகுந்ததாக இருப்பதற்கு என்பதை நீங்கள் இப்போது கேட்டுள்ளீர்கள். **மாறாக, பரிசுத்தமான, புனிதமான அந்தஸ்தின் பெயர் அர்ஷ் ஆகும்.**

எனவேதான் அதை படைக்கப்படாதது என்று கூறுகிறோம். இல்லையென்றால் ஓர் உருவமுள்ள பொருள் இறைவனுடைய படைப்பிலிருந்து எப்படி வெளியே இருக்க முடியும்?

மேலும் **அர்ஷைப் பற்றிக் கூறப்பட்டவையெல்லாம் உருவகங்களாகும்.** எனவே இப்படிப்பட்ட ஆட்சேபனை வெறும் அறிவீனம் என்பதை அறிவுடையவர் புரிந்து கொள்ள முடியும்.

வானவர்கள் அர்ஷை சுமந்து கொண்டிருப்பதன் உண்மையான நுண்ணிய கருத்தை நாம் இப்போது வாசகர்களுக்கு தெரிவிக்கின்றோம்.

இறைவன் தனது பரிசுத்தமான இடத்தில் - அதாவது அவனது பரிசுத்தமான பண்பு அவனது எல்லா பண்புகளையும் மறைத்து அவனை மறைவிலும் மறைவாக ஆக்கி விடும்போது - **திருக்குர்ஆனின் மரபுச் சொல்லில் அதன் பெயர்தான் அர்ஷ் ஆகும்** - அப்போது இறைவன் மனிதனுடைய அறிவை விட்டும் உயர்வானவனாகி விடுகின்றான். மேலும் அவனைக் கண்டறிவதற்கு அறிவுக்கு சக்தி இருப்பதில்லை. **அப்போது அவனது நான்கு பண்புகள் - அவற்றை நான்கு வானவர்களாக பெயரிடப்பட்டுள்ளது - அவை உலகில் வெளிப்பட்டு விட்டன. அவை அவனது மறைவான இருப்பை வெளிப்படுத்துகின்றது.**

**ஒன்று, ருபூபிய்யத்.** அதன் மூலமாக அவன் ஆன்மீகமாகவும், பௌதீகமாகவும் மனிதனை முழுமை செய்கிறான். ஏனெனில் ஆன்மா மற்றும் உடல் உருவாவதற்கு ருபூபிய்யத் தேவைப்படுகிறது. மேலும் அவ்வாறே இறைவனின் வார்த்தைகள் இறங்குவதற்கும், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அவனது அடையாளம் வெளிப்படுவதற்கும் ருபூபிய்யத் தேவைப்படுகிறது.

**இரண்டாவது, இறைவனின் ரஹ்மானிய்யத் ஆகும்.** இது வெளிப்பட்டு விட்டது. அதாவது எந்த செயலுமின்றி எண்ணற்ற அருள்களை மனிதனுக்காக அவன் உருவாக்கி இருக்கின்றான். இந்தப் பண்பும் அவனது மறைமுகமான இருப்பை வெளிப்படுத்துகிறது.

3. **மூன்றாவது, இறைவனின் ரஹீமிய்யத்.** அது என்னவெனில், நற்செயல் செய்கின்றவர்களுக்கு முதலில் தனது ரஹ்மானிய்யத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப நற்செயல்களுக்கான ஆற்றல்களை வழங்குகின்றான். பிறகு

ரஹீமிய்யத்தின் எதிர்பார்ப்பினால் நற்செயல்களை அவர்களிடமிருந்து வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு அவர்களை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுகிறான். இந்தப் பண்பும் அவனது மறைவான இருப்பை வெளிப்படுத்துகிறது.

4. **நான்காவது பண்பு, மாலிக்கி யவ்மித்தீன் என்பதாகும்.** இதுவும் அவனது மறைமுகமான இருப்பை வெளிப்படுத்துகிறது. அவன் நல்லவர்களுக்கு நற்கூலியும், தீயவர்களுக்கு தண்டனையும் வழங்குகிறான். இந்த நான்கு பண்புகள் அவனது அர்ஷை சுமந்து கொண்டிருக்கின்றன. அதாவது அவனது மறைமுகமான இருப்பு பற்றி இந்தப் பண்புகளின் மூலமாக இந்த உலகத்தில் தெரிய வருகிறது. மேலும் இந்த இறைஞானம் எனும் உலகம் மறுமையில் இரட்டிப்பாகி விடும். அதாவது, நான்குக்கு பதிலாக எட்டு வானவர்களாகி விடுவார்கள்.

*(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 278 - 279)*

**தவ்ஹீது என்பது உலகம் மற்றும் மனதின் சிலைகளை மறுத்ததற்குப் பிறகு உள்ளத்தில் உருவாகின்றது.** மேலும் அது இருப்பின் ஒவ்வோர் அணுவிலும் நுழைந்து விடுகிறது. எனவே **அது இறைவன் மற்றும் அவனது தூதர் மூலமாக அன்றி தனது ஆற்றலினால் எப்படிக் கிடைக்க முடியும்?** மனிதன் தன் மீது மரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே அவனது வேலையாகும். மேலும் நான் அறிவில் வளர்ந்தவன் ஆவேன் என்ற **ஷைத்தானிய ஆணவத்தை விட்டு விட வேண்டும். ஓர் அறிவிலியைப் போன்று தன்னை கருத வேண்டும். மேலும் துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்போது தவ்ஹீதின் ஒளி இறைவன் புறமிருந்து அவர் மீது இறங்கும். மேலும் ஒரு**

**புதிய வாழ்க்கையை அவன் அவருக்குக் கொடுப்பான்.**

*(ஹகீக்கத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 148)*

எனவே உலகம் தோன்றிய பழங்காலத்திலிருந்தே இறைவனை அடையாளம் காண்பது, நபியை அடையாளம் காண்பதுடன் தொடர்புடையதாக இருக்கிறது. எனவே நபி இல்லாமல் தவ்ஹீது கிடைப்பது என்பதே சாத்தியமில்லாததும், முடியாததும் ஆகும்.

**நபி இறைவனின் தோற்றத்தைக் காணும் கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாகவே இறைவனின் முகம் தென்படுகிறது.**

இறைவன் தன்னை உலகில் வெளிப்படுத்த விரும்பும்போது அவனது ஆற்றல்களின் தோற்றமாக இருக்கும் நபியை உலகில் அனுப்புகிறான். தனது வஹியை அவர் மீது இறக்குகின்றான். மேலும் அவர் மூலமாக தனது ருபூபிய்யத்தின் ஆற்றல்களை காட்டுகின்றான். அப்போது இறைவன் இருக்கின்றான் என்பது உலகத்திற்கு தெரிகிறது.

எனவே இறைவனின் தொன்மையான சட்டத்தின்படி, எவர்களின் இருப்பு இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்கு ஊடகமாக நியமிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது தவ்ஹீதின் ஒரு பகுதியாகும். இந்த நம்பிக்கை இல்லாமல் தவ்ஹீது முழுமை பெற முடியாது.

ஏனெனில் **இறைஞானம் வரை சென்றடைய வைக்கின்ற முழுமையான உறுதி நம்பிக்கை எனும் நீரூற்றில் உருவாகின்ற அந்த கலப்பற்ற தவ்ஹீது நபி காட்டுகின்ற வானத்தின் அடையாளங்கள், ஆற்றலை வெளிப்படுத்தும் அற்புதங்கள் இன்றி கிடைக்க முடியாது.**

அந்த சமுதாயம் மட்டுமே இறைவனை வெளிப்படுத்தும் சமுதாயமாகும். அவர்களின் மூலமாக மறைவிலும் மறைவாக இருக்கின்ற, நுட்பத்திலும் நுட்பமாக இருக்கின்ற, காணாத அந்த இறைவனின் இருப்பு வெளிப்படுகிறது. இறைவன் என்ற பெயரைக் கொண்ட அந்த மறைமுகமான கருவூலம் எப்போதும் நபிமார்கள் மூலமாகவே கண்டறியப்பட்டிருக்கிறான்.

இல்லையென்றால் இறைவனின் பார்வையில் தவ்ஹீது என்று அழைக்கப்படுகின்ற, செயலின்தன்மை முழுமையான முறையில் போர்த்தப்பட்டிருக்கின்ற அந்த தவ்ஹீதை நபியின் மூலமாக அன்றி பெறுவதென்பது அறிவுக்குப் புறம்பானதாக இருப்பதைப் போன்றே இறைநெருக்கம் பெற்றவர்களின் அனுபவங்களுக்கும் மாற்றமானதாகும்.

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 115,116)*

இறைவன் நம்மிடம் விரும்புகின்றதும், ஒப்புக் கொள்வது ஈடேற்றத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றதுமான உண்மையான தவ்ஹீது என்னவெனில், இறைவனை அவனது தன்மையில் எல்லா இணையிலிருந்தும் - அது சிலையாக இருந்தாலும், மனிதனாக இருந்தாலும், சூரியனாக இருந்தாலும் அல்லது சந்திரனாக இருந்தாலும் அல்லது தனது நஃப்ஸாக இருந்தாலும் அல்லது தனது திட்டம் அல்லது சூழ்ச்சியாக இருந்தாலும் - தூயவனாகக் கருதுவதாகும். மேலும் அவனுக்கு எதிராக எவரையும் ஆற்றல் மிக்கவனாக கொள்ளாதிருத்தல் ஆகும். எந்த வாழ்வளிப்பவனையும் ஒப்புக் கொள்ளாதிருத்தல், எவரையும் கண்ணியமளிப்பவனாகவும், இழிவாக்குபவனாகவும் கருதாதிருத்தல் ஆகும். எவரையும் உதவியாளனாகவும், ஒத்தாசை செய்பவனாகவும்

கருதாதிருத்தல் ஆகும்.

இரண்டாவது, தனது அன்பை அவனுக்கே சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளுதல். தனது வணக்கத்தை அவனுக்காகவே சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளுதல். தனது பணிவை அவனுடனேயே சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளுதல். தனது நம்பிக்கைகளை அவனுடனேயே சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளுதல். தனது அச்சத்தை அவனுக்காகவே ஆக்கிக் கொள்ளுதல்.

**எனவே இந்த மூன்று வகையான சிறப்புகள் இன்றி எந்த தவ்ஹீதும் முழுமை பெற முடியாது.**

**ஒன்று**, தன்மையைப் பொருத்தவரையிலான தவ்ஹீது. அதாவது அவனது இருப்புக்கு எதிரில் எல்லா இருப்புகளையும் ஒன்றுமற்றதைப் போன்று கருதுதல். மேலும் எல்லாவற்றையும் அழிவுக்குரியவையாகவும், நிலைபெறாதவையாகவும் கருதுதல்.

**இரண்டாவது**, பண்புகளின் அடிப்படையில் தவ்ஹீது. அதாவது படைத்து காத்தோம்புகின்ற மற்றும் இறைமை ஆகிய பண்புகளை இறைவனைத் தவிர வேறு யாரிடமும் இருப்பதாகக் கொள்ளாதிருப்பது. வெளிப்படையில் காத்தோம்புபவையாகவும், அருள்பாலிப்பவையாகவும் தென்படுகின்றவற்றை அவனது கையின் ஓர் அமைப்பு என உறுதி கொள்ளுதல்.

**மூன்றாவது**, தனது அன்பு, உண்மை, நன்றியுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தவ்ஹீது. அதாவது அன்பு போன்ற அடிமையாக இருக்க வேண்டிய பண்பில் மற்றவர்களை இறைவனுக்கு இணையாக ஆக்காதிருப்பது. அவனிடமே மாய்த்துக் கொள்வது.

*(சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன்கா ஜவாப். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 349 - 350)*

**இன்றைய நாட்களில் ஏகத்துவம் மற்றும் இறை இருப்பு பற்றி அதிக வலிமை மிக்க தாக்குதல்கள் நடைபெறுகின்றன. கிறித்தவர்களும் அதிகமாக அழுத்தம் கொடுத்திருக்கின்றனர்; அதிகமாக எழுதியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் எழுதியிருப்பதும் கூறியிருப்பதும் இஸ்லாத்தின் இறைவனைப் பற்றியே எழுதியுள்ளனரே தவிர சிலுவையில் அறையப்பட்டு இறந்துபோன, பலவீனமான இறைவனைப் பற்றி அல்ல.**

அல்லாஹ்வின் இருப்புக்கு எதிராக எழுதுகோலை எடுப்பவர் இறுதியில் இஸ்லாம் எடுத்து வைக்கும் அந்த இறைவன் பக்கமே வர வேண்டியது வரும் என நாம் வாதிட்டுக் கூறுகிறோம். ஏனெனில் இயல்பின் ஒவ்வோர் இலையிலும் அவனைப் பற்றிய தகவல் கிடைக்கின்றது. மனிதனுடைய இயல்பு அந்த இறைவனுடைய தோற்றத்தை தமக்குள் வைத்துள்ளது. *(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 152 பதிப்பு 2003)*

**கிறித்தவர்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இயேசு மறுமையின் முன்மாதிரியாக இருப்பது அணுவளவும் நிரூபணமாகவில்லை. மேலும் கிறித்தவர்கள் உயிர்த்தெழவுமில்லை. மாறாக, அவர்கள் இறந்தவர்கள். இன்னும் சொல்வதென்றால் இறந்தவர்களில் முதன்மையானவர்கள்.**

மேலும் குறுகலானதும், இருண்டதுமான மண்ணறைகளில் வீழ்ந்து கிடக்கின்றனர். மேலும் ஷிர்க்கின் குழியில் விழுந்துள்ளனர். அவர்களிடம் ஈமானிய ஆன்மாவும் இல்லை; ஈமானிய ஆன்மாவின் அருளும் இல்லை. மாறாக,

படைக்கப்பட்டதை வணங்குவதை விட்டு விலகி இருக்கும் குறைந்த பட்சமான தவ்ஹீது கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் தன்னைப் போன்ற பலவீனமான, ஆற்றல் இல்லாத ஒருவரை படைத்தவன் எனக் கருதி அவரை வணங்கிக் கொண்டிருக்கின்றனர்.

**தவ்ஹீது மூன்று வகைப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.** எல்லாவற்றையும் விட **குறைந்த படித்தரம்,** தன்னைப் போன்ற படைக்கப்பட்டவற்றை வணங்கக் கூடாது. சிலையையோ, நெருப்பையோ, மனிதனையோ, நட்சத்திரத்தையோ வணங்கக் கூடாது.

**இரண்டாவது படித்தரம்,** வழிவகைகளை ருபூபிய்யத்தில் ஒருவிதமான ஆதிக்கம் கொண்டிருப்பதாகக் கருதும் அளவுக்கு அவற்றின் மீது விழக் கூடாது. மாறாக, எப்போதும் காரணகர்த்தாவின் மீது பார்வை இருக்க வேண்டுமேயொழிய காரணிகளின் மீது அல்ல.

**தவ்ஹீதின் மூன்றாவது படித்தரம்,** இறை தோற்றங்களை முழுமையாகக் கண்டு மற்ற ஒவ்வோர் இருப்பையும் ஒன்றுமற்றதாகக் கொள்ளுதல். அவ்வாறே தன்னையும் கருதுவது.

சுருக்கமாக, அல்லாஹ்வின் முழுமையான பண்புகளைத் தவிர பார்வையில் எல்லா பொருளும் மாய்ந்து போகக் கூடியதாகத் தென்பட வேண்டும். **தவ்ஹீதில் இந்த மூன்று படித்தரங்களும் கிடைத்து விட்டால் அதுவே ஆன்மீக வாழ்வாகும்.**

இப்போது சிந்தித்துப் பாருங்கள். ஆன்மீக வாழ்வின் நிலைத்திருக்கும் எல்லா நீரூற்றுகளும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக உலகில் வந்தன. இதுவே

உம்மத்து ஆகும். இது நபியாக இல்லாவிட்டாலும் நபிமார்களைப் போன்று இறைவனுடன் உரையாடி விடுகின்றது. இறைதூதர் இல்லாவிட்டாலும் இறைதூதர்களைப் போன்று இறைவனின் ஒளிமிக்க அடையாளங்கள் அதனுடைய கையில் வெளிப்படுகின்றன. மேலும் ஆன்மீக வாழ்வின் நதி அதில் ஓடுகின்றன.

மேலும் அதற்குப் போட்டியிடுவதற்கு யாரும் இல்லை. **அருள்கள், அடையாளங்களை காட்டுவதில் எதிர்த்து நின்று நமது இந்த வாதத்திற்கு பதில் கொடுப்பவர் யாராவது இருக்கின்றாரா?**

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 223 - 224)*

அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் திரும்புவதன் தீமைகளைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். மக்களிடம் சென்று வேண்டுதல் செய்கின்றனர். அந்த விஷயம் இறைவனின் தன்மானத்தை பொங்கியெழச் செய்கிறது. ஏனெனில் இது மக்களைத் தொழுவதாகும். எனவே இறைவன் அதிலிருந்து விலகி விடுகிறான். மேலும் அதை தூக்கி எறிந்து விடுகிறான். நான் பெரிய சொற்களில் அதை எடுத்துரைக்கின்றேன். இந்த விஷயம் இவ்வாறு இல்லையென்றாலும் நன்றாக புரிய முடியும்.

உதாரணமாக, **தனது மனைவியை வேறு ஒருவருடன் தொடர்பு கொண்டவாறு பார்ப்பதை ஒரு தன்மான உணர்வு கொண்ட ஆணின் தன்மானம் ஏற்றுக்கொள்வதில்லை. அந்த ஆண் அந்த நிலைமையில் அவரது தீய மனைவியை கொலை செய்யத் தகுந்தவராகக்**

**கருதுகிறார். இன்னும் கூறுவதென்றால், சில நேரத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. அவ்வாறே இறைதன்மையின் ஆர்வமும், தன்மானமும் ஆகும். இறைவனுக்கு அடிமையாக இருப்பதும், சிறப்பான துஆவும் அந்த இறைவனுக்கே உரியவையாகும். வேறு ஒருவரை வணக்கத்திற்குரியவனாகக் குறிப்பிடுவதையும் அல்லது அழைப்பதையும் அவன் விரும்புவதில்லை.**

எனவே நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவது இறைவனை விட்டும் (தொடர்பை) துண்டிப்பதாகும். தொழுகை, தவ்ஹீது என்ன கூறினாலும் சரி. ஏனெனில் தவ்ஹீதை செயல் அளவிலாக ஒப்புக்கொள்வதன் பெயர்தான் தொழுகை ஆகும். அதில் தன்னை மாய்த்துக் கொள்கின்ற, பணிவான ஆன்மாவும், ஏக இறைவனை வணங்குகின்ற உள்ளமும் இல்லாதிருக்கும்போது அது அருள் இல்லாததாகவும், பயன் இல்லாததாகவும் இருக்கிறது.

*(அல்ஹகம் 12.04.1899 பக்கம் 6. மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 106-107 பதிப்பு 2003)*

**ஷிர்க் பல வகைப்படும். ஒன்று, பெரிய மற்றும் தெளிவான ஷிர்க் ஆகும். அதில் இந்துக்கள், கிறித்தவர்கள், யூதர்கள் மற்றும் பிற சிலை வணங்கிகள் பீடிக்கப்பட்டுள்ளனர்.**

அதில் ஏதாவது மனிதனை அல்லது சிலையை அல்லது உயிரற்ற பொருள்களை அல்லது ஆற்றல்களை அல்லது கற்பனையான தேவிகளையும் தேவதைகளையும் இறைவனாக ஆக்கப்பட்டுள்ளது. இந்த ஷிர்க் இன்று வரை உலகில் காணப்படுகிறது. ஆனால் இந்த காலம் ஒளி மற்றும் கல்வியின்

எப்படிப்பட்ட காலம் என்றால், இந்த மாதிரியான ஷிர்க்கை அறிவு வெறுப்புக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்து விட்டது. மார்க்கத்தின் அடிப்படையில் அவர்கள் வெளிப்படையில் அந்த அறிவற்ற விஷயங்களை ஒப்புக் கொள்வது என்பது தனிப்பட்ட விஷயமாகும். ஆனால் உண்மையில் மக்கள் இயல்பாக அவற்றிலிருந்து வெறுப்படைந்து கொண்டிருக்கின்றார்கள்.

**ஆனால் இன்னொரு வகையான ஷிர்க் இருக்கின்றது. அது மறைமுகமான முறையில் விஷத்தைப் போன்று விளைவை ஏற்படுத்துகின்றது. அது இந்த காலத்தில் மிகவும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மேலும் அது என்னவெனில் இறைவன் மீது நம்பிக்கையும் உறுதியும் முற்றிலும் இருக்கவில்லை.**

வழிவகைகளை முற்றிலும் மேற்கொள்ளாதீர்கள் என நாம் ஒருபோதும் கூறவில்லை; அது நமது கொள்கையும் அல்ல. ஏனெனில் வழிவகைகளை - அவற்றை மேற்கொள்வது அவசியமாக இருக்கும் வரை - மேற்கொள்ள இறைவன் ஆர்வமூட்டியுள்ளான். வழிவகைகளை மேற்கொள்ளவில்லை என்றால் அது மனிதனின் ஆற்றல்களை அவமதிப்பதும் இறைவனின் ஒரு மகத்தான செயலை அவமதிப்பதும் ஆகும். ஏனெனில் முற்றிலும் வழிவகைகளை மேற்கொள்ளாத அப்படிப்பட்ட நிலையில் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கும் எல்லா ஆற்றல்களையும் முற்றிலும் விட்டுவிடுவதும், அவற்றிலிருந்து பயன்பெறாமல் இருப்பதும் அவசியமாகி விடும். மேலும் அவற்றிலிருந்து பயன்பெறாமல் இருப்பதும், அவற்றை வீணாக விட்டு விடுவதும் இறைவனின் செயலை வீணானதாகக்

கொள்வதாகும். அது மிகப் பெரிய பாவமாகும்.

**எனவே வழிவகைகளை முற்றிலும் மேற்கொள்ள வேண்டாம் என்பது நமது நோக்கமோ அல்லது கொள்கையோ அல்ல. மாறாக வழிவகைகளை தனது வரையறைக்குள் மேற்கொள்வது அவசியமாகும்.**

மறுமைக்கும் வழிவகைகளே இருக்கின்றன. இறைவனின் கட்டளைகளை மேற்கொள்ளுவது, தீமைகளிலிருந்து தப்பிப்பது, மற்ற நன்மைகளை மேற்கொள்வது ஆகியவை இந்த உலகிலும் மறுவுலகிலும் சுகம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆக, இந்த நன்மைகள் வழிவகைகளின் பிரதிநிதிகளாக இருக்கின்றன.

அவ்வாறே உலக தேவைகளை முழுமை செய்வதற்கு வழிவகைகளை மேற்கொள்வதை இறைவன் தடுக்கவில்லை. வேலை செய்பவர் வேலை செய்யட்டும். விவசாயி தனது விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கட்டும். கூலித் தொழிலாளிகள் தமது கூலித் தொழிலை செய்யட்டும்.

**அவர்கள் தமது மனைவி மக்களுடைய, தம்முடன் சம்பந்தப்பட்ட மற்றவர்களுடைய, தன்னுடைய உரிமைகளை நிறைவேற்றுவற்றுவதற்காக அவர்கள் அவ்வாறு செய்யட்டும். எனவே ஒரு ஆகுமான எல்லை வரை இவையெல்லாம் சரியானதாகும். அது தடுக்கப்படுவதில்லை. ஆனால் மனிதன் எல்லை மீறியவாறு வழிவகைகள் மீதே முழு நம்பிக்கை வைக்கும்போது எல்லா நம்பிக்கையையும் வழிவகையின் மீதே சென்று நிற்கிறதென்றால் அது ஷிர்க் ஆகும்.**

அது மனிதனை அவனுடைய உண்மையான நோக்கத்தை விட்டும் தூர வீசி எறிந்து விடுகிறது.

உதாரணமாக, இன்ன வழிவகை இல்லாமல் இருந்திருந்தால் நான் பசியால் மரணித்திருப்பேன் என்றோ, இந்த சொத்து இல்லாமல் இருந்திருந்தால் அல்லது இந்த வேலை இல்லாமல் இருந்திருந்தால் எனது நிலை மிகவும் மோசமானதாகி இருக்கும் என்றோ அல்லது இந்த நண்பர் இல்லாமல் இருந்திருந்தால் துன்பமாகி இருக்கும் என்றோ ஒருவர் கூறுவது.

இந்த விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால் இவற்றை இறைவன் ஒருபோதும் விரும்புவதில்லை. இறைவனை விட்டும் முற்றிலும் வெகு தொலைவில் சென்று விடும் அளவுக்கு சொத்துக்கள் அல்லது வழிவகைகள் அல்லது அன்பர்கள் மீது நம்பிக்கை வைப்பது பயங்கரமான ஷிர்க் ஆகும். திருக்குர்ஆனின் போதனைக்கு முற்றிலும் எதிரானதாகும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَفِي السَّمَآءِ رِزْقُكُمْ وَمَا تُوْعَدُوْنَ

*(திருக்குர்ஆன் 51:23).*

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَمَنْ يَّتَوَكَّلْ عَلَى اللّٰهِ فَهُوَ حَسْبُهٗ

*(திருக்குர்ஆன் 65:4)*

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

*(திருக்குர்ஆன் 65:3,4)*

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ

*(திருக்குர்ஆன் 7:197)*

திருக்குர்ஆன் இப்படிப்பட்ட வசனங்களால் நிரம்பி காணப்படுகிறது. அவன் இறையச்சம் கொண்டவர்களுக்கு பாதுகாவலனாகவும் கண்காணிப்பவனாகவும் இருக்கின்றான். அப்படியிருக்கும்போது மனிதன் வழிவகைகளை சார்ந்திருக்கின்றான் என்றால் அவற்றின்மீது நம்பிக்கை வைக்கின்றான் என்றால் அது இறைவனின் அந்த பண்புகளை மறுப்பதாகும்; அந்த வழிவகைகளுக்கு (இறைவனின்) அந்தப் பண்புகளிலிருந்து பங்கு வழங்குவதாகும்.

அந்த வழிவகைகளை தனக்காக இன்னோர் இறைவனாக ஆக்குவதாகும். அவர் ஒரு பக்கம் சாய்கின்றார். ஆக, அவர் ஷிர்க்கின் பக்கம் காலெடுத்து வைக்கின்றார். எவர்கள் அதிகாரிகளின் பக்கம் குனிந்திருக்கின்றார்களோ அவர்களிடமிருந்து வெகுமதிகளை அல்லது பட்டத்தைப் பெறுகின்றார்களோ அவர்களுடைய உள்ளத்தில் அவர்களைப் பற்றிய மகத்துவம் இறைவனைப் பற்றிய மகத்துவத்தைப் போன்று நுழைந்து விடுகிறது. மேலும் அவர்கள் அவர்களை வணங்க ஆரம்பித்து விடுகின்றார்கள். இதுதான் தவ்ஹீதை நாசமாக்குகிறது. மேலும் அது மனிதனை அவனது உண்மையான நோக்கத்திலிருந்து விலக்கி தொலைவில் எறிந்து விடுகிறது.

**எனவே நபிமார்கள் (அலைஹிமுஸ் ஸலாம்) வழிவகைகளிலும் தவ்ஹீதிலும் முரண்பாடு ஏற்படாதிருக்கட்டும் என போதனை செய்துள்ளனர்.**

**மாறாக, ஒவ்வொன்றும் தத்தமது இடத்தில் இருக்கட்டும். இறுதியாக தவ்ஹீதில் சென்று முடிய வேண்டும். எல்லா கண்ணியங்களும், எல்லா வசதிகளும், தேவைகளை நிறைவேற்றுவதும் இறைவனே ஆவான் என்பதை (நபிமார்களாகிய) அவர்கள் மனிதனுக்கு கற்றுக் கொடுக்க விரும்புகிறார்கள்.**

எனவே அவனுக்கு எதிராக வேறு எவரையாவது நிலைநாட்டினால் இரண்டு வேறுபட்ட வகைக்கு எதிரில் ஒன்று நாசமாகி விடும் என்பது தெளிவானதாகும். எனவே இறைவனின் தவ்ஹீது முதன்மையானதாக இருக்கட்டும். அத்துடன் வழிவகைகளை மேற்கொள்ளலாம். வழிவகைகளை இறைவனாக்கி விடக் கூடாது.

**பயனும் நஷ்டமும் இறைவனுடைய கையில் இருக்கிறது என மனிதன் கருதும்போது அந்த தவ்ஹீதினாலேயே ஓர் அன்பு இறைவனுடன் உருவாகிறது. உண்மையான பேரருள் செய்பவன் அவனே ஆவான்; ஒவ்வோர் அணுவும் அவனாலேயே இருக்கின்றது. இடையில் எவரும் வருவதில்லை. மனிதன் ஒரு தூய நிலையை பெற்றுக் கொள்ளும்போது அவர் ஏகத்துவ கொள்கை கொண்டவர் என அழைக்கப்படுகிறார்.**

சுருக்கமாக, தவ்ஹீதின் ஒரு நிலை, மனிதன் சிலைகளையோ அல்லது மனிதர்களையோ அல்லது வேறு எந்த பொருளையோ இறைவனாக ஆக்கக் கூடாது. மாறாக, அவற்றை இறைவனாக ஆக்குவதிலிருந்தும் வெறுப்பை வெளிப்படுத்த வேண்டும். இன்னொரு நிலை என்னவெனில், வழிவகைகளை கடந்து செல்லாமல் இருப்பது.

மூன்றாவது வகை தனது நஃப்ஸ் மற்றும் இருப்பின் நோக்கங்களையும் இடையிலிருந்து நீக்கி விடுவதாகும். அதை மறுத்து விடுவதாகும். சில நேரத்தில் மனிதனின் பார்வையில் தனது மேன்மையும் ஆற்றலும் பற்றி நான் இந்த நன்மையை எனது ஆற்றலினால் செய்தேன் என்ற அளவுக்கு இருக்கிறது. மனிதன் தனது ஆற்றலின் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கின்றான் என்றால், அவன் எல்லா வேலையையும் தன் ஆற்றலுடனேயே தொடர்புபடுத்திக் கூறுகின்றான். மனிதன் தனது ஆற்றல்களையும் மறுக்கும்போதுதான் அவன் ஏகத்துவவாதியாகிறான்.

*(அல்ஹகம் 31.7.1902 பக்கம் 5,6. மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 56-58. பதிப்பு 2003)*

**திரித்துவக் கொள்கையின் மீதும், இயேசுவின் பாவ மீட்புக் கொள்கையின் மீதும் நம்பிக்கை கொள்ளாதவர்கள் நிரந்தமாக நரகத்தில் வீழ்த்தப்படுவார்கள் என்பது கிறித்தவர்களின் கொள்கையாகும்....**

எல்லையற்ற இறைவனை மூன்று நபர்களாக அல்லது நான்கு நபர்களாக எல்லைக்குட்படுத்தி பிறகு ஒவ்வொருவரையும் முழுமையானவராகவும் கருதுவது சேர்ந்திருத்தலின் தேவையுடையவர்களாகவும் கருதுவது பிறகு இறைவனைப் பற்றி அவர் ஆரம்பத்தில் (இறைவனின்) வார்த்தையாக இருந்தார்; பிறகு இறைவனாக இருந்த அந்த வார்த்தையே மர்யமின் வயிற்றில் வீழ்ந்தார். அவருடைய இரத்தத்தால் உடல் உருவம் பெற்றார். மேலும் வழக்கமான பாதையின் வழியே பிறந்தார். மனிதனுக்கு ஏற்படுகின்ற சின்னம்மை, பெரியம்மை, பல் வலி ஆகிய அனைத்து துன்பங்களையும் ஏற்றார். கடைசியில் இளைஞனாகி

பிடிபட்டார். சிலுவையில் அறையப்பட்டார்.

**மனிதன் இறைவனாக்கப்பட்டிருப்பது மிகவும் அசுத்தமான ஷிர்க் ஆகும். இறைவன் ஒருவருடைய வயிற்றில் வீழ்ந்து கிடப்பதிலிருந்தும், உருவம் பெறுவதிலிருந்தும், எதிரிகளின் கையில் பிடிக்கப்படுவதிலிருந்தும் தூயவன் ஆவான்.**

எல்லா மகத்துவங்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற, எல்லா கண்ணியங்களுக்கும் நீரூற்றாக இருக்கின்ற இறைவன் தனக்காக இந்த எல்லா இழிவுகளையும் தாங்கிக் கொண்டான் என்பதையும் இறைவன் மீது அப்படிப்பட்ட துக்கத்தின் அடி வீழ்வதையும் இந்த துன்பங்கள் ஏற்படுவதையும், மனிதனின் இயல்பு ஏற்றுக் கொள்ள முடியாது. இறைவனுக்கு அவனுடைய இந்த அவமானத்திற்கு இதுவே முதல் சந்தர்ப்பமாகும் என்றும் இதற்கு முன் இப்படிப்பட்ட அவமானங்களை இறைவன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கிறித்தவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

**இறைவனும் மனிதனைப் போன்று ஒரு பெண்ணின் கருப்பையில் விந்தில் கலந்து நிலைகொண்டதாக ஒருபோதும் நடக்கவில்லை.** மக்கள் இறைவனின் பெயரைக் கேள்விப்பட்டதிலிருந்து அவனும் மனிதனைப் போன்று ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து பிறந்ததாக ஒருபோதும் நடக்கவில்லை. இந்த விஷயங்கள் அனைத்தையும் கிறித்தவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். முதலில் இந்த மூன்று நபர்களும், மூன்று உடலும் தனித்தனியாக வைக்கப்படவில்லையென்றாலும் 1896 ஆண்டுகள் கழிந்து விட்ட அந்த குறிப்பிட்ட காலத்தில் மூன்று நபர்களுக்கென்றும் தனித்தனியான உடல் நியமிக்கப்பட்டு விட்டன.

பிதாவின் வடிவம் ஆதமின் வடிவமாகும். ஏனெனில் அவன் ஆதமை தன் வடிவத்தில் படைத்தான்.

(பழைய ஏற்பாடு ஆதியாகமம் 1:27 காண்க)

மேலும் மகன் இயேசுவின் வடிவத்தில் உருப்பெற்றான்.

(யோவான் 1:1 காண்க)

மேலும் பரிசுத்த ஆவி புறாவின் வடிவில் உருப்பெற்றது.

(மத்தேயு 3:16 காண்க)

**இந்த மூன்று இறைவனும் கிறித்தவர்களின் கற்பனையின்படி எப்போதும் உடல் அமைப்பையும், எப்போதும் தனித்தனியான இருப்பையும் கொண்டுள்ளனர். அப்படி இருந்தும் இந்த மூன்று இறைவனும் சேர்ந்து ஓரிறைவன் ஆவான். ஆனால் இந்த நிரந்தமான உருவத்தையும், மாறுதலையும் கொண்டுள்ள போதிலும் இவை மூன்றும் ஒன்றாக எப்படி ஆனது? என எவராவது கூற முடியுமென்றால் நமக்குக் கூறட்டும்.**

டாக்டர் மார்டின் கிளார்க், பாதிரி இமாதுத்தீன், பாதிரி டாக்குர்தாஸ் ஆகியோர் தனித்தனியான உடலாக இருந்தாலும் யாராவது அவர்களை ஒன்றாக்கி நமக்குக் காட்டட்டும்.

**மூன்று பேரையும் துண்டாக வெட்டி ஒருவருடைய மாமிசத்தை இன்னொருவரோடு இணைத்தாலும் இறைவன் எவர்களை மூன்றாகப் படைத்திருக்கின்றானோ அவர்கள் ஒருபோதும் ஒருவர் ஆக முடியாது என நாம் வாதிட்டுக் கூறுகிறோம்.**

அழியக் கூடிய உடலைக் கொண்ட இந்த உயிரினம் மாறுதல், மாற்றங்கள் ஆகிய சாத்தியக்கூறுகளைக்

கொண்டிருந்தாலும் ஒன்றாக முடியாது எனும்போது பிறகு **கிறித்தவர்களின் கொள்கைக்கேற்ப மாறுதலையும், மாற்றங்களையும் ஆகுமானதாகக் கொண்டிராத அப்படிப்பட்ட மூன்று உடல் எப்படி ஒன்றாக முடியும்?**

கிறித்தவர்களின் இந்த மூன்று கடவுள் என்பது கமிட்டியின் மூன்று உறுப்பினர்களைப் போன்றதாகும் என்று கூறுவது பொருத்தமானதாகவே இருக்கும். அவர்களின் கற்பனையின்படி அந்த மூன்று நபர்களின் ஒன்றுபட்ட கருத்தினால் ஒவ்வொரு கட்டளையும் உருவாகிறது. அல்லது பெரும்பான்மையான கருத்தின்படி தீர்ப்பு ஏற்பட்டு விடுகிறது.

ஆக, இறைவனின் ஆட்சியும் மக்களாட்சியாகும். அதாவது அவர்களுடைய இறைவனுக்கு கூட தனிப்பட்ட ஆட்சிக்கான திறமை இல்லை. எல்லா அடிப்படையும் கவுன்ஸில் மீது இருக்கிறது.

**சுருக்கமாக, இது கிறித்தவர்களின் கலவையான இறைவன் ஆவான். எவர் பார்க்க விரும்புகிறாரோ அவர் பார்த்துக் கொள்ளட்டும்.**

*(அஞ்சாமே ஆத்தம். ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 34-36)*

**கிறித்தவ மார்க்கம் ஏகத்துவத்திலிருந்து கைவிடப்பட்டதாகவும் விலகியும் இருக்கிறது. இன்னும் கூறுவதென்றால், அவர்கள் உண்மையான இறைவனிடமிருந்து முகந்திருப்பி ஒரு புதிய இறைவனை உருவாக்கி விட்டனர். அது இஸ்ராயீலிய பெண்ணின் மகனாவார். ஆனால் உண்மையான இறைவன் ஆற்றல் கொண்டவனாக இருப்பதைப் போன்று இந்த புதிய இறைவன் அவர்கள் மீது ஆற்றல் கொண்டவனாக இருக்கின்றாரா? இந்த விஷயத்திற்கு தீர்ப்பு கூற**

அவருடைய வரலாறே சாட்சியாகும்.

ஏனெனில் அவர் ஆற்றல் கொண்டவராக இருந்தால் யூதர்களின் கைகளால் அடி வாங்கியிருக்க மாட்டார். ரோம ஆட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க மாட்டார். சிலுவையில் அறையப்பட்டிருக்க மாட்டார். மேலும் சிலுவையிலிருந்து நீரே இறங்கி வாரும். இப்போதே நாங்கள் விசுவாசம் கொள்வோம் என யூதர்கள் கூறியபோது இறங்கி வந்திருப்பார். ஆனால் அவர் எந்த சந்தர்ப்பத்திலும் தனது வல்லமையைக் காட்டவில்லை.

அவருடைய அற்புதங்களைப் பொருத்தவரை அவை மற்ற நபிமார்களை விட மிகவும் குறைவானவையாகும். உதாரணமாக, பைபிளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள எலியா நபியின் அற்புதங்களை - அவற்றில் மரணித்தவர்களை உயிரூட்டுவதும் இருக்கிறது - இயேசுவின் அற்புதங்களோடு ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால் எலியா நபியின் அற்புதங்கள் கம்பீரத்திலும், மகத்துவத்திலும் பெரும்பான்மையிலும் மஸீஹிப்னு மர்யமின் அற்புதங்களை விட மிகவும் அதிகமானவையாகும் என அவர் ஒப்புக் கொள்ள வேண்டியது வரும். ஆயினும் இயேசு வலிப்பு நோய் கொண்டவர்களிடமிருந்து பிசாசை வெளியேற்றினார் என்ற அற்புதம் பற்றி சுவிசேஷத்தில் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுகிறது. இது அவருடைய மிகப் பெரிய அற்புதமாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

அது ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் ஒரு நகைப்புக்குரிய இடமாக இருக்கிறது. வலிப்பு நோய் என்பது மூளையின் பலவீனத்தினால் உருவாகிறது; அல்லது சில

நேரத்தில் ஒரு கட்டி மூளையில் உருவாகிறது; சில நேரத்தில் ஏதாவது வேறொரு நோய்க்குக் காரணமாக அமைந்து விடுகிறது என்று இன்றைய ஆய்வுகளிலிருந்து நிரூபணமாகி இருக்கிறது. **ஆனால் இந்த (வலிப்பு) நோயிற்கு ஜின்களும் காரணமாக இருக்கின்றன என்று இந்த ஆராய்ச்சியாளர்களில் எவரும் எழுதவில்லை...**

இயேசுவின் எந்தவோர் அற்புதமும் அல்லது பிறந்த வழிமுறையில் அவருடைய இறைதன்மையை குறிப்பிடும் எந்தவோர் அதிசயமும் இல்லை. இந்த விஷயத்தை சுட்டிக்காட்டுவதற்காகவே இறைவன் இயேசுவின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடுவதுடன் யஹ்யாவின் பிறப்பையும் குறிப்பிட்டு விட்டான். யஹ்யாவின் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட பிறப்பு அவரை மனிதனாக இருப்பதை விட்டும் வெளியேற்றாதிருப்பதைப் போன்று மர்யத்தின் மகன் மஸீஹின் பிறப்பும் அவரை இறைவனாக்குவதில்லை....

அவர் ஒருபோதும் எந்த விஷயத்திலும் ஆற்றல்மிக்கவராக இருக்கவில்லை. அவர் வெறும் ஒரு பலவீனமான மனிதராக இருந்தார். மேலும் மனிதனின் பலவீனத்தையும் அறியாமையையும் தன்னிடத்தில் கொண்டிருந்தார். **அவருக்கு மறைவானதைப் பற்றிய ஞானம் இருக்கவில்லை என சுவிசேஷத்திலிருந்து தெரிய வருகிறது. ஏனெனில் அவர் அத்தி மரத்தை நோக்கி பழத்தை உண்ணுவதற்காக சென்றார். அதில் எந்த பழமும் இல்லை என்பது அவருக்குத் தெரியாதிருந்தது. மேலும் மறுமை பற்றி தனக்குத் தெரியாது என்று தாமே ஒப்புக் கொள்கிறார். எனவே அவர் இறைவனாக இருப்பார் என்றால் அவருக்கு மறுமை பற்றிய ஞானம் இருந்திருக்க வேண்டும்.**

அவ்வாறே இறைமையின் எந்த பண்பும் அவரிடம் காணப்படவில்லை. மற்றவர்களிடம் காணப்படாத எந்த விஷயமும் அவரிடம் இருந்ததில்லை.

**அவர் இறந்தும் விட்டார் என்று கிறித்தவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். எனவே எவர்களுடைய இறைவன் இறந்து விட்டானோ அந்த பிரிவினர் எவ்வளவு பாக்கியமிழந்தவர்கள்! பிறகு அவர் உயிர் பெற்று விட்டார் என்று கூறுவது ஆறுதலுக்கான விஷயமல்ல. எவர் மரணித்து அவர் மரணிக்கவும் செய்யலாம் என நிரூபித்து விட்டாரோ அவருடைய வாழ்வுக்கு என்ன உத்தரவாதம்?**

*(நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 378-382)*

**ஒரு மனிதனைப் போன்று முதியவராகி அவரது சில ஆற்றல்கள் வீணாகி விட்ட அப்படிப்பட்ட இறைவனால் என்ன பயன்? காலம் நீண்டு விட்டதன் காரணமாக**

**அவரது சில ஆற்றல்களும் வீணானவையாகி விட்டன. சிலுவையில் அறைந்து அவருக்கு கசையடி கொடுக்காமல், அவருடைய முகத்தில் எச்சில் உமிழாமல் சில நாட்கள் அவரை பிடித்து வைக்கப்படாமல் கடைசியில் அவரை சிலுவையில் அறையப்படாத வரை தன் அடியார்களின் பாவங்களை மன்னிக்க முடியாத அப்படிப்பட்ட இறைவனால் என்ன பயன்? தனது ஆட்சியையும் இழந்து விட்ட யூதர்களின் ஓர் இழிவான சமுதாயம் மேலோங்கி விட்ட அப்படிப்பட்ட இறைவனை விட்டும் நாம் கடுமையாக விலகி நிற்கிறோம்.**

**எந்த இறைவன் மக்காவிலுள்ள ஓர் ஏழையான, ஆற்றல் இல்லாத ஒருவரை தனது நபியாக்கி தனது ஆற்றல் மற்றும் வெற்றியின் தோற்றத்தை அந்த**

காலத்திலேயே எல்லா உலகிற்கும் காட்டி விட்டானோ அந்த இறைவனை நாம் உண்மையான இறைவனாக நம்புகிறோம். எதுவரை என்றால், ஈரான் மன்னர் நமது நபி (ஸல்) அவர்களை சிறைப்பிடித்து வருமாறு தனது போர் வீரரைஅனுப்பியபோது அந்த ஆற்றல் மிக்க இறைவன் தனது தூதருக்கு, இன்று இரவு எனது இறைவன் உமது இறைவனை கொன்று விட்டான் என்று நீர் வீரரிடம் கூறுவீராக என்று கூறினான்.

இப்போது பார்க்க வேண்டும். ஒரு பக்கம் ஒருவர் இறைவன் என்று வாதம் செய்கிறார். கடைசியில் என்ன விளைவு ஏற்படுகிறது? ரோம அரசாங்கத்தின் ஒரு படை வீரர் அவரைப் பிடித்து ஒன்றிரண்டு மணி நேரத்திற்குள் சிறையிலடைத்து விடுகிறார். மேலும் முழு இரவு துஆக்களும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மறு பக்கம் இன்னோர் ஆண் இருக்கிறார். அவர் இறைதூதுத்துவத்தின் வாதம் மட்டும் செய்கிறார். இறைவன் அவருக்கு எதிரில் மன்னர்களையும் அழித்து விடுகிறான். 'நீரும் வெற்றி பெறுவதற்கு, நீர் வலிமைமிக்கவரின் நண்பராக ஆவீராக!' என்ற பழமொழி உண்மையை நாடுபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். இறந்த மார்க்கத்தை நாம் என்ன செய்வது? மரணித்துப் போன வேதத்திலிருந்து நாம் என்ன பயனைப் பெற முடியும்? இறந்து போன இறைவன் நமக்கு என்ன அருளைத் தர முடியும்?

*(சஷ்மயே மஸீஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 353)*

அவர்கள் எந்த விஷயத்தின் பக்கம் அழைக்கிறார்களோ அது மிகவும் இழிவான சிந்தனையும் வெட்கத்திற்குரிய கொள்கையும் ஆகும். மனிதனின் எல்லா கட்டாயங்களையும்

தன்னிடத்தில் கொண்டிருக்கும் ஒரு பலவீனமான படைப்பினம் இறைவன் என்று அழைக்கப்படுவது அறிவால் ஏற்றுக் கொள்ளப்படத் தகுந்ததா என்ன?

**படைக்கப்பட்டவர்கள் படைத்தவனை கசையடி கொடுப்பதையும், அடியார்கள் வல்லமை மிக்க இறைவனின் முகத்தில் எச்சில் உமிழ்வதையும், அவரைப் பிடித்து சிலுவையில் அறைவதையும் அவர் இறைவனாக இருந்தும் அவர்களை எதிர்ப்பதற்கு ஆற்றல் இல்லாதவராக இருப்பதையும் அறிவு ஏற்றுக் கொள்கிறதா?**

ஒருவர் இறைவனாக அழைக்கப்பட்டு முழு இரவும் பிரார்த்தனை செய்தும் அவருடைய பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்படாதிருக்கும் இந்த விஷயம் எவருக்காவது புரிய முடிகிறதா என்ன?

**இறைவனும் பலவீனமான குழந்தைகளைப் போன்று 9 மாதங்கள் வரை வயிற்றில் இருந்தார்; மாதவிலக்கின் இரத்தத்தை உண்டார்; கடைசியில் கதறியவாறு பெண்களின் வெட்கத்தலத்திலிருந்து பிறந்தார் என்பதில் எந்த உள்ளமாவது திருப்தி கொள்ள முடியுமா? இறைவன்** எண்ணற்ற, எல்லையற்ற காலத்திற்கு பிறகு உடல் வடிவத்தைப் பெற்றார் என்றும், அதன் ஒரு துண்டு மனிதனின் வடிவத்திலும் இன்னொரு துண்டு புறாவின் வடிவத்திலும் ஆகி விட்டது என்றும் பிறகு அந்த உடல் நிரந்தரமாக அவருடைய கழுத்திற்கு சங்கிலியாகி விட்டது என்பதை எந்தவோர் அறிவுடையவராவது ஏற்றுக் கொள்ள முடியுமா?

*(கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 86-87)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருது கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*ஒளிகளின் பிறப்பிடமான அவ்விறைவனிடமிருந்து ஒளி எந்த அளவுக்கு வெளிப்பட்டுள்ளது! முழு உலகமும் அவனது பார்வையை பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக ஆகிக் கொண்டிருக்கிறது.*

*நிலவை நான் நேற்று பார்த்து வியப்பில் ஆழ்ந்து விட்டேன். ஏனென்றால், அதில் எனது அன்பிற்குரிய அழகனின் சில அடையாளங்கள் இருந்தன.*

*அந்த வசந்த காலத்தின் அழகு பற்றிய உணர்வு உள்ளத்தில் இருக்கின்றது. அதற்கு எதிரில் துருக்கி அல்லது தாத்தார் பற்றி எம்மிடம் எதுவும் கூற வேண்டாம்.*

*அன்பனே! உனது வியக்கத்தக்க வல்லமையின் தோற்றம் எல்லா பக்கமும் தென்படுகின்றது. எந்தப் பக்கம் பார்த்தாலும் உன்னைக் காணும் வழி அதுவே ஆகும்.*

*சூரியன் எனும் நீரூற்றில் உனது அலைகளே தென்படுகின்றன. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் உனது ஒளியே தென்படுகிறது.*

*நீயே ஆன்மாக்களில் உனது கைகளால் உனது (அன்பு எனும்) உப்பைத் தூவியுள்ளாய். அதனால் உன் மீது அளப்பரிய அன்பு கொண்டவர்களின் அன்பின் பெருங்குரல் எழுந்து கொண்டிருக்கிறது.*

*ஒவ்வோர் அணுவிலும் சிறப்புத்தன்மைகளை நீ வைத்திருப்பது வியக்கத்தக்கதாகும். இரகசியங்கள் அடங்கியுள்ள இந்த கோப்புகள் (Files) முழுவதையும் எவரால் படித்துப் பார்க்க முடியும்?*

*உனது வல்லமைக்கு எந்தவோர் எல்லையையும் காண முடிவதில்லை. இந்த கடினமான முடிச்சு எவரால்*

*அவிழ்க்கப்படும்? (அதாவது இதன் இரகசியத்தை எவர் மூலம் தெரிந்து கொள்ள முடியும்?)*

*அழகிய முறையில் நடந்து கொள்பவர்களிடம் உனது அந்த அழகின் சாயல் இருக்கின்றது. ஒவ்வொரு மலரிலும் ஒவ்வொரு தோட்டத்திலும் உனது தோட்டத்தின் நிறமே இருக்கிறது.*

*மகிழ்ச்சியில் திழைத்திருக்கின்ற கண்கள் மற்றும் ஒவ்வோர் அழகும் எல்லா நொடிப்பொழுதும் உன்னையே காட்டுகின்றன. நேர்த்தியாகப் படிந்திருக்கின்ற ஒவ்வொரு முடியும் தமது கைகளால் உன் பக்கமே சைகை செய்கின்றன.*

*கண்ணிருந்தும் குருடராக இருப்பவர்களுக்கு இடையில் நூற்றுக்கணக்கான திரைகள் தடையாக வந்து விடுகின்றன. அது அல்லாமல் உன்னை நோக்கிய திசை நிராகரிப்பவர் மற்றும் மார்க்கப்பற்றுள்ளவர் இருவருக்கும் ஒன்று போலவே இருந்தது!*

*உள்ளம் கவர்ந்தவனே! உனது அன்பான பார்வைகள் ஒரு கூரிய வாள் போன்றதாகும். அதன் மூலம் எதிரிகளின் அனைத்து சண்டைகளினால் ஏற்படும் துக்கம் வெட்டப்பட்டு விடுகின்றது.*

*உன்னை சந்திப்பதற்காக நாம் மண்ணோடு கலந்து விட்டோம். அதன் மூலம் உன்னைப் பிரிந்ததனால் ஏற்படும் இந்த வேதனைக்கு அதுவே சிகிச்சையாக இருக்க வேண்டும்.*

*நீ இல்லாமல் எனது ஒரு நொடிப்பொழுது கூட நிம்மதியாகக் கழிவதில்லை. நோயாளியின் உள்ளம் வாடுவது போன்று உயிரும் வாடி விடுகின்றது.*

*உனது தெருக்களில் கூச்சல் எவ்வாறு இருக்கிறது என்ற செய்தியை விரைவாகத் தெரிந்து கொள்வாயாக. இதனால் உன் மீது பைத்தியமாக இருக்கின்ற எவரும் கொல்லப்பட்டு விடக் கூடாது.*

*(சுர்மயே சஷ்மயே ஆர்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 52)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருது கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*நம்மிடம் இருந்தவை அனைத்துமே இப்போது நமது உள்ளம் கவர்ந்தவனுக்கே உரித்தாகி விட்டது. இன்று எம் உள்ளம் கவர்ந்தவனுக்காக நாம் ஆகி விட்டோம்; அவன் நம்முடையவனாக ஆகி விட்டான்.*

*அல்லாஹ்வுக்கு நன்றி. நமக்கு விலைமதிப்புள்ள முத்து கிடைத்து விட்டது. சமுதாயத்தின் உள்ளம் பாராங்கல்லாக ஆகி விட்டால் அதனால் என்ன ஆகி விட்டது.*

*(இஸாலயே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 459)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருது கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*நிரந்தமாக நிலைத்திருக்கின்ற அவ்விறைவனுக்கே புகழும் துதியும் உரித்தாகின்றது. அவனுக்கு இணையாக வேறு எவரும் இல்லை.*

*அவனே எப்போதும் எஞ்சியிருப்பவன். அவனைத் தவிர்த்துள்ள அனைத்தும் அழியக் கூடியது. அந்நியர்களோடு உள்ளத்தை ஒன்றச் செய்வது என்பதெல்லாம் பொய்க் கதைகளேயாகும்.*

*அனைவரும் அந்நியர்களே. உள்ளத்தின் உயிர் நண்பனாக இருப்பவன் அவன் ஒருவனே. எனது உள்ளத்தில் அவனே இருக்கின்றான். என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற என் இறைவன் தூயவன்.*

*அவனது வல்லமை தூய்மையானது. அவனது மகத்துவமே மகத்துவமாகத் திகழ்கின்றது. இதனால் அவனது நெருக்கத்தைப் பெற்றவர்கள் அவனுக்கு அஞ்சி*

*நடுங்குகின்றனர். அவனைப் பற்றிய திகில் உணர்வு அவர்களை ஆட்கொண்டு விட்டது.*

*அவனது கருணை பொதுவானதாக இருக்கின்றது. அவ்வாறிருக்க அவனது அருளுக்கு எவ்வாறு நாம் நன்றி தெரிவிப்பதை நிறைவேற்றி விட முடியும்? நாம் அனைவரும் அவனது படைப்புகளாக இருக்கின்றோம். அவன் மீது அன்பு கொள்ளுங்கள்.*

*அவன் அல்லாத அந்நியர்களிடம் அன்பு கொள்வதை அவனது தன்மான உணர்வு எப்போது விரும்பி இருக்கிறது?*

*இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற என் இறைவன் தூயவன்.*

*நமக்குக் கிடைத்திருக்கும் அனைத்தும் அவனது கொடையும் அருளுமாகும். உள்ளம் அவனிடம் விற்கப்பட்டு விட்டது. உள்ளத்தில் அவனது மகத்துவம் இருக்கிறது. அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே சிறந்ததாகும்.*

*கீழ்ப்படிவதில்தான் நற்பேறு இருக்கிறது. இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற என் இறைவன் தூயவன்.*

*எல்லாவற்றுக்கும் ஆதரவாக அவன்தான் இருக்கின்றான். அவனது கருணை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவனே நமது அன்பிற்குரியவனாவான். நமது உள்ளம் கவர்ந்தவன் அவனே ஆவான்.*

*அவன் இல்லாமல் எதுவும் நடக்காது. அவனை தவிர்த்துள்ள மற்ற அனைத்துமே பொய்யானவையாகும். இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற என் இறைவன் தூயவன்.*

*இறைவா! நான் உனது வீட்டில் என்னையே அர்ப்பணித்து விட்டேன். இது உனது அருளாகும். நீயே ஈமானை எனக்கு வழங்கினாய். நீ எல்லா காலங்களிலும் கண்காணிப்பவனாக இருக்கின்றாய்.*

*ஒவ்வொரு நொடியும் உனது அருள் இருக்கின்றது. நீ அளவற்ற அருளாளனாகவும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாக இருக்கின்றாய். இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற என் இறைவன் தூயவன்.*

*உனக்கு எவ்வாறு நன்றி தெரிவிப்பது? என்னுடையதெல்லாம் உன்னுடையதாகும். நீ ஒவ்வொரு கருணையின் மூலமாகவும் எனது வீட்டை நிரப்பி விட்டாய். உனது ஒளி வருகின்றபோது இருள் சென்று விடுகின்றது. இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற இறைவன் தூயவன்.*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பாரசீக கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*எனது கல்லீரலின் துண்டாகிய முபாரக் அஹ்மது தூய தோற்றத்தையும் தூய இயல்பையும் கொண்டவராக இருந்தார்.*

*அவர் இன்று நமது உள்ளத்தை வேதனையில் ஆழ்த்தி விட்டு நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.*

*அவர் இறுதியாகக் கூறிய வார்த்தை எனக்குத் தூக்கம் வருகிறது என்பதுதான். ஆனால் பிறகு எப்படித் தூங்கி விட்டார் என்றால் பிறகு எழவே இல்லை. பிறகு நாம் அவரை எழுப்பி எழுப்பி சோர்வடைந்து விட்டோம்.*

*இறைவன் அவரை அழைத்துக் கொண்டபோது அவருக்கு எட்டு வயதும் சில மாதங்களுமாகும். அழைப்பவன்(ஆகிய*

*இறைவன்) தான் எல்லாரையும் விட அன்பிற்குரியவன். உள்ளமே! அ(ந்த இறை)வனுக்காகவே நீ உனது உயிரை அர்ப்பணித்து விடு.*

*(துர்ரே ஸமீன் உருது பக்கம் 100. நஸாரத் இஷாஅத் ரப்வா வெளியீடு)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருது கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*அவன் பார்க்கின்றான். அவன் அல்லாதவற்றுடன் உள்ளத்தை ஏன் ஒன்றச்செய்கிறீர்கள்? சிலைகளில் நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்களோ அவற்றில் எதுதான் அவனிடம் இல்லை?*

*சிந்தனையின் மீது கவனம் செலுத்தி அந்த ஒளியைப் பெற முடியவில்லை. நிலவையும் பார்த்தபோது அது அந்த அன்பனைப்போன்று இருக்கவில்லை.*

*அவன் ஏகனாவான். அவனுக்கு இணையில்லை. அவன் வீழ்ச்சி அடையாதவன். அனைத்தும் மரணத்திற்கு இரையாகி விடுகின்றன. அவனுக்கு அழிவில்லை.*

*அவனிடத்தில் உள்ளத்தை ஒன்றச் செய்வதில்தான் எல்லா நன்மைகளும் இருக்கின்றன. நண்பர்களே! அவனைத் தேடுங்கள். சிலைகளிடம் நன்றியுணர்வு இல்லை.*

*தண்டனைகளால் நிறைந்திருக்கும் இந்த இடத்தோடு உங்கள் உள்ளத்தை ஏன் ஒன்றச் செய்துள்ளீர்கள்? இந்த இடம் நரகமாக இருக்கின்றது. இது செழிப்பான தோட்டம் அல்ல.*

*(தஷ்ஹீஸுல் அஸ்ஹான். டிசம்பர் 1908. பகம் 485. துர்ரே ஸமீன். பக்கம் 152)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருது கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*இறைவா! உனக்கு எல்லா ஆற்றலும் வல்லமையும் இருக்கிறது. உன்னை அடைந்ததனால் ஒவ்வொரு குறிக்கோளையும் அடைந்தோம். ஒவ்வொரு காதலனும் தனக்கென்று ஒரு சிலையை உருவாக்கிக் கொண்டான். நமது உள்ளத்தில் நமது உள்ளம் கவர்ந்த அந்த இறைவன் அமர்ந்துள்ளான்.*

*அவனே உயிருக்கு சுகமளிப்பவன். மேலும் உள்ளத்தை கொள்ளை கொண்டவன். அவனையே நாம் படைப்பினங்களின் இறைவன் என்று அழைக்கின்றோம்.*

*அவன் என் மீது பகிரங்கமாக வெளிப்பட்டுள்ளான். என் எதிரிகளை இழிவடையச் செய்துள்ள என் இறைவன் தூயவன்.*

*எனக்கு இந்த அன்பனுடன் உயிரோடுள்ள இணைப்பு உள்ளது. அவனே சுவர்க்கமாக இருக்கின்றான்; அவனே அமைதியின் வீடாக இருக்கின்றான்.*

*அவனைப் பற்றி எடுத்துரைப்பதற்கான ஆற்றல் எங்கிருக்கிறது? அவன் அன்பு எனும் ஓடும் ஒரு நதியாக இருக்கின்றான்.*

*எனது வழிகாட்டியே! இது உனது எத்தகைய ஒரு பேரருளாக இருக்கிறது!! என் எதிரிகளை இழிவடையச் செய்த என் இறைவன் தூயவன்.*

*உனது அருளில் எந்தக் குறைவும் இல்லை. அது இல்லாமல் எந்தவொரு நொடிப்பொழுதும் இல்லை.*

*உனது அருளையும் கருணையையும் கணக்கிட்டுப் பார்க்க*

*முடியாது. எனக்கு இப்போது உனக்கு நன்றி செலுத்துவதற்கான ஆற்றலும் இல்லை.*

*எனது வழிகாட்டியே! இது உனது எத்தகைய ஒரு பேரருளாக இருக்கிறது! என் எதிர்களை இழிவடையச் செய்த என் இறைவன் தூயவன்.*

*உனது தெருக்களில் எந்த வழிகளின் மூலமாக நான் வருவேன்? உன்னை அடைவதற்கான அந்த வழிகள் என்ன?*

*அன்பினால்தான் நான் ஈர்க்கப்படுகிறேன். இறைதன்மையின் மூலமாகவே 'தான்' என்ற அகந்தையை நான் எரித்து விட்டேன்.*

*அன்பு என்பது என்ன என்று எவருக்கு நான் கூறுவேன்? நன்றியுணர்வு என்பதிலுள்ள இரகசியத்தை நான் யாருக்குக் கூறுவேன்?*

*நான் (இறைவன் மீதுள்ள அன்பின்) இந்தப் புயலை இப்போது ஏன் மறைக்க வேண்டும்? என்னை நானே இவ்வழியில் மாய்த்துக் கொள்வதே சிறந்ததாகும்.*

*நாம் எங்கிருக்கிறோம்? இந்த பௌதீக உலகம் எங்கிருக்கிறது? என் எதிரிகளை இழிவடையச் செய்த என் இறைவன் தூயவன்.*

*(துர்ரே ஸமீன். பக்கம் 54. நஸாரத் இஷாஅத் ரப்வா வெளியீடு)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பாரசீக கவிதையில் கூறியதன் மொழியாக்கம்:**

*படைத்த இறைவனுக்கு புகழும் நன்றியும் உரியதாகும். அவன் மூலமாகவே எல்லா பொருள்களும் தோன்றின.*

*இந்த உலகம் அவனது முகத்திற்கு கண்ணாடியைப் போன்றதாகும். ஒவ்வோர் அணுவும் அவன் பக்கமே*

வழிகாட்டுகிறது.

அவன் வானம், பூமி என்னும் கண்ணாடியில் தனது நிகரற்ற முகத்தைக் காட்டியிருக்கிறான்.

புல்லின் ஒவ்வோர் இலையும் அவனது இருப்பிடத்தை அறிகின்றன. மேலும் மரங்களின் ஒவ்வொரு கிளையும் அவனது பாதையையே காட்டுகிறது.

சூரியன் சந்திரனின் ஒளி அவனது ஒளியின் அருளினாலேயே ஆகும். ஒவ்வொரு பொருள் வெளிப்படுவதும் அவனது அரசாணையின் கீழ் இருக்கிறது. ஒவ்வொரு தலையும் அவனது இரகசியங்களின் ஓர் இரகசியமாகும். மேலும் ஒவ்வொரு காலடியும் அவனது கண்ணியமிக்க வாசலையே தேடுகின்றது.

அவனது முகத்தின் அழகு ஒவ்வோர் உள்ளத்தின் குறிக்கோளாகும். மேலும் எவராவது வழிதவறியிருந்தாலும் அவரும் அவனது வீதியைத் தேடியலைகிறார்.

அவன் சூரியன், சந்திரன், நட்சத்திரம், பூமி ஆகியவற்றைப் படைத்தான். மேலும் இலட்சக்கணக்கான பொருள்களை வெளிப்படுத்தினான்.

அவனது எல்லா கைவேலைகளும் அவனது தொழிற்கூடம்தான். மேலும் அவற்றில் அவனுடைய எண்ணற்ற இரகசியங்கள் இருக்கின்றன.

இது இயற்கையின் வேதமாகும். அதன் காரணமாக நாம் நேர்வழியை நினைவில் வைக்க வேண்டும் என்பதற்காக அவன் அதை நமது கண்களுக்கு முன்னால் வைத்து விட்டான்.

உலகவாதிகளுடனும் உலகத்துடனும் எந்த ஒப்புமையும்

*இல்லாத அந்த தூய இறைவனை நீர் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவன் அவ்வாறு செய்தான்.*

*ஆயிரக்கணக்கான சொற்களில் எது அவன் புறமிருந்துள்ளதாக இருக்கிறது? இறைவனின் வஹிக்கு தகுதி வாய்ந்ததாக இருக்கிறது என்பதை நீர் அடையாளம் கண்டுகொள்ளும் பொருட்டு அவன் அவ்வாறு செய்தான்.*

*நம்பிக்கை துரோகத்தின் எந்த வழியும் திறந்திருக்க வேண்டாம். இருளிலிருந்து ஒளி தனியாகி விட வேண்டும் என்பதற்காகவும் அவன் அவ்வாறு செய்தான்.*

*அந்த இறைவனின் நாட்டமே நடந்தது. மேலும் அவனது செயல் அவனது கூற்றுக்கு சாட்சியானது.*

*இணைவைப்பவர்கள் செய்யும் சாக்குப்போக்குகளை (இறைவனின் சொல்லும் இறைவனின் செயலும் ஆகிய) இந்த சாட்சி அம்புகளால் கிழித்து சல்லடையாக்கி விடுகின்றன.*

*நீர் வேறு யாரையாவது ரஹ்மானாகிய இறைவனாக ஆக்கிக் கொண்டால் வானமும் பூமியும் உம் மீது எச்சில் உமிழும்.*

*அந்த ஏகனுக்கு எதிராக நீர் ஒரு மகனை உருவாக்கிக் கொண்டால் கீழிலிருந்தும் மேலிருந்தும் உம் மீது சாபம் விழ ஆரம்பிக்கும்.*

*அந்த இறைவன் தனித்தவனும், நிலைபெற்றிருப்பவனும், ஏகனும் ஆவான் என்பதை இந்த உலகம் நிலைமை எனும் நாவினால் கூறிக் கொண்டிருக்கிறது.*

*அவனுக்கு எந்த தந்தையும் இல்லை; எந்த மகனும் இல்லை. எந்த மனைவியும் இல்லை. ஆரம்பத்திலிருந்தே அவனிடம் எந்த மாறுதலும் ஏற்படவில்லை.*

*அவனது அருளின் மழை ஒரு வினாடிக்காக குறைந்தாலும்*

*இந்த எல்லா படைப்பினங்களும் உலகமும் சின்னாபின்னமாகி விடும்.*

*நீர் அனைத்து உலகங்களையும் படைத்து பரிபாலிக்கின்றவனின் மகத்துவத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காக இயற்கை சட்டத்தை ஒரு பார்வை பார்ப்பீராக.*

*(ஸியாவுல் ஹக். ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 251, 252)*

**மேலும் இன்னொரு பாரசீக கவிதையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

*வானங்கள் பூமியைப் படைத்தவனே! நீ என் மீது அருளின் வாசலைத் திறப்பாயாக. நான் மற்றவர்களிடமிருந்து மறைக்கின்ற என் வேதனையை நீ அறிவாய்.*

*உள்ளத்தை கொள்ளை கொள்பவனே! நீ எல்லையற்ற கருணையாளன் ஆவாய். எனது எல்லா நாடி நரம்பிலும் நுழைவாயாக. நான் உன்னை என்னுள் காணும்போது எனது உள்ளத்தை தோட்டத்தையும் விட அதிகமாக மகிழ்ச்சியூட்டுவேன்.*

*நல்ல பண்புகளைக் கொண்டவனே! நீ மறுத்து விட்டால் உன்னைப் பிரிந்த துயரத்தினால் நான் உயிரை விட்டு விடுவேன். ஓர் உலகத்தையே அழவைத்து விடும் அளவுக்கு அழுது விடுவேன்.*

*நீ என் மீது கோபம் கொண்டு என்னை விலக்கி விட்டாலும், கருணை காட்டி உனது முகத்தைக் காட்டினாலும் என்னை நீ அடி அல்லது விட்டு விடு. நான் உனது மடியை விட்டு விட முடியாது.*

*(பராஹீனே அஹ்மதிய்யா முதல் 4 பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 613 அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு எண்:3)*

**மேலும் இன்னொரு பாரசீக கவிதையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

*இறைவனே! எங்களின் துக்கங்களின் அருமருந்தே! எங்கள் மன்றாடலின் சிகிச்சையே!*

*நீ காயமடைந்த எங்கள் உயிரின் மீது மருந்து வைப்பவனாவாய். நீ எங்கள் துக்கம் கொண்ட உள்ளத்தின் துக்கத்தை நீக்குபவனாவாய்.*

*நீ உனது கருணையினால் எங்களின் எல்லா சுமையையும் சுமந்து கொண்டிருக்கிறாய். எங்களின் மரங்களில் பழங்களும் கனிகளும் உனது அருளினால் உருவாகின்றன.*

*நீயே உனது கருணை மற்றும் அருளால் எங்களை பாதுகாக்கின்றாய். திரையிட்டு மறைக்கின்றாய். மேலும் முழுமையான கருணையினால் சக்தியற்றவர்களுக்கு அனுதாபம் காட்டுபவனாக இருக்கின்றாய்.*

*அடியார் துக்கமும் வேதனையும் அடையும்போது நீ அங்கேயே அவருக்கான சிகிச்சையை உருவாக்கி விடுகின்றாய்.*

*ஒரு பலவீனமானவரை வழியில் இருள் சூழ்ந்து கொள்ளும்போது நீ அவருக்காக நொடிப்பொழுதில் நூற்றுக்கணக்கான சூரியனையும் சந்திரனையும் உருவாக்கி விடுகிறாய்.*

*அழகும், நல்லொழுக்கமும், வீரமும் உன்னுடன் முடிவடைந்து விடுகின்றன. உனது சந்திப்பிற்குப் பிறகு வேறு யாருடனும் தொடர்பு வைப்பது ஹராம் ஆகும்.*

உன் மீது பைத்தியம் கொண்டவர் அறிவாளி ஆவார். உன் மீது ஈசலைப் போன்று வீழ்ந்து கிடப்பவர் சபையின் ஒளிவிளக்காவார்.

எவருடைய உயிரிலும் உள்ளத்திலும் உனது அன்பு நுழைந்து விட்டதோ அவருடைய ஈமானில் உடனே உயிர் உருவாகி விடுகிறது.

உனது அன்பு அவருடைய முகத்திலிருந்து வெளிப்படத் துவங்கி விடுகிறது. மேலும் அவருடைய வாசலிலிருந்தும், சுவர்களிலிருந்தும் உனது நறுமணம் வீசுகிறது.

நீ அவருக்கு உனது கருணையால் இலட்சக்கணக்கான அருள்களை வழங்குகிறாய். சூரியனையும் சந்திரனையும் அவருக்கு முன்னால் சஜ்தா செய்ய வைத்து விடுகிறாய்.

அவருக்கு உதவி செய்வதற்காக நீயே ஆயத்தமாகி விடுகிறாய். அவரைக் காண்பதனால் உனது முகம் நினைவுக்கு வருகின்றது.

இவ்வுலகில் பல பெரும் வேலையை நீ அவருடைய கண்ணியத்திற்காக வெளிப்படுத்துகின்றாய்.

நீயே வேலை செய்கின்றாய். நீயே வேலை செய்ய வைக்கின்றாய். நீயே இந்த கடைவீதிக்கு பொலிவை வழங்குகின்றாய்.

மண்ணை நீ திடீரென்று மதிப்புள்ள பொருளாக மாற்றி விடுகின்றாய். அதன் தோற்றத்தினால் படைப்பினங்கள் ஒளியைப் பெற வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றாய்.

ஒருவர் மீது நீ அருள் செய்யும்போது பூமியிலுள்ள அவரை வானத்திற்குரியவராக ஆக்கி விடுகிறாய்.

(பராஹீனே அஹ்மதிய்யா முதல் 4 பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி

*1 பக்கம் 626,627 அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு எண்:3)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னொரு பாரசீகக் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

*உன் மீதுள்ள அன்பு ஆயிரக்கணக்கான நோய்களுக்கு மருந்தாகும். உன் மீது ஆணையாக! இந்த சிறையாகுதல்தான் உண்மையான சுதந்திரமாகும்.*

*உனது அடைக்கலத்தைத் தேடுவது பைத்தியக்காரர்களின் வழிமுறையல்ல. மாறாக, உனது அடைக்கலத்தில் வருவதுதான் முழுமையான அறிவுடைமையாகும்.*

*நான் உனது அன்பின் செல்வத்தை ஒருபோதும் மறைக்க மாட்டேன். உனது அன்பை மறைத்து வைப்பதும் ஒரு நம்பிக்கை துரோகமாகும்.*

*உனக்காக நான் உயிரையும், உள்ளத்தையும் அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கிறேன். ஏனெனில் உயிரை அன்பிற்குரியவனிடம் ஒப்படைத்து விடுவதே உண்மையான நட்பு ஆகும்.*

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 1)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னொரு பாரசீகக் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

*எனக்கு முன்னால் எந்த மன்னரைப் பற்றியும் பேசாதீர். ஏனெனில் நான் வேறொரு வாசலில் நம்பிக்கையுடன் கிடக்கின்றேன்.*

*அந்த இறைவன் உலகிற்கு வாழ்வளிப்பவன். அவன் ஆதியிலிருந்தே படைப்பை ஆரம்பித்தவன். படைத்தவன். பரிபாலிப்பவன்.*

*கண்ணியமிக்கவன். ஆற்றல் மிக்கவன். கஷ்டங்களை நீக்குபவன். கருணையாளன். அருள்பாலிப்பவன். தேவைகளை நிறைவேற்றுபவன்.*

*நான் அவனது வாசலில் வந்து கிடக்கின்றேன். ஏனெனில் உலகில் ஒரு வேலையினால் இன்னொரு வேலை வெளிப்படுகிறது என்ற பழமொழி புகழ்பெற்றது.*

*அந்த அன்பிற்குரியவனும் நன்றியுணர்வுள்ளவனும் எனக்கு நினைவுக்கு வரும்போது எல்லா உறவினர்களும் நண்பர்களும் எனக்கு மறந்து விடுகின்றனர்.*

*நான் அவனை விட்டு விட்டு மற்றவரிடம் எவ்வாறு உள்ளத்தை பறிகொடுப்பது? அவன் இல்லாமல் எனக்கு நிம்மதி கிடைப்பதில்லை.*

*உள்ளத்தை எனது காயமடைந்த நெஞ்சில் தேட வேண்டாம். நாம் அதை ஓர் அன்பிற்குரியவனுடன் பிணைத்திருக்கிறோம்.*

*எனது உள்ளம் உள்ளத்தால் ஈர்க்கப்பட்டவனின் இருக்கையாகும். எனது தலை அன்பிற்குரியவனின் வழியில் அர்ப்பணம் ஆகும்.*

*என் மீது அவனது அருள் எவ்வாறு இருக்கிறது என்பதை நான் என்ன கூறுவது? ஏனெனில் அவனது அருள் ஒரு எல்லையற்ற கடலாகும்.*

*நான் அவனது அருள்களை எப்படி கணக்கிடுவது? அவனது அருள்கள் கணக்கிடுவதை விட்டும் அப்பாற்பட்டதாக இருக்கிறது.*

*உள்ளத்தை ஈர்க்கும் அவனுடன் எனக்கு எத்தகைய தொடர்பு இருக்கிறதென்றால் அது பற்றி எவருக்கும் எதுவும்*

*தெரியாது.*

*குழந்தை பிறக்கும்போது கருவுற்றிருக்கும் பெண் அழுவதைப் போன்று நான் அவனது வாசலில் அழுகின்றேன்.*

*எனது காலம் அவனது அன்பினாலேயே நிரம்பி காணப்படுகிறது. ஆஹா! என்ன அருமையான நேரம்! என்ன அருமையான காலம்!!*

*நண்பனின் மலர்த் தோட்டமே! உன்னை என்னவென்பது! நீ என்னை உலகின் தோட்டம், வசந்த காலம் ஆகியவற்றை விட்டும் பொருட்படுத்தாதவனாக்கி விட்டாய்.*

*(ஹுஜ்ஜத்துல்லாஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 149)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னொரு பாரசீகக் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

*என் அன்பிற்குரியவனே! நீ எவ்வளவு அழகானவன்! என் இறைவனே! நீ எவ்வளவு இனிய இயல்பு கொண்டவனாவாய்!!*

*நான் உனது முகத்தைப் பார்த்ததும் உன்னுடன் உள்ளத்தை ஒன்றிணைத்துக் கொண்டேன். மேலும் உலகில் உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் இருக்கவில்லை.*

*ஈருலகை விட்டும் கையை விரிப்பது சாத்தியமானதாகும். ஆனால் உனது பிரிவு எனது எலும்புகளை எரித்து விடுகிறது.*

*நெருப்பிற்குள் உடலை எளிதாகப் போடலாம். ஆனால் உனது பிரிவினால் எனது உயிர் அழுது மன்றாடியவாறு வெளி வருகிறது.*

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 355-356)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் பாரசீகக் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

*ஆதியிருந்தே இருக்கும் இறைவனே! எனக்கு உனது முகம் போதுமானது. மேலும் உனது வீதி எனக்கு ஆயிரக்கணக்கான சுவர்க்கங்களை விட சிறந்ததாகும்.*

*நான் ஏதோ ஒரு குறிக்கோளின் காரணமாக வேறொரு பக்கம் பார்க்கின்றேன். இல்லையென்றால் எல்லா நேரமும் எனது பார்வை உன் பக்கமே வீழ்ந்து கிடக்கிறது.*

*எவராவது எனது கண்ணியத்தின் மீது தாக்குதல் செய்தால் உனது பழக்கத்தைப் போன்று எனது வழிமுறையும் பொறுமையாகவே இருக்கிறது.*

*நான் யார்? எனக்கு என்ன கண்ணியம் இருக்கிறது? ஆனால் உனது கண்ணியத்திற்காக எனது இந்தப் போர் இருக்கிறது.*

*(பராஹீனே அஹ்மதிய்யா இணைப்பு பகுதி 5. ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 153)*